# உவெஸ்லி
# 136



## உவெஸ்லி உயர்தர பாடசாலை
## கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லி

# 136

## கல்லூரியின் 136வது ஆண்டு நிறைவு

## சிறப்பு மலர்

**1883- 2019**

உவெஸ்லி உயர்தர பாடசாலை

கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக் கீதம்

எந்தையே உம் ஊழியர்
எழுப்பிய கூடம்
உந் தயையாலே பாலர்
உற்றார் ஆசி கிரீடம்
பந்த சித்தியாம் கிருபை
பாதை தன்னில் காணும்
இந்த நேரம் அன்னாரோ
டேத்துவோமும் நாமம்

ஓய்வு அற்று மாறியே
ஓடும் மோன ஆண்டு
தேய்வற்ற புது முக
தோழர் தந்த தீண்டு
மாய்வு தோன்றமறந்தார்
மன்னுந் திடம் பயம்
ஓய்தாலும் மாறா உம்மோ
டொன்றாகிச் சிறந்தார்

நற்றானி யத்தை முன்னோர்
நட்டார் நாம் அறுக்க
பெற்றுப் பின்னோர் விளைவை
பண்ட(க) சாலை சேர்ப்போர்
அற்றை நாள் தரும் பாடம்
உத்தம சேவையாம்
முற்றாய் உயர்ச்சிக்கே எம்
முழு நோக் கன்றாடம்

## SCHOOL HYMN

Our Father by whose servants
Our School was built of old
Whose hands hath crowned her children
with blessing manifold
For thine unfailing mercies
For strewn along our way
With all who passed before us
We praise thy name today

The changeful years unresting
Their silent course have sped
New comrades ever bringing
In comrades steps to tread
And some are long forgotten
Long spent their hopes and fears
Safe rest they in thy keeping
The changest not with years

They reap not where they laboured
We reap what they have sown
Our harvest may be guarded
By ages yet unknown
The days of old have taught us
How best we too can serve
"Our utmost for the highest"
Our aim throughout the years.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## MOTTO

**Utmost for the Highest**

அதி உயர்ச்சிக்கான பரிபூரண முயற்சி

## VISION

**Quality Education, the Key to Success of the Future Generation**

அதி உயர்ச்சிக்கான பரிபூரண முயற்சி


## MISSION

**"Pave the way towards inculcation innovation Skills and Enhancing Social Economic Development among Students, to become Useful and Patriotic Citizens in Keeping with National Education Policy"**

"எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவாறு சமூக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு மாணவர்களை தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப நாட்டுப்பற்றுள்ள புத்தாக்கத்திறன் மிக்க, பயன்மிக்க பிரஜைகளாக திகழ வழிசெய்து கொடுத்தல்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KM/WESLEY HIGH SCHOOL KALMUNAI





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Record of Principals

## Girls Boarding School

Rev G J Trimmer
1883 - 1929



Miss Robinson
1929 - 1930

Miss Marchant
1930 - 1936

Miss E J Turnier
1936 - 1937

Miss Barbara Atkins
1937 - 1941



Miss Jessie Jesuthasan
1906 - 1932



Miss G K Thillaiyampalam
1941 - 1953




## Leese High School

Rev.gabriel Leese
1901-1902

Mr. David
1902 - 1941

Rev. M G Nallathamby
1942 - 1953



## Wesley High School

Rev. M G Nallathamby
1953 - 1954

Mr. S J Wilson
1954 - 1959



Mrs R Chinniah
1959 - 1961



Mr S J Wilson
1961 - 1972

Mr Yogam Velluppillai
1972 - 1981



Mr K Subramaniam
1981 - 1982



Mr S Mahalingam
1982 - 1983



Mr Yogam Velluppillai
Oct1983 - Nov 1983

Mr K Subramaniam
Dec 1983 - 1988

Mr B Vengadasalam
29.06.1988 - 01.11.1998



Mr P Murugiah
02.11.1998 - 16.02.2009




Mr V Prabaharan
17.02.2009 - Still



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

கிழக்கு இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள புகழ்பூத்த முதல்தர பாடசாலையான கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலை, தனது 136வது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிடவிருக்கும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி.

"கல்வி என்பது மனிதனிடம் ஏற்கனவே இருக்கின்ற பூரணத்துவத்தை வெளிப்படுத்துவர்" என்கின்றார் சுவாமி விவேகானந்தர்.

மேலும் சிறந்த குணத்தை உருவாக்கும், மனவலிமையை வளர்க்கும், அறிவை விரியச் செய்யும், ஒருவனை சொந்தக் காலில் நிற்கச் செய்யும் கல்வியே தேவை என்கிறார் சுவாமிஜி.

இன்றைய சூழ்நிலையில் மாணவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களின் பொறுப்பு எவ்வளவு மிகப்பெரியது! நாடானது இத்தகைய ஆயிரக்கணக்கான பாடசாலை அறைகளிலேயே உருவாகிறது. மாணவர்களே எதிர்கால நாட்டை உருவாக்கின்றனர். அவர்களை நமது சமுதாயத்தை பலப்படுத்தும் விதமாக நல்லொழுக்கத்திலும் கருணையிலும் பயிற்றுவிக்க வேண்டும். அவர்களுடைய மனத்தை மனிதநேயத்திலும் தொண்டிலும் வளப்படுத்துவோம். இதற்குச் சமயப்பெரியார்களையும் சுவாமி விவேகானந்தரையும் படிக்க வேண்டும்.

136வது ஆண்டு விழாவை கொண்டாடும் இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று, இன்னும் மகத்தானவர் பலரை உருவாக்க வேண்டும் என்று வாழ்த்தி, விழா மலர் இனிதே வெளிவர அர்ப்பணிப்போடு செயற்படும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகம் அனைவருக்கும் தெய்வத் திருமூவரின் நல்லாசிகளை வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி.

என்றும் மனித சேவையில்

**சுவாமி தக்ஷஜானந்தர்**


பொது முகாமையாளர்,

இராமகிருஷ்ண மிஷன்

மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

கல்முனை மாநகரத்தில் வரலாற்றில் புகழ் பெற்ற, பல கல்விமான்களை சமுகத்தில் உருவாக்கிய, இன்றும் உருவாக்கிக்கொண்டிருக்கின்றதுமான பாடசாலை, கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை என்றும் சொல்வதில் நான் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தப் பாடசாலை இன்று வரைக்கும் கல்முனையில் அழியாத பெயருடனும், புகழுடனும் இருப்பதற்குப் காரணம் அன்று இந்தப் பாடசாலைக்கு அயராது உழைத்த, தங்களைச் தியாகம் செய்த அடியார்களின் அர்ப்பணிப்பு வாழ்வு என்பது உண்மை.

இந்தப் பாடசாலையின் வரலாற்றில் சில குறிப்புக்களை நோக்கிப் பார்க்கும் போது 1883 இல் கல்முனையில் பணியாற்றிய அருட்திரு G.J.ரிம்மர் அவர்களால் 18 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் விடுதிப்பாடசாலை (Girls Boarding School) GBS என்று அழைக்கப்பட்டது. இதில் பல மாணவிகள் விடுதியில் தங்கியிருந்து படிக்கவும் ஏனைய பிள்ளைகள் வீட்டில் இருந்து வந்து கல்வி கற்றும் வந்தனர். பல மிஷனரிமார் இப்பாடசாலையில் அதிபர்களாகக் கடமையாற்றியதுடன் ஆங்கிலப் பாடத்தை மாணவர்களுக்கு சிறப்பாகக் கற்பித்து அப்பணியில் வெற்றியும் கண்டனர்.

1901 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட லீஸ் உயர் ஆண்கள் பாடசாலையும், 1883 இல் உருவான பெண்கள் விடுதிப் பாடசாலையும் 1953 இல் ஒருங்கிணைக்கப்பட்டு தற்போதைய கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலைக்கும், கல்முனை மெதடிஸ்த திருச்சபைக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. மெதடிஸ்த திருச்சபை அன்று தொட்டு இன்று வரை பல சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றது. அப்பணிகள் இன்றும் அழியாததாக உள்ளது. அதில் குறிப்பாக கல்முனை மெதடிஸ்த திருச்சபையினால் மெதடிஸ்த சிறுமியர் இல்லமும், கிறிஸ்த இல்லமும் சிறுவர்கள் மத்தியில் சிறப்பான சேவையை ஆற்றி வருகின்றது.

அன்று தொட்டு இன்று வரை சிறுமியர் இல்லத்திலிருந்தும், கிறிஸ்த இல்லத்திலிருந்தும் உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கல்வி கற்ற பிள்ளைகள் பல உயர் நிலைகளில் சமுகத்தில் உள்ளதை எம்மால் காணக்கூடியதாகவும் அறியக் கூடியதாகவும் உள்ளது. இவர்களின் உயர்வுக்கு கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை காரணமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய மெதடிஸ்த சிறுமியர் இல்லத்தில் 35 பிள்ளைகளும் கிறிஸ்தவ இல்லத்தில் 16 பிள்ளைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இப்பிள்ளைகள் யாவரும் இன்றும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். இப்பிள்ளைகளின் வளர்ச்சிக்கு கல்முனை உவெஸ்லி உயர்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை முழுப்பங்களிப்புக் கொடுத்து பணியாற்றி வருகின்றது. குறிப்பாக இப்பாடசாலை இன, மத, உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி இன்றும் தனது பணியைச் சிறப்பாக ஆற்றி வருகின்றது.

இப்பணிகளில் தங்களது அயராத உழைப்பைக் கொடுத்து பணியாற்றி வரும் அதிபர், பிரதி அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள் யாவருக்கும் நாம் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை இன்று தனது வரலாற்றை 136வது ஆண்டில் கால் பதித்து நிற்கின்றது. எனவே இப்பாடசாலையின் ஸ்தாபகர் தினத்தினை நினைவு கூருகின்ற வேளையில் நாமும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அருட்திரு S.D.வினோத்**
முகாமைக் குரு
கல்முனை மெதடிஸ்த திருச்சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

136 வருடங்களாக கல்முனைப் பிரதேசத்தில் கல்விப்பணியாற்றும் உவெஸ்லி உயர்தர பாடசாலையானது தனது பணியை சீரியதாய் தொடர்ந்திட எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

புத்தபெருமானின் போதனைகளில் ஒன்றாகிய "ஒரு மனிதன் திறமை வாய்ந்தவனாகவும், தொழில் நேர்த்தி கொண்டவனாகவும் ஆர்வம் உடையவனாகவும், மிகுந்த சக்தி வாய்ந்தவனாகவும் இருக்க வேண்டும்."

போதிமாதவனின் போதனையில் கூறப்பட்டவாறு மனித வாழ்வு, ஒழுக்கவியல் சிறப்புற கல்வி அவசியமானது. அப்பேர்ப்பட்ட கல்வியை இப்பிராந்திய பரம்பரையினருக்கு போதித்துக் கொண்டிருக்கும் உயர் கூடமாகத் திகழும் உவெஸ்லி உயர்தர பாடசாலை இன, மத பேதம் பாராது நற்பிரஜைகளையும் புத்திஜீவிகளையும் எமக்கு படைத்துள்ளது என்பது கண் கூடு.

பன்னெடுங்கால கல்விப் பாரம்பரியம், கலாசாரம் பொருந்திய இப்பாடசாலை தேசிய பாடசாலையாக தரமுயர்த்துவதற்கு என்னாலான சகல முயற்சிகளையும் கல்விச் சமூகம், அரசியல் வாதிகளின் அனுசரணையும் மேற்கொள்ள திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

உவெஸ்லியின் நாமம் பாரெங்கும் ஒலிக்கட்டும் அதன் கல்விப்பணி மேம்படவும் மும்மணிகளின் ஆசிகள் உரித்தாகட்டும்.

**வண ரம்முதுகல சங்கரத்ன தேரர்**
ஸ்ரீ சுபத்திராராம மகா விகாரை,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை தனது 136 வது ஆண்டுப் பூர்த்தி விழாவை சிறக்கும் வகையில் வெளியிடவுள்ள "உவெஸ்லி" நினைவு மலருக்கு ஆசிச் செய்தி ஒன்றை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியும், சந்தோசமும் அடைகிறேன்.

இக் கல்லூரி கடந்த 136 ஆண்டுகளாக பிரதேசத்தில் ஆற்றிவரும் கல்விப் பணி மிகவும் பாராட்டத்தக்கது. ஏனெனில் இனம், மதம், மொழி, நிறம் என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று இக்கல்லூரி செய்த கல்விப் பணி சமூக ஒற்றுமையையும், மனித நேயத்தையும், சிறந்த விழுமியங்களையும் கட்டி எழுப்புவதற்கு காலாக அமைந்திருந்தது.

இக்கல்லூரியில் கல்வி கற்று வெளியேறியவர்களில் பலர் கல்வி, கலை, கலாசாரம், பொருளியல், அரசியல் போன்ற மனித வாழ்வுக்குத் தேவையான அனைத்துத் துறைகளில் புகழ் பெற்று விளங்குகிறார்கள். இவர்கள் இக்கல்லூரியின் பெருமையையும், நன்மதிப்பையும் சமூகத்திற்கு பிரதிபலிக்கின்ற விம்பங்களாக திகழ்கிறார்கள். குறிப்பாக அரசியலில் கால்பதித்தவர்கள் மாநகர சபையிலும், மாகாண சபைகளிலும், நாடாளுமன்றத்திலும் சமூகத்தின் தேவைகளைத் தேவையானவர்களிடம் எடுத்துச் செல்லும் திறமையான உறுப்பினர்களாக இருந்து செயற்படுவதுடன் ராஜாங்க அமைச்சர்களாகவும், அமைச்சர்களாகவும் இருந்து நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் சேவை செய்கின்றமை பாடசாலையின் புகழை மேலோங்கச் செய்வதற்குப் போதுமான சான்றுகளாகும்.

இக்கல்லூரி கலைத்துறையில் மட்டுமல்லாது விளையாட்டு, சாரணியம் போன்ற துறைகளிலும் மாணவர்களை உருவாக்கியமை இதன் மற்றுமொரு தனிச் சிறப்பாகும்.

இக்கல்லூரி விழாக்கோலம் பூணும் மங்களகரமான இத்தருணத்தில் இதன் வெற்றிக்காக அன்றும், இன்றும் தியாக சிந்தனையுடன் பாடுபடும் கல்லூரியின் முதல்வர் திரு.V.பிரபாகரன் அவர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இறைவனின் நல்லருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து, வாழ்த்துகின்றேன்.

இறுதியாக மிக நீண்ட வரலாற்றைத் தனக்கெனப் பதிவிட்டுக் கொண்ட இக்கல்லூரி எதிர் காலத்தில் சகல துறைகளிலும் வெற்றி பெற்று பேருடனும், புகழுடனும் மிளிர வேண்டும் என வாழ்த்தி எனது வாழ்த்துச் செய்திக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

**அஷ் – ஷெய்க்.U.L.S. ஹமீட் (ஹாமி)** MA,
அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா,
கல்முனை கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வரலாற்று வாழ்வியல் ரீதியாக தமிழ் மக்களின் தாயகமான "கல்முனை நகரின்" மத்தியில் நூற்றாண்டு காலமாக கல்விப்பணி புரியும் உவெஸ்லி உயர் தர பாடசாலையின் 136வது விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் இக்கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையில் பெருமிதமடைகின்றேன்.

மெதடிஸ்த திருச்சபையின் பாரம்பரியம், பண்பாட்டு விழுமியத்தில் தனக்கே உரித்தான பாதையின் வழியில் கல்விப்பணியாற்றி இப்பிராந்தியத்தில் சிலாகித்து பேசப்பட்டு வரும் பல்திறன் கொண்ட ஆளுமைகளை உருவாக்கி, பிரசவித்து வளர்த்து அழகு பார்த்த முதன்மைக் கல்விக் கூடம் இது. இதன் பாசறையில் உருவான அரசியல் தலைவர்கள், சட்ட வல்லுனர்கள், வைத்திய கலாநிதிகள், பொறியியலாளர்கள், கல்விமான்கள், எனப்பலர் இக்கல்லூரிக்கு பெருமை சேர்த்த பெருந்தகைகளாவர். இனமத பேதங்களைக் கடந்து பல தமிழ் முஸ்லீம் ஆளுமைகளை உருவாக்கிய பெருமை இக்கல்லூரிக்கு உரித்தானதாகும்.

இந்த வகையில் இக்கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையில் இக்கல்லூரியில் கற்கும் வாய்ப்புக் கிடைத்தமையை பெரும் பேறாகக் கருதுகின்றேன். இங்கு பெற்ற கல்வி அறிவும் அனுபவமும் இன்று என் உயர்வுக்குத் துணையாக அமைந்தன. மேலும் இக்கல்லூரியின் வளர்ச்சி என்பது நீண்ட காலத்தில் எய்தப்பெற்ற தொடர் வளர்ச்சி என்பதில் ஐயமில்லை. இவ்வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் தொடக்கம் முதல் இன்று வரை தம்மை அர்ப்பணித்து சமூக மேம்பாட்டிற்காக உழைத்த அதிபர் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள். அந்த வகையில் காலம் கடந்தும் பேசப்படும் அதிபர்களாக அமரத்துவம் அடைந்த அருட்திரு.MG நல்லதம்பி, S.J.வில்சன் திருமதி R. சின்னையா, திரு. யோகம் வேலுப்பிள்ளை, திரு.எஸ்.மகாலிங்கம், கே.சுப்பிரமணியம், S. வெங்கடாசலம், பி.முருகையா போன்றவர்களின் அர்ப்பணிப்பான சேவையும் சமூக ஈடுபாடும் இக்கல்லூரிக்கு மதிப்பையும், சமூக அந்தஸ்தையும் பெற்றுக்கொடுத்தது. இந்த வழிகாட்டலையும், அனுபவத்தையும் முன்னுதாரணமாகக் கொண்டு இதன் தற்போதைய அதிபர் திரு. வி.பிரபாகரன் அவர்களும் தன் அர்ப்பணிப்பான சேவை வழிகாட்டலினூடாக இப்பாடசாலையின் மேம்பாட்டிற்கு பணியாற்றி வருவது பாராட்டுக்குரியதாகும்.

இக்கல்லூரியின் 136வது வருட நிறைவாக இடம் பெறும் நினைவு மலர் வெளியீடும் விழாவும் வெற்றிபெற வாழ்த்துவதுடன் எதிர்காலத்தில் தூர நோக்குடன் நவீன தேவைக்கேற்ப கல்வித் திட்டமிடலை கையாண்டு பெருமளவில் அறுவடையினைப் பெறுவதற்கு எனது வாழ்த்துக்கள், நல்லாசிகள்.

நன்றி.

இவன்,

**K.கோடீஸ்வரன் (பா.உ)**

திகாமடுல்ல மாவட்டம், அக்கரைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A Message

I Would like to offer my Warmest Wishes to Wesley High School, Kalmunai on the occasion for celebrating 136th Founder's Day of the School.

It is a matter of great pride that for the past 136 years, Wesley High school has done commendable work in providing an excellent education to thousands of children. The children too have benefited immensely from the facilities offered by the school. It is proving that today. "Wesley High School" not only occupies position of importance in the society at large. but also making a valuable contribution towards the future of students of this school.

Wesley High School has provided the marvelous support to the past students to become high standard in various positions such as Doctors, Engineers, principals, Lawyers, Police Heads. Teachers, Educationalists, Members of parliament, Traders, Business Magnets and others, also this school produces high range of good habits, spiritual and cultural background.

I would like to admire the principal for his restless work, the teachers and the staff for their dedicative service to upgrade the high standards of education and other activities of the students.

I Wish all the very best to serve for long years ahead in the education stream.

**D.M.L.Bandaranayake,**
District Secretary/Government Agent,
Ampara District.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A Message

It is with great pleasure and honor, I extend this message to Founders Day magazine of Km/Wesley High School, Kalmunai. The school, which was founded in 1883, has continued service successfully to community in the area for the past 136 years.

At present the school has flourished to its excellence with 1957 students and 102 teachers. The present state of success of the school is the result of tireless effort of past Principals, teachers and students who dedicated their time and strength to raise the standard of education.

The school has shown its talent not only in Education, but also in sports activities combined with its leadership and discipline. Continuously in its service in National level and provincial level.

I appreciate the service of Principal and the staff of the school for their hard work towards the Quality Education for the society, which is the aim of Sri Lanka Education.

**I.K.G. Muthubanda**
Secretary
Ministry of Education, Information Technology Education,
Pre-School Education, Sports, Cultural Affairs,
Youth Affairs and Rehabilitation & Resettlement
Eastern Province.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A Message

It gives me great pleasure to pen a message of felicitation on the occasion of the 136th Founder's Day of Wesley High School, Kalmunai.

Wesley High School is one of the oldest schools founded by the Methodist Missionaries in the eastern part of Srilanka. In 1883 it was established as a girls' School by the name 'Girls Boarding School' by Rev .G.J.Trimmer. This had been a revolutionary act because educational opportunities were dissuaded to women according to the cultural practices at that time. Sometime later, another school for boys was started in kalmunai by Rev Gabriel Leese and it was named after him as "Leese Boys school." After several steps of subsequent development, these two schools were amalgamated in 1953 and took shape as "Wesley High school", a prestigious Christian education institute in the East. Even after taking over of mission schools by the Government in the 1960s, Wesley proudly continues with its well established culture and traditions till today.

Although it was founded as a Christian school, it served all communities in the vicinity without any discrimination. Wesley can be proud of being the Alma Mater of great scholars, academics and political leaders. Swami Vipulanandar, Pulavarmani A. Periyathambipillai and Prof.M.A.Nuhman are the famous scholars who had their education at Wesley. Ex Ministers and parliamantarians M.M.Mustafa, A.R.Mansoor, M.H.M. Ashraff, S.M.Rasamanikkam, pon.Selvarajah, C.Chandrakanthan and A.K.Kodeeswaran and respected higher officials like former IGP Mr.T.E.Anandarajah and retired High Court judge Mr.P.Swarnaraj are some of the distinguished old boys who are worthy to mention.

I am sure the souvenir to be published to mark the 136th Founder's Day will be historical record that transmits valuable information about Wesley and transformation of future generations.

I Wish Wesley great success in its arduous journey in future!

**M.K.M.Mansoor,**
Provincial Director of Education,
Trincomalee, Eastern Province.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A Message

**A ton of Greetings**

This is a great pleasure to give a message to the publication on the celebration of 136th founder's day of Km/Wesley High school in Kalmunai, Srilanka.

Education is an important tool to guide a society in a proper way. We able to get our rights from everywhere in this society with any disparities.

In the history of the Wesley high school, there were many mile stones and historical events occurred in the education sector and it's growth. In time to time the leaderships of the school were taken a great part to the turning points of the school development. But, its not an easy task, but it was reached through a better coordination with other institutions, parents, old boys,teachers and students. There are many specialists in several sectors, spreading throughout the world who were came from this school, in the past. In future also it should be remained and we all want to give our support to the remarkable events and records of the school. Here, I would like to appreciate the principal of the college, who is Mr.V.Prapakaran, for his valuable and dedicated service to the school development in his period such a decade. And the teachers and non- academic staff in this period.

Furthermore, Anyone can't avoid the role and services of the college in the history of Kalmunai. This is our one of the valuable historical resource for our society. So we all have a responsibility to support to the sustainable development of college and to protect in our society

**Mr.Vethanayagam Jahadeesan,**
Bsc(Phs),MA(Pub.adm), SLAS –I
Additional Government Agent,
Ampara District.
2019.08.20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 136வது ஆண்டு தினத்தைக் கொண்டாடும் முகமாக வெளியிடப்படும் இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கல்முனைப் பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக கல்விப் பணியைச் சிறப்பான முறையில் இப்பிரதேச மக்களுக்கு வழங்குகின்ற ஒரு பாடசாலையாக இப்பாடசாலையினைக் குறிப்பிட முடியும். இப்பிரதேசத்தின் இன நல்லுறவினைப் பாதுகாக்கின்ற வகையில் இப்பாடசாலையின் செயற்பாடுகள் அமைந்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

ஒரு பாடசாலை வினைத்திறனுடைய வகையில் செயற்படுகின்றதா? என்பதை அளவீடு செய்வதற்காக நாம் பல்வேறு நியதிகளைப் பயன்படுத்தி வருகின்றோம். அத்தகைய நியதிகளின் அடிப்படையில் ஒரு சிறந்த பாடசாலையாக நாம் உவெஸ்லி உயர்தர பாடசாலையினை பல்வேறு சந்தர்ப்பங்களில் இனங்கண்டிருக்கின்றோம். பாடசாலையின் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளிலும் சரி, ஏனைய இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் சரி இப்பாடசாலைக்கென்று ஒரு தனி இடமுண்டு. இப்பாடசாலையின் அதிபர்களாகக் கடமையாற்றி வந்தவர்கள் தற்போதைய அதிபர் திரு.வ.பிரபாகரன் வரை மிகச்சிறப்பாக அந்தப் பணியினை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஒரு பாடசாலை தனக்கென சில பாரம்பரியங்களை, கலாசார ஒழுக்க விழுமியங்களை கொண்டிருப்பதனை நாம் அவதானிக்க முடியும். அந்த வகையில் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை தன்னுடைய கலாசாரத்தையும், பாரம்பரியங்களையும் தொடர்ச்சியாக மிகச்சிறப்பான முறையில் பேணி வருகின்றமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். தன்னுடைய தனித்துவங்களை ஒன்றுமே விட்டுக்கொடுக்காது இப்பாடசாலை செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

காலத்திற்கு காலம் கல்வியில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மாணவர்களைச் சிறப்பான முறையில் தயார்படுத்துவதில் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலைக்கு ஒரு தனியான இடமுண்டு. கல்விச் சீர்திருத்தங்களுக்கு ஏற்ப புதிய உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் மாணவர்களைத் தயார்படுத்தி அவர்களை ஆளுமைமிக்கவர்களாக மாற்றியமைக்கின்ற சிறப்பான பணியினை இப்பாடசாலை சிறந்த முறையில் மேற்கொண்டு வருகின்றமையை அவதானிக்க முடியும். அத்தகைய சிறந்த பணியை மேற்கொள்ளுகின்ற இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

நூற்றாண்டு கடந்து சிறப்பான முறையில் தனது கல்விப் பணியினை முன்னெடுத்து வருகின்ற இப்பாடசாலையின் பணிகள் மென்மேலும் சிறப்பான முறையில் தொடர்ந்து இப்பிரதேசத்தில் இன நல்லிணக்கத்தினை பேணி வருகின்ற ஒரு பாடசாலையாக தொடர்ந்தும் செயற்படுவதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம்.எஸ்.அப்துல் ஜலீல்**

**வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கல்முனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A Message

Indeed, it gives me a great pleasure to convey my message to the souvenir of Wesley High School Kalmunai on the auspicious occasion of commemorating its 136th Founder's Day.

This pioneer school has possessed a long history and captured a unique place in the political, social, economical and cultural developments of Kalmunai region and the nation Srilanka as well. It has created a number of educationists to show the right path to the society. In this regard, the past principals have rendered their untiring, dedicated service to the growth and development of the school.

There has been a tremendous improvement in curricular and co-curricular activities of the school. The achievements of students in Grade 5 Scholarship, G.C.E (O/L) and G.C.E (A/L) exam have proven it.


I hope in future this historical institution will yield more fruits of victories in the field of education and trumpet its name all over the world.

In the end I wish to convey warm regards and best wishes to the present principal Mr.V.Prapakaran, the teachers, nonacademic staff and each and every one of the Wesleyan society for your committed service to fulfill the motto "Utmost for the highest"

**T.J.Athisayaraj**
Divisional Secretary
Divisional Secretariat
Kalmunai North



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 136 ஆண்டு சிறப்பு மலருக்கான வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட உவெஸ்லி உயர்தர பாடசாலை அகில இலங்கை அடிப்படையில் அனைத்து விடயங்களிலும் சிறந்து விளங்குவதற்கு இப்பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களும், தியாக சிந்தனை கொண்ட ஆசிரியர்களும், ஆளுமை மிக்க அதிபர்களும் காரணமாக திகழ்ந்திருக்கின்றார்கள்.

தனக்கென தனிக் கலாசாரத்தினையும் பண்பாட்டினையும் கொண்ட இப்பாடசாலையின் வருடாந்த கல்வி, கல்வி சாரா நிகழ்ச்சித் திட்டங்கள் ஏனைய பாடசாலைக்கு எப்போதும் முன்னுதாரணமாகவே அமைந்துள்ளன. மாணவர்களின் மகிழ்வான கற்றலுக்கு ஊக்கமளிக்கப்படும் செயற்பாடுகள் கற்றலின் பால் அவர்களை இயல்பாக கவரக்கூடிய ஒன்றாகும். அந்த வகையில் சாதனைகளை பலவற்றை தன்னகத்தே கொண்ட இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு கைகொடுத்த ஒவ்வொருவரையும் நாம் நினைத்துப் பார்த்து நன்றி கூறக் கடமைப்பட்டவர்களாக நிற்கின்றோம்.

உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கல்வி கற்ற பலர் இன்று நாட்டின் உள்ளேயும் வெளியேயும் பல்வேறு துறைகளில் பல்வேறு பதவிகளை வகிப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்கள் தங்களை உவெஸ்லியின் பழைய மாணவர்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைவது இப்பாடசாலை யின் மிகப்பெரிய வரலாற்றுச் சாதனையாகவே உள்ளது. இதனை எண்ணி இன்றைய பாடசாலை சமூகத்தினருக்கு உவெஸ்லியின் தனித்துவத்தினைப் பேணுகின்ற முக்கிய பொறுப்பாளிகள் தாம் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

எனவே "உவெஸ்லி 136" நாமம் கொண்ட இப்பாடசாலையின் சாதனைகளை பறை சாற்றும் இந்நூல் வெளியீடு சிறப்பாக அமைய வேண்டும் என்றும், பல்வேறு சாதனைகளை தொடர்ச்சியாக ஈட்டித் தந்து எமது பிரதேசத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

**எஸ்.புவநேந்திரன்,**
பிரதிக் கல்விப் பணிப்பாளர், (நிர்வாகம்)
கல்முனை வலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பல அதிபர்களினதும் ஆசிரியர்களினதும், பாடசாலையைத் தொடங்கிய மெதடிஸ்த மிஷனரிகளினதும் அர்ப்பணிப்பான சேவைகளையும் அவர்கள் மாணவர்கள் பால் காட்டிய அதீத அக்கறை, அன்பு ஆகியவற்றை இப்பாடசாலையின் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக கடமையாற்றிய காலங்களில் அறியவும் கேட்கவும் முடிந்திருக்கின்றது. சிலரோடு நேரடியாக பழகிய அனுபவங்களும் என் மனக்கண் முன்பே நிழலாடுகின்றது. நாட்டைவிட்டு புதிய தேசம் வந்து இம்மண்ணிலே மரித்தவர்களின் பணிக்கு முன்பாக எமது பணிகள் சொற்பமானவையே. பாடசாலையைத் ஸ்தாபித்த ஸ்தாபகர்களை ஒவ்வொரு ஆண்டும் ஆனி 29ஆம் திகதி நினைவு கூர்ந்து ஸ்தாபகர் தினங்களைக் கொண்டாடுவதன் மூலம் நாங்கள் இன்னும் பணியாற்றிய உங்கள் சேவைகளை ஞாபகத்தில் வைத்துள்ளோம் என்பதை மாணவர்கள் தெரிந்துகொள்ள முடிந்திருக்கின்றது.

கடந்த பத்து வருட அதிபர் பணியில் பெற்றுக்கொண்ட சாதகமான, பாதகமான நினைவுகள் என்னை புடமிட்டிருக்கின்றன. 2009இல் அதிபராகப் பணியேற்று சில மாதங்களில் பல ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்கள் என்னைத் தடுமாற வைத்தபோது வந்த புதியவர்கள் பாடசாலைக்குள் தங்களை விரைவாகவும் முழுமையாகவும் இணைத்துக்கொண்டதால் பாடசாலையை சுமுகமாகக் கொண்டு செல்ல முடிந்தது. பின்னரான காலங்களிலும் சிரேஷ்ட ஆசிரியர்களின் ஓய்வுகள் பாடசாலை ஓட்டத்திற்கு சில தடைகளாக அமைந்தாலும் பாடசாலை எனும் நிறுவனத்தை சிறப்பாகக் கொண்டு செல்ல பிரதி, உதவி அதிபர்களினதும் பகுதித் தலைவர்களினதும் சிறப்பான ஒத்துழைப்பு இப்பாடசாலையை முன்னணிக்குக் கொண்டுவர ஓரளவு முடிந்திருக்கின்றது.

பாடசாலையின் வருடாந்தத் திட்டமிடலுக்கேற்ப செயற்பாடுகளை தொடர்ந்தேர்ச்சியாகக் கொண்டு செல்ல பாடசாலையினுள்ளும், புறமும் பலரது ஒத்துழைப்பு கிடைத்திருக்கிறது. பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர், கல்வி அதிகாரிகள், நலன் விரும்பிகள் ஆகியோரது சிறப்பான பங்களிப்பு அடிக்கடி கிடைத்து வருகிறது. அத்துடன் இடையிடையே வெளிநாட்டில் இருந்து வருகின்ற சில பழைய மாணவர்களினது ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் பாடசாலைக்குக் கிடைத்துள்ளன.

2004 சுனாமியின் பின்னர் கொள்ளுபிட்டி மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அதன் அதிபர் சாந்தி டயஸ் அவர்களினுடைய வழிகாட்டலில் பாதிக்கப்பட்ட எமது பாடசாலை மாணவர்களுக்கு சீருடை, காலணி, கற்றல் உபகரணங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியதும் அதனைத் தொடர்ந்து Candle Aid நிறுவனத்தாருடன் இணைந்து நூலக புத்தகங்களை வழங்கியதோடு எமது சில மாணவர்களை கொழும்புக்கு அழைத்துச் சென்று தங்கவைத்து அப் பாடசாலை மாணவிகளுடன் உறவுகளை பலப்படுத்தியதை நன்றியோடு நினைவு கூரவேண்டியுள்ளது.

அவ்வாறே 2009 இல் SLT நிறுவன அனுசரணையுடன் உயர்தர வகுப்பு மாணவர்கள் சிங்கராஜ வனத்தினுள் சில நாட்கள் தங்கி பறவைகள் தொடர்பான ஆய்வுகளையும் அனுபவங்களையும் பெற வழி சமைத்தமை இன்றும் அம்மாணவர்களின் நினைவில் உள்ள விடயங்களாகும்.


இப்பாடசாலை என்கின்றபோது அதன் ஆலமர நிழலையும் தென்றல் காற்றையும் இப்பாடசாலைக்கு ஒரு நாள் வந்தவர்கள் கூட சிலாகித்தே கூறுவதுண்டு. பாடசாலையின் அமைவிடம், பாடசாலைச் சூழல் பலருக்கு பிடித்துப் போவதற்கு இம்மரங்களின் நிழல்கள் காரணமாக உள்ளன. புதிய கட்டடங்கள் அமைகின்ற போதும் பாடசாலையின் கவின்நிலையை மாற்றமடையாமல் பேண முடிந்திருக்கிறது.

பல்வேறு ஆற்றல் கொண்ட ஆசிரியர்கள் பாடசாலைக்குப் பலமே. இது அன்றும் இன்றும் தொடர்ந்து இருந்து வருகின்றது. இவர்கள் மூலமாக வழிப்படுத்தப்படுகின்ற மாணவர்கள் ஆற்றல் மிக்கவர்களாக மாறுகிறார்கள். அவ்வாறான மாணவர்கள் அவ்வப்போது பாராட்டப்படுகிறார்கள். இந்த வகையில் மாணவர்களை ஊக்குவிக்கின்ற ஆசிரியப் பெருந்தகைகள் வருடத்திற்குப் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பாடசாலையால் பாராட்டப்படுகின்ற நிகழ்வுகள் பாடசாலையில் நடந்தேறி வருவது குறிப்பிடத்தக்கது.

135வது வருட நிறைவை கொண்டாடும் முகமாக இம்மலர் ஆக்கப்பட வேண்டுமென்ற எமது அவா பூர்த்தி செய்யப்பட முடியாத நிலையில் 136வது வருடத்தில் இவ்விழாவை ஒழுங்கு செய்துள்ளோம். இப்பாடசாலையின் பெயரைத் தாங்கிய உவெஸ்லியின் பெயரையே மலருக்கு சூட்டியுள்ளோம். அவரது அர்ப்பணிப்பான வாழ்வானது இன்றைய எம்சந்ததிக்கு முன்னுதாரணமே.

அன்புடன்
**திரு.வ.பிரபாகரன்**
அதிபர், உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

எமது கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை இப்பிரதேசததிலே 136 வருடக் கல்விப் பணியைக் கடந்து செல்கின்றமை என்பது மிகப்பெருமை தரும் விடயம். அந்த வகையில் எம்மால் வெளியிடப்படவுள்ள "உவெஸ்லி 136" எனும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பெருமை யடைவதோடு பணிசிறக்க வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

இற்றைக்கு 205 ஆண்டுகளுக்கு முன்னர் அருட்திரு தோமஸ் குக் என்பவரைத் தலைவராகக் கொண்ட குழுவொன்று இங்கிலாந்து தேசத்தில் இருந்து கீழைத்தேசத்தில் கல்வி சேவையை பிரதான நோக்காகக் கொண்டு புறப்பட்டு 6 மாதகால கடற்பயணத்தில் பல்வேறு சவால்களையும் சோதனைகளையும் இழப்புக் களையும் தாண்டி காலிமுகத் துறைமுகத்தை வந்தடைந்தது. பல்வேறு பிரதேசங்களுக்கு பிரிந்து சேவைக்காய் சென்றனர். இந்த வகையில் 1883நவம்பர் மாதம் 30ம் திகதி அருட்திரு ஜோர்ச் றிம்மர் அவர்கள் பெண்கள் விடுதிப்பாடசாலையை ஆரம்பித்ததும் அதனைத் தொடர்ந்து 1901இல் அருட்திரு கபிரியேல் லீஸ் அவர்களால் "லீஸ்" ஆண்கள் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. இவை இரண்டும் 1953ஆம் ஆண்டு மெதடிஸ்த திருச்சபையின் ஸ்தாபகரான ஜோன் உவெஸ்லி அவர்களை நினைவு கூரும் உவெஸ்லி உயர்தர பாடசாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுஇன்று வரை எம்மவரின் அறிவுக் கண்களை திறப்பதனையே நோக்காகக் கொண்டு தன்னலமற்ற சேவையினை வழங்கி வருகிறது.

பல பேர் கல்வி கற்று பெருமையடைந்து அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட இந்த மண்ணில் ரம்மியமான சூழல் பாடசாலைக்கு உள்ளே நுழையும் ஒவ்வொரு வரையும் ஈர்த்துக் கொள்ளும். பெரிய ஆல மரங்களுடன் சேர்ந்த காட்டு விருட் சங்கள், எவ்வாறான வெப்பமான சூழ்நிலையிலும் தென்றல் வீசும் ஈரக்காலநிலை, பாடசாலையின் பல்வேறுபட்ட இடங்கள் ஒவ்வொன்றும் கற்ற ஒவ்வொரு மாணவர்களாலும் தன்னலம் பாராது கடமையாற்றிய ஒவ்வொரு சேவையாளர்களாலும் நினைவு கூரப்படுவதுடன் அவர்களின் நன்றி மறவாத நிலை என்பனவற்றால் இப்பாடசாலை மாண்படைகின்றது.

இவ்வாறு இயற்கை நிழலோடு அறிவொளியும் ஆத்ம நெறியும் சீரிய ஒழுக்கத்தையும் புகட்டி நற்பிரஜைகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் இப்பாடசாலை யில் மாணவனாகக் கல்வி கற்று ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் சஞ்சரிப்பதை யிட்டு மகிழ்வடைவதோடு தொடர்ந்து நீடித்து நிலைத்து சேவையாற்ற இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

நன்றி

அன்புடன்

**செல்லத்தம்பி கலையரசன்**

பிரதி அதிபர், உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A Message

I am Very much glad to give a message to this book on behalf of the present past pupils Association. The present past pupils Association was elected in March 2016, The members were selected from the old students.

We had the vision of supporting the Administration of the school to improve the Quality and standard of Education and to Organize a safe and Healthy Environment for the students and teachers as well. We are maintaining good rapport with the principal and the teachers of the school. Past students are helping to arrange special classes to the students and organizing some capacity building programmes to the students and the Teachers.

We Started to develop a 5 years development plan for the school with the help of our old students in view of getting the support from the Government, NGO and past pupils of the school. We also started to form a global link between our old students to get the support and suggestions for the school development in the future and also plan to get the external resources from our old students to improve the knowledge and skills of the students and the teachers by facilitating to expose to the modern developments of other countries.

As old students of the school we have an Ambition to give fullest support to produce a mentally, spiritually and culturally good behaving citizens from our school for the country.

**Dr.N.Ramesh**
Secretary,
Past Pupil Association
Wesley High School
Kalmunai.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

1883ஆம் ஆண்டு கிழக்கிலங்கையின் கல்முனை நகரில் உவெஸ்லியன் மிஷனரிமார்களின் கால்கள் பதித்த இடம்தான் உவெஸ்லி உயர்தர பாடசாலையாகும் இப்புண்ணிய பூமி இவர்களின் வருகையை முன்னரே அறிந்திருந்தது போல் விரைந்து வாருங்கள், சேவை செய்யுங்களென ஆலமர விருட்சங்கள் நிழலைப் பரப்பி நின்றன. இதே போல் உங்கள் பணியும் பரந்து விரிந்து செயற்பட வேண்டும் என கங்கணம் கட்டி அவை அசைந்தாடிக் கொண்டிருந்தன. அதே பொலிவுடன்தான் தற்போதும் மரங்கள் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. அக்காலத்தில் இப்பிரதேச மக்களின் அறிவுச் சுடரை ஏற்றிப் பிரகாசித்ததில் இப்பாடசாலைக்கு பெரும் பங்களிப்பு உண்டு என்று சொல்லலாம். மேலும் பெயர் சொல்லும் அளவிற்கு பல பெருமை மிக்கவர்களையும் பல்வேறு துறைகளில் சாதனையாளர்களையும் ஈட்டித் தந்துள்ளது. நான் அறிந்தவரை மிஷனரிகளின் காலத்திற்குப் பிறகு இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியவர், திருவாளர் அமரர் யோகம் வேலுப்பிள்ளை அதிபராவார். இவரது காலம் ஒரு பொற்காலம் என்று கூறலாம். அவரது காலத்திற்குப் பின்பும் இப்பாடசாலை தன் பணிகளிலிருந்து சற்றும் சளைக்கவில்லை. அதே போல் ஆசிரியராகவும், பின்னர் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெறுகின்ற வடிவேல் பிரபாகரன் அவர்களின் காலமும் ஒரு பொற்காலம் என்று கூறலாம்.

இவர் இப்பாடசாலைக்கு பல்வேறு வகைகளில் ஒத்துழைப்பு வழங்கி வந்ததோடு பல சவால்களையும் எதிர்கொண்டவர். அந்த நிலையில் தனது பணிகளைச் சிறப்புறச் செய்துள்ளார் என்றால் மிகையாகாது. அதே காலத்தில் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளராகக் நான் கடமையாற்றுவது எனக்குக் கிடைத்த பாக்கியமாகும். அவ்வாறான சூழ்நிலையில் இந்தப் பாடசாலை யானது தனது 137வது அகவையில் காலடி எடுத்து வைத்துள்ளது. இதனை நாம் சிறப்புறக் கொண்டாடி மகிழ்வதோடு அதன் நினைவாக வெளியிடப படுகின்ற சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியைக் வழங்குவதில் பெருமகிழ்ச்சிய டைகின்றேன். மேலும் இப்பாடசாலையின் புகழ் மென்மேலும் சிறந்து விளங்க இறைவனின் ஆசியை வேண்டுகிறேன்.

**J.B.வத்தோலமியூஸ்**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன் உவெஸ்லி

**திரு.வ.பிரபாகரன்**
(அதிபர், உவெஸ்லி உயர்தர பாடசாலை,கல்முனை.)


ஆங்கிலேய திருச்சபையின் போதகராயிருந்த சாமுவேல் உவெஸ்லியும், சூசன்னா அனெஸ்லியும் தமது இல்வாழ்க்கையை லண்டனிலுள்ள "ஆல்பன்" இடத்தில் ஆரம்பித்தனர். பின்னர் "எப்பேர்த்" எனும் இடத்தில் இருக்கும் ஆலயத்தில் சாமுவேல் உவெஸ்லி குருவானவராகப் பணியாற்றினார். இவர்களுக்கு 19 பிள்ளைகள். இவர்களில் 9பேர் குழந்தைகளிலேயே மரித்து விட்டனர். இவர்களில் 15வது பிள்ளையாக 17-6-1703 இல் ஜோன் உவெஸ்லியும், 18வது பிள்ளையான 1707இல் சாள்ஸ் உவெஸ்லியும் பிறந்தனர்.

"எப்பேர்த்" திருச்சபையில் பல குழப்பகாரர்கள் இருந்ததினால் அவர்களைக் கவனிக்கவே சாமுவேல் உவெஸ்லிக்கு நேரம் சரியாக இருந்தது. மனைவி சூசன்னா தனது கணவரைப் போல ஒழுக்கம், பண்பு களில் கண்டிப்பானவர்.

ஜோன் உவெஸ்லி 5 வயதாயிருக்கையில் அவர்கள் இருந்த குருமனையில் தீப்பிடித்தது. மேல் மாடியில் ஜோன் உவெஸ்லி தூங்கிக் கொண்டிருந்தார். அல்லோலகல்லோகம். கண் விழித்த போது தன்னைச் சுற்றி நெருப்பு எரிவதைக் கண்ட ஜோன் ஜன்னலை நோக்கி வந்து கூக்குரலிட்டான். காப்பாற்ற ஏணி கிடைக்கவில்லை. சமயோசிதமாக செயல்பட்ட சிலர், ஒருவர் தோளில் மற்றவர் ஏறி மனித ஏணி மூலமாக சிறுவன் ஜோனைக் காப்பாற்றினார்கள். சில நிமிடங்களில் மேல் தளத்தின் கூரையும் விழுந்தது. எரிநெருப்பில் இருந்து காப்பாற்றப்பட்ட அச்சிறுவன் ஜோன் உவெஸ்லி அவர்களே பின்னாட்களில் மெதடிஸ்த திருச்சபையின் ஸ்தாபகர் ஆனார்.

தாய் சூசன்னா ஒவ்வொரு பிள்ளையும் தன்னுடன் மூன்று மணி நேரம் செலவிடும்படி ஏற்பாடு செய்தார். வீட்டிலேயே கல்வியூட்டப்பட்டது. ஜோனுக் கும் ஆத்மீகப் பயிற்சி கொடுத்தார். தாய் தனக்காக செலவிட்ட ஒன்றுவிட்ட வியாழக்கிழமை மாலை நேரத்தை நினைவு கூர்ந்து பின்னாளில் ஜோன் கடிதம் எழுதினார் எனில் அக்காலங்களில் எவ்வளவு ஆசீர்வாதம் பெற்றிருப்பார் என்பதை அறிய முடியும். பத்தரை வயதில் லண்டனில் உள்ள 'சாட்டர் ஹவுஸ்' எனும் இடத்திலுள்ள விடுதிப் பாடசாலையில் சேர்க்கப் பட்டார்.

17வயதில் 1720இல் OXFORD பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்கு மாணவர் மத்தியில் மார்க்க கல்விக்கு ஊக்கம் இருக்கவில்லை. ஆனாலும் ஜோன் பாவச் செயல்களில் இருந்து விலகியே இருந்தார்.



1725ஆம் ஆண்டில் இங்கிலாந்து திருச்சபையில் குருவானவராக ஜோன் உவெஸ்லி அருட்பொழிவு பெற்றார். தகப்பனாருக்கு உதவி செய்ய 2 வருடங்கள் பணி புரிந்தார். அதன் பின் OXFORD பல்கலைக் கழகத்திற்குச் சென்ற போது அவரது சகோதரர் சாள்ஸ் உவெஸ்லி மற்றும் சிலமாணவர்களோடு இணைந்து வேதவாசிப்பு, ஜெபம் என்பனவற்றில் ஈடுபட்டு அவற்றை ஒழுங்காக கடைப்பிடிப்பவர்களாக காணப் பட்டனர். பின்னர் இக்குழுவிற்கு ஜோன் உவெஸ்லி தலைவரானார். இக்குழுவினருக்கு பல பட்டப்பெயர்கள் இருந்தன. பரிசுத்த கழகம், என்றும் ஒழுங்காக நேரத்திற்கு சரியாகச் செய்வதினால் (Method) Methodist என்றும் பெயர்கள் வைக்கப்பட்டன. இதுவே பிற்காலத்தில் மெதடிஸ்த திருச்சபை எனப்பெயர் வரக் காரணமாகியது.

1735ல்இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்கு பலரும் குடியேறினர். அவர்கள் மத்தியில் பணியாற்ற தளபதி 'ஒக்லெக்தோர்ப்' என்பவரின் அழைப்பு கிடைத்தது. ஜோனும் சகோதரர் சாள்ஸ்சும் ஜோர்ஜி யாவுக்கு கப்பலில் சென்றனர். கடற்பயணத்தின் போது கடற்புயல் வீசியது. கப்பலில் இருந்த "மொறேவியர்" என்கின்ற 26 ஜேர்மனியினர் அமைதியோடு இருந்து இறைவனை நோக்கி மகிழ்வுடன் துதித்துக் கொண்டி ருந்தனர். ஆனால் ஜோன் உவெஸ்லி உட்பட பலர் பயந்து கொண்டிருந்தனர். அந்த ஜேர்மனியினரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தைக் கேட்ட போது நாங்கள் மரணத்திற்கு பயப்பட்டவர்கள் அல்ல என்ற பதிலே கிடைத்தது. இது ஜோன் உவெஸ்லிக்கு பெரும் சவாலாக இருந்தது.

அமெரிக்காவின் ஜோர்ஜியாவில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் லண்டனில் இருந்து சென்றவர்களே. அவர்களை பரிசுத்த கழகம் போல் மாற்ற முனைந்ததன் விளைவு இரண்டு வருட திருப்பணியில் தோல்வியுடன் சகோதரர் இருவரும் கவலையுடன் லண்டன் திரும்பினர்.

1738 வைகாசி மாதம் 24ம் திகதி ஜோன் உவெஸ்லி மனவிருப்பம் இன்றி 'அல்டர்ஸ்கேட்' தெருவிலுள்ள ஒரு கூட்டத்திற்குச் சென்ற போது அங்கு "மார்டின் லூதர்" என்கின்ற இறைபணியாளர். வேதாகமத்தின் ரோமர் நிருபத்திற்கு எழுதிய முகவுரையை ஒருவர் வாசித்துக் கொண்டிருந்தார். மாலை 8.45 தன்னுடைய இருதயம் வினோதமான முறையில் அனலடைந்ததாக ஜோன் உவெஸ்லி எழுதுகிறார். தனது பாவங்களில் இருந்து மீட்பைப் பெற்றுக் கொண்ட நிச்சயம் தனக்கு அருளப்பட்டதாகக் கூறுகிறார். இதே விதமான அனுபவம் அவரது சகோதரர் சார்ள்ஸ் உவெஸ்லிக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் ஏற்பட்டது. இந்த நாளில் அவரில் ஏற்பட்ட மாற்றம் 18ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஆன்மீக மறுமலர்ச்சி ஏற்பட காரணமாயிற்று.

'ஜோர்ஜ் விட்மீல்ட்' என்பவர் ஏற்கனவே ஒக்ஸ்போர்டில் கல்வி கற்ற "மெதடிஸ்தர்" குழுவினரின் தொடர்புகள் காரணமாகக் கவரப்பட்டார். அவர் குருவானவராக அமெரிக்கா சென்று திறந்த வெளிக் (Open - Air) கூட்டங்களில் பிரசங்கங்களை ஆற்றினார். வெற்றியும் கிடைத்தது.

லண்டனில் "Bristol" பகுதியில் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களின் அவலநிலையைக் கண்டு அங்கு பிரசங்கித்தார். நல்ல பலன் கிடைத்தது. ஜோன் உவெஸ்லிக்கும் அவர் அழைப்பும் கொடுத்தார். ஆலயத்திற்கு வெளியில் ஆற்றுகின்ற பிரசங்கத்தால் ஏதும் மாற்றம் நிகழும் என்று நம்பாத ஜோன் பின்னாளில் திறந்த வெளிப்பிரசங்கங்களை ஆற்றினார். நல்ல பலன் கிடைத்தது. மக்களை சரியான முறையில் வழிப் படுத்தினார். இதன் விளைவு ஜோன் உவெஸ்லிக்கு ஆலயக் கதவுகள் பூட்டப்பட்டன. கல்லறைத் தோட்டங்களே அவருக்கு பிரசங்க மேடையாயிற்று.

உலகம் முழுவதையும் எனது திருச்சபையாகக் கருதுகிறேன். எப்பகுதியில் இருந்தாலும் அதைக் கேட்க ஆயத்தமாய் இருப்போருக்கு அறிவிப்பது எனது கடமை என்றார் ஜோன் உவெஸ்லி.

மக்களைத் தினந்தோறும் சந்தித்தார். ஒருநாளில் 4, 5 பிரசங்கங்கள் ஆற்றினார். 70வயது வரை பல பிரயாணங்களை மேற்கொண்டார். ஒரு நாளைக்கு 70-80 மைல்கள். ஒரு வருடத்திற்கு 5000 மைல்கள் பிரயாணம் செய்தார். மொத்தமாக 250,000 மைல்கள். 40000 பிரசங்கங்கள்.

1784இல் அதாவது 81வது வயதில் 100 பேர் கொண்ட சங்கத்தை அமைத்து அதுவே தமது வாரிசு என்றார். ஆங்கிலேய திருச்சபையின் பால் அவர் வைத்திருந்த பற்றுதலின் காரணமாக பிரச்சினை வேண்டாம் என ஜோன் உவெஸ்லி எண்ணினார்.

1791 ஜோன் உவெஸ்லி இறந்த பின்னர் திருச்சபையில் பிரச்சினைகள் தவிர்க்க முடியாது விட்டது. 88 வயது வரை 403 புத்தகங்கள் எழுதினார். சம்பாதி (Earn) சேமி (Save) கொடு (Give) என்ற அடிப் படையில் வாழ்ந்தவர். 30ஸ்ரேலிங் பவுண் கிடைத்த போது செலவழித்த அதே 28 பவுணைத்தான் 1400 பவுண் கிடைத்த போதும் செலவழித்தார். வாழ்ந்தும் காட்டினார்.

தான் இறந்த பின்னர் விலை உயர்வு ஆடை வேண்டாம். வாடகை வண்டி வேண்டாம். வேலையற்ற 6 வாலிபர்களுக்கு தலா 6 பவுண் கொடுத்துத் தூக்கிச் செல்லுங்கள். அதே விதமாக 1791 மார்ச் 2ம் திகதி புதன்கிழமை அமைதியாக தனது மரணத்தை சந்தித்தார்.

அவருடைய இறுதிக் காலத்தில் 120000 – 1500000 பேர் அங்கத்தவர்களாக இருந்தனர். சாட்சியான வாழ்வு காணப்பட்டால் மாத்திரமே திருச்சபையில் சேர முடியும் என்ற ஜோன் உவெஸ்லியின் கண்டிப் புடனான கொள்கை பின்னரும் பின்பற்றப்பட்டது.

எரி நெருப்பிலிருந்து காப்பாற்றப்பட்ட சிறுவன் ஜோன் இங்கிலாந்தில் மாற்றத்தைக் கொண்டு வந்தார். 1807 பெப்ரவரி 23 அன்று "அடிமை ஒழிப்புச் சட்டம்" பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அமுலுக்கு வந்த சமயம் அதில் உரையாற்றிய "போல்ஷுக்" பிரபு அவர்கள் இச்சட்டம் அமுலாக ஜோன் உவெஸ்லியின் குழுவினரே காரணம் எனக் கூறினார்.

சமூக, சமயப் பணிகளில் முன்னின்ற ஜோன் உவெஸ்லி யின் குழுவினர் நாடுகளைக் கடந்து 1814ல் இலங்கை வந்து 1883ல் இப்பாடசாலைத் தொடங்கினார்கள். மெதடிஸ்த திருச்சபையின் ஸ்தாபகரான ஜோன் உவெஸ்லியின் பெயரில் 1953இல் "உவெஸ்லி உயர்தர பாடசாலை" எனப் பெயர் மாற்றம் இடம்பெற்றது.

இங்கிலாந்தில் மாற்றத்தை ஏற்படுத்திய அவரின் பெயரால் உருவான இப்பாடசாலை சமூகச் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இப்பாடசாலை பெற்றெடுத் தவர்கள், உலகம் முழுவதும் நீதி, நியாயம், அரசியல், கல்வி, இலக்கியம் எனப்பல்வேறு துறைகளில் புகழ்பெற்று விளங்கி உவெஸ்லியின் நாமத்தை பறை சாற்றுவது மகிழ்ச்சிக்குரியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லி உயர்தர பாடசாலை கல்விசார், கல்விசாரா ஊழியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆரம்பப் பிரிவு மாணவர் பாண்ட் வாத்தியக் குழு



கனிஸ்ர மாணவர் பாண்ட் வாத்தியக் குழு


சிரேஸ்ர மாணவர் பாண்ட் வாத்தியக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் நீண்ட பயணம்

1814ம் ஆண்டு ஜூன் மாதம் 29ம் திகதி காலியின் வெலிகம எனும் இடத்தை வந்தடைந்த இங்கிலாந்தின் மெதடிஸ்த மிஷனரிகள் இலங்கையின் நாலா பக்கங்களிலும் சென்று இறைபணியைச் செய்த தோடு கல்விப் பணிகளிலும் தங்களை இணைத்துக் கொண்டனர். மிஷனரிக் குழுவில் அடங்கிய அருட்திரு வில்லியம் ஓல்ட் அவர்கள் மட்டக்களப்பை அடைந்து அங்கு பணியாற்றிய 8 மாதங்களில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி உட்பட எட்டு பாடசாலை களை தொடக்கியதன் விளைவே கல்முனை பகுதியை நோக்கிய மிஷனரிகளின் கல்விப் பயணமாகும். எட்டு மாதங்கள் மாத்திரம் பணியாற்றி மட்டக்களப்பு மண்ணில் மரித்த அவரின் உருவச் சிலை மட்டக்களப்பின் வாயிலில் அமைத்திருப்பது அவரின் பணியை இன்றும் மக்கள் நினைவு கூருகிறார்கள் என்பதைக் காட்டுகின்றது.

1847இல் கல்முனையை வந்தடைந்த மிஷனரிகள் கல்முனையைச் சூழ உள்ள பல இடங்களில் ஆரம்பப் பாடசாலைகளை அமைத்தனர். அவ்வாறு அமைக்கப்பட்ட பாடசாலைகள் தொடர்பான சில தகவல்கள்.

1870 – கல்முனை மெதடிஸ்த திருச்சபைக்கு அருகாக 4 ஏக்கர் காணி வாங்கப்பட்டுள்ளது.

1872 – நற்பிட்டிமுனையில் பாடசாலை கட்டப்பட்டது.

1874 – காரைதீவு பாடசாலையும் ஆசிரியர் அறையும் (ஸ்ரேலிங் பவுண் 20)

1875 – பாண்டிருப்பு பெண்கள் பாடசாலை (ஸ்ரேலிங் பவுண் 21)
பாண்டிருப்பு பெண்கள் பாடசாலை (ஸ்ரேலிங் பவுண் 39)

1878 – சாய்ந்தமருது பாடசாலைக் காணியும் பாடசாலையும் (ஸ்ரேலிங் பவுண் 25)
காரைதீவு பெண்கள் பாடசாலை.
சம்மாந்துறை காணியும் பாடசாலையும். (ஸ்ரேலிங் பவுண் 30)

1883 – கல்முனை பெண்கள் விடுதிப் பாடசாலை (2000 ரூபா)

1884 - கல்முனை பெண்கள் விடுதிப் பாடசாலை – கட்டிடங்கள் (500 ரூபா)

1885 - கல்முனை பெண்கள் விடுதிப் பாடசாலை கட்டிடத் தரை (100 ரூபா)

1887 – நிந்தவூர் தற்காலிகக் கட்டிடம் (40ரூபா)
காரைதீவு பாடசாலை (650ரூபாய்)

பெண்களுக்கான கல்வி மறுக்கப்பட்ட 18ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் விடுதியில் தங்கி யிருந்து கற்கக் கூடிய சூழலை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்கனவே யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டு வெற்றி பெற்றதன் விளைவாக கல்முனையில் மெதடிஸ்த குருவாக இருந்த அருட்திரு ஜோர்ச் J.றிம்மர் (Rev.G.J.Trimmer) அவர்களால் பெண்கள் விடுதிப்பாடசாலை 1883 நவம்பர் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. (Girls Boarding School – GBS) இதற்கு 200 ஸ்ரேலிங் பவுண் (2000ரூபா) செலவிடப் பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. இதன் அரைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி உள்ளூரில் திரட்டப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. இங்கு சுயபாசையுடனான பாடங்களுடன் மேலதிகமாக ஆங்கிலக் கல்வியும் கற்பிக்கப்பட்டது. செல்வி ஜேன் வீரக்குட்டி என்பவர் ஆசிரியராகவும் விடுதிக் காப்பாளராகவும் கடமை யாற்றியதாகவும் திரு கோவிந்தன் என்பவரும் இங்கு கற்பித்தார் என வரலாறு கூறுகின்றது. கிடுகினால் வேயப்பட்ட கட்டிடத்தில் ஆரம்பத்தில் 18 மாணவிகளோடு ஆரம்பித்தாலும் பின்னர் செங்கல் கட்டிடமாக மாறிய போது மாணவி களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்தது. விடுதியில் தங்கியிராமல் வீட்டில் இருந்து கற்ற மாணவிகளும் இப்பாடசாலையில் கல்வி பயின்றனர்.

பாடசாலையில் 1883இல் அனுமதிக்கப்பட்ட முதல் மாணவி இமானுவேல் ஜெமிமா ஆவார். ஜெமிமா என்றால் பெண்புறா என்பதாகும். பிற்காலத்தில் சமாதானத்தையும் அன்பையும் சமூகத்திற்கு கொடுக்க வேண்டும் என்கின்ற இறைசித்தத்திற்கு ஏற்ப இம்மாணவி சேர்க்கப்பட்டுள்ளார் என்பதை தற்போது நினைவுகூரும் போது இப்பாடசாலை சமூகத்திற்கு ஆற்றிய பணி அளப்பரியதாக உள்ளது. அருட்திரு ஜோர்ஜ் J.றிம்பர் குருவானவரின் மனைவி திருமதி றிம்மர் இங்கிலாந்திற்கு எழுதிய கடிதம் ஒன்றில் இப்பகுதி மக்கள் தன்மீது காட்டும் அன்பும் பரிவும் தனக்கு சொல்லுகின்ற வணக்கங்களும் சலாம்களும் தனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகவும் அவர்கள் கண்ட முதலாவது மிஷனரியின் மனைவியாகத் தான் இருந்ததாகவும் தன்னை அவர்கள் 'வெள்ளைக்கார அம்மா' என அழைத்ததாகவும் குறிப்பிடுகிறார்.

பின்னரான காலங்களில் "ஆசிரிய-மாணவர்களை" (Pupil Teacher) பயிற்றுவிக்கும் இடமா கவும் இப்பாடசாலை திகழ்ந்தது. குறுமண்வெளியைச் சேர்ந்த செல்வி மேரி சீனித்தம்பி என்பவரே முதலாவது ஆசிரியராக வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையில் கல்விபயின்றவர்களும் "ஆசிரிய-மாணவர்களாக" (Pupil Teacher) பயின்றவர்களும் ஆசிரியைகளாக வெவ்வேறு பாடசாலைகளில் பணிபுரிந்தனர். இவர்களில் சிலர் பாடசாலைகளில் தலைமை ஆசிரியைகளாகவும் பதவி வகித்தனர். இதனால் கிழக்கில் ஆசிரிய சமூதாயம் உருவாவதற்கு இப்பாடசாலையே வித்திட்டது என்பது வெள்ளிடை மலையாகும். இவர்கள் மூலம் கிழக்கின் பிரதேச கல்வி பரவலாக்கப்பட்டது எனில் அது மிகையாகாது.

1905இல் பொருட்களின் தட்டுப்பாடும் விலை யேற்றமும் மக்களைப் பாதித்தது. அத்துடன் சுகாதார வசதிகளும் மோசமடைந்தன. 1906 இல் பல மாணவி களுக்கு நோய் ஏற்பட்டது. இதனால் மூன்று மாணவிகள் இறந்ததாக ஐரோப்பியக் குழுவைச் சேர்ந்த திருமதி Wiseman தனது அறிக்கையில் குறிப்பிடுகிறார். இவ்வேளையில் 26.12.2004இல் ஏற்பட்ட சுனாமித் தாக்கத்தில் இப்பாடசாலையில் கல்வி பயின்ற 52 மாணவர்களும் ஆசிரியையான திருமதி இந்திராணி வெற்றிவேல் அவர்களும் மரணித்ததையும் ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது.

1906 தொடக்கம் 1932 வரை பாடசாலையின் தலைமை ஆசிரியைப் பொறுப்பை ஏற்று பாடசாலைக்கு சிறப்பான தலைமைத்துவத்தை வகித்த திருமதி ஜெசி ஜேசுதாசன் போக்குவரத்து கஷ்டமான சூழலையும் பொருட்படுத்தாமல் பருத்தித்துறையில் இருந்து இங்கு கடமையாற்ற முன் வந்தமை பாராட்டத்தக்கதாக அமைந் ததாக குறிப்பிடப்படுகின்றது. 1927 ஆண்டளவிலேயே முதன் முதலில் வெளிநாட்டு மிஷனரியான Miss Doris Robinson என்பவர் அதிபராக நியமிக்கப்பட்டார். பின்னர் பாடசாலை படிப்படியாக முன்னேற்றத்தைக் காட்டியது. ஆங்கிலமும் ஒரு பாடமாகக் கற்பிக்கப் பட்டது. இப்பிராந்தியத்தில் இருந்த சுயபாஷைப் பாடசாலைகளில் சிறப்பான முன்னேற்றத்தைக் காட்டிய பாடசாலையாக இது திகழ்ந்தது. இக்காலத்தில் மொத்த மாணவிகளின் எண்ணிக்கை 180 ஆகவும் அதில் 100 பேர் விடுதியில் தங்கியிருந்ததாகவும், அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 10ஆகவும் காணப்பட்டது. விடுதிக் கட்டிடங்களும் வகுப்பறைக் கட்டிடங்களும் புதிதாகக் கட்டப்பட்டன. வெளிநாட்டு பெண் மிஷனரிகள் அதிபர்களாக இருந்த போதிலும் பாடசாலையை நடாத்துகின்ற தலைமை ஆசிரியைப் பொறுப்பை உள்நாட்டைச் சேர்ந்தவர்கள் பொறுப் பேற்றனர்.

1935இல் Miss Merchand என்பவரும்

1936 இல் Miss E.J Twinem என்பவரும்

1938 இல் Miss E.Barker என்பவரும்

1939 இல் Miss Barbara Atkins என்பவரும் கடமையாற்றினார். இவர் 'Atkins அம்மா' என்ற பெயரால் இன்றும் பலரின் மனங்களில் நிலைத்து நிற்பதன் காரணம் இவரின் கல்விப் பணியும் பின்னர் இவரால் 1950இல் தொடங்கப்பட்ட கிறிஸ்த இல்லமும் அதன் செயற்பாடுகளுமேயாகும்.


திருமதி ஜெசி ஜேசுதாசனை அடுத்து பருத்தித்துறையைச் சேர்ந்த மற்றொருவரான செல்வி கிறேஸ் தில்லையம்பலம் 37 ஆண்டுகள் பாடசாலைக்குத் தலைமைத்துவம் கொடுத்து G.B.S இன் இறுதி அதிபராக கடமையாற்றினார்.

1891இல் பொதுக் கல்விக்குப் புறம்பாக தொழில் பயிற்சிப் பாடசாலை (Industrial School) தொடங்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் தச்சு வேலை, கொல்லன் வேலை, பித்தளை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் 1903இல் விடுதியில் 30 ஆண் மாணவர்களும் அதனை விட அதிகமாக வீட்டில் இருந்தும் கற்றதாகவும் கூறப் படுகிறது. எனினும் 1911இல் மாணவரின் வரவின்மை காரணமாக அப்பாடசாலை மூடப்பட்டுள்ளது. இவ்வாறு தொழிற்கல்வியை மாணவர்களுக்கு புகட்ட வேண்டு மென்ற மிஷனரிகளின் தூரநோக்கு இன்றைய காலத்தில் பேசு பொருளாக உள்ள தொழில் கல்விக்கு அத்திபாரம் இட்ட ஒரு நிகழ்வாக காண முடிகிறது.




தொழிற்பயிற்சி பாடசாலை மாணவர்களும் திருமதி Leese அவர்களும்

இப்பிரதேசத்தில் ஆண்களுக்காக தமிழ் மொழியில் வெவ்வேறு கிராமங்களில் மெதடிஸ்த மிஷன் பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில் ஆங்கிலக் கல்வியை மட்டக்களப்பில் மட்டுமே பெறலாம் என்ற நிலையில் கல்முனையில் மெதடிஸ்த குருவாகக் கடமையாற்றிய அருட்திரு கப்ரியல் லீஸ் (Rev.Gabriel Leese) அவர்களால் 1901ல் ஆங்கில மொழியிலான கல்வியை வழங்கக்கூடிய பாடசாலையை ஆரம்பித்தார். இதனால் பல்வேறு பிரதேச மாணவர்கள் பயனடைந்தனர். ஆரம்பத்தில் இப்பாடசாலை கல்முனை ஆண்கள் ஆங்கில பாடசாலை என அழைக்கப்பட்டது. படிப்படியாக மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. 1902இல் அருட்திரு கப்ரியல் லீஸ் (Rev.GabrielLeese) அவர்கள் இங்கிலாந்துக்கு கடிதம் எழுதுகின்ற போது கட்டிடத்தை கட்டித் திறப்பதற்காக அனுப்பப்பட்ட 2000 ரூபாய்க்கு அவர்களுக்கு நன்றி கூறுவதோடு தான் உள்ளூரிலே சேர்த்த 2500 ரூபாயில் 500 ரூபா மீதியாக உள்ளதாகவும் அரச நிதி கிடைக்க வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிடுகிறார். 1906 இல் 25 ஸ்ரேலிங் பவுண் நன்கொடை இப் பாடசாலைக்குக் கிடைத்திருக்கின்றது. Rev.Gabriel Leese அவர்கள் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று யாழ் மத்திய கல்லூரியில் பணியாற்றிய போது யாழ்குடா நாட்டுக்கு உதைபந்தாட்டத்தை அறிமுகப்படுத்தினார் என வரலாற்றில் இருந்து அறிய முடிகிறது. 1906.05.08 இல் மூட்டுக் காய்ச்சல் (Rheumatic Fever) காரணமாக அங்கு மரணமானார். இதன் பின்பு கல்முனையில் இருந்த இப்பாடசாலை அவரின் நினைவாக லீஸ் உயர்தர பாடசாலை (Leese High School) என அழைக்கப்பட்டது. இது தொடர்பான நினைவுப் படிகக்கல் பதிக்கப்பட்டு இன்றும் காட்சியளிக்கிறது.




இப்பாடசாலையில் ஆரம்பத்தில் ஆண்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டாலும் சில மாணவிகளும் இப்பாடசாலையில் கல்வி பயின்று பிற்காலத்தில் சிறப்பான பதவிகளை வகித்துள்ளனர். 1907 இல் வெள்ளம், சூறாவளி காரணமாக இப்பிரதேசம் கடுமையாகப் பாதிக்கப்பட்டதாகவும் இதன் தாக்கம் பல மாதங்கள் நீடித்ததாகவும் கூறப்படுகின்றது. இவ்வேளையில் கிழக்கில் 1957இல் ஏற்பட்ட வெள்ளம் பாடசாலையைப் பெரியளவு பாதிக்கா விட்டாலும் 23.11.1978இல் ஏற்பட்ட சூறாவளி பாடசாலைக் கட்டிடங்களை தாக்கி பல சேதத்தை விளைவித்ததை மறக்க முடியாது. இந்த சூறாவளி தாக்க அனுபவங்களை அன்றைய இளைஞர்கள் இன்றும் ஞாபகத்தில் வைத்திருக்கிறார்கள்.

1930 இல் மாணவர் எண்ணிக்கை 96 ஆகவும் ஆசிரியரின் எண்ணிக்கை 6 ஆகவும் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. சிறிதான லீஸ் பாடசாலையாக இருந்தாலும் அதன் மூலமாக வெளிவந்த பல மாணவர்கள் சட்டத்தரணிகளாக, வைத்தியர்களாகத் திகழ்ந்ததுடன் சிலர் ஆசிரியராகவும் இப்பிரதேச பிரபல வர்த்தகர்களாகவும் திகழ்ந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. அகிலம் போற்றும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் Leese பாடசாலையின் பழைய மாணவரென்பது பாடசாலைக்கு பெருமை தரக்கூடியது.

லீஸ் ஆண்கள் பாடசாலையும், பெண்கள் விடுதிப் பாடசாலையும் இணைப்பது தொடர்பாக பேச்சு வார்த்தைகள் ஐந்து வருடங்களாக நடைபெற்று 1953 மே மாதத்தில் இது சாத்தியமானது. இணைப்பின் பின் இணைந்த இப்பாடசாலைக்கு மெதடிஸ்த திருச்சபையின் ஸ்தாபகரான அருட்திரு ஜோன் உவெஸ்லியின் பெயரை ஞாபகப்படுத்தும் வண்ணமாக உவெஸ்லி உயர்தர பாடசாலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆண் களும் பெண்களும் கற்கக்கூடிய கலவன் பாடசாலையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வரை தொடர்கின்றது. லீஸ் பாடசாலையின் சிறந்த ஆங்கில ஆசிரியராக 18 வருடங்களாகக் கடமையாற்றி அப்பாடசாலையின் அதிபராகப் பணி புரிந்த அருட்திரு ஜோர்ச் நல்லதம்பி அவர்கள் 1953 மே தொடக்கம் 1954 ஆகஸ்ட் வரை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் முதலாவது அதிபராகப் பணியாற்றினார். அதே வேளை பெண்கள் விடுதிப் பாடசாலையில் செல்வி கிறேஸ் தில்லையம்பலம் அவர்கள் 37 வருட தனது சேவைக் காலத்தில் 10 வருடங்கள் அப்பாடசாலையின் அதிபராக சிறப்பாக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

பெண்கள் விடுதிப் பாடசாலையின் சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் இருந்து (Log Entry) சில தகவல்கள்.

1. 12.06.1947 – பிரிட்டிஷ் கோமகன் 6ஆம் ஜோர்ஜ் மன்னரின் பிறந்த நாளை ஒட்டி கல்முனையின் முதலாவது Girls Guide அணியினரான GBS பாடசாலை மாணவிகளின் அணிநடையுடன் கூடிய ஊர்வலம் நடைபெற்றது.
2. 04.02.1948 - இலங்கை சுதந்திரமடைந்ததைக் குறிக்கும் முகமான அணிநடையுடனான விளையாட்டுப் போட்டியில் 6 பாடசாலைகளின் மாணவிகள் கலந்து கொண்டனர். அதில் நடைபெற்ற 9 நிகழ்ச்சிகளில் 7 நிகழ்ச்சிகளில் பரிசுகள் கிடைத்தது. இதில் 4 முதலிடங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
3. 05.10.1949 – கல்முனைக்கு விஜயம் செய்த பிரதமமந்திரி D.S.சேனநாயக்கா அவர்களுக்கு இப்பாடசாலையின் Girls Guide அணியினர் அணி வகுப்பு மரியாதை செய்தனர். அத்துடன் மாணவிகள் வரவேற்புப் பாடலையும் கலாசார நடனத்தையும் மேடையேற்றினர்.
4. 20.11.1949 சகிப்புத் தன்மையை குறிக்குமுகமான வாரம் (Temperance Week) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த கல்லூரியின் அதிபர் Miss Gladys Loose அவர்கள் கலந்து சிறப்பித்தார்.
5. 25.02.1950 இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்று Barker House முதலிடம் பெற்றது.

உவெஸ்லி உயர்தர பாடசாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்னர் 1953இல் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின் போது மழையும் காற்றும் உக்கிரமாக இருந்த போதும் 200 மாணவ மாணவியர் கலந்து கொண்டதாகவும் பிரதம அதிதியாக முன்னை நாள் விளையாட்டு வீரர் வில்சன் அழகசேகரம் கலந்து சிறப்பித்ததாகவும் அன்றைய தினகரன் பத்திரிகையில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. டேமியன், (மேரி)கியூரி, (லூயி)பாஸ்டர் ஆகிய விஞ்ஞானிகளின் பெயர்களே இல்லங்களின் பெயர்களாக அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றி பெற்ற டேமியன் இல்லத்திற்கு 2 அடி உயர வெள்ளிக் கிண்ணம் பரிசளிக்கப்பட்டுள்ளது.

அருட்திரு ஜோர்ச் நல்லதம்பி அவர்களைத் தொடர்ந்து கலைப்பட்டதாரியான திரு Sam J.Wilson அவர்கள் 1954 செப்டம்பரில் பதவியேற்று தனது முதலாவது பரிசளிப்பு விழாவை 1955 ஆகஸ்டில் நடாத்திய போது மாணவர் எண்ணிக்கை 319 எனவும் ஆசிரியர் தொகை 22 எனவும் குறிப்பிடுகிறார். அவர் தனது மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்ற போது 1959இல் மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தர மகளிர் பாடசாலையில் இருந்து திருமதி R.சின்னையா அவர்கள் இப்பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்றார். ஏற்கனவே இருந்த சிறிய இரசாயன ஆய்வு கூடத்துடன் 1959 ஒக்டோபரில் அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடமானது இப்பாடசாலையை தரமுயர்த்துவதற்கு காரணமாக அமைந்திருக்கின்றது. 1960ஆம் ஆண்டில் திருமதி. R.சின்னையா தனது ஆண்டறிக்கையில் 1961 ஜனவரியில் உயர்தர கலைப்பிரிவு வகுப்புக்களை (HSC) ஆரம்பிக்க இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். 1961இல் நாடு திரும்பிய S.J.Wilson அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற காலம் முதல் 1972 வரை கடமையாற்றினார். கிழக்கு மாகாணத்திலே ஒரு சிறந்த பாடசாலையாக இப்பாடசாலை திகழ்வதற்கு திரு S.J.Wilson அவர்களோடு திருமதி Wilson அவர்களுடைய பங்கும் பாராட்டப்பட்டுள்ளது.

1972 தொடக்கம் அதிபராக பொறுப்பேற்ற திரு யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் பாடசாலைச் சமூகம், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலதரப்பட்டவர்களுடனும் குறிப்பாக அரசியல் பிரமுகர்களுடனும் சிறப்பான உறவைப் பேணி பாடவிதான, இணைப் பாடவிதான செயற்பாடுகளில் பாடசாலையை கிழக்கு மாகாணத்தில் தலை சிறந்த பாடசாலையாக மாற்றினார். என்பது குறிப்பிடத்தக்கது. அவர் 1981, 1982 காலப் பகுதியில் மாவட்ட அமைச்சரான M.A.அப்துல் மஜீத் அவர்களுடைய செயலாளராகக் கடமையாற்றிய போது திரு.K.சுப்ரமணியம், திரு.S.மகாலிங்கம் போன்றோர். பாடசாலையின் அதிபர்களாகக் கடமையாற்றினர். 1983இல் மீண்டும் பாடசாலைப் பொறுப்பை ஏற்கும் படி சமூகம் வற்புறுத்தியதைத் தொடர்ந்து பொறுப்பை ஏற்று சிறப்பான பணியாற்றினார். எனினும் 1983 நவம்பரில் அவர்களுடைய திடீர் மறைவு பாடசாலையை பொறுத்தளவிலும், சமூகத்தைப் பொறுத்தளவிலும் பேரிழப்பாகவே காணப்பட்டது.

அதன் பின்னர் 1988 வரை திரு.K.சுப்ரமணியம் அவர்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


அதிபராக கடமையாற்றினார். அதன் பின்னர் 29.06.1988இல் லீஸ் பாடசாலையின் பழைய மாணவரும் விஞ்ஞானப் பட்டதாரியும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியுமான திரு.B.வெங்கடாசலம் அதிபராகப் பொறுப்பேற்றார். இவர் பல்வேறு தரப்பினருடன் தொடர்புகளை ஏற்படுத்தி கல்வி அபிவிருத்தியிலும் பௌதீக விருத்தியிலும் கவனம் செலுத்தினார். இவர் ஏற்கனவே இப்பாடசாலையில் உயர்தர விஞ்ஞான வகுப்புகளில் இரசாயனவியல் பாடத்தை கற்பித்தவராவார். லீஸ் பாடசாலையின் பழைய மாணவரான முன்னாள் அமைச்சர் காலம் சென்ற A.R.மன்சூர் மூலமும் உவெஸ்லி உயர்தர பாடசாலையின் பழைய மாணவரான முன்னாள் அமைச்சர் MHM.அஷ்ரப் ஆகியோரது ஒத்துழைப்புடன் மூன்று மாடிக்கட்டிடங்கள் இரண்டையும் மூன்று மாடி விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் முன்னின்று அமைத்தமை குறிப்பிடத்தக்கது. இனப்பிரச்சினை கூர்மை அடைந்திருந்த அக்காலத்தில் பல்வேறு முகாமைத்துவத் திறன்களோடு பாடசாலையை வழிநடத்தி பின்னர் கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

அவரது தலைமைத்துவத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய வர்த்தகப் பட்டதாரியான திரு பொன் முருகையா அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் முதலாம் தரத்தைச் சேர்ந்தவர். இவர் 02.11.1998இல் அதிபராக கடமையேற்றார். இவர் இப்பாடசாலையில் உயர்தர வர்த்தகப் பிரிவில் பாடங்களைக் கற்பித்து பலரை பல்கலைக்கழகத்திற்கும் உயர் பதவிகள் பெறுவதற்கும் வித்திட்டவராவார். ஆசிரியராகப் பணிபுரிகின்ற போதே தனது நடத்தையிலும் செயற்பாட்டிலும் சிறப்பான கடமையுணர்வுடன் செயற்பட்டவர். அதிபரான போது பாடசாலையின் தரிசனத்திற்கு (Vision) ஏற்ப உவெஸ்லியை பல துறைகளிலும் முன்னேற்றமடைய உழைத்தவர். பாடசாலை பௌதீகச் சூழலை அழகியல் உணர்வோடு கட்டியெழுப்பிய பெருமை அவருக்குரியது. பாடசாலையின் பழைய மாணவி திருமதி டாக்டர் புஸ்பலதா லோகநாதன் மூலமாக பாடசாலைச் சூழலை அலங்கரிக்கும் தாமரைத் தடாகம் 10.11.2004 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

2008ம் ஆண்டு இவருடைய பணிக்காலத்தில் இலங்கையின் மெதடிஸ்த திருச்சபையின் DEAF LINK நிறுவனத்தால் பாடசாலைக்குப் புறம்பாக கல்முனையில் நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த மாற்றுத் திறனாளிகளின் வகுப்புக்களை பாடசாலையினுள் "உட்படுத்தல் கல்வி" எனும் அடிப்படையில் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் MTA.நிசாம் அவர்களுடைய வழிகாட்டலில் 22 மாணவர் களுடன் உள்வாங்கப்பட்டு விசேட கல்வி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டமை ஒரு முக்கிய நிகழ்வாகும்.

இன்று 58 மாணவர்களுடன் காது கேட்காத வாய் பேசமுடியாதவர்கள், மூளை வளர்ச்சி குறைந்தவர்கள், மெல்லக் கற்போர், பிறப்புரிமை ரீதியிலான குறைபாடுடையோர் ஆகிய நான்கு வகையினரை உள்ளடக்கிய நான்கு வகுப்புக்கள் நான்கு Deaf Link ஆசிரியர்களுடனும் ஏனைய அரச மூன்று ஆசிரியர்களின் உதவியுடன் இயங்கிவருகிறது. இம் மாணவர்கள் அண்மையில் கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அரச கலை விழாவில் நாடகப் போட்டியில் மூன்றாம் இடமும், நடனப் போட்டியில் முதலாம் இடமும் பெற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் பாராட்டினையும் பெற்றனர். அத்துடன் பரா ஒலிம்பிக், மாவட்ட, மாகாண அகில இலங்கை மட்ட விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளனர். பாடசாலையின் சகல நிகழ்ச்சிகளிலும் இம்மாணவர்களின் நிகழ்வுகள் மேடையேறுவது குறிப்பிடத்தக்கது.

2004 சுனாமியின் பின்னர் கல்முனை மெதடிஸ்த திருச்சபையில் சில காலம் பணியாற்ற இங்கிலாந்தில் இருந்து இங்கு வருகை தந்த கல்லாற்றைச் சேர்ந்த அருட்திரு சோபனதாஸ் சின்னத்தம்பி அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திய Cardiff high school பாடசாலை நிர்வாகத்தினர் இப்பிரதேச சுனாமிப் பாதிப்பை அறிந்து






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலைக்கு உதவி செய்வதற்காக சுமார் 26 கிலோமீற்றர் தூரம் வரை நடந்து சென்று சுமார் 10 இலட்சம் ரூபாயை சேகரித்து இப்பாடசாலைக்கு அனுப்பினார்கள். இது அவர்கள் செய்த மிகப்பெரிய சேவையாக அந்நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இப்பணத்தைக் கொண்டு பாடசாலைக்கு முன்புறமாக அமைந்திருக்கின்ற ஆரம்பகால கட்டிடம் திருத்தி அமைக்கப்பட்டு அதற்கு Rev.Gabriel Leese Hall எனப்பெயர் சூட்டி பாடசாலையின் 125வது வருட நிறைவை குறிக்கும் முகமாக நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்திரு எபநேசர் ஜோசப் அவர்களால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வைக் குறிக்கும் முகமாக ஞாபகச் சின்னம் பழைய மாணவர் A.M.றியாஸ் மூலமாக அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

திரு பொன் முருகையா அவர்களுடைய காலத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய இலங்கை அதிபர் சேவையின் முதலாம் தரத்தைச் சேர்ந்தவராகவும் தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தரம் உயர்த்தப்பட்டவரான திரு வடிவேல் பிரபாகரன் 17.02.2009 முதல் இப்பாடசாலையின் அதிபராக கடமையாற்றுகிறார். இவர் க.பொ.த(உ/த) விஞ்ஞான வகுப்புகளுக்கு தாவரவியல், உயிரியல் பாடங்களை கற்பித்தவராவார். பாடசாலையின் பெற்றோர், பழைய மாணவர் நலன் விரும்பிகள், பாடசாலை சமூகம் என்பவற்றோடு சிறப்பான தொடர்பை ஏற்படுத்தியதன் விளைவாக 1960-1965 காலப்பகுதிகளில் இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் மூலமாக சாரணர் கட்டிடமானது டாக்டர் N.ஸ்ரான்லி ஜெயராஜ் அவர்களுடைய தலைமைத்துவத்தில் கட்டப்பட்டு அம்மாணவர்களுக்கு சாரண ஆசிரியராக இருந்து அவர்களை வழிநடாத்திய K.L.அபூபக்கர் லெப்பை மூலமாக அக்கட்டிடம் திறக்கப்பட வேண்டும் என்ற தங்கள் அவாவை பூர்த்தி செய்தமை உவெஸ்லியின் மாணவர்கள் அன்றும் இன்றும் தங்கள் ஆசிரியர்களை எவ்வளவு தூரம் நேசிக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக அமைகிறது.





1978-1982 காலப்பகுதிகளில் கல்வி கற்ற மாணவர்கள் மூலமாக பாடசாலையின் பிரதான வீதியில் அமைந்த முகப்பு வாயில் (Gate Way) திரு V.ஜீவராஜா, DM உவைஸ், S.நாகேந்திரன், ஆகியோரின் தலைமைத் துவத்தில் பல்வேறு பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் உதவியுடன் அமைக்கப்பட்டது. இதற்காக அவர்களில் பலர் இரவு பகலாக இருந்து பணியாற்றியதைக் குறிப்பிட வேண்டும். இம்முகப்பு வாயில் பழைய மாணவர்களால் கட்டப்பட்டமையானது பாடசாலையின் முக்கியத் தேவையை நிறைவு செய்துள்ளது. இம்முகப்பு வாயில் அமைத் தமையானது வேறு பாடசாலைகளுக்கும் அவர்களின் பழைய மாணவர்களுக்கும் முன் உதாரணமாய் அமைந்ததை குறிப்பிட வேண்டும்.




பாடசாலையின் பாடவிதானம், இணைப்பாட விதானம் ஆகியவற்றில் மாணவர்கள் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களைத் தாண்டி அகில இலங்கை ரீதியில் தமிழ்த்தின, ஆங்கிலதின, சிங்கள தினப் போட்டிகளிலும் மெய்வல்லுனர், விளையாட்டு நிகழ்வுகளிலும் வெற்றிகளை மாணவர்கள் பெறுவதற்கு அக்காலங்களில் கடமையாற்றிய அதிபர்கள் ஆசிரியர்களின் பங்கு மகத்தானது.

காலம் சென்ற பிரதி அதிபர் C.செபரெட்ணம் அவர்கள் குடியியல் பாட ஆசிரியாக இருந்த போது மாணவர் பாராளுமன்றத்தை இலங்கை பாராளுமன்றத்திற்குச் சமமாக 1960 களின் பிற்பகுதிகளில் உருவாக்கினார். மாணவர்களின் தலைமைத்துவத்துடன் கலை எழுச்சி கட்சி, சுயாதீனக் கட்சி ஆகிய கட்சிகளை உருவாக்கி அவற்றில் வகுப்பு ரீதியில் போட்டியிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்படுகின்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், கூடுதலான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆளும் கட்சியாகவும் அது அமைச்சரவையும் உருவாக்க குறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சி எதிர்க்கட்சியுமாக செயற்படும். பிரதி அதிபர் C.செபரெட்ணம் அவர்கள் பாடசாலையில் மகா தேசாதிபதியாக இருந்து சிம்மாசனப் பிரசங்கத்தை நடாத்திய அந்த அழகையும் தலைமைத்துவத்தையும் இன்றும் சிலாகித்து சிலர் பேசுகின்றனர். வெவ்வேறு காலப்பகுதிகளில் பிரதம மந்திரிகளாக, அமைச்சர்களாக, எதிர்க்கட்சித் தலைவர்களாக பதவி வகித்தவர்களில் சிலர் பிற்காலத்தில் இலங்கை அரசியல்வானில் பிரகாசித்த போது தமக்கு உந்து சக்தியாக அமைந்தது உவெஸ்லியின் பாராளுமன்றமே எனக்குறிப்பிட்டதை சொல்லியாக வேண்டும். இவ்வாறு மாணவர்களின் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் பிரதான பங்கு வகித்த பாடசாலையின் கிழக்குப் புறமாக அமைந்ததும் முன்னைய காலங்களில் GBS பாடசாலையின் மண்டபமாகச் செயற்பட்ட அம்மண்டபம் பொலிவிழந்து உடைந்த நிலையில் காணப்பட்டதை சில பெற்றோர்களிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர்கள் மூலமாக அம்மண்டபம் புனரமைக்கப்பட்டு 2011.06.29 அன்று பாடசாலையின் 128வது ஸ்தாபகர்தின விழாவின் போது முன்னாள் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபர் திரு. பிறின்ஸ் G.காசிநாதர், மேல்நீதிமன்ற நீதிபதி திரு.P.சுவர்ணராஜ், பழைய மாணவர் பேராசிரியர் K.S.தட்சணாமூர்த்தி ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டு பாடசாலையின் ஸ்தாபகர் அருட்திரு G.J.றிம்மர் அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டமையானது ஸ்தாபித்தவர்களை கௌரவப்படுத்திய ஒரு நிகழ்வாகும்.





பொதுவாக அனர்த்தங்கள் நிகழ்கின்ற போது இப்பகுதி மக்கள் நிலைமை சீரடையும் வரை தற்காலிக இடமாக எமது பாடசாலையின் வகுப்பறைகளும் விளையாட்டு மைதானமும் பயன்படுத்தப்படுவது வழமையானது. குறிப்பாக சுனாமி அனர்த்தத்தின் போது பல மாதங்கள் பாடசாலை இவ்வாறு பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறான இயற்கை, செயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களை தங்கவைத்து பராமரிப்பதற்காக சில பாடசாலைகளுக்கு புதிய கட்டிடங்கள் The United states Pacific Command (USPACOM) எனும் அமெரிக்க நிறுவனத்தினால் கட்டிக் கொடுக்கப்பட்டன. ஆனால் எமது பாடசாலையில் அனர்த்தங்கள் ஏற்படும் போது மக்கள் சில நாட்கள் தங்குவதற்காக பாடசாலையின் இரண்டு கட்டிடங்கள் திருத்தி அமைக்கப்பட்டதுடன் மழை நீர்த் தாங்கியும் அம்மக்களுக்கான உணவைத் தயாரிப்பதற்காக சமையல் அறையும் கட்டிமுடிக்கப்பட்டு 22.02.2018 அன்று அமெரிக்க பிரதிநிதிகளால் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலையின் வகுப்பறை கட்டிடத் தேவைகளை அவ்வாறு அமைக்கப்பட்ட கட்டிடங்கள் பூர்த்தி செய்யா விடினும் சமுகத்தின் தேவை கருதி பாடசாலை சமூகத்திற்குத் திறந்து விடப்பட வேண்டும், என்ற எண்ணக்கருவிற்கேற்ப இத்திட்டத்திற்கு ஒத்தழைப்பை வழங்கியுள்ளோம்.



2018இல் கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா முன்னாள் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் S.தண்டாயுதபாணி அவர்கள் தலைமையிலும், விவசாயக் கண்காட்சி முன்னாள் கிழக்கு மாகாண விவசாய கூட்டுறவுத்துறை அமைச்சர் K.துரைராஜசிங்கம் அவர்களுடைய தலைமையிலும் இப்பாடசாலையில் நடைபெற்ற போது கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் Rohitha Bogollagama அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர், புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் போன்ற தமிழறிஞர்களோடு பாராளுமன்ற உறுப்பினர்களாக பாராளுமன்றத்தை வெவ்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதிகளில் அலங்கரித்த M.S.காரியப்பர், M.C.அகமது, MIA மஜீத் AM.சம்சுதீன் M.M இப்ராகிம் S.U.எதிர்மனசிங்கம், S.M.இராசமாணிக்கம், S.தம்பிராசா, பொன்.செல்வராஜா, சந்திரநேரு சந்திரகாந்தன், K.கோடீஸ்வரன் ஆகியோருடன் அமைச்சர்களாக MM.முஸ்தபா, AR.மன்சூர், MHM.அஷ்ரப் போன்றோருடன் கிழக்கு மாகாண சபை உறுப்பினராக இருந்த திரு.M.இராஜேஸ்வரனும் இப்பாடசாலையின் பழைய மாணவர்களே. அதைத் தவிர பலர் மாநகரசபை, பிரதேச சபை உறுப்பினர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். முன்னாள் பொலிஸ்மா அதிபர் TE ஆனந்தராஜா, முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி பொன்.சுவர்ணராஜ் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர்களாகப் பணியாற்றிய திரு.K.செல்வரெட்ணம், A.K.பத்மநாதன் போன்றோரும் இப்பாடசாலையில் பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




பாடசாலையின் 135 வருட நிறைவைக் குறிக்கும் முகமாக பாடசாலை மாணவர்கள், கற்ற மாணவர்கள், ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் கலந்து கொண்ட Wesley Walk 24.06.2018இல் நடைபெற்றது. இதன் மூலம் பழைய மாணவர்கள் - ஆசிரியர்கள், ஓய்வு பெற்றவர்கள், ஆகியோர் சங்கமித்த இந்த நிகழ்வு பலரது பாராட்டையும் பெற்றது. இப்பிரதேசத்தில் நடைபெற்ற முதலாவது நடைபவனி இது என்பது குறிப்பிடத்தக்கது.

136வது ஆண்டில் நடைபயிலும் இப்பாட சாலைக்கு பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகளுடைய ஒத்துழைப்பு அவ்வப்போது கிடைத்து வருகின்றது. 98 ஆசிரியர்களையும் 5 கல்விசாரா ஊழியர்களையும் சுமார் 2000 மாணவர்களை யும் கொண்ட நீண்ட வரலாற்றைக் கொண்ட இப்பாட சாலையின் பல பௌதீகவளத் தேவைகள் நீண்ட காலமாகவே நிலவிவருகிறது.

புதிய நிர்வாகக் கட்டிடமும் வகுப்பறைகளுடன் கூடிய கட்டிடங்களும் பூர்த்தி செய்யப்படுகின்ற போது கல்முனை நகரின் மத்தியில் அமைந்துள்ள உவெஸ்லி உயர்தர பாடசாலை புதுப்பொலிவுடன் திகழும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பிரதி அமைச்சர் H.M.M. ஹரிஸ் அவர்களுடைய நிதி ஒதுக்கீட்டினால் திருத்தப்பட்ட மைதானமும், முன்னைய பாராளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேன அவர்களின் நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட விளை யாட்டு அரங்கு தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் திரு.கவீந்திரன் கோடீஸ்வரன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் பூர்த்தி செய்யப்படும் போது பாடசாலை மைதானமானது மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் வரப்பிரசாதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.




பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் பெண்களின் கல்விக்காக தொடங்கப்பட்ட இப்பாடசாலை தனது சிறகுகளை விரித்து பரப்பி விரிந்து நிற்கிறது. வீடுகளிலே முடங்கிக் கிடந்த மாற்றுத் திறனாளிகளையும் இருகரம் நீட்டி உள்வாங்கி அவர்களையும் சாதாரண பிள்ளைகளாக கற்பிக்கின்ற செயற்பாட்டை பாடசாலை முன்னெடுப்பது இப்பிரதேச மாற்றுத்திறனாளிகளுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமே. அத்துடன் அவ்வாறான பிள்ளைகளை பாடசாலையில் சேர்த்து கல்வி புகட்ட வேண்டும் என்ற எண்ணப்பாடு பெற்றோருக்கு வந்திருப்பதும் முக்கியமான விடயமாக பார்க்கப் படுகிறது. இவ்வாறான விசேட கல்விக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற மத்திய, மாகாண, வலய மட்ட கல்வி அலுவலகங்கள், அதிகாரிகள், Deaf link நிறுவனம் ASNN நிறுவனம், கல்முனை கனேடிய நட்புறவுச் சங்கம், சுவிஸ் முனைப்பு, டாக்டர் ஸ்டான்லி ஜெயராஜா அவர்களுடைய அனுசரணையில் Trinity Methodist Church UK, பிரான்சில் வசிக்கும் பாண்டிருப்பைச் சேர்ந்த மகேஸ் சின்னப்பு போன்றோரின் அன்பளிப்புகளும் மற்றும் பலரின் அன்பும் ஆதரவும் இம்மாணவர்கள் செயற்பாட்டிற்கு பேருதவியாக அமைந்ததை நன்றியோடு நினைவு கூருகிறோம்.

பாடசாலைகளுக்கிடையிலான பல்வேறான பெருவிளையாட்டுக்கள் நடைபெற்று வருகின்ற போதிலும் கிரிக்கட்டைப் பொறுத்தளவில் Big Match ஒன்றை இரு பாடசாலைகளுக்கிடையில் நடத்த வேண்டும் என்கின்ற பல பழைய மாணவர்களுடையதும் ஆசிரியர்கள் மாணவர்களுடைய கனவாக இருந்தது. இதனை நிறைவேற்றும் வண்ணமாக SLT நிறுவனத்தின் கல்முனைக் பிராந்தியக் குழுவினர் முன்வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இதற்காக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியுடன் எமது கடின பந்து கிரிக்கட் அணியினர் 2019இல் போட்டியில் கலந்து கொண்டதும் இதற்கு வருடாவருடம் SLT நிறுவனம் அனுசரணை வழங்க இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்காக பயிற்சிகளை மேற்கொள்ள இப்பாடசாலையின் பழைய மாணவர் திரு.மகேஸ் சின்னப்பு அவர்கள் கடின பந்து பயிற்சித் தரையை உருவாக்கித் தந்தமை பேருதவியாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.




2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் அகில இலங்கை ரீதியில் சிறந்த அதிபர் ஆசிரியர்களைத் தெரிந்தெடுத்து "பிரதீபா பிரபா" எனும் விருது ஜனாதிபதியினால் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதினை பாடசாலை அதிபரும் பல ஆசிரியர்களும் வருடாந்தம் பெற்று வருவது கல்முனைக் கல்வி வலயத்தில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பெண்கள் விடுதிப் பாடசாலை என்ற பெயரோடு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் பெண்கள் தங்குவதற்கான விடுதி வசதிகள் காணப்பட்டன. பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதன் பின்னர் Miss Barbara Atkins அவர்களால் உருவாக்கப்பட்ட கிறிஸ்த இல்லம், மெதடிஸ்த சிறுமியர் இல்லம் போன்ற வற்றில் வெளியூர்களைச் சேர்ந்த மாணவிகள் தங்கி இப்பாடசாலையில் கல்வி பயின்று வருவது குறிப்பிடத் தக்கது. இம்மாணவிகள் பாடசாலையின் பாடவிதான, இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் சிறப்பான பங்கு வகித்து பாடசாலைக்குப் புகழை ஈட்டித் தருகின்றனர். தற்போது கல்முனை மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குருவாக உள்ள அருட்திரு S.D.வினோத், அவருடைய பாரியார் திருமதி கோகிலா வினோத் ஆகியோரும் அங்கு பணிபுரியும் ஊழியர்களும் இம்மாணவிகளை சிறப்பாக வழிநடத்துகின்றனர்.

GBS பாடசாலையின் மாணவிகளும் அவர்களுடன் அருட்திரு WEAVER தம்பதிகளும்


MR. AND MRS. WEAVER AND GIRLS' BOARDING SCHOOL

தற்போது விடுதியில் தங்கியுள்ள மாணவிகள்



"Utmost For the Highest" என்கின்ற மகுட வாக்கியத்திற்கு ஏற்ப அதியுயர்ச்சியை நோக்கி இப்பாடசாலை 136வது ஆண்டிலும் அதனைத் தொடர்ந்தும் பயணிப்பதே இப்பாடசாலையை ஆரம்பித்த ஸ்தாபகர்களுக்கும் ஏனையோருக்கும் நாம் செய்யும் பிரதியுபகாரமாகும்.

இப்புனித மண்ணில் கால் பதித்து மரணித் தவர்கள் உண்டு.

கல்வியையும் அனுபவங்களையும் சமுகத்திற்குக் கொடுத்தவர்கள் உண்டு.

அன்பையும் பண்பையும் ஒழுக்கத்தையும் வழங்கிய உள்ளங்கள் உண்டு.

புழுதியில் புதையுண்டு உழைத்த கால்களும் பகிர்ந்த கைகளும் உண்டு.

அவற்றைப் பெற்ற நாம் மற்றவர்களுக்கு பகிர ஆயத்தமாவோம்.

**திரு. வ.பிரபாகரன்**
அதிபர் கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலை கல்முனை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத அன்னை செல்வி

# பாபறா அற்கின்ஸ்



செல்வி பாபறா அற்கின்ஸ் அவர்களை மக்கள் இன்றும் ஞாபகம் வைத்திருப்பதற்கான காரணங்களில் ஒன்று அவரால் கல்முனையில் தோற்றுவிக்கப்பட்ட கிறிஸ்த இல்லமும் அதன் பணிகளுமாகும்.

24.12.1912 இல் இங்கிலாந்தில் பிறந்து தனது 27வது வயதில் அதாவது 1939 இல் இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையினால் நடாத்தப்பட்ட பாடசாலைகளில் கல்விப் பணிக்காக தன்னை அர்ப்பணித்து குடும்பத்தைப் பிரிந்து இலங்கை மண்ணில் காலடி வைத்தார். அவருடைய பணிக்காக கல்முனைப் பிரதேசம் காத்திருந்தது எனலாம்.

1883 இல் கல்முனையில் பணியாற்றிய அருட்திரு G. J ரிம்மர் அவர்களால் 18 மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் விடுதிப் பாடசாலையில் (Girls Boarding School - GBS) பல மாணவிகள் விடுதியில் தங்கியிருந்து படித்தனர் மற்றவர்கள் வீட்டிலிருந்தும் கல்வி கற்றனர். பல உள்நாட்டு தலைமை ஆசிரியைகளும் வெளிநாட்டு அதிபர்களும் கடமையாற்றிய காலங்களில் 1939 இல் அப்பாடசாலையில் கல்விப்பணியாற்றி யதுடன் பின்னரான காலங்களில் அதிபராகவும் கடமையாற்றி சிறப்பான சேவைகளைப் புரிந்தார். அக்கால கட்டங்களில் மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தை சிறப்புடன் கற்பித்து அப்பணியில் வெற்றி கண்டார். 1953 இல் ஒருங்கிணைக்கப்பட்ட தற்போதைய கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையிலும் அவரின் பணிகள் தொடர்ந்தன.

கல்முனை மெதடிஸ்த திருச்சபையில் ஞாயிறு பாடசாலை யின் தொடக்கத்திலும் அதன் வளர்ச்சியிலும் செல்வி பாபறா அற்கின்ஸ் அவர்களுடைய பணி மகத்தானது. சுமார் 25 வருடங்களுக்கு மேலாக கல்முனையில் பணியாற்றிய அன்னை அவர்கள் அந்நாட்களில் கல்முனையை சூழ உள்ள கிராமங்களில் உருவாக்கப் பட்ட மெதடிஸ்த பாடசாலைகளில் மாலை நேரங்களில் "ஞாயிறு பாடசாலை" வகுப்புக்களை நடாத்தினார். அவற்றில் கிறிஸ்தவர்களுடன் பல இந்து முஸ்லிம் மாணவர்களும் பங்கு பற்றினர். கிறிஸ்துவின் நற்செய்தியை கதைகள், பாடல்கள் மற்றும் படக்காட்சிகள் மூலம் சிறுவர்கள் மத்தியில் பகிர்ந்து கொண்டார். பெண்கள் அரிதாகவே வாகனம் செலுத்தும் இந்நாட்களில், அந்நாட்களிலே Austin வகைக் காரில் அன்னை பயணம் செய்து தனது பணியை விரைவாக்கினார். இப்பகுதி மக்கள் அவரை அற்கின்ஸ் அம்மா எனவும், வெள்ளைகார அம்மா எனவும் அன்பாக அழைத்தனர். கல்முனை பிரதேசத்தின் இன்றைய முதியவர்கள பலர் அம்மாவின் அன்பை இன்றும் ஞாபகம் வைத்து அவருடைய பணிகளை மற்றவர்களுடன் பகிர்ந்து சிலாகித்து பேசுவதிலிருந்து அற்கின்ஸ் அம்மாவின் சேவையினை அறியக்கூடியதாக உள்ளது.

சுன்னாகத்தில் உள்ள மருதனாமடம், கிரான் போன்றவற்றில் அமைந்த தமிழ் கலாசார பின்னணியுடனான கிறிஸ்தவ ஆச்சிரம வாழ்வை அடியொற்றியதாக கல்முனையில் கிறிஸ்த இல்லத்தை 01.01.1950 இல் ஆரம்பித்தார். சேவை, கீழ்படிவு, தியாகம், எளிமை, வறுமை, சுயகட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை இல்லத்திற்கு வருகின்றவர்கள் கடைப் பிடிக்கவும் வெளிச்செல்லுகின்ற போது அதனைத் தொடரவும் கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழவும் கற்றுக் கொடுக்கின்ற இடமாகத் திகழ்வதற்காக இவ் இல்லத்தை "By Love Serve One Another" (அன்பினால் ஒருவருக்கு ஒருவர் பணிசெய்யுங்கள்) என்கின்ற மகுட வாக்கியத் திற்கு ஏற்றவிதமாக கல்முனையில் கிறிஸ்த இல்லத்தை அமைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்த இல்லமானது தம்மை ஊழியத்திற்கு தயார்படுத்துவோர் பயிற்சி பெறும் இடமாகவும், தமது வீட்டில் துக்கங்களுடனும், நெருக்கங்களின் மத்தியிலும் வாழமுடியாத பல பெண்பிள்ளைகள் இவ் இல்லத்தில் குறுகியகாலம் தங்கி நெருக்கங்களிலிருந்து விடுபடுகின்ற இடமாகவும் சிலருக்கு நீண்டகால வாழ்விடமாகவும் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் தமது ஓய்வின்போதும், போதுமான உதவி இல்லாதவர்கள் வாழும் இடமாகவும் கிறிஸ்த இல்லத்தை மாற்றிய பெருமை அற்கின்ஸ் அம்மாவுக்கே உரியது.

கிளிநொச்சியிலுள்ள கருணா நிலையம், பரந்த னில் உள்ள நவஜீவனம் ஆகியவற்றோடு அன்னைக்கு இருந்த தொடர்பு காரணமாக அவ்விடங்களில் பணி யாற்றிய HUTCHINSON, BAKER, Mr&Mrs.BASTAN ஆகியோர் வெவ்வேறு காலகட்டங்களில் கல்முனைக்கு வந்து கிறிஸ்த இல்ல ஊழியத்தின் பணிகளில் உதவி செய்தனர்.

கிறிஸ்த இல்லத்தில் பெண்மாணவிகள் மாத்திர மல்லாமல் ஆண்மாணவர்களும் தங்கியிருந்து கல்வி கற்றனர். பயிர்ச்செய்கை, ஆடு, மாடு, கோழி வளர்ப்பு என்பவற்றுடன் உயிர்வாயுவைத் (BIO Gas) சமையலுக்கு பயன்படுத்தியதுடன் இலங்கைக்கு அறிமுகமாக முன்னரே அதன் மூலம் மின்சாரம் பெற்று பயன்படுத்திய இடமாகத் மாற்றியதில் Mr.BASTAN இன் பங்களிப்பு முக்கியமானது.

அற்கின்ஸ் அம்மாவோடு பணிகளில் இணைந்தவர் டீக்கனஸ் செல்வி பவளி அரியக்குட்டி என்பவராவர். இவர்களின் அன்பு தியாகம் பலரை கிறிஸ்துவண்டை கொண்டு வந்தது எனலாம். இவர்கள் மூலமாக இல்லற இணைப்பைப் பெற்றவர்களும் பலர் உண்டு.

மக்களோடு தொடர்பாய் இருக்க வேண்டும் என்பதற்காக தமிழ் ஆசானிடம் தமிழ் கற்றுக்கொண்டார். தான் தமிழ் மொழியில் தவறுவிடும் போது தன்னை தண்டிக்குமாறு பிரம்பை ஆசான் கையில் கொடுத்த நல் மாணவியாக அவரை காணமுடிவதுடன் தமிழ் மொழிமீதான அவருடைய ஆர்வத்தையும் காட்டுகின்றது. அவருக்கு வெளிநாட்டிலிருந்து வருகின்ற பரிசுப் பொருட்கள், பென்சில், இரேசர், படங்கள் போன்றவை அவ்வப்போது பாடசாலை மாணவர்களுக்கு அவரால் கொடுக்கப்படுவதுண்டு. இதனைப் பெற்றவர்கள் தமது வயோதிபக் காலங்களில் இன்றும் ஞாபகத்தில் வைத்துள்ளனர். பியானோ இசைக்கருவியை அவர் மீட்டுவதும் பிள்ளைகள் இரசிப்பதும் மாத்திரமல்லாமல் ஆங்கிலப்பாடல்களை தங்களுக்கு பயிற்றுவிப்பதாகவும் மகிழ்வுடன் பலர் கூறுகின்றனர்.

அன்னை அவர்கள் ஓய்வு பெற்று இங்கிலாந்து சென்றாலும் இடையிடையே கல்முனைக்கு வந்து பலரைச் சந்தித்து சென்றுள்ளார். அன்னை அவர்கள் 03.12.1986 இல் தனது 74வது வயதில் இங்கிலாந்தில் காலமானதையொட்டி கல்முனை கிறிஸ்த இல்லத்தில் 06.12.1986 அன்று அருட்திரு S.K.ஜெபரெத்தினம் அவர்களின் தலைமையில் அவரின் பணியையும் சேவையையும் நினைந்து நினைவாராதனை நடை பெற்றது. அதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அன்பர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. அன்னையவர்களின் நினைவுகளை என்றும் நிலைநிறுத்திவைக்க அவரால் உருவாக்கப்பட்ட கிறிஸ்த இல்லம் இன்று தனது பணிகளை விரிவுபடுத்தி காலமாற் றத்திற்கேற்ப அன்பினால் ஒருவருக்கொருவர் பணியை ஆற்றிவருகின்றது.

கிறிஸ்த இல்ல ஜெப வீட்டிற்கு பின்னாக காலஞ்சென்ற பவளி அரியக்குட்டியின் நினைவுக் கல்லறைக்கு அருகில் இம்மண்ணில் புதைக்கப்படாத அற்கின்ஸ் அம்மாவுக்கும் நினைவுக் கல்லறை அமைக்கப் பட்டிருப்பது அன்னாரின் பணிகள் இம்மண்ணில் விதைக்கப் பட்டிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டவும் அவரின் பணிகளை நாங்கள் இன்றும் நினைவு கூருகின்றோம் ஏன்பதை எடுத்துக் காட்டுவதா கவும் அமைந்துள்ளது.

இம்மண்ணில் பிறக்காத பலர் மிஷனரிகளாக இலங்கை வந்து கிறிஸ்துவின் அன்பைச் சொல்லி கல்விப்பணியாற்றி பலரை நல்வழிக்குள் அழைத்துச் சென்றுள்ளார்க்ள். அம் மிஷனரிகளில் பலர் எம் மண்ணில் புதையுண்டவர்களாக மாத்திரமல்ல கிறிஸ்து என்னும் வார்த்தையாக விதைக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்த வரிசையில் செல்வி பாபறா அற்கின்ஸ் எனும் விதை இலங்கையில் புதைக்கப்படாவிட்டாலும் அவரின் எச்சங்கள் இன்றும் பணிகளுக்காக விதைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கீன்ஸ் அம்மா



**சிந்தை அந்நாள் சிறந்தவளை சிந்தித்துச் சிந்திய வரிகள் சில...**

கல்முனைக் கவிராயர்
**கலைக்கொழுந்தன்**

எங்கள் கிராம இராச்சியத்தின்
அரணா யிருந்த பெருந்தகை
திங்களோடு வெள்ளியாகித்தினம்
தேடி மக்கள் சேவை செய்தவர்

திடீரென்று எங்களுக்காய் மனித
தெய்வமொன்று தோன்றியது போல்
அடிமை வாழ்வினின்று விடுபட
அறிவையும் ஆர்வத்தையும் அளித்தவர்

கல்முனையி லெங்கள் வாழ்வில்
கவனம் செலுத்தியிருந்தவர்
எல்லா மனங்களும் நேசித்து
இனியவராய் ஏற்றுக் கொண்டார்

வேலைப்பழுக்களிடையும் வந்து
விசாரியாமல் போகமாட்டார்
சாலையிலும் ஊர்ப் பெரியார்களோடு
சம்பாசித்துக் கொண்டிருப்பார்

கல்வி, கலாசாரம், ஜீவாதாரம்
கருத்தூன்றிப் பேசிப் கொள்வார்
செல்லுமிடமெல்லாம் அன்பைச்
சிரித்த முகத்தோடு பகிர்வார்

மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலை
மேன்மையுற வேண்டுமென்று
நிதம் காலாயிருந்த அம்மா
நெடிய வெள்ளைக்கார அம்மா

ஏழைச் சிறுவர் சிறுமியரில்
இரக்கம் கொண்டவர் நத்தார்
நாளைப் போல் ஒவ்வொரு நாளும்
நாடியெங்களோடு மகிழ்வார்

தமிழிலே வணக்கம் சொல்வார்
'தம்பி தங்கைகளே' என்பார்
தமிழையெங்களிடம் படிப்பார்
தன்மொழியிலெங்களைப் பாராட்டுவார்

நாங்களும் பதிலுக்கு ஆங்கிலத்தில்
நற்காலையில் 'மோணிங்' சொல்வோம்
'வாங்க பிள்ளைகள் என்பார்
வாரித் தலையில் முத்தமிடுவார்

தோடம்பழமிட்டாசும், நாக்கிலே
தொட்டொட்டும் தண்ணிப்படமும்
கூடை நிறை கொப்பி பென்சிலும்
குட்டிக் காரில் கொண்டு வருவார்

சிலுப்பாத் தலையசைத்தசைத்து
செந்தமிழும் ஆங்கிலமும் கலந்து
சலிப்பு கொள்ளாது பேசி
சந்தோசப்படுத்தி விடுவார்

கக்கத்திலே தாய் சேய் வைத்து
காத்தது போலிவர் தொண்டு...
கொக்கரிக்காது பணிபுரிவார்,
கிராமங்கள் தோறும் திரிவார்

பொதுத் தொண்டை விசுவாசமாய்
புவியிலாற்றிய பெருந்தகை
மதங்களுக்கப்பால் நின்று
மனிதர்களை மிகவும் நேசித்தவர்

ஊரில் துன்ப துயரங்களை
உற்றாராய் வந்து நின்றேற்பார்
ஆரும் கவலையுடன் வாழ்வதை
அணுவளவும் பார்த்திரார்

ஓய்வு பெற்றுப் போகும் வரை
உடன் பிறப்பாய் வாழ்ந்த அம்மா
தூய்மையில் அன்பில் பண்பில்
துலங்கியவர் அக்கீன்ஸ் அம்மா

நன்றிக்குரிய அம்மா
நற்சேவை செய்த அம்மா
என்றும் மறக்க முடியாத
எங்கள் அக்கீன்ஸ் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லியும் நானும்



**பொன்.செல்வநாயகம்**
ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
பாண்டிருப்பு – 02.



உவெஸ்லி உயர்தர பாடசாலை என்று இப்போது அழைக்கப்படும் இப்பாடசாலையின் முன்னைய பெயர் லீஸ் உயர்தர பாடசாலை என்பதாகும். இப்பாடசாலைக்கும் எனக்கும் கிட்டத்தட்ட 60 வருடங்களுக்கு மேற்பட்ட தொடர்புள்ளது. இப்பாடசாலையின் மாணவனாகக் கல்வி கற்றதுடன், ஆசிரியராகக் கல்வி கற்பித்துமிருப்பது எனது வாழ்க்கையின் மறக்க முடியாத ஒரு சம்பவமாகும். ஒருவருக்கு இவ்வாறான சந்தர்ப்பம் வாய்ப்பது மிகவும் அரிதாகும். எனவே இப்பாடசாலையினால் வெளியிடப்படும் இச்சிறப்பு மலரில் எனது ஆக்கத்தையும் சேர்த்துக் கொண்டமைக்கு பாடசாலையின் அதிபருக்கும் மலர்க் குழுவிற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1952இல் ஐந்தாம் வகுப்புக் கல்வியை எனது சொந்த ஊரான அன்னமலையில் முடித்துக் கொண்டதும், என்னை ஆறாம் வகுப்பில் உவெஸ்லி கல்லூரியில் கொண்டு வந்து எனது தந்தையார் சேர்த்து விட்டார். நகர்ப்புறப் பாடசாலைகளுடன் எவ்வித தொடர்புகளையும் கொண்டிராத எனக்கு ஆரம்பத்தில் உவெஸ்லி கல்லூரியுடன் ஒன்றிப் போக முடியவில்லை. பாடசாலைச் சுற்றாடலும், அதிபர், ஆசிரியர்களின் அதிகார தோரணை கலந்த கண்டிப்பும், என்னைப் பயமுறுத்தின. இவற்றை விட காலடியில் இருந்த ஊர்ப் பாடசாலையில் கல்வி கற்ற எனக்கு கல்முனைக்கு வந்து போவது மிகவும் கஷ்டமாக இருந்தது. துறைநீலாவணையூடாகத் தோணியில் போக்குவரத்துச் செய்து பல மைல்தூரம் நாள்தோறும் நடக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதனால் வகுப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பாடவேளைக்கு நேரத்திற்கு வருவதற்கு பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனாலும் நாட்கள் செல்லச் செல்ல ஏனைய மாணவர்களுடன் நட்புறவும், பாடசாலைக் கல்வியில் அதிகரித்த ஈடுபாடும் எனக்கு ஏற்பட்டது.

எங்களுடைய பாடசாலைக் காலத்தில் இப்போதையதைப் போலல்லாது இரண்டு நேரமும் பாடசாலை நடைபெறும். மதியச் சாப்பாட்டிற்குப் பின்னர் ஆரம்பமாகும் பாடசாலை பிற்பகல் 3.30 மணிக்கே முடிவடையும். இதன் பின்னர் நான் துறைநீலாவணைக்கு நடந்து சென்று தோணியில் பயணித்து அன்னமலையை அடைய வேண்டும் இவ்வாறு வீடு செல்லும் போது சில வேளைகளில் இரவு ஏழு மணி கூட ஆகும். அக்காலத்தில் இப்போதுள்ளதைப்போன்று போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. 'பஸ்' சேவைகளோ, முச்சக்கரவண்டிகளோ, இல்லாத காலமது. துறைநீலாவணைத்துறையடியில் அக்கரைக்குக் செல்வதற்கு தோணிகள் இல்லாமையினால் சில வேளைகளில் அங்கேயே இரவைக்கழித்த அனுபவங்களும் உண்டுபசி, தூக்கம், களைப்பு போன்ற பல துயரங்களைச் சுமந்தும் பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்தேன்.

நான் நினைத்திருந்தால் எனது பாடசாலைக் கல்வியை இடைநடுவில் குழப்பியிருக்க முடியும். அதற்கான வாய்ப்புக்கள் அப்போது அதிகமாகவே இருந்தன. ஊரில் ஓரளவு வசதியான குடும்பத்தைச் சேர்ந்த எனது பெற்றோர்கள் என்னைச் செல்லமாகவே வளர்த்தார்கள். பாடசாலையில் நான் எண்ணற்ற சோதனைகளை எதிர்நோக்கியிருந்த போதும் எனது கல்வியைத் தொடர்ந்து கற்றதன் பயனை இப்போது அனுபவிக்கின்றேன். இந்த மகிழ்ச்சியான வாழ்க்கை எனக்கு அமைவதற்கு காரணமாகவிருந்த ஆசிரியர்களான அமரர்கள் குணரெத்தினம், செபரெத்திணம், போன்றவர்களுடன் திரு. ஞானரெட்ணம் ஆகியோரும் இப்போது நினைவு கூரத்தக்கவர்கள். நான் பாடசாலைக்கு நேரம் பிந்தி வந்த போதும், வீட்டு வேளைகளை ஒழுங்காகச் செய்யாத போதும் எனது பிரச்சினைகளைப் புரிந்து கொண்டவர்களாக அவர்கள் இருந்தார்கள். ஆனாலும் பாடசாலைக்கு வந்து போவதில் எனக்கிருந்த கஷ்டங்கள் அனைத்தையும் உணர்ந்து கொண்ட எனது தந்தையார் என்னை விடுதியில் தங்கவைத்துப் படிப்பிக்கத் திட்டமிட்டார். இதனால் நான் கல்முனையில் லீஸ் உயர்தர பாடசாலையில் இருந்து வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டேன். அங்கேயே விடுதியிலிருந்து எனது உயர்தர கல்வியை முடித்து பேராதனைக் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பட்டதாரியானேன்.

பின்னர் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றேன். இங்கே இன்னொரு விடயத்தையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எங்கள் பிரதேசத்தில் முதலாவது கலைப்பட்டதாரியும், முதலாவது பட்டதாரி ஆசிரியரும் நான் என்பதே அதுவாகும்.

பட்டதாரி ஆசிரியராக 1970ம் ஆண்டு நியமனம் பெற்றநான், 1976ம் ஆண்டு மே மாதம் உவெஸ்லி உயர்தர பாடசாலைக்கு மாற்றப்பட்டேன். இப்பாடசாலையின் மாணவன் என்ற வகையில் இம்மாற்றம் கிடைத்தமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சி கல்வி கற்ற பாடசாலையில் ஆசிரியராகக் கற்பிக்கும் வாய்ப்பு கிடைத்தமை அதிலும் எனது ஆசானாக வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் கடமையாற்றிய அதிபர் யோகம் வேலுப்பிள்ளை அதிபர் அவர்களின் கீழ் பணி செய்யக் கிடைத்தமை எனது பாக்கியம். இவரின் தலைமையில் பணியாற்றியதன் அனுபவத்தையும் ஆற்றலையும் பின்னர் நான் அதிபராகவும், கோட்டக்கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றிய காலத்தில் பயன்படுத்தி வெற்றியும் கண்டேன்.

இக்கல்லூரி கல்முனைவாழ் மக்கள் மட்டுமல்லாது பொத்துவில் தொடக்கம் குருக்கள்மடம் வரையிலான மாணவர்கள் விடுதியில் தங்கி நின்று கல்வி கற்கும் முக்கிய பாடசாலையாக விளங்கியது. இரு நேரப் பாடசாலையாகி இப்பாடசாலையின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெற்றன. வரையறுக்கப்பட்டதான வளங்களுடன் பாடசாலை நடவடிக்கைகள் இடம் பெற்றதனால் ஆசிரியர்கள் கிழமையில் 40 பாடவேளையைச் செய்ய வேண்டிய நிலை இங்கு இருந்தது. இதனால் ஆசிரியர்கள் இப்பாடசாலைக்கு மாற்றம் பெற்றுவர விரும்பாத காலம். அதிலும் அதிபர் யோகம் வேலுப்பிள்ளையின் கீழ் வேலைசெய்ய பலரும் விரும்பவில்லை. காரணம் அவர் ஆசிரியர்களிடத்தில் உயர்ந்தபட்ச வேலைவாங்குவார் என்ற பயம் பலருக்கு இருந்தது. என்னைப் பொறுத்தவரை எனது பாடசாலை என்ற விசுவாசத்துடன் கிழமையில் 40 பாடவேளைகள் ஓய்வு இன்றி வேலை செய்தேன். இதன் பயனை இன்று அறுவடை செய்துள்ளேன். அன்று என்னிடம் கற்ற மாணவர்கள் பலர் பல்வேறு துறைகளில் உயர் பதவிகளில் உள்ளார்கள் என்பதை அறியும் போது மனம் நிறைவடைகின்றது. அதிபர் யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் சகல மட்டத்திலும் செல்வாக்குமிக்கவராக இருந்தமையால் வளங்ளை தேடிப்பெற்று தன் பாடசாலைக்கு நிறைய வளங்களைக் சேர்த்த பெருமைக்குரியவர். இவரின் காலம் கல்முனை உவெஸ்லியின் பொற்காலம்.

1977களில் கல்முனை உவெஸ்லியின் அதிபர்களாக அமரர் கே.சுப்பிரமணியம், எஸ்.மகாலிங்கம் போன்றவர்களின் காலத்திலும் ஆசிரியராகப் பணியாற்றிய நான், க.பொ.த (சா/த), க.பொ.த(உ/த) பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை அறுவடை செய்வதற்கு நானும் காரணமாக இருந்தேன். என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை தருகிறது. மாணவர்களின் நல்லொழுக்கம், கட்டுப்பாடு என்பனவற்றுக்கு பொறுப்பாக இருந்து அவர்களின் ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்தும் செயற்றிட்டங்கள் வகுத்து செயற்பட்டேன். இதன்மூலம் நல்லொழுக்கம் கொண்ட மாணவர் சமூதாயத்தை உருவாக்க முடிந்தமை நிறைவைத் தருகின்றது.

க.பொ.த (சா/த) கலைத்துறைக்கு என்னுடன் பொறுப்பாக இருந்து பணிபுரிந்த ஆசிரியர்களான திரு. ரி.சுப்பிரமணியம், வி.சுப்பிரமணியம், திருமதி.பிரேமிளா மென்டிஸ் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் கூட்டு முயற்சியும், தனி முயற்சியும் காரணமாக கலைத்துறையில் அதிகளவான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்ப முடிந்தமை எமது கூட்டு முயற்சிக்கு கிடைத்த பெருவெற்றியாகும்.

1984ம் ஆண்டு ஜுன் மாதம் பாடசாலை ஆசிரியர்களின் சம்பளப்பணம் கொள்ளையிடப்பட்டது. அன்றைய தினம் அதிபர் யோகம் வேலுப்பிள்ளையின் பணிப்பின் பேரில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர். மன்சூர் அவர்களை சந்தித்து கூட்ட மண்டபம் (Assembley Hall) ஒன்று அமைப்பதற்கு தேவையான நிதியைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டேன். அந்த நிதி மூலம் உருவாக்கப்பட்டுள்ள மண்டபம் தான் "நல்லதம்பி மண்டபம்" என தற்போது அழைக்கப்படுகின்றது. இந்தச் சந்திப்பை அடுத்து பாடசாலை திரும்பிய போது ஆசிரியர்களின் ஜுன் மாதச் சம்பளப்பணம் கொள்ளையிடப் பட்ட செய்தி கிடைத்தது. அதிர்ச்சி அடைந்தேன். சம்பளப் பணத்தில் தான் எனது வாழ்வாதாரம் தங்கியிருந்தது. செய்வதறியாது திகைத்தேன். தெரிந்தவரான நண்பர் ஒருவர் கல்முனை மக்கள் வங்கியில் முகாமையாளராகப் பணி புரிந்தார். அடுத்த நாளே அவரிடம் முழுநம்பிக்கையுடன் அவரை அணுகி நடந்தவற்றை கூறி மேலதிக பற்றாக 5000 ரூபாயைத் தருமாறு வினயமாக வேண்டி நின்றேன். பதில் மேலதிக பற்று வழங்க முடியாது என கைவிரித்து விட்டார். (நண்பர் பெயர் குறிப்பிட விரும்பவில்லை) இந்த இக்கட்டில் இருந்து என்னையும் எனது சக ஆசிரியர்களையும் விடுவித்து அவர்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் எண்ணத்துடன் பாடசாலை கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் என்னுடன் செயலாளர் ஆசிரியர் ஜோசப் ஜெபஸ் அவர்களையும் அழைத்துக் கொண்டு பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபைத் தலைவர் அமரர் எம்.எம்.இஸ்மாயில் அவர்களைத் தொடர்பு கொண்டு விடயத்தினை விளக்கினேன். அவரது அனுமதியின் பேரில் எனது பாடசாலை ஆசிரியர்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களைப் பெற்று பாடசாலை கூட்டுறவுச் சங்கத் தின் மூலமாக சகலருக்கும் வழங்கி இதே சேவையினை தொடர்ந்தும் வழங்க முடிந்தது. இந்த செயல்முறையின் மூலமாக பாடசாலை மாணவர்களுக்கு நலன்புரிச் சேவைகளை வழங்கும் வண்ணம் தேனீர்ச்சாலைக்கு நிரந்தர கட்டிடமைத்து நடாத்தி வந்தோம். இன்றும்கூட அந்தக் கட்டிடத்திலேயே சிற்றுண்டிச்சாலை இயங்கி வருகின்றது.

அக்காலத்தில் மாணவர்களின் கல்வி ஆசிரியர்களின் கற்பித்தலிலும், அவர்களின் வழிகாட்டலிலும் தங்கியிருந்தது. தற்பொது போன்று அக்காலம் தனியார் கல்வி நிலையங்கள் இருக்கவில்லை. மாணவர்களின் பாடசாலை வருகை திருப்திகரமாகவே இருந்தன. மாணவர்களின் வருகை குறைவாயின் பெற்றோர் பாடசாலைக்கு வரவழைக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டனர். இன்று அந்நிலை மிக அருமையாகிவிட்டது. காரணம் தனியார் கல்வி நிலையங்களின் பெருக்கம், கல்வி வியாபாரமாகிவிட்ட தன்மை, பெற்றார் மத்தியில் காணப்படும் கல்விக்கான போட்டி என்பனவற்றைக் குறிப்பிடலாம். அக்காலம் பாடசாலைக் கற்பித்தலின் மூலம் பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றனர். இவர்களுள் உவெஸ்லி கல்லூரி மூலம் வைத்திய துறைக்கு தெரிவான மாணவனாக வைத்திய கலாநிதி அற்புதநாதன் தேவரஞ்சன் அவர்களை விசேடமாகக் குறிப்பிடலாம்.

எனது காலத்தில் ஆசிரியர் - மாணவர்கள் நல்லுறவு நம்பிக்கை என்பன பலமடைந்து காணப் பட்டது. கல்லூரி தொடர்பாக மாணவர்களிடம் கௌரவமும் மதிப்பும் இருந்தது. அந்த மதிப்பையும் மரியாதையையும் பழைய மாணவர்கள் இன்று பேணி வருவது வரவேற்கத் தக்கது. பாராட்டப்பட வேண்டியதும்.

இவ்வாறு கல்விப்பாரம்பரியமிக்க கல்முனை உவெஸ்லிக் கல்லூரியின் மாணவனாகவும், ஆசிரியனாகவும் பணியாற்றக் கிடைத்தமை எனது வாழ்வில் பெரும் பாக்கியமாக கருதுகிறேன். மேலும் இக்கல்லூரியின் பாரம்பரியம் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து கல்விப்பணி புரிந்த ஆசிரியர்கள், எனது நண்பரும் அதிபருமான அமரத்துவமடைந்த கே. சுப்பிரமணியம், எஸ்.மகாலிங்கம், வி.வெங்கடாசலம், பி.முருகையா போன்றவர்கள் இக்கல்லூரியின் வரலாற்றுப் பாதையில் மைற்கற்கள். இதே பாதையில் இன்று உவெஸ்லியின் அதிபராகப் பணிபுரியும் எனது மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய தம்பி வ.பிரபாகரன் அவர்களின் காலத்தில் பரந்து நிற்கும் ஆலவிருட்சமாய் கல்விப் பணியாற்றி நீடித்து நிலைபேறடைய பிரார்த்திக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பனித்துளியின் கனவில்



சபா சபேஷன்

என்னமாய் விரிக்கின்றது
இயற்கை இந்தக் காலைப் பொழுதை
பூபாள ராகத்தின் மெல்லிய கீதம்
பூஞ்சிட்டுக்களின்... வண்டினங்களின்
ரீங்காரத்தினிடை...
குளிர்த் தென்றலிடை...
துளிர்த்த ஒரு புல்லின் நுனியில்
சிறு பனித்துளியாய் நான்.

இனி வரும் கணங்களுக்கான
கனவுகளுடனும் ரசிப்புக்களுடனும்
'நீராவேன்... மழையாவேன்..
பசுமையும் மலர்ச்சியும் என்னாலே நிகழும்
இந்த பிரபஞ்சத்தின் மகிழ்வான தருணங்களுக்கான
பிரதான காரணியாக நான் நிமிர்வேன்'
பெருநம்பிக்கையின் விளிம்பில் நான்.

எனைத் தாங்கிய தளிர்த்த புல்நுனியிடம்
சொல்கிறேன்.
'கவலைகளை விடு என் கனவுகள்
உனக்கானவையும் கூட
எனது மீள்வருகையில் நீ நலம்பெறுவாய்'
உன் பரிணாம வளர்ச்சியின்
சக்தியூட்டம் நானே'

புல்நுனியோ சிலிர்த்து அசைந்தது.
அவநம்பிக்கையின் அதிர்வுகளை
அதன் சிறு நரம்புகளில் உணர்ந்தேன்.
'என்ன..? என்னை நீ நம்பவில்லையா
என்னை நம்பு...இது நிஜம்
நானே வருவேன்.
ஆமாம். இதுவே நிஜம்'


மறு கணத்தில்
குளிரும் இருளும் விடைபெறுகின்றன.
வெம்மையின் படர்கையுடன்
சூரியக் கைகள் என்னை மேய்கின்றன
புல் நுனியில் என் இருப்பு வெற்றிடமாய்க்
காய்ந்து கிடக்கிறது.
இழப்புகளும் தனிமைகளும்
இவையே என
சுட்டி நிற்கும் காற்றின் வெளியிடை....
அந்த ஒரு சூனியக் கணத்தில்
கனவுகள் பொய்த்துப் போன வெறுமையுடன்
நான் நிற்கையில்
கூக்குரலாய் சில ஒலியலைகள்

"உனது கனவுகளுக்காகவே நீ வாழ்ந்து கொள்
அவை உனக்கானவை மட்டுமே
எனது நம்பிக்கைகளும் கனவுகளும் எனக்கானவையே
எனக்கென்ற உலகம்...
அது உன்னுடையதிலிருந்து வேறுபட்டது
அதில் நிஜமான என் வாழ்வை
நானே தீர்மானித்துக் கொள்வேன்...வாழ்வேன்
எனது கனவுகளை நீ தீர்மானிக்காதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் யோகம் வேலுப்பிள்ளை
## ஒரு பன்முக ஆளுமையின் மறுபக்கம்



ச.பிரணவசோதி

வெள்ளை அரைக்கை ஷேட் - வெள்ளை ட்ரவுசர் - முறுவலிக்காத முகம் - அறிஞர் அண்ணா போல் காவியேறிய பல்வரிசை, ஆறடி உயரமான எடுப்பான தோற்றம் - கர்ஜனையான பேச்சு - இறுக்கமான நிருவாகத் தலைமை - எவருக்கும் தலைவணங்காத் தன்மை - இவைதான் நாம் தினந்தினம் தரிசித்த அதிபர் யோகம் வேலுப்பிள்ளையின் பரிமாணங்கள்! ஆனால் இவற்றையும் தாண்டி மனிதாபிமானச் சிந்தனை - மென்மையான பேச்சு - கலகலப்பான சிரிப்பு - ஆதரவுக் கரம் - அன்பான உபசரிப்பு - நண்பர்கள் கூட்டம் என அவருக்கு பலருக்கும் தெரியாத மற்றொரு தரிசனமும் உண்டு.

மேலை நாட்டவரின் காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் நமது நாடு இருந்தபோது, கிறிஸ்தவ மிஸனரிகளால் கல்முனை நகரில் ஆரம்பிக்கப்பட்டு 136 வருடங்களாக தனது கல்விப் பணிமூலம் இன்னும் தலைநிமிர்ந்து நிற்கின்ற உவெஸ்லி உயர்தர பாடசாலை, இடைக் காலத்தில் தனது சகோதர பாடசாலையான லீஸ் உயர்தர பாடசாலையையும் உள்வாங்கி தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. இக் கல்லூரியின் வரலாற்றில் பல அதிபர்கள் பணியாற்றியிருப்பினும், நமது காலப் பகுதியில் பணியாற்றித் தடம்பதித்து மறைந்தும் இன்றும் பலர் மனங்களில் வாழ்பவர்களில் அதிபர் யோகம் வேலுப்பிள்ளை முதன்மையானவர் மட்டுமன்றி மறக்கவும் முடியாதவர்.

எழுபதுகளின் பிற்பகுதி முதல் எண்பதுகளின் முற்பகுதி வரை அவரது நிருவாகக் காலப்பகுதி அரச உத்தியோகத்தர்கள் அரசியல் பழிவாங்கல் மூலமான தூர இடமாற்றங்கள், பொறுப்பு மாற்றங்களைச் சந்தித்த காலம். எனினும் அதிபர் யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் கட்சி பேதமின்றி ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளோடு கொண்டிருந்த இறுக்கமான நட்புறவு காரணமாக இதற்கு உட்படாதது மட்டுமன்றி, பாடசாலைக்குள்ளும் அரசியல் புகாதவாறு தனது நிருவாகக் கட்டமைப்பைப் பேணினார். பாராளுமன்றத்தில் எதிரும் புதிருமாகச் சொல்லாடும் அரசியல்வாதிகள் அதிபர் விடுதியின் முன்னாலிருந்த பலா மரத்தடியில், மாலை வேளைகளில் அவரோடு ஒன்றாக அமர்ந்திருந்து கதைபேசிக் களிப்பது காண்பவர்களை ஆச்சரியப்படுத்தும். பாடசாலைக்குத் தேவையான உதவிகளையும், வளங்களையும் எல்லோரிடமிருந்தும் பெறுவார். சில காலம் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளராகக் கடமையாற்றியபோதும் ஏனைய கட்சி அரசியல்வாதி களோடு கொண்டிருந்த நட்பை அது பாதிக்காதவாறு பார்த்துக்கொண்டார். ஆனால், அவர் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்திருந்தார் என்பது இன்றுவரை யாருக்கும் தெரியாது.

கல்முனைக்கு உயர்பதவிகளை ஏற்க வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து அதிகாரிகளும் மரியாதை நிமித்தம் சந்திக்கும் ஒருவராகவும் அவர் இருந்தார். அத்தோடு கல்முனை மற்றும் மாவட்ட மட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பொறுப்பாளர்களோடும் இறுக்கமான உறவினைப் பேணிக்கொள்வார். இதன்மூலம் பாடசாலையின் தேவைகளை மட்டுமன்றி தேவையான சேவைகளையும் இருந்த இடத்தில் இருந்துகொண்டே தொலைபேசியினூடாகப் பேசி வரவழைத்துக் கொள்வார். இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். இப்பாடசாலையின் அதிபராக இருந்து ஓய்வுபெற்ற 'கிறேஸ் அக்கா' என அனைவராலும் அழைக்கப்பட்ட கிறேஸ் குலதிலகம் தில்லையம்பலம் அவர்கள் இயற்கை எய்தியபோது, பாடசாலை வளாகம் மற்றும் வாடிவீட்டு வீதியில் அன்னாரின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த இல்லம் தொடங்கி மயானம் வரையான வீதியை கறுப்பு - வெள்ளை கொடிகளால் அலங்கரிக்கும்படி கூறினார். அதற்காக கல்முனைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் லொறியையும் பெற்றுத் தந்து, அதனை இடையூறின்றிச் செய்வதற்கு கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் பேசி ஒரு பொலிஸ் குழுவையும் எங்களோடு உதவிக்கு அனுப்பிவைத்தார்.

பாடசாலையில் அவருக்கு ஒரு 'விசுவாசப் படை'யும், ஒரு 'மந்திராலோசனைப் படை'யும் இருந்தது. 'விசுவாசப் படை'யில் அப்போதைய இளம் ஆசிரியர்களான திரு.J.S.ஜெபஸ் ஜோசப், திரு P.நமசிவாயம், திரு. பூபாலசிங்கம், திரு. N.புள்ளநாயகம், திரு சிவராஜா ஜனாப் M.I.M.றியால் உள்ளிட்ட பலர் இருந்தனர். 'மந்திராலோசனைப் படை'யில் சிரேஷ்ட ஆசிரியர்களான C.செபரெட்ணம், வித்துவான் ஞானரெட்ணம், N.காசிப்பிள்ளை, E.சிவானந்தநாயகம் உள்ளிட்ட பலரும் இருந்தனர். பாடசாலையில் செய்யவேண்டிய நிகழ்வுகள் மற்றும் கருமங்களை மந்திராலோசனைப் படையோடு சேர்ந்து தீர்மானித்த பின்னர் என்ன செய்யவேண்டும் என்பதை மட்டும் விசுவாசப் படையிடம் கூறுவார். அதை எப்படிச் செய்யவேண்டும் என்பதை விசுவாசப் படையே தீர்மானிக்கும். தேவையான பொருட்கள், சேவைகள் அனைத்தும் தொலைபேசியூடாகவே பெற்றுக் கொடுக்கப்படும். தேவையான உதவிகள் ஒத்தாசைகள் எல்லாம் சகல தரப்பினரிடமிருந்தும் பெறப்படும். எவருடைய தலையீடுகளும் இருக்காது. எவ்வித ஆர்ப்பாட்டங்களும் இருக்காது. ஆனால், குறித்த தினத்தில் குறித்த விடயம் எவ்வித தடங்கலும் குறைகளுமின்றி எதிர்பார்த்தபடி நிகழும். அது அவருக்கே உரித்தான நிருவாக ஆளுமையின் வெளிப்பாடு என்றே கூறவேண்டும்.

அவரது காலத்தில் அதிகளவான வெளிமாவட்ட குறிப்பாக வடமாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் கடமையாற்றினார்கள். வந்தவுடன் அவர்களை அதிபர் விடுதியில் தங்கவைத்து உபசரித்து, பின்னர் அவர்கள் குடும்பத்தோடு வந்து இருக்கக்கூடியவாறான வீடுகளை மிக அக்கறையோடு ஒழுங்குசெய்து கொடுப்பார். பிற்பகல் வேளைகளில் அவர்களின் வீடுகளுக்குச் சென்று குறைநிறைகளைக் கேட்டறிந்து உதவுவார். அக் காலப்பகுதியில் சுகதபால என்று ஒரு சிங்கள ஆசிரியர் கடமையாற்ற வந்தார். அவருக்கு பாண்டிருப்பில் சிங்களம் தெரிந்த ஒருவரின் வீட்டில் தங்குவதற்கு ஒழுங்குசெய்து கொடுத்ததோடு தமிழில் உரையாடவும் கற்றுக்கொடுத்தார்.

1979 காலப்பகுதியில் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்து, அதற்குப் பொறுப்பாக ஜெபஸ் ஆசிரியரையும் நியமித்தார். அதன் அலுவலகமாக மரவேலை கூடம் இருந்தது. அதில் பலர் அக்கறை காட்டவில்லை. எனினும் அதை நடைமுறைப்படுத்துவதில் அதிபர் மிக உறுதியாக இருந்தார். அக் கூட்டுறவுச் சங்கத்தின் பெரு முயற்சியினாலேயே, வாடிவீட்டு வீதிப் பக்கமாக இருந்த பாடசாலை நுழைவாயிலுக்கு அருகாமையில் ஒரு நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டு, பாடசாலை மத்தியில் தற்போதுமுள்ள ஆலமரத்தின்கீழ் தகரக் கொட்டகையில் இயங்கிவந்த பாடசாலைக் கன்டீன் அங்கு மாற்றப்பட்டது. பாடசாலைச் சம்பளப் பணம் முழுவதுமாகக் கொள்ளையிடப்பட்ட சம்பவம் பலருக்கு ஞாபகமிருக்கலாம். அப்போது கணவன் - மனைவி என இருவரும் ஆசிரியர்களாக பல தம்பதிகள் இங்கு கடமையாற்றினர். அவர்களது மொத்தக் குடும்பச் சம்பளமும் பறிபோனது. அவ்வேளையில் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக கல்முனைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஒரு மாத காலத்துக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள் பெறப்பட்டு மாதாந்த தவணைக் கடன் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. அன்றுதான் இதில் அக்கறை காட்டாத பலருக்கு அதிபர் யோகம் வேலுப்பிள்ளையின் தீர்க்கதரிசனம் புரிந்தது.

அதிபர் அவர்கள் எங்காவது அருகிலுள்ள இடங்களுக்கு அவசரமாகச் செல்லவேண்டுமாக இருந்தால் யாராவது ஒருவரின் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து செல்வார். எனினும் அதை அவர் பெரிதாக விரும்புவதில்லை. பெரும்பாலும் ஒருவரின் பைசிக்கிளின் முன்பகுதியில் அமர்ந்து செல்வதையே விரும்புவார். அவரை பைசிக்கிளின் முன்பகுதியில் அமர்த்தினால், அது இடைவெளி இல்லாமல் நிறைந்திருக்கும். அவரை ஏற்றிச் செல்லும்போது வீதியில் ஆணி, கல் போன்ற ஏதாவது பொருட்களைக் கண்டால் நமக்குத் தெரியாமலே 'பிறேக்' பிடித்துவிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒருவாறு சுதாரித்துக்கொண்டு பைசிக்கிளை நிறுத்தி விட்டால், அவர் பைசிக்கிளைப் பிடித்துக்கொண்டு, அந்தப் பொருளை எடுத்து பாதசாரிகளுக்கோ வாகனங் களுக்கோ இடைஞ்சலில்லாத இடத்தில் போட்டுவிட்டு வரும்படி கூறுவார். அதன்பின்னர் தொடரும் பயணத்திலும் இடையிடையே இவ்வாறு நிகழும். எனது பைசிக்கிளில் அவரை ஏற்றிச் செல்லும்போது பலமுறை நான் இதனை அனுபவித்திருக்கிறேன்.

காலையில் பாடசாலைக்கு வந்ததும் முதல் வேலையாக 'ஜப்னா ஸ்டோருக்கு' யாரையாவது அனுப்பி 'டெய்லி நியூஸ்' பத்திரிகையை வாங்கி அதை முழுவதும் படித்து முடித்த பின்னரேயே காலை உணவுக்காகச் செல்வார். அவர் ஆசிரியர்கள் இல்லாத வகுப்புக்களுக்குச் சென்று பாடம் நடத்துவார். அவற்றுள் இஸ்லாம், சைவம் ஆகிய பாடங்களும் அடங்கும். சில உயர் வகுப்புக்களில் அன்றைய பத்திரிகையில் வந்த முக்கிய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடுவார். அக் காலப்பகுதியிலேயே ஈரானில் நடைபெற்ற புரட்சிமூலம் மன்னர் ஷாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, அயதொல்லா கொமெய்னியின் ஆட்சி அமைக்கப் பட்டது. அதன் சாதக பாதகங்கள் பற்றியெல்லாம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வார். ஆங்கில பாடமென்றால் ஷேக்ஸ்பியரின் "Romeo and Juliet", "Julius Caesar", "Hamlet", "Othello", "Antony and Cleopatra" பற்றியெல்லாம் பேசுவார். தமிழில் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களிலும் மிகுந்த பரிச்சயமிருந்தது. மகாபாரத யுத்தகாண்டத்தில் கர்ணன் போர்க்களத்தில் குற்றுயிராகக் கிடப்பதை 'ஆவியோ நிலையில் கலங்கியது யாக்கை அகத்ததோ புறத்ததோ அறியேன்....' என்னும் செய்யுளைப்பாடி விளக்கங் கொடுப்பார். அவை அவரது பன்முக ஆற்றலின் வெளிப்பாடுகள். இவை சாத்தியமானதுக்குக் காரணம் மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தாம் பயிற்சியாசிரியராக இருந்தபோது 16 பாடங்கள் கற்பிக்கப்பட்டதாகக் கூறுவார்.

அவரது அதிபர் ஆசனத்தில் யாரும் அமர்வதை அவர் விரும்புவதில்லை. காலையில் 09.30 மணியளவில் வகுப்பறைகளை அவதானிக்க ஒருமுறை வலம்வருவார். ஒருநாள் அவ்வாறு அவர் சென்றிருந்தபோது கல்வித் திணைக்களத்திலிருந்து வந்த ஓர் உயரதிகாரி அதிபரது ஆசனத்தில் அமர்ந்து இருந்துகொண்டு அதிபரை அழைத்துவரும்படி பாடசாலை அலுவலக ஊழியரிடம் கூறியனுப்பினார். தன்னுடைய ஆசனத்தில் அவர் அமர்ந்திருக்கிறார் என்பதை எப்படியோ அறிந்து, இன்று சந்திக்க முடியாதெனவும், முடியுமானால் மறுநாள் வருமாறு கூறியனுப்புமாறும் சொல்லிவிட்டார். நீண்ட நாட்களுக்குப் பின் ஒருநாள் அவரை மட்டக்களப்பு கச்சேரியில் சந்தித்தபோது இச் சம்பவத்தை ஞாபகமூட்டி, அதற்கான காரணத்தைக் கேட்டபோது, அது உவெஸ்லி அதிபருக்கான கதிரை. அதில் வேறு எவரும் அமரக் கூடாது. இப்போது அங்கு வேறொருவர் அதிபராக இருக்கிறார். இன்றைக்கு நான் சென்றால்கூட அதில் இருக்கமாட்டேன் எனக் கூறினார். தனது ஆசனத்தில் வேறொருவர் அமரக்கூடாது என்பதில் அவர் காட்டிய அக்கறையை வேறொருவரின் ஆசனத்தில் அவர் அமராமலும் கடைசிவரை திடமாகவே இருந்தார்.

1978இல் வீசிய சூறாவளியின் பின்னரான காலப்பகுதியில் அப்போது கல்முனை உதவி அரசாங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராக இருந்த ஜனாப் காலிதீன் அவர்களுடன் இணைந்து ஒருவார காலத்துக்குள் கல்முனை நகரை இயல்புநிலைக்குக் கொண்டுவந்ததில் அதிபர் யோகம் வேலுப்பிள்ளையின் பங்கு மதிப்பிட முடியாதது. அதுமட்டுமன்றி சூறாவளியின் பாதிப்புக்களைப் பார்வையிடவந்த அப்போதைய பொது நிர்வாக அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம அவர்கள் பயணித்த ஹெலிக்கொப்டர் உவெஸ்லி மைதானத்தில் தரையிறங்கியதும் முதலில் அதிபர் யோகம் வேலுப்பிள்ளையையே சந்தித்தார்.

அதிபர் யோகம் வேலுப்பிள்ளை பெரும்பாலும் வெள்ளைநிற உடையையே அணிவார். சாதாரணமாக பாடசாலை இல்லாத நாட்களிற்கூட அதுவே அவரது உடை. மிக அரிதாக மட்டும் வெள்ளைச் சேட்டும் கறுப்பு ட்றவுசரும் அணிவார். அப்படியென்றால் அன்று அவருக்கு மிக நெருக்கமான ஒருவரின் மரணவீட்டுக்குச் செல்லப்போகிறார் என்று அர்த்தம்.

அவர் மரணத்துக்கே சவால் விட்டவர். மாரடைப்பிலிருந்து ஒருவர் இருதடவைகள் தப்பித்துக் கொள்ளலாம். மூன்றாவது தடவை ஏற்பட்டுவிட்டால் உயிர்தப்புவது முடியாதென்பார்கள். மூன்றாவது தடவை அவருக்கு மாரடைப்பு வந்தபோது, டாக்டர் முருகேச பிள்ளை வந்து பார்த்துவிட்டு, வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல அவரது காரிலேயே ஏற்றுமாறு கூறினார். உயிரற்ற உடலைத்தான் ஏற்றியனுப்பினோம். அரை மணித்தியாலத்தில் அவர் காப்பாற்றப்பட்டதாகத் தகவல் வந்தது. நான்காவது முறை மாரடைப்பு வந்தபோதுதான் மரணம் அவரை நெருங்க முடிந்தது.

அவர் எப்போதும் தேநீரை அவரது அலுவலகத் துக்கு வரவழைத்தே அருந்துவது வழக்கம். ஆனால் மரணிப்பதற்கு முதல்நாள் கன்டீனிலேயே அமர்ந்து தேநீர் அருந்தினார். வழமைக்கு மாறாக எல்லா வகுப் பறைகளுக்கும் சென்றார். மறுநாட் காலை பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னரேயே அவர் உயிர் பிரிந்து விட்டது.

பொதுவாக அவர் சொத்து சுகங்கள் எதையும் சேர்த்து வைத்ததில்லை. மாறாக தனது அர்ப்பணிப்பான சேவையினாலும், அன்பான உபசரிப்பினாலும், நட்புறவினாலும் மிகப்பெரிய பரந்த அபிமானிகள் கூட்டத்தையே சொத்தாகப் பெற்றிருந்தார். இதற்கு அவரது மரணச் செய்தியறிந்து திரண்ட மக்கள் கூட்டமும், உவெஸ்லி மைதானத்திலும் தெருவோரங் களிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத் தொகுதியும், இறுதி ஊர்வலமுமே சாட்சியாகும்.

நான் மாணவனாக இருந்த காலத்தில் மட்டுமன்றி அதற்குப் பின்னரான காலத்திலும் என்னை எனது தந்தையாரின் பெயரைச் சொல்லியே அழைப்பார். வாய்க்குள் வராத பெயரை உங்கப்பன் ஏன் வைத்தான் என்று சிரித்துக்கொண்டே கேட்பார். அவர் உயிரோடு இருந்தவரை கல்முனைக்கு வரும்போதெல்லாம் அவரைச் சந்திப்பதுண்டு. தற்செயலாக எங்கு கண்டாலும் அழைத்து சுகம் வினவுவார்.

ஒரே நேரத்தில் - ஒரே இடத்தில் - இருவேறு நபர்களுடன் ஒருவரோடு கடும் கோபமாகவும் மற்றவரோடு மிகச் சாந்தமாகவும் உரையாடும் அவரது செய்கையைக் கண்டு பலமுறை நான் வியந்து போயிருக்கிறேன். இதைப் பலரும் அவதானித்திருக்கக் கூடும். அதுவும் அவரது இன்னொரு பரிமாணம்.

அவரை அதிபராகப் பெற்றது உவெஸ்லிக்குக் கிடைத்த 'யோகம்' என்றால், அவரது காலத்தில், அவரது அரவணைப்பில் வாழக் கிடைத்தது யாம் பெற்ற யோகமே .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MEMORIES OF my school



**By Rev N.Stanley Jeyaraj**

The Wesleyan mission was very strong as a protestant church in the Eastern Province.

Mission schools were started in Trincomalee and Batticaloa District, but now a segment of Batticaloa District is Divided into Ampara District.

In Batticaloa District, the Mission started schools ranging fromVaharai to Panama. Most of these school have now changed their names from Methodist mission to names suggested by Parents' and Teachers association or the Education Ministry.

Wesley high school was started 136 years ago and it still stands as a prominent school in this area, bearing its original name.

Although it is a government school now, some consideration is given by the government and the ministry of education when they appoint principals to this school.

I, as a product of this school, have met the principals from late Mr.Nallathamby, Ms.Grace Thillaiambalam and Ms.Babara Atkins up to the present principal Mr.Vadivel Prabakaran.

There was time, the MP of Kalmunai Electorate, the late Mr.M.C.Ahmed, wanted to bring both Fatima College and Wesley High School together as one named Multi-Lateral School, but this was not materialized.

During the time when Methodist Church was in Charge of this school, the Methodist minister from the Kalmunai Methodist Church, was appointed as the chaplain in turns by the principal, Christian teachers and some of the senior students.

I had the privilege of conducting as a senior student and principal Mr.S.J.Wilson congratulated me after one particular prayer meeting that I had conducted and stated that he would like to see me as a clergyman one day.

This school has regular activities such as school



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

parliament, scouts & Guides Organizations, cadet Training, English Literary Association, Tamil Literary Association, Science Association, and Drama Association. At that time we had only three houses functioning at school sports activites namely, Pastor house, Damian house and curie house. Also we were doing well at netball, Football and volleyball Matches within Schools in the district.

Three important people have to be mentioned with regard to sports activities Mr.Kirubairajah who went up to Olympics for 440 Event, Mr.Nainah – Mohammed Who got gold medal in 100 yards at a National athletic meet and Ms.Vijayamani who was an excellent netball player and an athlete who brought fame to the school during the tenure of the principal Mr.S.J.Wilson.

in athletics we went up to National levels and obtained first place in Athletic Meets.

Rev L J Julian was chaplin of this school in the sixties and he was a volunteer chrisianity teacher in this school and at the age of fifteen, he confirmed me into a full member of the Methodist church and he was my professor when I did my evangelist studies. Also I had the Privilege having him as a professor for the ministerial studies. He was also the examiner for local preacher candidate's examination, probation studies and he was involved so much in my life. I invited him to lay hands on me to bless me at the time of ordination. Like wise before the take over of the school by the government, ministers in charge at the Methodist church, Kalmunai functioned as chaplain of this school.

For number of years, some of the students from Irakkamam, Pottuvil and Komari came to school by Bullcart and stayed at the hostel and with their relatives and continued education.

Our school netball team was selected for finals to become National Champion in Colombo As they were practising the day before the match, the assassination of the prime minister SWRD Bandarnayake was announced and curfew declared and the team returned to Kalmunai.

This school had regular historical and Educational tours arranged year after year which very much benefited the students. scouts camping outside Kalmunai, cadets training in upcountry and scout jamboree celebrations in Colombo were arranged and organized by the school. We had the privilege of having the then scout commissioner for Ceylon, late. Mr.C.W.W.Kanangara, gracing the occasion with the District scout camp and activity held at our school.

A special mention about the selection of head prefect has to be stated. The number of Muslim students. during my time was around 40 and three head prefects were appointed from them. Both Hindu and Muslim students were elected to be prefects and head prefects.

A muslim student, who was a head prefect, later became a cabinet minister in the parliament. He mentioned that the fair election of leadership in this school served as an example to many other schools.

The girls' boarding school and the "Christa illam" of Kkalmunai contributed very much to the life of the school, and girls from distant places had a safe environment in this institution.

Many girls and boys came walking to the school and returned in the evening the same way from Sainthamaruthu, Maruthamunai, and Pandiruppu and now a days I do not see students coming walking and this is a big change.

A former student of this school held the office as the Inspector Genearl of police and many other students held the office as members of parliament and cabinet ministers.

Memories of my school are still fresh in my mind.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எனது உவெஸ்லியின் நினைவுகள்

திருமதி K. தயாசீலன்
(முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்)

1977ம் ஆண்டு பயிற்றப்பட்ட கணிதபாட ஆசிரியராக கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தேன்.

ஆலமரமும் விசாலமான நிலப்பரப்பும் பழைமை வாய்ந்த கட்டடங்களும் உவெஸ்லியின் சிறப்பு. தேவைகள், திருத்தங்கள் அவசியமான நிலையில் பாடசாலை இருந்தது.

இரு வருடங்கள்தான் இங்கு ஆசிரியராகப் பணியாற்றினேன். பின்னர் பதவி உயர்வு பெற்று உதவிப் கல்விப் பணிப்பாளராக கல்முனை கல்வி வலயத்தில் கடமையேற்றேன். சேவையாற்றிய பலர் பதவி உயர்வு பெற்றுச் செல்வதும் உவெஸ்லியில் வழமைதான்.


தொடர்ந்து கல்முனை தமிழ் பிரிவு கோட்டம் ஆரம்பிக்கப்பட்டு அப்பிரிவின் முதலாவது கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டேன். 14 பாடசாலைகளை உள்ளடக்கிய இக்கோட்டத்திலமைந்த இரு 1AB பாடசாலைகளில் உவெஸ்லி உயர்தர பாடசாலை யும் ஒன்றாகும். கோட்டத்தின் அனைத்துச் செயற்பாடுக ளிலும் உவெஸ்லி குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்தது. அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் ஊழியர்கள் சிறப்பான ஒத்துழைப்பு நல்கினர்.

புதிதாக அமைக்கப்பட்ட கோட்டம் தன் செயற்பாடுகளை சரிவரச் செய்து தனது இடத்தை சிறப்பாகத் தடம் பதித்துக் கொள்ளக் கடின உழைப்பு அவசியமாயிருந்தது. இதற்கு உவெஸ்லி பலமான உறுதியான ஒத்துழைப்பை, பங்களிப்பை , ஊக்கு விப்பைத் தந்தது என்பதனை இம்மலர் மூலம் வெளிப்படுத்தத் தருணம் கிடைத்ததையெண்ணி ஒழுங்கமைப்பாளருக்கும் எல்லாம் வல்ல இறைவ னுக்கும் நன்றி செலுத்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசுபதி சுப்பிரமணியத்தின் சுவடுகள்





**திரு. கா. சாந்தகுமார்**
ஆசிரிய ஆலோசகர்
கல்முனை கல்வி வலயம்

இணையில்லா கவி நாயகன் நிகரில்லா அதிபரை கல்முனை நகர் தந்தது. காசுபதி சின்னப்பிள்ளையின் இரண்டாவது புதல்வனாக 1929.04.25 அன்று அலங்கரித்தார் அன்னை மடியினை. அழிவில்லாச் கல்விச் செல்வத்தினை ஆரம்பித்தார். LEESE கல்லூரியில் (தற்போது உவெஸ்லி உயர்தர பாடசாலை) மட்டுநகர் மத்திய கல்லூரியிலும் ஆங்கில மொழியில் கல்வி கற்றார். இவர் கலைகளில் சிறந்தவராய், கண்ணியத்தில் உயர்ந்தவராய் இருந்ததால் ஆசிரிய கலாசாலையில் 1953.01.12இல் இணைந்து கொண்டார். கலாசாலையில் தன் திறமைகளை வளர்த்துக் கொண்டு நண்பர்களுடன் கருணை யுள்ளவராகவும் கடமை வீரனாகவும் தன்னை மாற்றினார். 1954.12.31 இல் பயிற்றப்பட்ட ஆசிரியராக இணைந்து கொண்டார். "தன் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற கூற்றிக்கிணங்க பின்வரும் பாடசாலைகளில் கடமையாற்றினார்.

இவர் முதலில் கெக்கல GTMS இலும் கந்தப்பொல MMTMS இலும் கடியன்லே GTMS இலும், மண்டூர் GTMS இலும் அக்கறைப்பற்று RKMMV இலும் கல்முனை RKMV இலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். அதன் பின் அவர் திறமை கண்ட நிர்வாகம் அவரை அதிபராக தம்பலகாமம் RKMGS இலும் கல்முனை MMTMS, பொத்துவில் MMTMS இலும் சொறிக்கல்முனை RCTMS இலும் பாண்டிருப்பு மகா வித்தியாலயத்திலும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையிலும் அதிபராக கடமையாற்றி ஓயாது பணி செய்து சேவையாற்றினார். 1981 – 1989 காலப்பகுதியில் என் கண்முன்னே நிழலாடுகின்ற அந்த மிகவும் எளிமையான தோற்றமும் ஒரு துவிச்சக்கர வண்டியில் பயணிக்கின்ற காலம் அவரின் ஒரு பொற்காலம்.

பத்தாம் வகுப்பில் தமிழ்ப் பாடத்தில் கம்பராமாயணம் இருந்தது. அதில் சுந்தரகாண்டப் பகுதியினை இவர் கற்பிக்கும் போது கம்பன் பயன்படுத்திய ஓசை நயங்களை வர்ணனை செய்து கருத்தூண்றி மெய்மறந்து கற்பிக்கின்ற பாணி தனிச்சிறப்பு வாய்ந்தது. இதற்கு மேலும் அழகூட்டுவதாக இருப்பது அவர் அணிந்து வரும் ஆடை வாலா மணியும் வேட்டியும் என்று கூறுவது மிகையாகாது.

இவர் அதிபராக உவெஸ்லி உயர்தர பாடசாலையில் பரீட்சைப் பெறுபேறுகள் ஓர் உயர்வான நிலையை இருந்ததனை அறியக்கூடியதாக உள்ளது. இதற்குச் சான்றாக பல மாணவர்கள் உயர் பெறு பேற்றினை பெற்றவர்கள் தற்பொழுது உயர் பதவிகளில் இருக்கின்றார்கள். அதற்கு ஒரு சான்றாக அமைகின்றது. உரிமைக்காக இவரின் குரல் ஓங்கி ஒலித்த மேடைகள் பல இருந்தன. இந்து இளைஞர் மன்றத் தலைவராகவும், சைவ மகாசபைத் தலைவராகவும் அம்பாறை மாவட்ட தமிழர் மகா சபை என்றும் பல சமூகப் பணிகளோடு தன்னை இணைத்து உரிமைக்காக குரல் கொடுத்தவர். இதனால் இவரை அம்பாறை மாவட்டத் தமிழ் மக்கள் மறந்துவிட மாட்டார்கள்.

கல்விப் பணியினை 34 வருட காலமாக சேவை செய்து 1989.04.24 இல் இருந்து ஓய்வு பெற்றார். ஆனால் பொதுப் பணிகளில், சமூகப் பணிகளில் நின்று ஓய்வு பெறவில்லை. அவரின் இறுதி மூச்சு வரைக்கும் அவரின் பணி தொடர்ந்தே இருந்தது. இவ்வாறான ஒரு அதிபரின் பெருமையை 136வது மலர் வெளியீட்டில் பிரசுரிப்பது சாலப்பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகலவனே....

பைந்தமிழ்க்குமரன் டேவிட்

நம்பிக்கையினொளி ஞாலமெங்கும் பரப்பி
அன்பிற்கும் பண்பிற்கும் அறிவிற்கும் ஊற்றாக
உன்னதமாய் உயர்கல்விக் கூடமதாய் இலங்கிடுதே
உவெஸ்லி எனும் உயர்நிலைப் பாடசாலை

வாயில்கள் பல கொண்ட பரந்துபட்ட வளாகம்
நாடி வருவோரை வாவென்றழைக்கும் வரவேற்பு மாண்பு
பாடியும் ஆடியும் பண்பான கலை பல புகட்டிடும்
பல்கலைக் கூடமாய் கல்விப் பசி தீர்க்கும் கலங்கரை தீபம்

இளையோரின் எழுச்சிதான் கல்வியதன் மாட்சி
இளைமையின் விரயமோ எதிர்கால வீழ்ச்சி
தத்துவத்தின் வழி நடந்து தனித்துவமாய் மிளிர்ந்துவரும்
தரணிபுகழ் பரப்பி நிற்கும் ஒளிவிளக்காம் பாடசாலை

பகட்டில்லை படாடோபமில்லை பயமில்லை
பண்பாட்டைப் பேணி பாரம்பரியம் காப்பாற்றி
நாளைய மண்ணின் மனிதர்களை வடித்தெடுக்கும்
வரலாற்றுச் சிற்பியே உவெஸ்லியெம் கல்வியகம்

நீண்ட வரலாறும் மிக நீண்ட சாதனையும்
பெற்றோரை மதித்து பெரியோரைப் போற்றி
விழுமிய வாழ்வில் மிளிர்ந்திடும் சால்பும்
சாற்றிடும் கலாநிலையம் உவெஸ்லியெம் கல்வியகம்


உயரமும் உள்ளமும் மிகுந்ததோர் அதிபர்
நிறைந்த ஞானமும் ஆற்றலும் கொண்டவர்
வளம் நிறைந்த வடிவேல் பிரபாகரன்
வழிகாட்டலில் மிளிர்ந்ததே உவெஸ்லி

அகவைகள் ஆயிரமாம் கடந்தே போகட்டும்
அவனியில் நிகரில்லை உவெஸ்லியின் புகழிற்கு
தலைமைகள் மாறலாம் தனித்துவங்கள் மாறாது
வாழ்த்துவோம் போற்றுவோம் உவெஸ்லியின் புகழினை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# கல்விச் சேவையில் உவெஸ்லியின் நீங்காத நினைவுகள்


வித்தியா விஜயஸ்ரீ
என்.நாகராஜா
(ஓய்வு நிலை அதிபர்)


மெதடிஸ்த திருச்சபையின் கல்விச் சேவைகளில் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை முக்கியமானது. ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பித்து தற்போது 136 வருட கல்விச் சேவையை நிறைவு செய்து பெருமதிப்புடன் முன்னேறிக் கொண்டிருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும். பல அதிபர்களின் சிறந்த நிர்வாகம், பல ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் திறமையும், அர்ப்பணிப்பும் பல துறைகளில் மாணவர்கள் உயர் கல்வி பெற்று, உயர் பதவிகளைப் பெறக் காரணங்களாக அமைந்து இப்பாடசாலைக்கு நற்பெயரைப் பெற்றுக் கொடுத்துள்ளன.

இப்பாடசாலையில் 12 வருட காலத்தில் சிறந்த அதிபர்களான யோகம் வேலுப்பிள்ளை, சுப்பிரமணியம், மகாலிங்கம் SLEAS, வெங்கடாசலம் SLEAS, ஆகிய அதிபர்களோடு சேவையாற்றக் கூடிய வாய்ப்புகள் கிடைத்தன. இவர்களிடம் கற்றுக் கொண்ட கல்வி நிர்வாக, கற்பித்தல் முறை அனுபவங்கள் எனது ஆசிரிய, அதிபர் தொழில் முன்னேற்றங்களுக்கு பெரிதும் உதவியாக இருந்தன.

பாத்திமாக் கல்லூரியில் இருந்து 1981ல் பயிற்றப்பட்ட ஆங்கிலம், உடற்கல்வி ஆசிரியராக இப்பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தவுடன் பட்டதாரி ஆசிரிய நியமனம் கிடைத்தது. முதலில் இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களை க.பொ.த உயர்தர வகுப்புக்களில் கற்பித்து பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற உதவிய பசுமையான நினைவுகளை மறக்க முடியாது.

இப்பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் காணப்பட்ட நல்லுறவுகள், அர்ப்பணிப்புக்கள் யாவும் கல்வி முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவின. அமரர் திரு யோகம் வேலுப்பிள்ளை அதிபரின் நிர்வாகம், ஒழுக்கக்கட்டுப்பாடு, நேர முகாமைத்துவம் மற்றும் கல்வித் திணைக்கள ஆதரவினால் இப்பாடசாலை பெருவளர்ச்சி பெற்றது. திரு. எஸ். மகாலிங்கம் அதிபர் காலத்தில் ஆசிரியர்கள் மத்தியில் தமது கல்வி அனுபவங்களையும் கல்வி மேம்பாட்டிற்கான வழிமுறைகளையும் தெளிவாக விளக்கிக் கூறுவார். இவர் கூறிய அறிவுரைகள், வழங்கிய நூல்கள் எனது அதிபர் போட்டிப் பரீட்சையில் முதலாம்தர அதிபராக அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைய உதவியது. பாடசாலை வளர்ச்சியிலும் இவருடைய பங்கு முக்கியமானது.


இப்பாடசாலை தொடர்ச்சியாக இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் முன்னேற்றம் பெறுவதற்கு இங்குள்ள பௌதிக வளங்களும் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சேவையும் காரணங் களாகும். தேசிய மட்டத்திற்கு செல்லுமளவுக்கு பாடசாலை விளையாட்டுத் துறையில் முன்னேறியது.

தற்போதைய அதிபர் திரு.வி.பிரபாகரன் சிறந்த ஆளுமையும், நிர்வாகத் திறனும் அனுபவமும் கொண்டவர். இப்பாடசாலை விசேட நிகழ்ச்சிகள், விழாக்களின் போது முன்பு கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்கும் கலாசாரத்தை ஏற்படுத்தியவர். இப்பாடசாலையின் அதிபர்களில் இவர் முதன்மை இடம் பெற்றுள்ளார்.

இப்பாடசாலையில் எனது சேவைக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவும் இன்று பெரு மகிழ்ச்சியைத் தரும் நீங்காத நினைவுகளான உள்ளன. இதனை எனது வாழ்வின் ஒரு பொற்காலமாக மதிக்கிறேன். இப்பாடசாலை மேலும் வளர்ச்சி பெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதுயுகம் படைப்போம்

கவிஞர். மு.சடாட்சரன்

பல்லாயிரம் பச்சைக் குருத்துக்கள்
பாரினில் உயர்ந்து நிலை பெற்றிட
கல்விக் கண்களைத் திறந்து வளர்த்து வரும்
கல்முனை உவெஸ்லி பாடசாலை வாழ்க!

ஆல மரங்களாய் அதிபர்கள்,
அதன் பெரிய விழுதுகளாய் ஆசிரியர்கள்!
ஒவ்வொரு கிளைகளையும் தாங்கி நின்று
உயிர் நிழல் தேனை வழங்கி
ஊர்கள் செழிக்கச் செய்தார்கள்
உத்தம ஆசிரியர்களின் சேவையால்
உயர்கல்வி எங்கள் ஊரெல்லாம் ஓங்கிற்று!


அன்பு தழைக்க அறம் வளர்த்து
அல்லல்கள் யாவையும் அகன்று
அமைதி மலர்ந்திடும்!
அந்த வழியில் அனைவரும் முயல்வோம்!
இந்த உலகிலே சொர்க்கத்தை அமைப்போம்!

அயராது உழைத்த அதிபர்கள் வரிசையில்
இன்றைய அதிபரும் ஏற்றம்பெற உழைக்கிறார்!
எங்கள் இளைஞர் யுவதிகளும் இடைவிடாது
இரவு பகலாய்க் கல்விச் செல்வம் சேர்க்கிறார்!

கண்ணும் கருத்துமாய் உயர்கல்வி பெற்றிட
பெற்றார் உறவினர் பேரறிவு ஆசிரியர்கள்
தங்கள் கடமைகளை சிறப்பாகச் செய்து
சாதனைகளை நிலைநாட்டி வாழ்ந்து,
புதுயுகம் படைப்போம்!
புத்தெழுச்சி பெறுவோம்!
கலத்தில் அழியா இடம்
பெறச்செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.இராசரெத்தினம்
(ஓய்வு நிலை அதிபர்)

# உவெஸ்லி உயர்தர பாடசாலை

## எனது நினைவில்

ஜீபிஎஸ் (G.B.S) எனும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை பற்றியும் வீஸ் ஆண்கள் மெதடிஸ்த பாடசாலை பற்றியும் எனது இளமைக்காலத்தில் பலர் கதைப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். 1953இல் இவ்விரு பாடசாலைக்கும் ஒன்றிணைக்கப்பட்டு உவெஸ்லி உயர்தர பாடசாலை உருவானது இப்பாடசாலையில் மிக அருகாமையில் அமைந்திருந்த கத்தோலிக்க பாடசாலையான பாத்திமாக் கல்லூரியில் நான் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் இவ்விரு பாடசாலைகளும் கல்வியிலும் விளையாட்டுப் போட்டியிலும் மிகுந்த போட்டா போட்டியுடன் இயங்கி வந்தன.

அக்காலத்தில் இவ்விரு பாடசாலைகளுக்கும் இடையில் நடைபெற்ற ஓர் உதைப்பந்தாட்டப் போட்டி இறுதியில் கைகலப்பாக மாறி நீதி மன்றம் வரை சென்ற வரலாறும் உண்டு. இதன் காரணமாக இவ்விரு பாடசாலைகளும் எந்தவொரு விளையாட்டுப் போட்டியிலும் கலந்து கொள்ளக் கூடாதென நீதிமன்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இது நடைபெற்று 13 வருடங்களின் பின்னர் வண.சகோதரர் எஸ் ஏ.ஐ.மத்யூ (விளையாட்டு ஆசிரியர் பாத்திமாக் கல்லூரி) , உவெஸ்லியின் புகழ் பூத்த அதிபர் திரு.யோகம் வேலுப்பிள்ளை, கல்முனை மாவட்ட வைத்தியசாலையின் அதிகாரி டாக்டர் அருளானந்தம், கல்முனையின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் M.C. அகமட் ஆகியோரின் பெருமுயற்சியினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெற்ற ஒரு உதைப்பந்தாட்டப் போட்டியும் அங்கு பார்வையாளர்களாக வந்திருந்த இரு பாடசாலைகளையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான பழைய மாணவர்களின் அளவு கடந்த உற்சாக மிகுதியின் காரணமாக ஒரு குழப்பகரமான நிலையிலேயே முடிவுற்றது.

அதிபர் திரு.யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் தனது பாடசாலைக்கு சிறந்த ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதில் என்றும் கண்ணும் கருத்துமாக இருந்தார். வெளியிடங்களில் இருந்து கல்முனைக்கு மாற்றலாகி வரும் சிறந்த ஆசிரியர்கள் இந்த அதிபரின் கழுகுக் கண்பார்வையில் இருந்து தப்புவது கடினம். இதற்கு அரசியல்வாதிகளுடனும், கல்விக் காரியாலயத்துடனும் அவர் கொண்டிருந்த சுமுகமான உறவு ஒரு காரணமாகவிருக்கலாம். 1975ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு நான் நிந்தவூர் அல்-அஷ்ரக் மகாவித்தியாலயத் திலிருந்து கல்முனை பாத்திமாக் கல்லூரிக்கு மாற்றலாகி வரவிருந்த வேளையில் என்னையும் தனது பாடசாலைக்கு இணைத்து விட்டார். இருப்பினும் நான் அதிலிருந்து விடுபட்டு மீண்டும் நான் கல்வி கற்ற பாடசாலைக்கே சென்றுவிட்டேன்.

இவ்வாறு நான் சென்ற பின்னரும் அவர் என்னை வெளியில் காணும் போதெல்லாம் என்னுடன் சுமுகமான உறவைப் பேணத் தவறியதில்லை. இது அவரின் தனிச்சிறப்பு. இச்சம்பவம் நடைபெற்று 16 வருடங்களின் பின்பு நான் அதிபர் தரப்பரீட்சையில் தேறியதன் காரணமாக கார்மேல் பாத்திமாக் கல்லூ ரியில் இருந்து இடமாற்றலாகிச் செல்ல வேண்டியேற் பட்டது. அப்பொழுது உவெஸ்லி உயர்தர பாடசாலையின் அதிபராக இருந்த கல்விமான் திரு பா.வெங்கடாசலம் அவர்கள் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி எனக்குப் பாண்டிருப்பு மகாவித்தியாலயத்திற்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை ரத்துச் செய்து 1991 ஜனவரி பதினைந் தாம் திகதி முதல் தனது பாடசாலையில் இணைத்துக் கொண்டார். அன்று முதல் 1997 ஆம் ஆண்டு வரை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் ஓர் உதவி அதிபராக நான் கடமையாற்றிய காலம் என்றும் என்னால் மறக்க முடியாததாகும். இங்கு நான் பெற்ற பல பயனுள்ள அனுபவங்கள் பின்னர் பாண்டிருப்பு மகாவித்தியாலயத் திற்குப் பொறுப்பதிபராகச் சென்ற வேளையில் மிக உறுதுணையாக அமைந்தன.

உள்நாட்டு யுத்த நிலை காரணமாக உவெஸ்லி உயர்தர பாடசாலையின் கல்வி நிலையில் ஒரு தொய்வு காணப்பட்ட காலத்தில்தான் நான் இப்பாடசாலையில் இணைந்து கொண்டேன். பாடசாலையை இந்நிலையில் இருந்து மீட்டெடுப்பதற்காக அதிபருடன் ஆசிரியர் குழாமும் பாடுபட்டுக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது. இவர்களுடன் நான் என்னையும் அர்ப்பணித்துச் செயற்பட்டுக் கொண்டிருந்தேன். அந்த வகையில் இங்கிருந்த விஞ்ஞான ஆசிரியர்கள் மத்தியில் விஞ்ஞான ஆய்வுகூடப் பாவனையையும், செயல்முறைக் கற்பித்தலையும் மேம்படுத்த உதவியுள்ளேன். மாணவர்களின் ஒழுக்க மேம்பாடு, விஞ்ஞான பாடவிதான அமுலாக்கம், காலைக் கூட்டங்களில் மாணவர்களுக்கான அறிவுரைகள், மேம்படுத்தப்பட்ட பரீட்சை ஒழுங்குகள், வகுப்பறை கற்பித்தலை மேற்பார்வை செய்தல், பகுதித் தலைவர்கள் ஆசிரியர் களுடனான கலந்துரையாடல்கள், பாடசாலை சாரணி யத்தை வளர்த்தல், ஆசிரியர் நலன்புரிச் செயற்பாடுகள் போன்றவற்றில் எனது சிறப்பான வகிபாகமும் இருந்தது. நான் தரம் 11 ற்கான பகுதித் தலைவராக இருந்தேன்.

இவ்வாறு கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் 1993ஆம் ஆண்டு தற்போதைய அதிபரான திரு.V.பிரபாகரன் அவர்களும் இப்பாடசாலைக்கு மாற்றலாகி ஒரு உதவி அதிபராக கடமையேற்றுக் கொண்டார். இவரை தரம் 10ற்கான பகுதித்தலைவராக நியமிப்பதற்காக நான் அதிபர் அவர்களுக்கு சிபார்சு செய்தேன். அவ்வாறு நியமிக்கப்பட்ட அவர் சிறப்பாக செயலாற்றினார். இப்பாடசாலையின் மீட்பாளராக இவர் பின்னர் ஒரு காலத்தில் மாற்றமடைவார் என்பதை அன்றே பாடசாலை தொடர்பான அவரது செயற்பாடுகள் மூலமாக அறியக் கூடியதாக இருந்தது. அது தற்போது நிருபணமாகியுள்ளது.

நான் இப்பாடசாலையில் கடமையாற்றிக் கொண் டிருந்த காலத்தில் சாரணியத்தில் ஊக்கமிக்க, அனுபவம் வாய்ந்த பலர் காணப்பட்டனர். அவர்களால் உருவாக்கப் பட்ட இப்பாடசாலையின் சாரணியர் சங்கத்தில் நிதிக்காப்பாளராகவும் சாரணர் குழுத் தலைவராகவும் செயற்பட்டேன். அப்பொழுது (1991ஆம் ஆண்டு) பாடசாலை வரலாற்றில் முதற்தடவையாக 150 சாரணர்களைக் கொண்ட ஒரு சாரணர் படை உருவாக்கப்பட்டமை பலரது பாராட்டுகளையும் பெற்றது. 30-11-1991 முதல் 01-12-1991 வரையிலான நீண்டகால இடைவெளியின் பின்னர் உவெஸ்லி உயர்தர பாடசாலை சாரணர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இரு பாசறைகளும், சின்னஞ்சூட்டு விழாவும் அதிபர் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மிக விமரிசையாக நடைபெற்றன . தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் பல சாரணியப் பயிற்சிப் பாடசாலைகள், பேடன் பவல் விழா, சிரமதானப் பணிகள், வேறு பாடசாலை பயிற்சிப் பாசறைகளில் பங்கு பற்றுதல், முதலுதவிப் பயிற்சிகள், போன்றன சிறப்பாக நடைபெற்று வந்தன. இதன் பெறுபேறாக 1995ஆம் ஆண்டு திரு.P.இராஜேந்திரன், திரு.கே.சபாநாதன் ஆகிய எனது சாரணிய மாணவர்கள் இருவர் ஜனாதிபதி சாரணர்களாக சின்னஞ் சூட்டப் பட்டனர். இச்சின்னஞ் சூட்டு விழாவில் இப்பாடசாலை யின் பழைய மாணவரும் இப் பாடசாலையின் சாரணர் குழுத் தலைவராக இருந்து சிறந்த பணியாற்றியவருமான மறைந்த கௌரவ அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஜனாதிபதி சாரணிய சின்னத்தைச் சூட்டி வைத்தார் . உவெஸ்லி உயர்தர பாடசாலையின் சாரணிய வரலாற்றுப் பயணத்தில் இந் நிகழ்வு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது.

1991 ஜூலை மாதம் 17ம் திகதி இப்பாடசாலை யின் நன்மதிப்பைப் பெற்றிருந்த முன்னாள் ஆசிரியை திருமதி சியாமி யோசப் அவர்கள் ஹற்றனில் காலமான சோகச் செய்தி கிடைத்தது. அடுத்த நாள் அதிபர் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.வெங்கடாசலம் அவர்களுடன் பாடசாலையின் பத்தொன்பது ஆசிரியர்கள் அன்னாரின் நல்லடக்கத்தில் கலந்து கொள்வதற்காக ஹற்றன் சென்றனர். அன்று அதிபர் அவர்கள் பாடசாலையை என்னிடம் ஒப்படைத்து விட்டே சென்றிருந்தார். ஒரு சில நாட்கள் இப்பாடசாலையின் பொறுப்பதிபராக செயற்பட்டதை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன். இப்பாடசாலையில் கடமையாற்றி சிறந்த அனுபவங்களைப் பெற்றுக் கொண்ட பல ஆசிரியர்கள், உப அதிபர்கள் வேறு பாடசாலைக்கு பொறுப்பதிபர்களாகவும், கல்விக் காரியாலயங்களிலும் கல்விக் கல்லூரிகளிலும் உயர் பதவி வகிப்பவர்களாகவும் சிறப்பாகக் கடமை புரிவதற்கு இப் பாடசாலை களம் அமைத்துக் கொடுத்தது.

நான் இப்பாடசாலையில் இருந்து மாற்றலாகி பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தின் பொறுப்பதிபராக சென்றதன் பின்னர் திரு.பா.வெங்கடாசலம் அவர்களுக்குப் பின்னர் திரு பி.முருகையா அதிபர் அவர்களும் இப்பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளார். அவரது அகால மரணத்தைத் தொடர்ந்து திரு வ.பிரபாகரன் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்ற நாள் முதல் பாடசாலையானது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி பெற்று தற்போது ஒரு தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தும் நிலையை எய்தியுள்ளது .


பாடசாலையின் கற்றல், கற்பித்தல், புறக் கிருத்தியச் செயற்பாடுகள், ஆசிரியர், மாணவர் நலன் ஓம்பும் விடயங்கள், மாற்றுத் திறனாளிகளை வளப் படுத்தும் செயற்பாடுகள், பாடசாலை அபிவிருத்தியில் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றார் ஆகியோரின் பங்குபற்றுதல் கலை கலாசார நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள, அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஏனைய பாடசாலை அதிபர்கள் போன்றோரை கௌரவித்தல், சமய சமூக நல்லிணக்கம், பல்வேறு சமய விழாக்கள் போன்ற நல்ல பல செயற்பாடுகளுடன் கூடிய முன்மாதிரியான பாடசாலையாக இன்று இப்பாடசாலை பரிணமித்திருப் பதற்கு அதிபர் திரு வ.பிரபாகரன் அவர்களின் வழி நடத்தலே காரணம் என்பதற்கு மாற்று கருத்து இல்லை.

136வது ஆண்டு நிறைவு விழாவை உவெஸ்லி உயர்தர பாடசாலை கொண்டாடும் இவ்வேளையில் இப்பாடசாலை எதிர்காலத்தில் மேலும் அதிஉன்னத உயர்தர நிலையை அடைய வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கோயில் பாகங்கை



சஞ்சீவி சிவகுமார்



மாலைச் சூரியன் மறைந்த தடயங்கள் வானில் ஆங்காங்கு அப்பியிருந்தன. பறவைகள் அணிவகுத்துச் செல்லும் போர்வீரர்கள் போல கீச்சிட்டவாறு தமது அடைதல் புதர்களை நோக்கி பறந்து கொண்டிருந்தன. பட்டிப்பளையாறு அதே சலனமற்ற அமைதியுடன் சீராக ஓடிக் கொண்டிருந்தது. மிதந்து வரும் ஆற்று வாழைக் காடுகள் ஆற்றின் கரையை அணைத்து நிறைத்திருக்க நீர்ப்பரப்பு ஆங்காங்கே வெள்ளை விரிப்பு போல பளீர் ஒளியுடன் தோன்றியது. சில்லென்ற காற்று உடலை தழுவி இதமூட்டிச் சென்றது. இளங்காற்றுத்தான் ஆனாலும் திறந்த வயல் பெரு வெளி என்பதால் சூறைக் காற்றுப் போல ஆடைகளையும் கேசத்தையும் கலைத்துக் கொண்டிருந்தது. நீலாவணனின் வேம்புக்குமரி கவிதையைப் படித்த யாராவது மெல்லிய தென்றல் காற்றுக்கு வெறி எப்படி வரும் என்று வாதிடுவார்களாயின் அவர்கள் இந்த ஆற்றங்கரைக்கு வந்தால் அதன் உண்மையைக் கண்டுணர்வார்கள். ஒருவகை எதிர்த் தாக்குதல் போல் இருந்தாலும் இக்காற்று இதத்தைத் தந்தது.

சில நாட்களாக மாலை பட்டதும் பட்டிப்பளை ஆற்றின் மறுகரையில் யானைப் பட்டி நடமாடுவதும் இளைஞர்கள் சீன வெடி கொளுத்தி ஊர்ப்பக்கம் வராமல் கலைப்பதும் கதையாகப் பரவியிருந்தது. டப். டப். என்று சத்தம் கேட்டதும் பிள்ளைகள் என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க விடவில்லை. யானை பார்க்க போக வேண்டும் எனத் தொந்தரவுபடுத்தினார்கள். அவர்களின் அரிகண்டம் தாங்க முடியாமல் மூன்று பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு யானை காட்டுவதற்காக ஆற்றோரம் கட்டு நோக்கி வந்திருந்தேன்.

எதிர்ப்பட்டவர்கள் பலர் என்னைப் பார்த்து புன்முறுவலுடன் கடந்து செல்கின்றனர். தெரிந்த முகம் என்பதால் வந்த பொதுவான அறிமுகப் புன்னகையா அல்லது நாலு பேர் பயணிக்கும் வாகனமா இது என எனது மோட்டார் சைக்கிளை நோக்கி உதிர்த்ததா என்று புரியவில்லை. பதிலுக்கு நானும் புன்னகைக்கிறேன். போன போகம் அறுவடை செய்த வயல் நிலத்தில் வரம்புகள் அழிவுற ஒற்றையடிப் பாதையாக இருந்த மணல் வார்த்த பகுதியிலும் சிறு வரம்பிலுமாக மாறி மாறி ஏறி இறங்கிய எனது மோட்டார் சைக்கிள் இளம் கன்றுக் குட்டி போல துள்ளி துள்ளி ஓடியது.

எங்களுக்கு முன்னமே யானை பார்ப்பதற்காக சிறு கூட்டம் நின்றிருந்தது. அவர்களின் நடுநாயகமாக நின்று செல்வன் யானைக்கூட்டம் பற்றி நேரடி வருணனை ஒன்றை நடத்திக் கொண்டிருந்தான். தூரத்தில் மட்டுமட்டாக யானைப்பட்டி ஒன்று தெரிந்தது. சற்று உற்றுப் பார்த்தால்தான் அதன் அசைவுகளைக் காணமுடிந்தது. ஆனாலும் செல்வன் யானை வந்து போகும் காலக் கோடுகள் பற்றியும், முன்னுக்கு நிற்பது தாய் யானை, பின்னால் தந்தை யானை எனவும் அதன் பின் நிற்பது மகள் யானை எனவும் அதன் முழுக் குடும்ப விவரங்களையும் தந்து கொண்டிருந்தான். அந்த யானைக் குடும்பத்துடன் பிறந்து வளர்ந்து ஒன்றாய் இருந்து உறவு கொண்டாடிய ஒருவனைப் போல அவனது வியாக்கியானம் அமைந்திருந்தது.

செல்வனது கதையளப்புகளை கேட்பது எனது பிள்ளைகளுக்கு பொழுது போக்காக இருந்திருக்கக்கூடும். அவர்களது முகத்தில் பூரிப்பும் உற்சாகமும் தெரிந்தது. நான் சிறுவனாக இருக்கும் போது சந்தணம் ஆச்சி இப்படிப் பல கதைகள் சொல்லுவா. பேய்க் கதை, நீதிக் கதை, அனுபவக்கதை என நீளும் அவரது கதைகளைக் கேட்டபடியே அம்மாவின் மடியில் தூங்கிப் போவேன். ஒரே கதைகளைத்தான் திரும்பத் திரும்பச் சொன்னாலும், ஒவ்வொரு தடவை கேட்கும் போதும் சந்தணம் ஆச்சியின் கதைகள் புதுக்கதை போல் சுவைப்படும். உணர்ச்சி குன்றாமல் கண்களையும் கைகளையும் லாவகமாக அசைத்து அவர் கதை சொல்லும் பாணி அமைந்திருக்கும்.

இப்போதெல்லாம் எங்கள் வீடுகளில் பாட்டிமார் கதை சொல்வதில்லை. பேரர்களும் கதை கேட்பது எங்கள் வீட்டில் நடப்பது இல்லை. ஒரே சீரியலை நாளுக்கு இரண்டு வேளை சாப்பிடும் குளிசை போல காலை, மாலை இரண்டு வேளையும் பார்த்துவிட்டு அதையே நாள் முழுதும் பகிர்ந்து கொள்வதில் பாட்டிமார் பிசியாகி விட்டனர். சீரியல்களால் பாட்டிமம் சீரழிந்து போய்விட்டது". எனக்குள் குமைந்து கொண்டிருந்த எனது மனக்குமுறலை செல்வனின் குரல் தான் சுயப்படுத்தியது.

"இங்க பாருங்க அண்ணன், இவனுகள் யானை இருக்கிற காடுகளையெல்லாம் அழிச்சு அதையும் இதையும் கட்டுற . இப்படி அதுகளிட இடங்களை நாம பிடிச்சால் அதுகள் எங்க போகும். அதுதான் ஊருக்க வருகுதுகள்". தனக்கே தர்க்க ரீதியாக விடயங்களை பேசத் தெரியும் என்பது போன்ற பெருமிதத்துடன் கூறி முடித்தான்

எனது பதிலை எதிர்பார்தவன் போல் கண்களையும் முகத்தையும் உற்றுப் பார்த்தான்.

சொல்லிக் கொண்டே இருப்பதில் அவனுக்கு இருந்த ஆர்வம் எனக்கு வியப்பூட்டியது. அவனது ஆர்வம் குறையாமல் இருப்பதை கண்டு, சில காலமாய் என்னுள் கேள்வியாயிருந்த ஒரு விடயத்துக்கு அவனை திசை திருப்பினேன்.

"இப்ப இந்த ஆற்றில் யாரும் குளிக்கிற இல்லையா செல்வன்." என்றேன். "இல்ல அண்ணன் இதுல இப்ப முதலை கிடக்குது ...அடிக்கடி கரைக்கு வந்து காற்று குடிச்சிட்டு போகுது. அதனால இப்ப இதில இறங்கப் பயம். யாரும் குளிப்பதில்லை " ஒரேயடியாக மறுத்துக் கூறி விட்டான்.

"அந்த காலத்தில் நாம குளிப்பதற்கு இந்த ஆற்றை நம்பித்தானே இருந்தோம். அதுவும் ஏப்ரல் மே தொடங்கி பருவ மழை பிடிக்கும் வரையும் காலையிலிருந்து பின்னேரம் வரை தீர்த்தக் கரை போல் இருக்கும் இந்த கோயில் பாகங்கை".

பாகங்கை என்றதும் மூத்த மகன் கீர்த்தி "பாகங்கை" என்றால் என்ன அப்பா என்றான். அவனுக்கு இதுதான் பாகங்கை என்று தொட்டு காட்டிவிட வேண்டும் எனும் ஆர்வம்.

எனக்குள் ஒரு நெடுமூச்சு ஓடி அமிழ்ந்தது. யானைப் பட்டி பார்ப்பதைவிட நான் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு வர காரணமாய் இருந்தது பட்டிப்பளையாற்றில் ஒரு தடவை ஆசை தீரக் கால் நனைக்க வேண்டும் கோயில் பாகங்கையில் கால்களை சலசல என அடித்துக் களிக்க வேண்டும் என எனக்குள் இருந்த ஆசை தான். ஒருகாலத்தில் நாள் குறையாமல் நான் குளித்து மகிழ்ந்த இந்த ஆறு. இப்போ முதலையைக் காரணங்காட்டி செல்வன் என் தீராத ஆசையை அணை கட்டி விட்டான்.

இப்போதெல்லாம் இந்த ஆற்றுக்கும் எனக்குமான உறவு சற்று தூரமாகிப் போனதாகவே உணர்கிறேன். அடிக்கடி போய் வந்து உறவு கொண்டாடாத சொந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரர்கள் போல அந்த உறவு பாரிய இடைவெளியுடன் எனக்குள் இருந்து கொண்டிருந்தது.

இளமைப் பருவத்தில் வண்ண வெட்டுவான் கட்டில் இருந்தது கோயில் பாகங்கை முடியும் வரையான ஆற்றின் கட்டுகளில் ஓடித்திரிந்து, வழுக்கி விழுந்து, முள்ளிக்காய் பறித்து, சட்டையில் பட்ட சேற்றுக் கறைக் காக அம்மாவிடம் ஏச்சு வாங்கிய காலங்கள் நினைவுகளில் வந்து போயின. அத்தகைய இளமைக் காலத்தை நம் பிள்ளைகளுக்குக் கொடுக்காமல் பறித்துவிட்டோமோ என்ற குற்ற உணர்ச்சி மனதில் ஓடியது.

மகன் எனது புயத்தை தொட்டு உசுப்பி 'அப்பா' என்றான். அவனது பாகங்கைக் கேள்விக்கு நான் இன்னும் பதில் சொல்லவில்லை என்ற ஆதங்கம் அவனுக்கு.

அவனது கேள்விக்கு செல்வனே பதில் சொன்னான். "தம்பி ஆற்றுப் பக்கமாய் உள்ள வயல் தலைமாடு வயல். தூரமாய் ஊர்ப் பக்கம் உள்ள வயல் கால்மாடு. கால்மாட்டு வயல்களுக்கு ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டு செல்கின்ற பெரிய வாய்க்கால் தான் பாகங்கை. நம்மட ஊர் வயல்களுக்கு மூன்று பாகங்கைகள் இருக்கு." பழைய நினைவுகளால் செல்வனுக்கு உற்சாகம் மேலிட்டது.

"அந்தக் காலத்துல நான் அதிகமாக பாலத்து பாகங்கை கட்டுக்கு தான் குளிக்க வருவன் அண்ணன். என்னோட சேர்ந்து தேவன் சகாக்களும் வருவானுகள். ஒரே குஷிதான். அதில, ஒரு மரப்பாலம் இருந்தது. நெடு நாட்களுக்கு முன்னர் போடப்பட்டிருக்க வேண்டும். இடையில சிதைந்து போய்விட்டது. அடிக்கடி அந்த மரப் பாலத்தை யார் நீந்தி முதலில் தொட்டு வாற எண்டு போட்டி வைப்போம். அதிகமா தேவன் தான் போட்டியில் வெல்வான்." செல்வனின் கண்கள் உற்சாகத்தில் பளபளத்தன.

"நீங்க எப்பவாவது இருந்துட்டு ஒருக்கா பாலத்து பாகங்கைக்கு வருவீங்க. எங்களைப்போல அதிகம் தெறிக்க மாட்டீங்க. உடனே குளிச்சிட்டு போயிடுவீங்க."

"ஓம் செல்வன், நான் அதிகமா இந்த கோயில் பாகங்கை கட்டில் தான் குளிக்கிற. கோயில் ஒழுங்கை யிலிருந்து கோயில் பாகங்கையில் இறங்கினால் உடனே குளிக்கிற கட்டு வந்துவிடும் ஏனோ எனக்கு இந்த கோயில் பாகங்கை பழக்கப்பட்டது போல்.

நாங்கள் பழங்கதை பேசி கொண்டிருப்பது எனது பிள்ளைகளுக்கு ஏதோ புரியாத பாஷையில் பேசுவது போல் இருந்திருக்க வேண்டும். கீர்த்தி வரம்புக் கட்டுகளில் தாவி ஒளிக்கும் தவளைகளுடன் தனகிக் கொண்டிருந்தான். மற்றவர்கள் எங்கள் இருவரையும் வினோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"90களில் கொழக் கொட்டியா வரக்குள்ள இந்த ஆறு தான் நம்மள காப்பாத்திட்டு. நான் இதுக்குள்ள நாலு அஞ்சு நாள் இருந்து பார்த்துவிட்டுத் தான் படுவான் கரைக்குளால மட்டக்களப்புக்கு ஓடின" அந்த பயங்கர நாட்கள் மனதில் வந்து நின்றன.

"ஆம் அண்ணன் பம்பர் குண்டு போடக்குள்ள கூட இந்த நாணல் காட்டுக்குள்ள தான் நான் இருந்த. பம்பர் தலைக்கு மேலே சுற்றக்குள்ள ஆற்று வாழையை அள்ளி வைச்சிட்டு தண்ணிக்குள்ள மூழ்கி மூச்சி விடாமல் இருப்பம்" செல்வம் ஒரு சாகசக் கதை போல கண்களை விரித்து கொண்டு கூறினான்.

நிஷா பொறுமை இழந்தவளாக இந்த ஆற்றிலையா அப்பா நீங்க குளிச்ச" என்றாள்.

அந்தக் காலத்துல இந்த மாதிரி பைப்லைன் தண்ணி இருக்கல்ல. ஏப்ரல் மாதத்திலிருந்து ஓகஸ்ட் மாதத்துக்குப் பிறகு மழை ஆரம்பிக்கும் வரைக்கும் இந்த ஆறு தான் எங்களது குளியல் இடம்". செல்வன் பல் நிறைந்த வாயுடன் சொன்னான்.

"அப்ப முதலை இதுக்குள்ள இல்லையா அங்கிள்" என்றாள் நிஷா.

முதலை இருந்திருக்கும் ஆனால் அதனை எதிர்த்து நின்று இந்த ஆற்றை பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அதனால் முதலையை பயம் காட்டித் துரத்திக்கொண்டு நாங்களும் குளித்தோம். இப்ப எதிர்த்து நிற்க தேவை இல்லை. அதனால முதலை என்று கூறிவிட்டு நாம் வெளியில ஒதுங்கி நிற்கிறோம்." நிஷாவின் இயல்பான கேள்விக்கு இது பதிலாக இல்லாவிட்டாலும் ஆற்றின் மீதான எனது பச்சாத்தாபம் என்னிடத்தில் இப்படி ஒரு பதிலாக வெளிவந்தது.

பேய் ஆலைக்கு முன்னால் இருந்த மடு வரவைக் குள்ள பேணிக் கரப்பால் மீன்பிடித்த அனுபவங்களும் செத்துப்போன அண்ணன் அசோகனின் நினைவுகளும் கூடவே வந்து போயின. அப்படியே மடு வரவைக்குப் போய் வர வேண்டும் என்று ஆசையாய் இருந்தது.

"செல்வன் இதுகள இப்படியே சுற்றிக் காட்டிட்டு நான் வெளிக்கிடப் போறன்"

கோயிலடி மதிலுக்கு நேராக நடக்கத் தொடங்கினேன் கூடவே வந்த பிள்ளைகள் மூவரையும் கூட்டிக்கொண்டு. பேணிக்கரப்பு ஒன்ற எடுத்துக் கொண்டு மடு வரவைக்குள் இறங்கி மீன் பிடிக்க மனதில் ஆசை. ஆனால் பார்க்கும் யாரும் எனக்குத் தட்டித்து என்று நினைக்கக் கூடும்.

"சின்னப் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு என்ன தம்பி வட்டைக்குள்ள மாலை பட்ட நேரத்தில் திரிகிறாய். ஏதும் பார்வையாக்கிடப் போகுது". கோயிலடியில் நின்ற மாரிமுத்து ஆன்ரி முகம் சுழித்துக் கொண்டார். இவற்றில் எனக்கு தனிப்பட நம்பிக்கை இல்லாவிட்டாலும் "பிள்ளைகளுக்கு" என்றதும் தவறாக ஏதும் நடக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோமோ என்ற தவிப்பு லேசாக வந்தது.

"இல்ல ஆன்ரி, இதுகள் யானை பார்க்க பார்க்கப் போறம் எண்டதுகள்.. அதுதான் கூட்டி வந்த நான் இனி வீட்ட போக போறேன்" என்று சமாளித்துக் கொண்டு முன்னேறினேன்.

மடுவரவை மிகச் சிறியதாகி குட்டியாக போய் ஒட்டிப் போயிருந்தது. நீண்ட நாள் சாப்பிடாத நோயாளி போல.

மடு வரவை வடிச்சல் நீர் தேங்கி நிற்பதற்காக காணப்படுவது. ஆனால் வயல் காரர் அதில் ஒரு பகுதியை மண் போட்டு நிரப்பி இருந்தார். நிலத்துக்கு கிராக்கி கூடிக் கொண்டு போவதால் இந்த மடுவரவையும் தூறையாடப்பட்டதாகவே உணரமுடிந்தது. மடு வரவையை அண்டியிருந்த சேற்று நிலப்பகுதியும் குறுகிப் போய்க் காணப்பட்டது.

அந்த சேற்று நிலப்பகுதியில் முள்ளிக்காய் கொடிகளை எங்கு தேடியும் கண்டு கொள்ள முடிய வில்லை. நான் சிறுவனாக இருந்தபோது முள்ளிக்காய் அவியல் உண்ட கதைகளை பிள்ளைகளுக்கு சொல்லி யிருக்கிறேன். பாக்கு வெட்டியால் முள்ளிக்காயை இரண்டாக வெட்டி அதன் உள்ளீட்டை வெளியே எடுத்து உண்பதில் எப்போதும் ஒரு ஆனந்தம் இருக்கும். இப்போதைக்கு முள்ளிக்காய் கொடியையாவது பிள்ளை களுக்கு காட்டிவிட வேண்டும் என்ற எனது விருப்பம் நிறைவேறவில்லை. ஆயினும் கொட்டிக்கிழங்கு செடிகள் சேற்றில் ஆங்காங்கே காணப்பட்டன.

மனதில் தாளாத சந்தோசம் தாண்டவமாடியது. எனது ஆசைகளில் ஒன்றான கொட்டிக்கிழங்கு செடிகளை யாவது பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தி நாம் கண்ட அந்த சுவையை அவர்களும் அனுபவிக்கும் படி ஏதாவது செய்ய வேண்டும் என மனம் துள்ளியது.

ஆர்வம் மேலிட ஆங்காங்கே காணப்பட்ட கொட்டிக்கிழங்கு சிலவற்றைப் பிடுங்கிக் கொண்டேன். நல்ல வாட்டசாட்டமான கிழங்குகள் வாயில் எச்சில் ஊற வைத்தது. அந்தக் காலத்தில் வயல் விதைப்பு காலம் தொடங்குவதற்கு முந்திய மாதங்களில் பிற்பகல் தாண்டியதும் ஈஷா உம்மா கொட்டிக்கிழங்கு விற்பதற் காகக் கூவும் ஓசை கேட்கும். "கொட்டிக்கிழங்கு இருக்குக் கோஓஒ.." இன்னும் இந்த ஒலி ஊர் முழுதுக்கும் ஒரேயடி யாய்க் கேட்கும். நாலு பணத்துக்கு ஒரு சுண்டு. அரிக்கு மேலை நிறைய அம்மா வாங்கி எடுத்து வச்சா எல்லாரும் வளைச்சு இருந்து சாப்பிடுவோம். கொட்டிக் கிழங்கைக் கண்டதும் சந்தனம் ஆச்சிக்கு பாட்டு வந்துவிடும்.

"கொட்டிக்கிழங்குக்கு போனேங்கா லாத்தாண்டே

கோபித்துக் கொண்டாராம் பண்டாரம்

அவிச்சு உரிச்சு தட்டுல போட்டேன்கா

பூரித்து போனாராம் பண்டாரம்." ஆச்சியின் பாட்டும் பொக்கை வாய்ச் சிரிப்பும் கேலியும் சேர்ந்து கொட்டிக்கிழங்குடன் சுவையை கூட்டும்.

இன்னும் 5-6 அடி கொட்டிக்கிழங்கு பிடுங்கி எடுத்துக் கொண்டால் போதும். நல்ல வளர்ச்சியுடன் நின்ற கொட்டிக்கிழங்கு செடிகளை பார்த்து பிடுங்க ஆரம்பித்தேன். வீட்டுக்குக் கொண்டு போய் கழுவி ஒரு அவியல் போட்டால் பிள்ளைகளுக்கு என் சிறுவயது காலத்தை விளங்கப்படுத்தி விடலாம். மகிழ்ச்சியோடு அடுத்த காலடியை எடுத்து வைக்கிறேன். கொட்டிக் கிழங்கின் அடியுடன் சேர்ந்து கையில் இழுபட்டு வருகிறது ஒரு பொலித்தின் பை. பல வருடங்களுக்கு முன்னரே அரசாங்கம் வயலில் பயன்படுத்தக் கூடாது என்று தடைவிதித்த மோசமான நஞ்சு அடைத்து வந்த பை. இது போன போகத்தில் தான் விசிறப் பட்டிருக்க வேண்டும் என்பதை அந்தப் பையின் அமைப்பு காட்டியது. தென்னை, றப்பர் தோட்டங்களுக்கு மட்டும் அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி கொடுக்கப்பட்ட நஞ்சு. தடைசெய்யப்பட்ட நஞ்சுகளை கறுப்புச் சந்தைக ளில் பெற்றுப் பயன்படுத்தும் விவசாயிகளை கட்டுப் படுத்த நம்மரசிடம் வழியொன்றுமில்லை. மனதில் ஒருவகை வெறுப்பு மேலோங்க மனம் ஒருவகை இனம் புரியாத நிலையில் நின்றது. கையிலிருந்த கொட்டிக் கிழங்குகளுடன் மனதில் இருந்த கொட்டிக்கிழங்கு ஆசையையும் அந்த நச்சுச் சேற்றினிலே தூக்கி வீசி விட்டேன். அந்தக் காலம் இனி திரும்பாது. பிள்ளைக ளுக்கு எனது கடந்த காலத்தை காட்சிப்படுத்தும் ஆசை இனி வரவேண்டியதில்லை. வீடு திரும்பும் எண்ணம் தலை தூக்கியது.

யாரோ சீன வெடியை ஒற்றை ஒற்றையாகச் சுட்டனர். யானையின் அசைவு ஊரை நோக்கி இருப்பதற்கான அறிகுறி அது. இரவு நெருங்க நெருங்க யானை முன் நோக்கி அசையும். இனி விடிய விடிய ஒற்றை வெடியை சுட்டுக் கொண்டே இருப்பார்கள்.

பேய் ஆலை தலையை விரித்துக் கொண்டு ஆடிக்கொண்டிருந்தது. சின்ன மயிலர் காளி கோயில் கும்பம் வரும்போதும் உருவேறி ஆடுவது போல இருந்தது. மயிலரின் முடியும் இந்த ஆலமரத்தின் தலையை போலத்தான் இருக்கும்.

இனி வீட்டுக்கு திரும்புவதுதான் உசிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.பாலசுந்தரம் வெங்கடாசலம் அதிபர்





**திரு.வி.இலங்கநாதன்**
(உதவிக் கல்விப் பணிப்பாளர் - கணிதம்)

இவ்வையகத்திலே பிறக்கின்ற ஆறறிவுள்ள ஜீவன்கள் அனைத்தும் மனிதர்கள்தானா என்று சிந்தித்து பார்க்கும் காலமிது! அப்படியான யுகத்திலே நான் கண்ட மனிதர்களிலே ஒரு மாமனிதன் திரு.பா.வெங்கடாசலம் என்று கூறினால் அது மிகையாகாது.

தன்னகத்தே அறிவு, திறன் மனப்பாங்கு விருத்தியை கொண்டவரும் நிர்வாகத்திறனில் தனி அலாதியானவரும், ஆளுமை விருத்தியில் முழுமை பெற்றவரும் அம் மாமனிதரே.

இவ்வாறு வாழ்கின்ற மனிதர்களிலே ஒரு சிலர்தான் ஏனைய மக்களின் மனதில் தடம் பதித்தவர்கள். இதற்கு உதாரண புருஷனாக வாழ்ந்து காட்டி இனம், மதம் மொழி வேறுபாடின்றி சகல உள்ளங்களையும் கொள்ளை கொண்ட எங்களின் முன்னாள் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபரும், பின்னர் கல்முனை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரும், அதன் பின்னர் அரசியல் வானில் "உதயசூரியன்" சின்னத்தில் பிரவேசித்து தனது பேச்சாற்றல், அறிவாற்றல், கவர்ச்சிகரமான உடல்வாகு, புன்சிரிப்பு என்பனவற்றால் பல்லின மக்களிடையேயும் பிரகாசித்து வாழ்ந்தவர் அம்மாமனிதரே. அவரின் வாழ்க்கை பற்றி தெரிந்த விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பேருவகை அடைகின்றேன்.

இவர் கல்முனை நகருக்குத் தெற்கே அமைந்துள்ள சாய்ந்தமருது என்ற கிராமத்தில் (கனரவாகு என்கின்ற தமிழ்க் குறிச்சியில்) திரு திருமதி பாலசுந்தரம் என்ற தம்பதியினருக்கு புதல்வராக அவதரித்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் அழகையா.

இவரின் குடும்பம் வறுமையின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்தாலும் கற்க வேண்டும் என்ற அறிவுப் பசி இவரிடம் வயிற்றுப் பசியிலும் மேலோங்கிக் காணப்பட்டது. அவ்வேளை இவர் கொண்ட தற்துணிவும், பெற்றோர் ஊக்கமும் அவரை இன்று மற்றவர்கள் புகழ்ந்து பேசும் நிலைக்குக் கொண்டு சென்றது. அவர் இதனை அடிக்கடி ஆசிரியர் மாணவரிடத்தே கூறுவது அவரின் நற்பண்புகளில் ஒன்றாகும். "வறுமை கல்விக்கு தடையில்லடா தம்பி" என்ற அவருடைய கூற்று ஞாபகத்துக்கு வருகின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவர் தனது ஆரம்பக் கல்வியை சாய்ந்தமருது மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், பின் இடைநிலைக் கல்வியை கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையிலும் கற்றார். இவரது இளமைப் பருவ புலமை விருத்திகள், பேச்சாற்றல், ஆளுமைத் திறன்கள், கீழ்படிவு காட்டும் அந்தப் பக்குவம் பற்றி இவருக்கு கற்பித்த ஆசிரியர்களான திருமதி. ரெட்ணாவதி, திருமதி. தேவரெட்ணம், அரியமலர் செபரெட்ணம், நேசமணி ஜெகநாதன் ஆகியோர் பெருமையுடன் பறைசாற்றினர். அது மட்டுமன்றி உவெஸ்லி கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.எம். ஜி நல்லதம்பி அவர்களும், மறைந்த சில ஆசிரியர்களும் இவரது இளமைப்பருவ திறமையைக் கண்டு பாராட்டியது மட்டுமின்றி, பிற்காலத்தில் இவர் ஒரு சிறந்த அறிவாளியாக வருவதற்கு அடித்தளம் இட்டார்கள் என்று கூறினால் அது உண்மையே. அக்காலத்தில் அவர் காட்டிய ஆங்கிலப்பாட அறிவு அவரை சிறந்த ஆங்கிலப் பேச்சாளராக மாற்றியது. மட்டுமன்றி, ஆங்கிலத்தில் இவரை ஓர் "சொற்களஞ்சியமாக" வெளிப்படுத்தியதை பல முறை கண்டிருக்கின்றேன்.

இவரது திருமணம் திருமலை நகர் போற்றும் செல்வந்தர் இளையதம்பி பக்தர் குடும்பத்தின் இரண்டாம் புதல்வி ஜெகதீஸ்வரி அம்மாவுடன் நிகழ்ந்தது. அவரை மனையாளாக ஏற்று, கல்முனையை இருப்பிடமாக்கி இரு புதல்வர்களையும் ஒரு புதல்வியை யும் பெற்றுக்கொண்டார்.

பிறர் பிள்ளைகளிலே இவர் காட்டிய காருண்ய மனப்பாங்கால் இவரது பிள்ளைகள் இன்று வெளி நாட்டிலே சீரும் சிறப்போடும் வாழ்கின்றனர். இவர் தனது உயர்கல்வியைக் கற்பதற்காக இந்தியா சென்று மெட்ராஸ் கிறிஸ்ரியன் கல்லூரியில் ஆங்கில மொழிமூல விஞ்ஞானப் பட்டதாரி (B.Sc) சித்தி பெற்றார். ஆதன் பினனர் தன் ஆசிரியப்பணியை கல்முனை ஸாஹிராக் கல்லூரியிலும், கல்முனை உவெஸ்லி கல்லூரியிலும் தொடர்ந்தவேளை, ஆசிரியர்களுக்கான பயிற்சியினை வழங்கும் பொருட்டு அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கும் சென்று தனது கல்விப் புலத்திலே பாரிய விருத்தியினை ஏற்படுத்திக் கொண்டி ருந்தார். தனது அறிவாற்றல் திறனால் பல ஆசிரியர்கட்கு கற்றல் - கற்பித்தல் யுத்தி முறைகளை சொல்லிக் கொடுத்து மூவினத்தையும், அவற்றினைச் சார்ந்த ஆசிரியர்களும் ஒழுங்கான ஆசிரியம் பெற்று வெளிவர உதவி செய்தார்.

அவ்வேளை கல்வி நிர்வாகசேவைப் பரீட்சை யிலே சித்தி பெற்று தான் கற்ற, கற்பித்த பாடசாலையான கல்முனை உவெஸ்லியின் அதிபராகப் பணியாற்ற மீண்டும் இணைந்தார்.

இவர் அதிபராக இருந்த காலத்திலே 09 வருடங்கள் இவரின் கீழ் ஆசிரியராக நான் பணியாற்றினேன் இது பெரும் பாக்கியமே. இக்காலத்தில் நான் பெற்ற அனுபவங்கள், மேலும் பல நிர்வாகத் திறன்கள், மதிநுட்பங்கள் என்பனவற்றை எனது Memory இல் பதிவு செய்து கொண்டு தற்போது தேவைப்படும் போது அவற்றைப் பாவித்துப் பயன் பெறுவதற்கும் தவறில்லை.

"ஆழ்கடல் அமைதியானது என்பதற்காக அது ஆழ மற்றது என்றல்ல" தேவை வரும் போது சீறிப்பாய்வதையும் நான் கண்டிருக்கின்றேன். திரு. வெங்கடாசலம் யாரையும் நொந்து பேசியதில்லை. ஆனால் கடமை நிமித்தம், பணியின் காரணமாக யாரையும் சினம் கொண்டு நொந்து காரசாரமாகக் கதைத்து விட்டாரென்றால், அன்று பிற்பகலே தேடி வந்து அவர்களோடு அன்பாகப் பழகுவார். இதனை எல்லோரும் செய்யமாட்டார்கள.

அறிவாளிகள் பலர் தனது அறிவொளியை வெளிப்படுத்த தவறுகின்றனர். ஆனால் வெங்கடாசலம் சேர் தனது பேச்சாற்றல் மூலம் அறிவொளியை பறைசாற்றுவதில் வல்லவர்.

உதாரணமாகப் பணிநேரம் 'ஆசிரியர்கள் கூடி அரட்டையடித்துக் கொண்டு இருந்தால் என்னடா அங்க நடக்குது' என்று கம்பீரமான தொனி கேட்கும். அதற்குப் பின் அவ்விடம் வெறுமையாகிவிடும். இவரின் சிரிப்புத் தந்திரோபாயங்களைக் கொண்டு தான் இப்போதும் நான் மனதில் அமைதி பேணுவது .

எமது கல்விப் பட்டப்படிப்பு டிப்ளோமா பயிற்சி நெறியில் ஓர் விரிவுரையாளராக பணியாற்றினார். அப்பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்வில் அவர் ஆற்றிய அந்த 5 நிமிடப்பேச்சைக் கேட்டு புகழாத பட்டதாரி ஆசிரியர்களே இல்லை.

அவரின் காலத்திலே உவெஸ்லி கல்லூரி பல சோதனைகளுக்கு மத்தியிலும் பல சாதனைகள் புரிந்து உண்மையிலே பாடவிதானத்திலே பலர் மருத்துவம், பொறியியல், சட்டம், கலைத்துறையென பல்கலை சென்றதுடன் இணைப்பாட விதானத்திலும் தேசிய மட்டத் தில் பல விருதுகளை கல்லூரி பெற்றுக் கொண்டது.

இவரால் உவெஸ்லிக்கு பல மாடிக்கட்டிடங்கள், பாண்டு வாத்தியங்கள், சாரணியர் பாசறைகள், நாட்டுகூத்து, விளையாட்டுப்போட்டி, எனப்பல்வேறு துறைகளில் உயர்வு கிடைத்தது.


இவ்வாறு உவெஸ்லியின் உயர்வு கண்டு கொண்டிருந்த போது, தனது சேவை வலயத்திலுள்ள பல பாடசாலைகளுக்கும் இந்த சேவை தேவை என்ற இறைவன் நாட்டத்தின் காரணமாக தனது இறுதிக் காலத்தில் கல்முனை வலயத்தின் பிரதிக் கல்விப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளராக சேவையாற்ற இணைந்தார். அவ்வேளை மூவின மக்களும் கற்கும் சகல வலயப் பாடசாலையும் பல் தேவைகளில் பல படிகள் உயர ஓர் அடித்தளமாகச் செயற்பட்டார். என்பதில் எந்தமாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. இதற்கு வரலாற்று படிவுகள் நல்ல சான்று பகரும்.

கல்விப் புலத்திலிருந்து ஓய்வு பெற்ற அவர் தனது நண்பர் குழாமின் அரவணைப்பினாலும் தனது சுயநம்பிக்கை, அறிவுத்திறன் காரணமாகவும் அரசியலிலும் இறங்கி செயற்பட்டார் . அதன் காரணமாக அரசியல் சுயவிருப்பத்தின் பேரின் "சூரியன் சின்னத்தில் போட்டியிட்டார்" அதிலே வெற்றிகண்டிராத போதும் மனம் தளராமல் இருந்தார் அவ்வேளைதான் இறைவன் வெளிநாட்டுப் பயணத்திற்கான வழியை இக் குடும்பத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்தார். பின்லாந்து, தேசத்திற்கு குடும்பத்தோடு இடம் பெயர்ந்து வாழ்ந்த அவர் ஒரு தடவை பாடசாலைக்கு வந்து அவரது பெயரைத் தாங்கிய க.பொ.த (உத) விஞ்ஞான கூடத்தையும் பார்வையிட்டு அதன் முன்னால் மரம் நட்டதையும் மறக்க முடியாது. அவரது மறைவு பின்லாந்தில் இடம்பெற்றது. கல்முனை உவெஸ்லியில் அமரர் AR மன்சூர், மாவை சேனாதிராஜா போன்ற அரசியல் வாதிகளும் கலந்து கொண்டு அன்னாருக்கு இரங்கல் உரை நிகழ்த்தியதும் ஞாபகம் வருகின்றது. "வரலாற்று நாயகனாகத் திகழ்ந்த வெங்கடாசலம் பதித்த பல தடங்கள் உவெஸ்லியில் அழியாது உள்ளன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேரச் செழிக்கும் மொழி

உரைச்சித்திரம்

திருமதி அன்னபூர்ணம் பேரின்பராஜா
முன்னாள் அதிபர்
கமு. / இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.
கல்முனை

"Teacher. றேணுகாட அம்மா Hospital ல Admitted ஆம் சொல்லச் சொன்னவ....

"ஓ..... அப்படியா? றேணுகாவோட கதைக்கிறன். எந்த ஆஸ்பத்திரியாம்?"

"மடுவத்தயாம் Teacher"

"சரி.........நீ 10ரூபா கட்டு....."

தானே தன் தலையில் குட்டி நாக்கை கடித்த நயோமி "sorry teacher" என்கிறாள். இன்னொரு 5ரூபா சேர்த்துக் கட்டு" சொல்லிய திருமதி கோபிநாத் தரம் 10 வகுப்பாசிரியை. வரவுடாப்பு அடையாளமிடப் படுகிறது. மூடி வைத்தவர். "வீட்டு வேலக் கொப்பியெல்லாம் வாங்கி வழக்கம் போல என்ர அறையில் வை வர்ஷா" "teacher, நேற்று birthday வீட்டுக்குப் போனதால செய்து முடிக்கல்ல. school விடமுதல்ல செய்து தாறன் teacher. Please teacher" – கிறிஷாந் கெஞ்ச.

"இனியும் மன்னிப்புக் கிடையாது. கடைசி விளங்குதா? பிறந்தநாள் கொண்டாட்டம் உண்ட படிப்பக் கெடுக்குதெண்டு நல்லா விளங்குது. ஏன் போன நீ? சனி,ஞாயிறு ரெண்டு நாள் லீவு. இடைவேளையில; என்ர அறையில் வந்து நிண்டு எழுதி முடி. 15 ரூபா கட்டு" மணி ஒலிக்க ஆசிரியை வெளியேறுகிறார். பணப்பரிமாற்றம் நடக்கிறது. பாடமும் நடந்து முடிகிறது. "எண்டாலும் உண்ட தாளிதம் நல்லவாசம்டா."

அப்பாடா... சாரல் ஓய்ஞ்சுது.... நாம நனையாட்டிச் சரிதான்... தள்ளுடா..." கூறியவாறு ரகு எழுந்து வேந்தனை விலக்கி இடம்மாறுகிறான். சித்தார்த்துக்கு அருகில் இருக்க கூடாதென்பது வகுப்பாசிரியையின் கட்டளை. முதலாம் பாடம் முடிந்த கையோடு ரகு மாறிவிடுவான்.

விடலைப் பருவம், இப்படித்தான் எதிர்மறைச் சிந்தனைகளும் செயற்பாடுகளும், பருவம் தாண்டிப் பக்குவமடைந்து உணர்வு பூர்வமாக நடைமுறை விளங்கித் திருந்துவோமென்கையில் 'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமே' ஆகையால் பாடசாலைக் காலத்திலும் அந்தந்தப் பருவத்திலும் பழகிக் கொள்ள வேண்டும். மாற்றங்களுக்காய் நிர்ப்பந்திக்கப்பட வேண்டுமல்லவா'

"ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொற் கேளீர் !!
வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டுவார்த்தை கற்கிலாய் போ போ போ!
நூறு நூல்கள் போற்றுவாய் மெய்கூறும்
நூலில் ஒத்தியல்கிலாய் போ போ போ!
மாறுபட்ட வாதமே ஐந்நூறு
வாயில் நீள ஓதுவாய் போ போ போ!
நீதி நூறு சொல்லுவாய் காசொன்று
நீட்டினால் வணங்குவாய் போ போ போ!

ஆங்கிலப் பாடம் - பிரசாந்தன் ஆசிரியர். "Good Morning sir" "Good morning Students. Sit down... How are you all?" "We are very Fine Sir" – நிசாந்தனின் உரத்த குரல்.

"நீ சேவல் தானேடா. ஏன் முட்டயிட்ட பெட்டக் கோழி போல கொக்கரிக்கிறா?" – அருகிலிருந்த பாஸ்கர் கிள்ளிக் குசுகுசுத்து விட்டு "எங்களுக்கும் ஏலோணுமே sir" என உற்றுப் பார்த்த ஆசிரியரிடம் சிணுங்குகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆகா! பாஸ்கர் 28 Rupees" ரகு எழுந்து செல்ல பூஜா விட்டாளா? எப்போதும் அவள் நீரில் ஒற்றைக்கால் கொக்கு "oh...Ragu you have to pay 07 Rupees" ஆகாவுக்கு அது..."ச்சா..ok.." ரகு எப்போதும் துருதுரு. ஆனால் கெட்டிக்காரன். மறதி யாரைவிட்டது.

இப்பெல்லாம் நாமதான் அறுபதத்தாண்டின மாதிரி..' மனதுள் எண்ணி வெறுக்கிறான். மீண்டும் பணப்பரிமாற்றம், பாடம், மணி ஒலிக்கிறது. பிரசாந்தன் எழுகிறார். போக..." Sir, Sir you didn't write the record of work sir.." நிசாந்தன் தான்." oh....thank you..." கூறியபடி எழுதுகிறார். போகிறார்.

"இவரு பெரிய வெள்ளக்காறத் தொர, வகுப்பில் ஒரு சிலராலதாண்டா எல்லோருக்கும் ஆக்கின. உங்கட வீட்டுச் சூழல் அப்பிடி. சிலர் வெளியிடங்கள்ல படிச்சு வந்தபடியா English நல்லா வரும். அது வேறவிஷயம். ஏண்டா ஒற்றுமை இல்லாம இருக்கீங்க...சேர்ந்து சொன்னாச் சரி teachers உம் இரங்கிடுவாங்க. இது.... வயித்தில அடிக்கிற வேலையாக் கிடக்கு ச்ச்ச்ச....." ரகு சாடுகிறான்.

"உனக்கென்ன சொல்றத்துக்கு sir ட்ட இப்ப என்ன இண்டைக்கு என்னையா உண்ட துறட்டி போட்டு இழுக்கிற நோக்கம் நீயும் English நல்லாக் கதைப்பாய் தானே'

"நிசாந்தன் அதுல்ல பிரச்சின. எந்த நாளும் அரக்கப் பறக்க விடியக்காலமே சாப்பிடாம ஓடிவந்து கன்ரீன்ல சாப்பிடக் கொண்டுவாற காச இப்பிடி பாஷை பேசத் தண்டம் கட்டிப் பசிக்கப் பசிக்க இருந்து என்னடா படிப்பு? வீட்டுல காசுக்கு ஏச்சு வாங்கிறவங்க, கஷ்டமானவங்க எண்டு நம்மட Friends தானேடா....நியாயமா இதுக்கு ஒரு தீர்வு காணாட்டி.....சிங்களப்பாட ரீச்சரும் கிளம்பினாக் கெதியென்ன? அடாவடித்தனமாத்தான் முடியும்....."

"நான் சிங்களமும் நல்லாச் செய்வன் தானே...." நிசாந்தன் புறுபுறுக்கிறான்.

"ஓம் ரகு ஒற்றுமையா இயங்கின மென்டா நல்லது நடக்கும். பள்ளி நாளெல்லாம் இப்பிடித் தண்டப் பணத்தில் கழிஞ்சா நிம்மதியேல்ல. ஒண்டு செய்யலாம். எல்லாரும் நல்லாச் சொல்லிக் குடுத்து English அச் சீரா மூளையில் ஏத்துவம். தனித் தமிழ் நாமதான் உழண்டு மாறவேணும்."

கல்பனா மேற்படி கூற வாணி எழுந்து கைதட்ட வகுப்பில் 90% கைதட்டி ஏற்கிறது.

விவசாயப்பாடம் அடுத்து, தங்கிலீஷ் மொழியில் பரிமாற்றம் என்னவொரு சுதந்திரம்....அது இயல்புதானே. எல்லோரும் பேசுவது...

"கொன்றிடல் போலொரு வார்த்தை - இங்கு
கூறத்தகாதவன் கூறினன் கண்டீர்
புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சென்றிவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!

கதாகாலட்சேபம் - சந்தை வியாபாரம், சமயலறை, குசலம் விசாரிப்பு, அடுத்தவர் வீட்டுக் கதைகளின் உரைகல் தேய்ப்பு....எல்லாம் தென்றலாய் வீசும். தத்தம் முரண்பாட்டுக் கோலங்கள் ருத்ர தாண்டவமாடும். கலந்து பகிர்ந்து உண்ணுதலினூடாக புழுகர் பொன்னையா எரிச்சலூட்டுவார். யாருக்கென்ற விவஸ்தை கெட்ட நாக்கு வழிப்புக்கு மட்டும் குறைவில்லை. பாரம்பரியமெல்லாம் இழுத்துப் பேசப்படாமலும் நிலைத்திருக்க முடியாத ஆட்டங்கண்ட நிலைப்பாடு. குத்திக்காட்டுதல், கோள்மூட்டுதல், குதர்க்கம் பேசுதல்.... எல்லாவற்றுக்குள்ளும் மூக்கு நுழைக்கும் கழண்ட அகப்பைகளும் உள்ளனர். இவையெல்லாம் இடைவேளைத் தினப்பதிவேடு. இது Staff room.

மாதாந்தம் நடைபெறும் ஆசிரியர் கூட்டம், அதிபர் கருத்துரையின் பின் திருமதி கோபிநாத், "Sir நானும் பிரசாந்தன் மாஸ்ரரும் முன்னெடுத்திருக்கிற Project பற்றிக் கொஞ்சம் சொல்லவேணுட் Sir" ....அதிபர் சம்மதத்துடனான தலையசைப்பு...

"மொழிகளை மொழிகளாகக் கற்க வேணும் என்ற எண்ணத்தோட செயற்றிட்டமாகப் 10, 11 வகுப்புத் தமிழ், ஆங்கிலப் பாடநேரம் செய்யிறம். இதுவரையில் 6 பெற்றோர் பாராட்டியுமிருக்கிறாங்க. சில நம்மட Teachers பிள்ளையள் கஷ்டப்படுதுகள். எண்டு பிழையாக கதைச்சுமிருக்கிறாங்க. அதுதான் sir.....தான் தோன்றித் தனமாக சினிமா, T.V, Radio வில பேசுறமாதிரிப் பிள்ளையள விட்டா மொழியறிவு கெட்டுப்போகும். சாதாரணமாகப் பேசுறது தவிர்க்கேலாது. பாடநேரத்தில மொழிரீதியான பாடவிதான நோக்கத்தோட செம்மொழி வழக்கம் பிள்ளையிட்டப் புகவேணும். வெறும் கருத்துப் பரிமாற்றல் தான் மொழி என்ற கருத்துத் தான் இப்போ இளஞ்சமூகத்தில் இருக்குது. செம்மையாய்ப் பேசச் சொல்லுறதால பாட உள்ளீட்டுக்குள்ள மட்டுமல்லாம மொழி வளம் எண்டா என்ன என்றத உணரவேணும். கலைச் சொல்லாக்கம், மொழித்திறன், எழுத்தாற்றல், பேச்சாற்றல், பேச்சுமொழி– எழுத்து மொழி வேறுபாடு, பிரதேச மொழியின் மகத்துவமும் முக்கியத்துவமும் என்ற எல்லா விடயங்களையும் பிள்ளையள் உணர்ந்து கையாள வேணும் என்றதாலதான்....."


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"மற்றப்பாட Teachers க்கு எழுத்துப் பிழை வசனப்பிழை திருத்தி மொழிச் செம்மையாக்கல் பங்கு பெறக்காலம் போதா. ஆனாலும் சிலர் செய்றாங்க..."
கைதட்டல்.......

"நாங்களும் தங்கிலீஸ்தான் பேசுறம் - தவிர்க்கேலா பிள்ளையள் மாற்றத்தை உள்வாங்க வேணும். யதார்த்தம் உணர்ந்து பண்பாடு பேணி, பாடசாலை மரபு பேணிக் கொஞ்சமாவது முன்னேற இது உதவும் என்ற நம்பிக்கை இருக்கு. நன்றி sir."
கைதட்டல்...

"அவண் சென்று முழங்கிடுவீர்
ஆங்கிலச் சொல் இந்தி மொழி
இவண் வடசொல் யாவும் தமிழில் கலப்பதுண்டோ!
இப்பேச்சில் உவப்புண்டோ!
தமிழ்மானம் ஒழிந்திடுமோ ஐயகோ!
உணர்வீர் நன்றே."

"தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தாலும்
தூய தமிழே பிதற்றும் என்வாய்
தமிழிலேயே பேசவேண்டும் அது
தனித்தமிழ் வளர்ச்சியைத் தூண்டும்."

அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ் என் ஆவி
அழிவதற்குக் காரணமாய் இருந்ததென்று
சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ என்
தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ!"

Sir with Your Permission.." என்று எழுகிறார் பிரசாந்தன். ஒரு மொழிய இன்னொரு மொழியால படிப்பிக்க ஏலுமா! அதுவே வாய்க்குள் நுழைந்தால்தான் பாஷை பிடிபடும். எனக்கு மண்டூரிலே ஆங்கிலம் கற்பித்த ஜெயானந்தம் Sir ஐ நினைச்சுப் பெருமை. பின்பற்றல், தீவிரம், வைராக்கியம். ஆங்கிலத்தை எங்களிடம் நுழைக்க....ஊக்குவிப்புக்கள், பாராட்டுக்கள், தின்பண்டங்கள், கற்றல் உபகரணங்கள், களப் பயணங்கள் இப்படி.... பின்தங்குவோரை தண்டிக்கும் விதமோ விசித்திரம். Boysக்கு வயிற்றில் கிள்ளிப்பிடித்து இழுத்து ஆட்டுவார். உயிர்போய் வரும். Girls க்குக் கன்னமிரண்டிலும் இரு கைகளாலும் பளீர்........கண்ணீர் வரும். குறுமண்வெளித்துறை – பாதை பழுதென்றாலும் தோணி ஏறி வந்திடுவார் பெரியகல்லாற்று வாசி. 1970 இல் மட்டக்களப்பு மாவட்ட English Day – competition இல் இரு பிரிவில் முதல் மூன்று (எனக்கு 2ம் இடம்) இடங்களையும் மண்டூர் மகாவித்தியாலயம் வென்றது. அப்படியொரு பயிற்சி – Poems – தமிழில் எழுதி B,F,G,H,V,Y என உச்சரிப்பு தெளிவிற்கு இடப் பட்டிருக்கும்."

கைதட்டல்...

"இவர்கள் சிறந்த ஆசிரியர்களுக்கு உதாரண புருஷர்கள். கன்ரீன் காசோட Contact பண்ணினா 10% மாவது வெற்றி கிடைக்கும். சந்தோஷம் என்னவெண்டால் வேற class பிள்ளைகளும் இப்படி உள்வாங்க பட்டிருக்காங்க. Teachers க்குத் தெரியும்....
Thank You Sir.."

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்."

"பகுத்தறிவுச் செயல்கள் பரவுதல் வேண்டும்
மூடச் செயல்கள் முறிபடல் வேண்டும்
யாருக்கும் கல்வி ஈந்திடல் வேண்டும்
தொழிற்கல்வி எங்கும் தோன்றிடல் வேண்டும்."

மற்றுமோர் கசப்பான அனுபவம். ஆங்கிலத் துக்குப் பயந்து உயர்தரம் கற்கும் போது பாடத்துக்கு ஒளிப்பது ஆங்கில ஆசிரியரிடம் கெஞ்சி மன்றாடி அப்பாடவேளையில் வேறு பாடம், Library என்றானது போதாதென்று பல்கலைக்கழகம் சென்றும் ஆங்கிலப் பாடம் (Common English) விரிவுரை தவிர்த்து விடுதியில் உறங்கியது. தெரிந்தவர் புரிந்தவரோடு விரிவுரை செல்கையில் வேறுவழி தெரியாத ஈனநிலை இழப்பை உணர வருடக்கணக்கிலான காலம்... ஆங்கிலம் புரிந்து கொண்டால் கூட அவ்விழி நிலை இன்னும் விட்டுத் தொலையாத இரத்த ஊறல் இன்னும் நம்மிடையே அநேகரிடம் தொற்றுநோயாக உள்ளது வெள்ளிடை மலை.

மண்டூர் அக்காலம் போக்குவரத்து வசதியற்ற, எப்படியும் ஆறு கடக்க வேண்டிய கிராமமாயினும் உலகப்புகழ் பேராசிரியர்கள் அறிஞர்கள், பல்தொழில் துறைசார் அதிகாரிகள் என எப்படி உருவாயினர்? கணிதப்பாட பண்பாட்டுப் பேராசிரியர் கோணேசப் பிள்ளை, கல்வியியற் பேராசிரியர் சந்திரசேகரம் எனப்பலர் ஆங்கிலக் கல்விக்காய் கல்முனை உவெஸ்லியில் வந்து சேர்ந்து கற்றிருந்தனர். உலகறிந்த தமிழ்ப் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை 11வது வயதில் ஆங்கிலக் கல்விக்காய் உவெஸ்லியில் சேர்க்கப்பட்டார். ஊரிலேயே பள்ளிக் கள்ளன் என்பதும் இதற்கொரு காரணம். மூன்று தடவைகள் உவெஸ்லியில் இருந்து ஊருக்கு ஓடியவர். வலிந்து உவெஸ்லி வந்து கற்ற காலம்....

காலைக் கூட்ட ஆராதனையைத் தமிழில் எழுதி மனப்பாடம் செய்து பாடசாலை மரபு பேணினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலமரபு பேணிய கட்டுப்பாடுதான் அது...

நெல்லையூர் சென்றவ் வூணர் கலைத்திறன்
நேருமாறெனை எந்தை பணித்தனன்
அமைதி மிக்க மயிலைப் பிரிந்தும் இவ்
அற்பர் கல்வியில் நெஞ்சு பொருந்துமோ
......
அன்னயாவும் அறிந்தலர் பாரதர்
ஆங்கிலம் பயில் பள்ளியில் போகுநர்
"சூதிலாத உளத்தினன் எந்தைதான்
சூழ்ந்தெனக்கு நலஞ்செயல் நாடியே
ஏதிலார் தருங் கல்விப்படுகுழி
ஏறி உய்தற்கு அரிய கொடும்பிலம்
வாதும் பொய்ம்மையும் என்ற விலங்கினம்
வாழும் வெங்குகைக்கு என்னை விடுத்தனன்"

செலவு தந்தைக் கோராயிரம் சென்றது
தீ தெனக்குப் பல்லாயிரஞ் சேர்ந்தன
நலமொ ரெட்டுணையுங் கண்டிலேனிதை
நாற்பதாயிரங் கோவிலில் சொல்லுவேன்
சிலமுன் செய் நல்வினைப் பயனாலும் நம்
தேவி பாரதத்து அன்னை அருளினும்
அலைவுறுத்தும் அப்பேரிருள் வீழ்ந்துநான்
அழிந்திடா தொருவாறு பிழைத்தனே."

இன்னுமொரு இகழ்ச்சிக்குரிய அனுபவம். ஆங்கிலத்தில் உரையாடுவோர் மத்தியிலிருந்து மெல்ல நழுவுதல் விலகியிருத்தல். பொதுஇடமோ, தொழில்சார் கல்வி நிலையமோ.... ஆங்கிலத்தில் வாயைக் கொடுத்து அவமானப்படுவதைவிட என்று ஓடி ஒதுங்குதல். எத்துணை முட்டாள்தனம்! கேள்விச் செவியராய் எத்தனை விடயங்களை எடுத்தாளும் நமக்கு ஏன் இந்தப் பதுங்குகுழி......?

ஆனாலும் இவ்விழுக்கு அகன்று பெருமைப் படும் தருணங்கள் தாய்மொழி ஆற்றலால் அணைக்கும்.... தமிழ்மன்றங்கள், சங்கங்கள், விழாக்கள் எனச் செம் மொழியாற்றல் திறன் வலுச்சேர்த்து மகிழ்வுதரும்.

"ஆங்கிலத்தில் புலவரெனில்
அரசினர் அலுவலிலேயே – அமர்ந்திருப்பார்
பாங்குறு செந்தமிழ்ப் புலமை படைத்தாரேல்
பள்ளிப்பிள்ளைகளோடு – அமர்ந்திருப்பர்"

'தமிழில் பேசுதல் தனித்தமிழ் வளர்ச்சியைத் தூண்டும்.' என்பதற்கிணங்க நம் தமிழைச் சிதைக்காது சீரழிக்காது கூடுமானவரை செந்தமிழ் பேண வேண்டும். அதே விதத்தில் எமக்கு அவசியமான ஆங்கிலம், சிங்களத்தையும் கூச்சமின்றிக் கற்றுணர்ந்து சீராக தெளிவாகப் பேசிப்பயன்பெற வேண்டும். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கட்டாய ஆங்கில மொழிக் கல்வியில் தேர்ந்த நம்முன்னோர்கள் ஆயிரவர் வளம் படைத்தனர். தாய்மொழிக் கல்வியூடு சமமாகப் பிறமொழிக் கல்வியிலும் நம் இளையோர் துறைபோக வேண்டும். இக்காலந்தான் தொழிநுட்ப யுகமாகக் காணவும் தேறவும் வாய்பளிக்கின்றது. தற்கால நவீன நுண்ணறிவு நடைமுறைகள், தொழிற்றுறை, சுயதிறன் விருத்தி, புத்தாக்கங்கள் என நுழைய வேண்டும். உயரவேண்டும்!! நாடு சிறக்கும்!!

"ஆயிர வருடம் அன்பிலா அந்நியர்
ஆட்சியில் விளைந்த அல்லல்கள் எண்ணில
வேல்ஸ் இளவரசே
மற்றுன் நாட்டினர் வந்ததன் பின்னர்
அகத்தினில் சில புண் ஆறுதல் எய்தின"


"...ஆதலிற் புகழ்பெறும் ஆங்கில
நாட்டினரென்றும் நலமுற வாழ்கவே
என்னருஞ் சேய்களும் இவரும் நட்பெய்தி
இருபான்மையருக்கும் இன்னலொன்றின்றி
ஒருவரையொருவர் ஒறுத்திடலிலாது
செவ்விதின் வாழ்க...."

"இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை ஏற்படுத்துதல் பிறர்க்கு உழைக்கும் பேராண்மை - இது எழுத்தாளர் கடமை"

பிற்குறிப்பு : கவிதைகள் மகாகவி பாரதியார்
புரட்சிக்கவி பாரதிதாசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. பொன்.முருகையா அவர்களைப் பற்றி...





**திருமதி. சாமுண்டீஸ்வரி மகேந்திரராஜா**
சிரேஸ்ட தமிழ்பாட ஆசிரியர்.

கல்முனை மாநகரின் மத்தியிலே, மங்காத தீபமாக ஒளி பரப்பிக் கொண்டிருக்கும் பெரு விருட்சமாம் உவெஸ்லி உயர்தர பாடசாலையினைத் தாங்கும் விழுதுகளாகக் காலத்திற்குக் காலம் தடம் பதித்த அதிபர்கள் பலர். அவர்களுள் அதிபர் பொன் முருகையாவின் நாமம் பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று .

யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் 1981ஆம் ஆண்டு வர்த்தக பட்டதாரி ஆசிரியராகப் பணி புரிய உவெஸ்லி உயர்தர பாடசாலையில் பொன் முருகையா இணைந்து கொண்டார். நற்பண்புகள் நிறைந்த நல்லாசானாகச் சேவை செய்து மாணவர்களுக்கு ஏணியாக நின்று நல்வழிப்படுத்தினார். உயர்தர வகுப்பு மாணவர்களை நெறிப்படுத்தி வழிப்படுத்துகின்ற ஒழுக்காற்றுக் குழுத் தலைவராகப் பணியாற்றினார். பகுதித் தலைவர், உப அதிபர், பிரதி அதிபர் என அவரது சேவை விசாலமடைந்தது.

அதிபர் திரு.பி.வெங்கடாசலம் அவர்கள் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று சென்றதும், உவெஸ்லி யின் அதிபர் பதவி பொன் முருகையா அவர்களுக்கே தகுதியானது எனப் பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்க 02.11.1998 அன்று அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

மெதடிஸ்த திருச்சபையின் உயர்ந்த இலக்கைச் சிரமேற்தாங்கி, இறை பணியை ஒத்த சேவையை அர்ப்பணிப்போடு செய்து கல்லூரியின் வளர்ச்சிப் பணியை மேற்கொண்டார். கல்லூரியின் அதிமுக்கிய அபிவிருத்திப் பணிகளை இனங்கண்டு தீவிரமாக உழைத்தார்.

பாடசாலையின் அத்தியாவசியத் தேவையாக இருந்த பௌதீக வளத்தை விருத்தி செய்வதில் அயராது முயற்சி செய்து வெற்றி கண்டார். ஆரம்பப் பிரிவுக்கு இரண்டு மாடிக்கட்டடம், முன்பிள்ளை மாணவர்களுக்கு வசதியான தனிக்கட்டிடம், புதிய வகுப்பறைகள் என்பன நிர்மாணிக்கப்பட்டன. பாடசாலையினுள் அழகிய பூங்கா அமைத்து மகிழ்ச்சிகரமான சூழலை உருவாக்குவதில் ஆர்வம் செலுத்தினார்.

பாடவிதான, இணைப்பாட விதானச் செயற் பாடுகளில் மட்டற்ற அக்கறையுடன் செயற் பட்டமையை அவரது காலத்தில் பெற்றுக் கொண்ட அறுவடைகள் சான்று பகர்கின்றன. பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி, வாணி விழா, ஜெயந்தி விழா, மீலாத் விழா என விழாக்கள் சமரச உணர்வோடு நிகழ்த்தப்பட்டன.

இலங்கை மெதடிஸ்த திருச் சபையின் Deaflink நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட விசேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பிரிவு மாணவர்களைப் பாடசாலைக்குள் உள்ளீர்ப்பதில் முன்னின்று இன்று தனிப்பிரிவாக இயங்குவதற்கு வித்திட்டார்.

இவை தவிர கல்முனைப் பிரதேசத்தில் தமிழ் மொழி ,கலை, இலக்கியம் , சமயம், நாடகம் போன்ற துறைகளில் சாதனை புரிந்த சாதனையாளர் களை வரவழைத்து, அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, விருதுகள் வழங்கி கௌரவித்து, வாழ்த்தும் கலையுள்ளம் கொண்டவர்.


2004ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப் பேரலையால் உறவுகளை, வீடு வாசல்களை இழந்து துயருற்ற மக்களுக்குக் கல்லூரி மைதானத்தில் தஞ்சம் அளித்தார். நீண்ட காலம் அம்மக்களுக்குப் புகலிடம் கொடுத்த பெருமைக்குரியவர். மக்கள் மைதானத்தை விட்டு நீங்கியதும் மைதானத்தைப் புனரமைப்புச் செய்து மீளக் கட்டியெழுப்பிய பெருமைக் குரியவர்.

அவரது பதவிக் காலத்தில் கல்லூரியின் 125வது ஆண்டு நிறைவையொட்டிய விழாவைக் கோலாகல மாகக் கொண்டாடி பாடசாலையின் விழுமியங்களை எடுத்தியம்பும் "விருட்சம்" சஞ்சிகையும் வெளியிடப் பட்டது. பாடசாலையின் 125வது வருடப் பழைமை வாய்ந்த பொக்கிஷமாக விளங்கிய . வளாகத்தின் முதற் கட்டிடமாகிய 'லீஸ்' மண்டபம் செப்பனிடப்பட்டுப் புதுப்பொலிவு ஊட்டப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஓய்வு பெற்ற அமரர் பொன்.முருகையா அவர்கள் மொத்தம் 36 வருடங்கள் தன்னலமற்ற சேவையாற்றியிருக்கின்றார். இதன் மிகப் பெரும் பகுதி யான 28 வருடங்கள் எமது கல்லூரியில் பணியாற்றும் பேறு பெற்றார். இதில் இறுதிப் 10 வருடங்களும் அதிபராக இருந்து அவராற்றிய சேவை அளப்பரியது. 2008ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுச் சென்றவர் 2012ஆம் ஆண்டு வாகன விபத்தினால் இவ்வுலக வாழ்விலிருந்து ஓய்வினைப்பெற்று யாவரையும் துன்பத்தில் உறைய வைத்தார். இவரது இழப்பு கல்வி உலகிற்கே பேரிழப்பு.

அவரது துலாவடிவம் மறைந்தாலும் அவராற்றிய சேவைகள் மறைந்து போவதில்லை. அவை நம்முள் ளத்தே கலந்து நம்மை ஆட்கொண்டு நிற்கின்றன. அவை அழியா நிலை பெற்றவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# WHSKM

Wake up ye Folk
wind up the cares Coz
Worries Surely fade – with
Wesleyan care in
Wifi era for good

High in the spirit
Hailing to utmost heights
healing the soul within
Heralding of brightness
Humility adorned

Skills nurture to Whole
Simplicity the fore
Stimulate cognitive stamina
Sky high hopes
Seek the sole goal.

Know ye not ye
Knowledge Zest
Kalmunai woke up like
Kite Floating aloft
Kalmunai Wesley dawned

Meek was the GBS
Making room for the Leese
Meaningful with its vision
Mingling the sexes
Merging to form Wesley

**Mr.S.Ravindrakumar**
Teacher Wesley high school
kalmunai


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்முனை நகரில்
# கல்விச் சேவையில் தடம் பதித்த முதன்மைப் பாடசாலை



**வேலுப்பிள்ளை தங்கவேல் ஜே.பி.**
(ஓய்வு நிலை அதிபர்)

கல்விச் சேவையை வெளிநாட்டவர்களின் வழிகாட்டலில் மெதடிஸ்த திருச்சபையின் நெறிப் படுத்தலில் கல்முனை வாழ் தமிழ் மக்களின் வளர்ச்சிக் காகவும் வளமான வாழ்க்கைக்காகவும் கல்வி முக்கியத் துவம் என்ற நோக்கில் 1883ம் ஆண்டு உருவாகிய கிழக்கின் முதன்மைப் பாடசாலைகளின் முன்னணியில் நின்று 136வது ஆண்டை நிறைவு செய்கின்ற தற்போதைய கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை பல கல்வி மான்களையும் புத்திஜீவிகளையும், அரசியல் வாதிகளையும், சமூகப் பெரியார்களையும் உருவாக்கி கல்முனை தமிழ் மக்களின் இருப்பை நிலைப்படுத்தி நிற்கின்றது.

இயற்கை வளங்களைக் கொண்ட பிரதேச மாகவும் பல இந்து ஆலயங்களைக் கொண்ட நகரமாகவும், அமைந்த இப்பகுதியில் இயற்கை வனப்பிரதேசமாக முதிரை மரம், ஆலமரம் . அரச மரம், தேக்கு மரம் , இன்னும் பல மரங்களைக் கொண்ட கிறவல் பிரதேசத்தில் அமைந்து காணப்பட்டது.

இப்பாடசாலையில் சாய்ந்தமருது, கல்முனைக் குடி, மருதமுனை, நற்பிட்டிமுனை போன்ற பிரதேசங் களில் வாழ்ந்த இஸ்லாமிய மாணவர்களும், சேனைக் குடியிருப்பு, நாவிதன்வெளி, பாண்டிருப்பு, நீலாவணை, கல்லாறு, துறைநீலாவணை, கோட்டைக்கல்லாறு, பட்டிருப்பு போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மாணவர்களும் பேதமின்றி கல்வி கற்றனர். இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. காரைதீவைச் சேர்ந்த உலகம் போற்றும் வித்தகர் விபுலாநந்த அடிகளும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் இப்பாடசாலையில் கல்வி கற்றவர்கள்.

இன ஒற்றுமைக்கான சான்றாக இந்தப் பாடசாலை முன்னணியில் நின்று மருத்துவர்களையும், கல்விமான்களையும், பொறியியலாளர்களையும், அரசியல்வாதிகளையும் வர்த்தகர்களையும் தொழில திபர்களையும் அறிஞர்களையும் உருவாக்கி நிற்கின்றது.

இப்பாடசாலையில் கிறிஸ்தவ, இஸ்லாமிய மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். இந்துக்கள் அதிகமாக உள்ள போதிலும் கிறிஸ்தவ கலாசார பண்பு களை முன்னிறுத்தி பாடசாலையில் மாணவர்கள் கற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார்கள். வறுமைக் கோட்டில் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தங்குமிடவசதிகளை வழங்கும் சிறுமியர் இல்லங்களும் இங்கே அமைந்துள்ளது. மெதடிஸ்த திருச்சபையின் பராமரிப்பிலும், அதன் அனுசரணையுடனும் இது இயங்கி வருகின்றது.

இப்பாடசாலை பல ஆசிரியர்களையும் அதிபர்களையும் கண்டுள்ள நிலையில் “கல்விக்கு உயிர் ஊட்டியவர்கள் என்றும் அழிவதில்லை” என்ற கோட்பாட்டுக்கமைய 136 ஆண்டுகளாக கல்விச் சேவையாற்றியவர்களை நினைவு கூரும் போது நான் அறிந்த அதிபர்களை இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது . திரு.யோகம் வேலுப்பிள்ளை, திரு.தா.சுப்பிரமணியம், திரு.எஸ்.மகாலிங்கம், திரு.பா.வெங்கடாசலம், திரு. பொன் முருகையா, திரு .வ.பிரபாகரன் போன்றோர் ஆற்றிய சேவைகள் சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லப் பட வேண்டியவை .

இந்நிலையில் இப்பாடசாலையின் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும், அதிபராகவும் நீண்ட காலம் கடமையாற்றிய திரு.பொன் முருகையா அவர்களுடனும் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும், அதிபராகவும் நீண்ட காலம் கடமையாற்றிய திரு.வடிவேல் பிரபாகரன் அவர்களுடனும் 1993ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு வரை ஆசிரியராகவும் உதவி அதிபராகவும் கடமையாற்றி அவர்களது சேவைகளையும், சிறப்புப் பணிகளையும் அறிந்திருக்கின்றேன். திரு.பொ. முருகையா கண்டிப்பானவர் இரக்கமுள்ளவர். என்னுடன் எதையும் மனதில் வைத்து 'பாராட்டுபவர்' அல்ல. கடமை நேரத்தில் கண்டிப்பானவர். பின்பு நண்பராக மாறிச் செயற்படுவார். அவரது அமரத்துவம் பலருக்கும் தாங்க முடியாத துயரத்தைத் தந்தது.

தற்போதைய அதிபர் திரு வடிவேல் பிரபாகரனுடன் நான் நீண்ட காலமாகச் சேவையாற்றியவன் . அவரது இரக்கம், கண்டிப்பு, மனதில் வைத்து பாராட்டாத தன்மை, உதவி செய்தவர்களை மறவாத் தன்மை, இறையியல் இரக்கம், கல்விக்காக பல காரியங்களைச் செய்தமை போன்றவற்றை நான் அறிவேன்.

கல்வித் துறையில் சேவையாற்றியவர்களைப் பாராட்டி கௌரவித்ததுடன் , தனது காலத்தில் பாடசாலை நிகழ்வுகளின் போது பலருக்கும் உரிய கௌரவம் கொடுத்து கண்ணியப்படுத்தியுள்ளார் . நல்ல சிறப்பியல்புகளைக் கொண்டவர். நான் ஓய்வு நிலைக்கு 2009ல் சென்ற பின்னரும் கூட அவரால் ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலை நிகழ்வுகளில் மொத்தம் 147 நிகழ்வுகளுக்கு நான் அழைக்கப் பட்டு, கொண்டிருக்கின்றேன். அவர் இப்பிரதேச வாசிகளையும் , அறிஞர்களையும், கல்விமான்களையம், அரசியல் வாதிகளையும், பல உயர் நிலையில் உள்ள பழைய மாணவர்களையும், தனவந்தர்களையும், சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களையும், ஊனமுற்றோரையும் எழுத்தாளர்களையும், ஊடகவியலாளர்களையும், மதப்பெரியார்களையும், கவிஞர்களையும், கலைஞர்களையும், ஓய்வு நிலை அதிபர் ஆசிரியர்களையும், கல்வியியலாளர்களையும், தொழிநுட்பவியலாளர்களையும், டாக்டர்களையும், பொறியியலாளர்களையும், சமூக சேவையாளர்களையும், பெற்றோர்களையும், நலன்விரும்பிகளையும் குறிப்பாக சிறப்புச் சேவையாற்றிய சிற்றூழியர்களையும் கூட அழைத்து மலர்மாலை போட்டு பாண்டு மங்கல வாத்தியத்துடன் வரவேற்று குத்துவிளக்கேற்றும் வாய்ப்புகள் வழங்கி , மகிழ்வித்து அவர்கள் புகழ் சேவை பற்றி சிறப்புரையாற்றி கல்விச் சேவைக்கு நிகராக சமூக சேவையையும் ஆற்றியுள்ளார்,

பலரின் ஆலோசனைகளையும் உள்வாங்கி அன்னப்பறவை போல் செயற்படுத்தும் தன்மையுள்ளவர். பாடசாலை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதில் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள் இன்னும் பல பகுதியினருக்கு பங்கு உண்டு என்று சிறப்புரிமை கொடுத்து செயற்பட்ட அதிபராக அவரை நான் பார்க்கின்றேன்.

பிரதி அதிபர் திரு.செல்லத்துரை கலையரசன் அவர்களுக்கு ஒரு இடமாற்றம் வந்த போது கல்வித் திணைக்களத்துடன் அவரது செயற்பாட்டுத் திறமைகள் பற்றி பரிந்துரை செய்து தன்னுடனே இணைத்துக் கொண்டு செயற்பட்டவர். அப்போது பிரதி அதிபராக இருந்த கலையரசனது திறமைகள் பற்றி நானும் அறிந்திருந்தேன். பிரதி அதிபர் திரு சந்திரசேகரம் தேவசந்திராவை திட்டமிடல் செயற்பாட்டை தெளிவாக உணர்ந்த ஒருவராக நான் கருதுகின்றேன். இன்னும் சிறப்பாக பலரை குறிப்பிட வேண்டும். காலம் வரும் போது சேவையாளர்களை சுட்டி காட்டுவேன் .

சுனாமியின் பின் இப்பாடசாலையின் பெற்றார் ஆசிரிய சங்க செயலாளராக நான் செயற்பட்ட போது அதிபர் திரு.வ. பிரபாகரன் அவர்களின் சேவையை அறிவேன். அவர் ஓய்வு பெற்றுச் சென்றாலும் மெதடிஸ்த திருச்சபையின் ஓர் அங்கமாக அமைந்து பாடசாலைக்கு சேவையாற்ற வேண்டுமென்று 136வது ஆண்டு நினைவின் போது பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 136வது ஆண்டு நினைவு மலரை புத்திஜீவிகள், ஆர்வலர்களினது வெளிப்பாட்டுடன் தொகுத்து வழங்குவதற்கு முயற்சிகள் எடுத்த அதிபர் திரு.வ.பிரபாகரன் அதிபர் அவர்களுக்கும் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கட்கும், மாணவர்களுக்கும் மலர் வெளியீட்டுக்குழுவினருக்கும் எனது வாழ்த்துக்களை கூறிக் கொள்கிறேன் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான அந்த நாட்கள்



ஜெனிதா மோகன்

அந்த அழகான நாள்
ஆயிரத்து தொள்ளாயிரத்து
தொண்ணூற்று ஒன்பது அன்று
உயர்தரம் கற்க
உவெஸ்லி உயர்தர பாடசாலை
நுழைந்தேன்.

பல்வேறு கனவுகளுடன்தான்
பாடசாலை மண்ணைத்
தொட்டு உள்ளே புகுந்தேன்
அன்புடன் வரவேற்றதே
பாடசாலையும் என்னை
அழகான அந்த நாளிலே!

வளர்ச்சிக்குப் பல வழிகாட்டியே
உயர்ந்து நிற்கும் உவெஸ்லி
உண்மையில் என்
எழுச்சிக்கு வித்திட்டது
வாழ்வின் மறு மலர்ச்சிக்கும்
மையமாக மிளிர்ந்தது

கரடுமுரடான பாதையினை
கடந்து வர எனக்கும்
களம் அமைத்ததே
கல்முனை உவெஸ்லிதான்
கல்வியின் சிகரங்கள் போன்ற
கல்லூரி ஆசான்களும்தான்

ஒரு நாள்
மேடையை விட்டு இறங்கிய
என்னிடம்
'ஆலமரத்தடி அரங்கு
அழகாகப் பேச வைத்தது உன்னை' எனப்
புகழ்ந்தார் பாடசாலை ஆசான் ஒருவர்

பள்ளிப் பருவம்தான் அது
துள்ளித் திரிந்த பருவம்
கனவுகள் பல கண்ட
காலமும் அது தான்
கடைசியிலே கண்ணியம்
கற்றுத் தந்த காலமும் அதுவே.

கல்வி மட்டுமல்ல
கல்லூரி கற்றுத் தந்தது
உன்னதமான ஒழுக்கமும்தான்
உயர்ந்த விருட்சமாகப் பரந்து நிற்க
உரம் போட்டது
உவெஸ்லி உயர்தர பாடசாலைதான்


கல்முனை வலயத்தில் கலகலப்பாக
கல்வி விடயத்தில் பரபரப்பாக
முன்னிற்கும் பாடசாலை
நூற்று முப்பத்தாறு வருடங்கள்
கடந்து நிற்கின்றது மட்டுமல்ல
தடம் பதித்தே
தளராமல் நடைபோடுகிறது.

கட்டுரைக்குக் களம் தந்த
கல்லூரி தான்
எழுத்துத் துறைக்கும்
எழுத்தாணி தந்தது
ஏடு ஒன்றைப் பிரசவிக்கும்
ஆற்றலையும்
பசுமரத்தாணி போல் பதித்தது

மூன்று ஏ சித்தியினை
முறையாக எடுத்திடவும்
முத்தமிழ் வித்தகம் செய்திடவும்
மூலையில் ஓர் வீணை போல்
முடங்காமல் இருந்திடவும்
மூளையிட்ட
முன்னாள் பாடசாலை அதிபர்
முருகையா அவர்களை
தலைசாய்த்து வணங்கியவளாக
அன்னாளின் பிரதி அதிபரும்
இன்னாளின் அதிபருமான
பிரபாகரன் ஐயாவுக்கு
நன்றி கூறியவளாக
என் வணக்கங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# WESLEY HIGH SCHOOL

**W**esley high School, Still stands tall
**E**ven after 136 years, it never falls
**S**lowly and steadily, it grows in numbers
**L**onger it lasts, the more it grows
**E**agerly the children study
**Y**earning to learn, to be a bright light in society and to bring fame to the school oneday...
**H**owmuch it has expanded
**I**n education and sports!!
**G**ive thanks and praise to God who made all this possible
**H**e gave the teachers – the strength to guide
**S**trength to lead our children, to face this cruel world
**C**are and affection
**H**ope and a future – this school provides
**O**nly for our children to shine as bright as the sun
**O**nly for success and a bright future
**L**ove and joy will prevail for evermore inside the walls of **"WESLEY HIGH SCHOOL"**

by : **Mrs.H.N.Thayaananthan** Teacher of English and an old student.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# எமது பாடசாலை முறைமையானது தோல்விப் பாதையில் பயணிக்கிறதா?

**சரவணமுத்து நவநீதன்** (SLAS) உதவிச் செயலாளர்,
கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள்,
இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு - கிழக்கு மாகாணம்,

அண்மையிலே கல்வி தொடர்பான ஒரு நிகழ்வில் நான் கலந்து கொண்ட போது, எமது பிரதேசத்தைச் சேர்ந்த, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு கல்வியியலாளர் புதுமையான அல்லது யதார்த்தமான ஒரு கருத்தினைத் தெரிவித்தார். "இலங்கையின் கல்வி வரலாற்றில் தற்போதைய பாடசாலை என்பது அல்லது பாடசாலை முறைமையானது தோல்வியடைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது". எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு சுதந்திரமான கருத்தை வெளியிடக் கூடிய அளவுக்கு இவரை ஒரு பாடசாலை தயார்படுத்தியுள்ளது அல்லது உருவாக்கியுள்ளது என்ற அடிப்படையில் இன்னும் பாடசாலைகள் தம் இறுதி மூச்சுடன் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறன என்ற ஒரு அற்பமான முடிவுக்கு ஓரளவாவது நாம் வரலாம்.

துரதிர்ஸ்டவசமாக பல்கலைக்கழகங்களில் காணப்படும் வெற்றிடங்கள் அல்லது கேள்விகளை நிரப்புவதற்கான வழங்கல்களை ஈடு செய்யும் உற்பத்தி நிலையங்களாக, பாடசாலைகள் வழித்தடம் மாறிப் பயணிப்பதால், ஒரு மானுடப் பிறவியை முழு மனிதனாக மாற்றும் ஒரு மையமாக இருந்த பாடசாலைகள், பண நோட்டுக்களை பிரசவிக்கும் மானுட இயந்திரங்களைத் தயார்ப்படுத்தும் ஆலைகளாக மாறிப் போனதால் பாடசாலைகள் தம் எண்ணக் கருவிலிருந்து விலகி தோல்வியை நோக்கியே பயணிக்கின்றது என நாம் ஒத்துக் கொள்ளலாம்.

புள்ளிகளின் உச்சத்தை தொடுவதன் மூலம் அடைவு மட்டத்தை நோக்கிய பாய்ச்சலுக்காக மாணவர்களை தயார்படுத்தும் ஒரு போட்டிக் களமாக பாடசாலைகள் மாறிவிட்டதால், பாடசாலைகள் தம் எண்ணக் கருவிலிருந்து விலகி தோல்வியை நோக்கியே பயணிக்கின்றது என நாம் ஒத்துக் கொள்ளலாம்.

மாணவனின் தனித்திறமையை அடையாளம் கண்டு அதனைக் கூர்மைப்படுத்துவதன் மூலம் பிள்ளையை நல்வழிப்படுத்தி, ஆற்றுப்படுத்தி சமூகத்துக்கான நற்பிரஜையை உருவாக்கும் கருமத்திலிருந்து விலகி பெற்றோர்களின் சுயகௌரவம், தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை பிரசவிக்கும் ஒரு ஊடகமாக தம் பிள்ளைகளை மாற்றியமைக்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையை ஒரு பிள்ளை மீது வலிந்து திணிப்பதால் பாடசாலைகள் தம் எண்ணக் கருவிலிருந்து விலகித் தோல்வியை நோக்கியே பயணிக்கின்றது என நாம் ஒத்துக் கொள்ளலாம்.

இன்று இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதிலுமே "கல்வியின் சம வாய்ப்பு" எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கை அல்லது கோசம் முன் வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் முழுமையான சமவாய்ப்புக்களை மாணவர்களால் அனுபவிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியினைப் போதிக்கின்ற பாடசாலைகள் உலக மாற்றங்களுக்கு ஏற்ப இயைந்து கொடுக்கக்கூடிய வகையில் தம் இயலுமையை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். கற்றல் - கற்பித்தலில் புதுப்புது திறன் விருத்திகள், கல்வியியல் முறையில் விசேட சீர்திருத்தங்கள் போன்றன உள்வாங்கப்பட்டு இயக்கத்திறன் மற்றும் ஆக்கத் திறன்களை அதிகரித்து வருவதுடன், உலகில் மாத்திரமன்றி நமது நாட்டிலும் பாரிய மாற்றத்தை நோக்கியதாகவே கல்வித்திட்டம் காணப்பட வேண்டும்.

"இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள்" என்கிற ரீதியில் மாணவர் சமுதாயத்தினை கல்வி அறிவில் முன்னேற்றுதல், எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய ஆளுமையையும் திறனையும் கொண்டவர்களாக உருவாக்குதல், அவர்களை முழுமையான மனிதர்களாக்குதல் போன்ற பணிகளில் பாடசாலையானது மிகப்பெரிய வகிபங்கினைக் கொண்டுள்ளது. அத்தகைய வகிபங்கில் ஆசிரியர்கள் முதன்மை பெறுகின்றனர். பாடசாலைகளின் வகுப்பறையிலிருந்தே சமூக ஆளுமையுடைய அறிவுபூர்வமான மாணவர்களையும் நாளைய சிறந்த தலைவர்களையும் வளர்த்தெடுப்பதற்குரிய சிறந்த கற்றல் - கற்பித்தல் முறைமைகளை, ஆசிரியர்கள் சரியான முறையில் முன்னெடுக்கின்ற போது அது சாத்தியமாகும்.

"தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்" என்ற பதம் இன்று எல்லோராலும் முன்னெடுக்கப்படுகின்றது. வேகமாக மாறிவரும் கற்பித்தல் உத்திகளை ஆசிரியர்கள் கற்பித்தலில் உள்வாங்குவதன் ஊடாகவே ஆரோக்கியமான கற்றல் சூழ்நிலை வகுப்பறைகளில் ஏற்படுகின்றது.

வகுப்பறையில் மாணவர்களின் ஆக்கத் திறனுக்கும் ஆர்வத்திற்கும் ஈடுகொடுக்கக் கூடிய ஆசிரியர்கள் மட்டுமே இப் பணியில் நிலைத்துச் செயலாற்ற முடியும். இன்று தகவல் தொழில்நுட்ப பிரயோகமானது மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளில் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றது. மாறி வருகின்ற உலக நிலைமைகளுக்கு ஏற்ப பாடசாலைகளில் புதிய புதிய பல உத்திகளைக் கையாளுவதன் மூலம் மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான கற்றலை ஏற்படுத்த முடியும் என்பதுடன் சுய சிந்தனை, புத்தாக்க சிந்தனை என்பவற்றையும் ஏற்படுத்த முடியும்.

மாணவர்களிடத்தே சுய கற்றலுக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் பாடசாலைகளில் மாணவர்களின் பெறுபேறுகளையும் உயர்த்த முடியும். குழந்தையானது கேள்வி கேட்கின்ற போதுதான் மனிதன் தனக்கு எவ்வளவு குறைவாகத் தெரிந்திருக்கின்றது என்பதனைப் பெரியவர்கள் உணருகின்றனர் என Maichael Block Fort என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். இன்றைய நவீன உலகின் போக்குகள் அறிவுடைமை சமூகத்தை உருவாக்கியுள்ள நிலையில் பிள்ளைகள் பல்வேறு கோணங்களில் திறன் படைத்தவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்கு ஏற்ற வகையில் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவர்களாக ஆசிரிய சமூகமும் மாற்றமடைந்து காணப்பட வேண்டும்.

அதாவது தரம் ஒன்றுக்கு நுழையும் ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு விதமான மனநிலையுடனேதான் காலடி எடுத்து வைக்கின்றான். சில மாணவர்கள் இயல்பூக்கம் கொண்டவர்களாகவும் சில மாணவர்கள் சாதாரண நிலையிலும் காணப்படுகின்றனர். சிலர் கூச்சசுபாவம், அதீத அமைதி, குறும்புத்தனம், அழுகை போன்ற பல மனப்பாங்குகளுடன் காணப்படுவர். இந்நிலையில் ஒவ்வொருவரையும் அடையாளம் கண்டு அவரவர் நடத்தைக்கு ஏற்பவும் மனநிலைக்கு ஏற்பவும் அணுகி சமநிலைப்படுத்தும் திறன் ஆசிரியரிலேயே தங்கியுள்ளது. ஆசிரியரின் நடத்தைக் கோலங்களை மாணவர்களுக்கேற்ற விதமாக மாற்றியமைக்க வேண்டியது கட்டாயமாகும். அப்போதுதான் சமூகம் எதிர்பார்க்கின்ற நற்பண்புள்ள மாணவ சமூகத்தை உருவாக்க முடியும்.

மாணவர்களின் இயலுமை, இயலாமையை கண்டறிந்து மாணவர்களின் தேவைக்கு ஏற்ப கற்றல் முறைமைகளைக் கைக்கொண்டு கற்பித்தலில் ஈடுபடுதல் அவசியமாகும். மாணவர்கள், ஆசிரியர் கற்பிக்கின்ற போது குறுகிய நேரத்திற்கே கவனித்துக் கொண்டிருப்பார்கள். அதன் பின்னர் அந்த மாணவரின் கவனம் வேறுபக்கமாகிவிடும். கவனத்தினை திசை திருப்பாத வண்ணம் ஒரு பாடத்தினுள் பல்வேறு கவர்ச்சியான உபகரணங்களைக் கொண்டு கற்பித்தலில் ஈடுபட்டு உறுதி செய்வதன் ஊடாகவே மாணவர்களின் அடைவினை மேம்படுத்த முடியும்.

ஆசிரியர் தமது வகிபாகத்தில் பயனுறுதியுடன் செயற்பட வேண்டுமாயின் அவர்கள் தமது அறிவை உயர்த்திக் கொள்ள வேண்டும். புதிய அனுபவங்களை, அறிவை மீள உயிர்த்தெழச் செய்வதற்கான நுட்பங்களை அடையாளம் காணல், தனித்துவமான பாடசாலைக் கலாசாரத்தை வளப்படுத்த பகுத்தறிவையும் புத்தறிவையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். வெற்றிகரமான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் மனப்பாங்கினை உயிர்ப்புடன் வைத்திருந்து, எதிர்பாராத சந்தர்ப்பங்களில் எதிர்பாராத வகையில் தோன்றும் பிரச்சினைகளையும் அறைகூவல்களையும் மற்றும் கற்றல் மையத்தின் அகப் புறச் சூழல்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளல் வேண்டும். ஆய்வுநிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்தல், விமர்சன சிந்தனையை வளர்த்தல், சமூகப் பொறுப்புடன் செயலாற்றுவதற்கான மனப்பாங்கை கொண்டிருத்தல், முறையான பண்புகளைக் கொண்டதாக கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே இன்றைய ஆசிரியர்களின் வகிபங்கானது மாணவர்களை நல்வழிப் படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கின்றது.

136 வருடங்களைக் கடந்து பயணிக்கும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில், உயர்தரம் கற்றவன் என்ற கோதாவில் நானும் பெருமை யுறுகின்றேன். சமகாலத்தில் எமது நாட்டின் கல்விக் கொள்கையின் காரணமாக பாடசாலை முறைமைகள் தோல்விப் பாதைகளை நோக்கிப் பயணித்தாலும், கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையானது இன்னும் உயிப்புடனேயே வாழ்ந்து வருகின்றது. இதுவரை அது பிரசவித்த ஆளுமைகள் உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் சிதறுண்டு கிடந்து உவெஸ்லியின் பெருமையை இன்றுவரை வெளிப்படுத்தி பறைசாற்றி வருகின்றன.

அதன் தடத்தில் சிறு அசைவு ஏற்பட்டாலும் காலத்துக்குக் காலம் உவெஸ்லியை வழிநடத்திச் செல்லும் அதிபர்களதும் ஆசிரியர்களினதும் பங்களிப்பு அபரிமிதமானது என்றே குறிப்பிடல் வேண்டும். சீரிய கல்வியினை சிறந்த முறையில் வழங்குவதற்கு கல்முனை உவெஸ்லியின் அதிபர்களும் ஆசிரியர்களும் பாரிய கவனம் செலுத்துகின்ற போது ஆளுமை மிக்க, சிறந்த மானிட சமூகத்தை நமது பிரதேசத்தில் கட்டியெழுப் பலாம் என்பது திண்ணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றும் இன்றும்

**செல்லத்தம்பி கலையரசன்** பிரதி அதிபர், உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.

கிழக்கிலங்கையில் 136 வருடத்தைத் தாண்டி சீரிய கல்விப் பணியில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டு வரும் எமது உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கல்வி கற்று பின்னர் இப்பாடசாலையின் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு, இந்த 136வது வருட பூர்த்திக்காக வெளியிடப்படும் நினைவு மலருக்கு எனது ஆக்கம் இணைக்கப்பட்டமைக்காகவும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது ஆக்கமானது 1980இல் நான் மாணவனாக இணைந்து 1988வரை கல்வி கற்ற காலப்பகுதியில் 2004இல் ஆசிரியராகவும் பின்னர் அதன் பின் பிரதியதிபராகவும் கடமையாற்றி வரும் இக்காலப்பகுதியிலும் பாடசாலையின் நடைமுறை மாணவர்களின் நடத்தை பாடசாலை சமூக உறவு என்பனவற்றை எனது ஞாபகத்தோடு இணைத்தவாறான அனுபவத்தையும் தற்போது கண்ணெதிரே விரிந்து கிடக்கின்ற காட்சிகளையும் அதன் மூலம் எமது சமூகத்தில் ஏற்படும் நிகழ்வுகளையும் எமது மாணவச் சமூகம் செல்கின்ற பாதையையும் அதன் விளைவுகளையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விளைகின்றேன்.

முதலில் உவெஸ்லியில் எனது மாணவப் பருவத்தில் மனது நிறைந்த நினைவுகளைப் பகிரலாம் என விளைகின்றேன். 1980இல் தரம் 09 பாடசாலையில் நான் இணைந்த போது அதிபராக உவெஸ்லியில் யாராலும் மறக்க முடியாத திரு யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் அதிபராக இருந்தார். அவருக்குப்பின் திரு சுப்ரமணியம் அவர்களும் திரு மகாலிங்கம் அவர்களும் இருந்த ஞாபகம். ஆரம்பத்தில் நான் இணைந்தவுடன் தற்போதைய 'ஜோர்ச் நிம்மர்' மண்டபத்தில் எனது வகுப்பு இருந்தது. அப்போது அங்கு இரண்டு நேரப் பாடசாலைகள் நடைபெற்று வந்தது.

பாடசாலை ஆரம்பிக்கும் போது திங்கள், வெள்ளி, தினங்களில் விசேடமான சந்தர்ப்பத்திலும் காலை ஒன்றுகூடல் நடைபெறும். அதில் வெள்ளிக்கிழமை சமய ஆராதனையுடன் கூடிய ஒன்று கூடலாக இருக்கும். ஏனைய நாட்களில் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அமைதி நேரம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ்வேளை மாணவர்கள் தங்களது வகுப்புக்களில் அமர்ந்து அமைதியாக தமது கற்றலோடு தொடர்பான வேலைகளைச் செய்யலாம். இரண்டு அல்லது மூன்று வகுப்புகளுக்கு மேற்பார்வை செய்ய மாணவர்தலைவர் இதனை கண்காணிப்பர். அல்லது வகுப்புத் தலைவர் வகுப்பினைக் கண்காணிப்பார். சிரேஷ்ட மாணவத் தலைவர் அல்லது ஒழுக்காற்றுக் குழுவைச் சேர்ந்த ஆசிரியர் அல்லது அதிபர் மேற்பார்வைக்காக வகுப்பறைகளையும் சூழலையும் மேற்பார்வை செய்து வருகின்றனர். அந்த 15 நிமிடங்களும் நாங்களும் அமைதியாகவே இருப்போம். பாடசாலை சூழலும் அமைதியாகவே கழிவது இப்போது என் கண்முன்னே நிழலாடுகின்றது. பின்னர் இறைவணக்கத்திற்காக மணி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலித்தவுடன் எல்லோரும் எழுந்து நிற்போம். எங்கோ தொலைவில் இருந்து மாணவர்களால் பாடப்படும் தேவாரத்தைப்பாடி பாடல்களை ஆரம்பிப்போம்.

பாடங்கள் ஆரம்பமானவுடன் ஆசிரியர்கள் வகுப்பறைக்கு வருவார்கள். அவர்களும் எங்களுக்கு எவ்வித குறையும் வைக்காது கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு எங்களை மேம்படுத்தினர். மாலை வேளையில் சில ஆசிரியர்களால் மேலதிக வகுப்பு நடத்தப்பட்ட ஞாபகமும் உண்டு. பிரத்தியேக வகுப்பு என்பது மிகக் குறைவாகவே நடைபெற்றது. விசேடமாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கும் உயர்தர வகுப்புகளுக்குமே (ரியூசன்) பிரத்தியேக வகுப் பென்றிருந்த காலமது. அத்துடன் மாணவர்களாகிய நாங்கள் எப்பொழுதும் ஆசிரியர்களுக்கு மதிப்பளிப் பவர்களாகவும் பயபக்தியோடு கூடிய பணிவுடன் தான் நடந்து கொள்வோம். அவர்களும் எங்கள் மீதாக அக்கறையால் சிறப்பான கல்வியை வழங்கியதோடு சிறப்பான வழிகாட்டல்களிலும் ஈடுபட்டனர். அதுமட்டு மன்றி மாணவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் ஒழுக்க விழுமியங்கள், பாடசாலை நடைமுறை, கற்றல்- கற்பித்தல் கட்டுப்பாடுகளையும் மாணவர் மீதான அக்கறையில் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டனர். அது பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் உறவையும் அன்னியோன்னியத்தையும் அதிகரித்தது.

மேலும் ஆசிரியர்களை பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் காணும் போது அவர்களுக்கு கொடுக்கும் மரியாதை உள்ளார்ந்த ரீதியாகவும் இதயபூர்வ மானதாகவும் இருந்தது. அவர்கள் சஞ்சரிக்கின்ற அல்லது அவர்களோடு உரையாடும் வேளையிலும் அவ்வாறான சந்தர்ப்பத்திலும் மிகப்பணிவன்புடன் காணப்பட்டது அவர்களும் எங்களோடு மிகவும் அன்போடு பழகிக் கொண்டனர். அத்துடன் இணைப் பாட விதான கலை கலாசார விழாக்களிலும் இல்ல விளையாட்டுப் போட்டி, வாணி விழா, ஜெயந்தி விழா என்பன ஆசிரியர்களின் வழிகாட்டலில் மிகவும் சிறப்பான மாணவர்களின் பங்குபற்றலுடன் நடை பெற்றமை இன்னமும் என் மனதில் நிறைந்திருக்கின்றது.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் வகுப் பறையில் பாடங்களை சிறந்த முறையில் முன்னகர்த்திச் செல்லும் போது ஆசிரியர்களின் அர்ப்பணிப்பினை கூற வார்த்தைகளே இல்லை. மட்டுமன்றி தவணைப் பரீட்சைகளிலும் பொதுப்பரீட்சையிலும் மிகவும் கட்டுப்பாட்டுடனும் கண்ணியத்துடனுமே நடந்து கொண்டோம். இவ்வாறான நிலை நான் பாடசாலையில் கல்வி கற்று விலகி வரும் காலம் வரை இருந்து வந்தது. அத்துடன் எனக்கு 1992இல் ஆசிரிய நியமனம் கிடைத்து பல பாடசாலைகளில் கடமையாற்றிய போது 2004 இல் இப்பாடசாலையில் கடமையாற்றும் போது வெவ்வேறு பாடங்களிலும் மாணவர்களின் செயற்பாடு ஒழுங்காகவும் சிறப்பானதாகவுமே அமைந்திருந்ததுடன் பெரிய அளவிலான மாற்றங்களை என்னால் அடையாளப்படுத்திப் பார்க்க முடியவில்லை.

ஆனால் 2004இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் பின்னரான காலப்பகுதி பாடசாலைகளிலும் மாணவர்களிடையேயும் பல மாற்றங்களை ஏற்படுத்தியதுடன் பாடசாலைகளில் மாணவர்களின் நடைமுறை தலைகீழாக மாறியது என்ற கருத்தினை யாரும் மறுதலிக்க முடியாது என நினைக்கிறேன். இந்த நிலைமையானது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலை சமூகம் பாடசாலை முகாமைத் துவம் என்பனவற்றுக்கிடையே இருந்த அன்னியோன் னியத்தையும் உறவையும் சீர்குலைத்ததுடன் மாணவர்கள் தடம்மாறிப் பயணிக்கவும் காலமாக அமைந்திருந்தது. அதாவது வகுப்பறைகளும், கற்றல் கற்பித்தல் முறைகளும், வளங்களும் முன்னைய அளவிலே இருக்க நாகரீக மாற்றம், வெளிநாட்டுக் கலாசாரம் என்பன திணிக்கப்பட்டு மாணவர்கள் சிற்சில விடயங்களில் திசைமாற்றப்பட்டுள்ளனர். அது மட்டுமின்றி மாணவர்களை கற்றலின்பால் ஆற்றுப் படுத்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தல் என்ற அடிப்படையில் பொருத்தமற்ற சிலரின் தவறான வழிகாட்டுதல்கள் மூலம் மாணவர் சமூகம் தமக்கு சாதகமானவை எனக் கருதிய குறுகிய கால நன்மை யளிக்கும் விடயங்களை தக்கவைத்துக் கொண்டமை யினால் பின்னரான காலப்பகுதிகளில் அவர்கள் கற்றலை நோக்கியும், எதிர்காலத்தை நோக்கியும் வழிகாட்டுவதில் மாபெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டிய இக்கட்டான நிலை தோன்றியுள்ளதுடன் அதிகமான பெற்றோர்களும் தத்தமது பிள்ளைகளுக்கான நல்வழிகாட்டலைக் காட்டி ஆற்றுப்படுத்த முடியாத இக்கட்டான நிலையே உள்ளது.

விசேடமாக உலகமயமாக்கலில் முக்கியமான செல்வாக்குச் செலுத்திய தொடர்பாடல் முறைகளில் செல்லிடத் தொலைபேசிப் பாவனையும் பல தொலைத் தொடர்பு நிறுவனங்கள், மிகக்குறைவான விலையில் செல்லிடப்பேசிகளை வாங்கக் கூடிய நிலைமை, வயது வேறுபாடின்றி சிம்அட்டைகளை வகை தொகையின்றி கொள்வனவு செய்து பாவிக்கக்கூடிய சாதக நிலைமை பல்வேறு தொலைகாட்சி அலைவரிசைகளின் உருவாக்கம், வெளிநாட்டு குறிப்பாக தென்இந்திய அலை வரிசை களில் இருபத்து நான்கு மணித்தியாலமும் பெற்றோரைச் சோம்பேறியாக்க அழுது வடிக்கின்ற தொலைகாட்சி நாடகங்கள், தென்இந்திய திரைப் படங்களில் ஏற்பட்ட நவீன மாற்றங்கள், வர்த்தக நோக்காக் கொண்ட கதை அமைப்புகக்கள், மாணவர்களை தற்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாநாயகர்களைப் போல் செய்யும் நிலைமைக்கு உள்ளாக்கி விட்டது என்பது யதார்த்த மானதாகும்.

இந்நிலைமையானது மாணவர்கள் மத்தியிலே போதைப் பொருள் பாவனையை அதிகரிப்பதுடன், அவர்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றது. அதுமட்டுமல்ல தென்இந்தியத் திரைப்பட அல்லது நாடகப் பாணியில் சிலபெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்காக காதல்தூது அல்லது கல்வி கற்கும் போதே தமது பிள்ளைகளுக்கு சக மாணவனை அல்லது மாணவியை திருமணத்திற்காக பேச்சு வார்தை நடத்தும் மிகக் கேவலமான சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது மிக மன வேதனையளிக்கின்றது.

மேலும் தற்காலத்தில் தமது பிள்ளைகளை வழிப்படுத்துவதில் அதிகமான பெற்றோர்கள் நழுவல் போக்கினையே கடைப்பிடிக்கின்றார்கள். அதிகமான ஆசிரியர்களால் மாணவர்களின் கற்றல் மேம்பாடு, நடத்தைகள், ஒழுங்கீனங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக பெற்றோர்களை அழைக்கும் போது அதிகமாக பாடசாலைக்கு சமூகமளிக்காத தன்மையும் சில வேளைகளில் வரும் பெற்றோர்கள் 'நான் என்ன செய்வது எவ்வளவு கூறினாலும் அவன் அல்லது அவள் தான் நினைத்ததைத் தான் செய்கிறான்' என்று கூறுவதும் தமது பிள்ளைகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நல்வழிகாட்டாத நிலையும் அதிகமாகக் காணப்படுகின்றது. இது எதிர்கால சமூகத்தின் இருப்பையே கேள்விக்குறி ஆக்கியுள்ளது.

அத்துடன் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமை தொடர்பான நிறுவனங்களின் செயற்பாடுகளும் சில வேளைகளில் மாணவப் பருவத்தில் அவர்களுக்கான சுதந்திரத்தை அபரிதமாக வழங்குவதற்கான விழிப்புணர்வை வழங்கும் அதே வேளை கல்வியை நோக்கிய அல்லது சமூகப் பாரம்பரியத்தையும் ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதிலும் சற்று மந்த மனநிலை உண்டு பண்ணுவது போன்றே தென்படத் தோன்றுகிறது. ஏனென்றால் அதிகமான வேளையில் ஆசிரியர்கள் மாணவர்களை கல்வியின் பாலும் ஒழுக்கத்தின் பாலும் கொண்டு செல்வதற்காக கடுஞ்சொற்களைக் கூறமுடியாத நிலையே காணப்படுகின்றது. இவற்றிக்கான பல விடயங்களையும் உதாரணங்களையும் அந்தரங்கம் கருதி தவிர்க்கிறேன். அது மட்டுமன்றி பாடசாலைக்கு செல்லிடத் தொலைபேசி மாணவர்கள் எடுத்துவரக் கூடாது என்பது சட்டமாகும். எனினும் அவர்களது துணிவான நிலையையும் அவ்வாறு கொண்டு வரப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டவை பல பெற்றோர்கள் வந்து பெறாத நிலை (பெற்றோருக்குத் தெரியாது பிள்ளைகளின் கையடக்கத் தொலை பேசிப் பாவனை) காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி தற்காலத்தில் போதை வஸ்து பற்றிப் பேசப்படும் போது அவற்றை இடமாற்றும் தரகர்களாகவும், விற்பனை செய்பவர்களாகவும், பாவித்து அழித்துச் செல்பவர்களாகவும் காணப்படுவது மிகக் கவலையே. அது மட்டுமின்றி தற்போது பல தினங்கள் சமூக விழுமியத்தினைப் பேண அனுஷ்டிக்கப்படுகின்ற போது எவ்வித தினமும் அனுஷ்டிக்காத அந்தக் காலத்தினைப் போல் தற்போது மாணவர்களில் பல பேரின் நடத்தை இல்லை என்பதே கசப்பான உண்மை. பெற்றோரையும் பெரியோரையும் ஆசிரியர்களையும் மதிக்காத அவர்களால் முன்னால் விட்டு பின்னால் நின்று கேலி செய்வது சில வேளைகளில் முகத்திற்கு முன்னே முரணாக நடந்து கொள்வது என்பன தற்போது தாராளமாக நடந்தேறுகின்றன. மட்டுமின்றி வகுப்பறைகளிலும், மாடிப்படிகளிலும் பாடசாலைச் சூழலிலும் அதிகமானோர் பொருத்தமற்ற செயற்பாடுகளை வெளிப்படுத்துவது கற்றலுக்கு ஆயத்தமாகவும் அவாவாகவும் இருக்கும் மாணவர்களுக்கு பெரும் இடைஞ்சலாகவே உள்ளது.

மாணவர்களின் கற்றல் அடைவு அவர்களின் பாட ரீதியான குறைபாடுகளைக் குறித்துக் காட்டி அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பெற்றோர்களுக்கான ஒன்றுகூடல் நடாத்தப்படும் போது பெற்றோர்கள் கூறுவது "எனது பிள்ளை எல்லாப் பாடத்திற்கும் மேலதிக வகுப்பிற்கு அனுப்புகிறேன்" என்று கூறுகிறார்கள். இது தற்போதைய ரியூசன் கலாசாரத்தின் நிலை அதாவது பாலர் வகுப்பிற்கு பிள்ளை செல்லும் முன்னே தொடங்கும் இந்த ரியூசன் கலாசாரம் பல்கலைக்கழகம் செல்லும் வரை தொடர்வது தற்போது பெற்றோரை தமது கல்வியின் பால் விழிப்படையச் செய்திருப்பது மகிழ்வாக இருந்தாலும் பிள்ளைகள் பாடத்தைக் கற்காது வெறுமனே பணத்தைச் செலவு செய்வதனால் உயர்ந்துவிட முடியாது என்பதை அதிகமான பெற்றோர்கள் தற்காலத்தில் கவனிக்கத் தவறுகின்றனர். இந்நிலை தலைமுறை இடைவெளி எனக் கூறப்பட்டாலும் பெற்றோர்களும் எமது சமூகம் இந்நிலைமையைச் சீர்தூக்கி பார்ப்பதோடு விழித்தெழா விட்டால் எமது சமூதாயத்தின் நிலைப்பாடு கேள்விக்குறியாகும்.

எதுஎவ்வாறாக இருந்த போதிலும் எமது சமூதாயத்தில் பல பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியிலும் விழிப்புணர்வுடன் செய்படத் தொடங்கியிருப்பதும் அற்நெறிசார் விழுமியங்களில் கூடுதல் கவனத்தை தமது பிள்ளைகளை நோக்கி திருப்ப முயற்சிப்பதும் ஓரளவுக்கு நிம்மதியளித்தாலும் இன்னும் அதிகமான பெற்றோர் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டியதுடன் எதிர்கால சந்ததியான தமது பிள்ளைகளையும் நன்நெறியின் பாலும் கல்வியின் பாலும் ஈர்க்க வேண்டிய பெருங்கடமையுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மைப் படைத்த பிரம்மன்



முருகுப்பிள்ளை கிருபாகரன்
பொறியியலாளர்

பன்நூற்றுக் கணக்கான பட்டதாரிகளைப் படைத்தான் பிரம்மன்
அவன் பெயர் அந்நாளில் உவெஸ்லி உயர்தர பாடசாலை
இப்பொழுது பிரம்மனின் வயது நூற்று முப்பத்து ஆறு

மனிதனுக்கு வயது போனால் மரணித்துப் போவான்
எம்மைப் படைத்த இந்தப் பிரமனுக்கு
வயது போகப் போக கம்பீரமும்
வாலிபமும் மெருகேறி வளரும் .

பட்டதாரிகளைப் படைத்த பிரம்மன்
அஷ்ரப் போன்ற அரசியல் மேதைகளையும்
ஆயிரக் கணக்கான மேதாவிகளையும்
படைத்து விடத் தவறியதில்லை

நானும் நான்காம் வகுப்பில் உள் நுழைந்தேன்
"வாய்ப்பாடுகளைப் பாடமாக்கி விட்டீர்களா.........."
இது செல்லத்தம்பி ஐயாவின் ஆதங்கக் குரல்
அவரும் பிரம்மனின் சேவகர் தான்
அவரின் அன்பான அரவணைப்பில் பாடம் பயின்றோம்
அவரையும் தன் நிரந்தர அதிதியாக, அழைத்து விட்டான்
ஆண்டவன் அண்மையில்

சிவராத்திரியன்று இரவிரவாக கோயில் நிகழ்ச்சிகள்
மறுநாள் வகுப்பிற்கு செல்லவில்லை
பாடசாலைதான்டா கோயில் என்று பிரம்படி வாங்கினேன்,
யோகம் ஐயாவின் கண்டிப்பிற்கு ஆளாகி
அவர் மாணவர்களை அடித்த அடிகள்
மாணவ சமுதாயத்தின் முன்னேற்றப் படிகள்

அதிபர் யோகம் ஐயா என்றால் கண்டிப்பு
கண்டிப்பாகக் கருணைக்கும் நிகர் அவரேதான்.

புளிய மரத்தின் அடியில் சில சிறார்கள்,
மதிய போசன வேளையில்,
சாப்பிட்டு விட்டீர்களா?......
இது அதிபரின் அதட்டல்
சிறார்கள் முழிப்பார்கள்
புரிந்து விடுவார் அதிபர்
இவர்களுக்குக் கட்டாயம் கொடு என்பார் கன்ரீன் அன்ரியிடம்
இது நான் கண்ணால் கண்ட அதிபரின் உள்ளம்.

ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்து ஒன்பது எண்பதுகளில்
உயர்தர வகுப்பு விஞ்ஞான பிரிவிற்கு
அடிக்கல் பதித்த காலப்பொழுது,
ஆசிரியர்கள் பற்றாக்குறை,
ஆனால் எம்மைப் பல்கலைக்கழகத்திற்கு
அனுப்ப வேண்டும், இதுதான் அதிபரின் மூச்சு
Zahira கல்லூரியில் இருந்து வரவழைத்தார்
ஆசிரியர்களை விடுமுறை வகுப்பிற்கு.
அவர்களுக்கு வசதிக் காசிலேதான் கொடுப்பனவு

கோடைகாலம் நீர்த்தட்டுப்பாடு
கிணறுகள் வற்றிவிட்ட நிலையில்
மாணவர்கள் குடிநீருக்கு அயலவர்களை அண்டினர்.
யோகம் ஐயாவுக்கு அதிருப்தி
பிள்ளைகளே பஞ்சம் போய்விடும்,
பஞ்சத்தின் வடு போய்விடாது
எச்சரித்தார் பிள்ளைகளை அசம்பிளியில்
இது எம் வாழ்விலும் ஓர் எச்சரிக்கை

இன்னும் கூறலாம் பிரம்மனின் பெருமையை
ஆனால் நீண்டு விடும் ஆக்கம்
பாடசாலை வளர்ச்சிக்கு
என்றென்றும் பாடுபடும் அதிபருக்கும்,
ஆசிரியர்களுக்கும் அனைத்து
சேவகர்கட்கும் மற்றும் மாணவ மாணவிகட்கும்
வாழ்த்துக் கூறி,
நிறுத்திக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பிட்டிமுனையின் கல்வி அபிவிருத்தியில்
# உவெஸ்லி உயர்தர பாடசாலையின் பங்கு

**சஞ்சீவி சபாரெட்ணம்**
(அதிபர் கமு/சிவசக்தி மகாவித்தியாலயம்)

கிழக்கிலங்கையின் கல்விக் கண்ணாக விளங்கும் எழில்மிகு கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 136வருட தினத்தை முன்னிறுத்தி வெளியிடும் சிறப்பு மலருக்கு கட்டுரை ஒன்றை எழுதுவதையிட்டு மிகுந்த மனமகிழ்வு கொள்கிறேன்.

இக் கலாசாலை ஒரு பெரிய விருட்சம் போல் பெரிதும் வளர்ந்து இப்பிரதேசம் எங்கும் கல்வி நிழல் பரப்பி பெருமையுடனும், கௌரவத்துடனும் தனக்கான அடையாளத்துடனும் மென்மேலும் வளர்ந்து கொண்டு இருக்கின்றது. இதன் அபிவிருத்தியில் வியாபித்துள்ள இதன் புகழ்ப் பரப்பின் பின்னணியில் கல்முனைப் பிராந்தியத்தில் நற்பிட்டிமுனையின் கல்வி வரலாறையும் , அபிவிருத்தியையும் உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட கால வரலாற்றோடு இணைத்து சில இடங்களில் தொட்டுக்காட்டி ஆராய முடியும் என்பது எனது பணிவான திண்ணமாகும்.

நற்பிட்டிமுனையின் கல்வி வரலாறுக்கு ஆதாரமாக கலி பிறந்து 2868 களில் (கி.மு 2ம் நூற்றாண்டு) கூந்தனின் மகனான சேனனின் ஆட்சிக் காலத்தில் "நாப்புட்டி" (இன்று நற்பிட்டிமுனை) இராசாக்கள் கூடும் பிரதான தலமாக விளங்கியது. எதிர்மன்ன சிங்க மன்னன் காலத்தில் (15ம் நூற்றாண்டில்) வங்கர் குலத்துக்கதிபரின் காலமாகக் காணப்பட்டது.



இக்காலப்பகுதியில் செந்நெல் விளைவித்து தானிய சங்கம் அமைத்து பல திக்கிலும் கல்விச்சாலைகள் அமைத்ததாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு ஆரம்ப காலத்தில் திக்கதிபர்கள் தலமாக நற்பிட்டிமுனை விளங்கியமையினால் பல்வேறு நிர்வாகக் கட்டமைப்புக்கள் இங்கு நடைமுறையில் இருந்தன . இதனை அடிப்படையாகக் கொண்டு இக்கிராமத்தில் கல்விச் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இக் காலப்பகுதியில் ஆலயங்களில் கவிபாடுதல், அம்மானை, நடைவழிச்சிந்து, கூத்துகள் முதலான





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செவியேறல் முறைக்கல்வி முறைகளும் வீரியத்துடன் செயற்படுத்தப்பட்டுள்ளன. 1766 ம் ஆண்டு தென்பத்திரகாளி அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டு அதன் ஊடாக பல்வேறு சமயக்கல்வி முறைகள் போதிக்கப்பட்டுள்ளது. அம்மன் தாலாட்டு இதற்கு ஆதாரமாகும். இதனைத் தொடர்ந்து 18ம் நூற்றாண்டில் நற்பிட்டிமுனையின் கல்விமுறை திண்ணைப்பள்ளிகளில் நிகழ்த்தப்பட்டது. இங்கு கற்றுக் கொடுத்த ஆசிரியர்கள் சட்டம்பிமார் என அழைக்கப்பட்டார்கள். அவர்கள் பாரதம், நிகண்டு, விவேக சிந்தாமணி, ஔவையார் பாடல்கள் போன்றவற்றை மனனம் செய்து கற்றுக் கொடுத்தார்கள். இவர்களுக்கு முறையான ஊதியம் கொடுக்கப்பட வில்லை. மாணவர் நாளாந்தம் கொடுக்கும் கையுறையும் வருடம் தோறும் எண்ணெய்சிந்து பாடுவதால் கிடைக்கும் வருமானமும் வயல் விளைச்சலின் பின் கொடுக்கும் புதிர் என்பனவும் இவர்களுக்கு ஊதியமாய் அமைந்தன.

இவ்வாறான நற்பிட்டிமுனையின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பகாலங்களில் முன்னெடுக்கப் பட்டமைக்கு பல ஆதாரங்கள் உள்ளன. இங்கு பள்ளிக் கூடத்தை முதன் முதல் ஆரம்பித்து நடத்தியவர் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களாவார். அவரது காலத்தில் ஓலைக்கொட்டகையில் பாடசாலை நடத்தப்பட்டது. ஐயரின் பள்ளி என மக்களால் அழைக்கப்பட்ட இப்பாடசாலையில் சீனித்தம்பி உபாத்தியார், பிச்சைப் பிள்ளை உபாத்தியார் ஆகியோர் கடமையாற்றினர் என அறியமுடிகின்றது.

இக்கால கட்டத்தில் 1814இல் மட்டக்களப்பு பிரதேசத்தில் மெதடிஸ்த சபையில் பல்வேறு முறைசார் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. 1883 களில் மெதடிஸ்த சபையால் பெண்கள் விடுதிப் பாடசாலை கல்முனையில் நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1901 களில் இதே மிஷனரி "லீஸ்" எனும் பாடசாலையை ஆரம்பித்து இரண்டு ஆங்கிலப் பாடசாலைகளாக இயங்கின பின்னாளில் இவை உவெஸ்லி உயர் தர பாடசாலையாக இணைந்து விளங்கின. இப்பாடசாலையில் எமது கிராமத்தை சேர்ந்த சிலர் இணைந்து கல்வி கற்றதற்கான சான்றுள்ளது.

இவ்வாறு உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் நற்பிட்டிமுனையின் அனேகமான கல்விமான்கள் உயர்தரத்தில் இப்பாடசாலையினூடாக வெளிவந்தவர்களாகவும் தடம் பதித்தவர்களுமாகவுமே காணப்படுகின்றனர். குறிப்பாக 1872இல் மெதடிஸ்த மிஷன் தனது தேவாலயப் பள்ளி ஒன்றை நற்பிட்டிமுனையில் நடத்தி அதன் ஊடாகக் கல்விப் பணியை முன்னெடுத்தமைக் கான ஆதாரங்களும் உண்டு. இக்காலகட்டத்தில் நற்பிட்டிமுனை மிகவும் முக்கியமான, நிர்வாகக் கட்டமைப்பு மிக்க நகரமாக விளங்கியமையால் இங்கு அதிகமான கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டன.

குறிப்பாக இலங்கையின் கல்விக் கட்டமைப்பில் 1928ன் பின் மாற்றங்கள் ஏற்பட்டன . தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் தோற்றத்திற்கான முனைப்பிற்கு வித்திடப்பட்டது. இதன் அடிப்படையில் நற்பிட்டி முனையில் அரச உதவி பெறும் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் உயர் திரு கே.வீ. இரத்தினசிங்கம், திரு செல்லையா வன்னியனார் மற்றும் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் உள்ளிட்ட கிராமப் பெரியவர்கள் ஒன்றிணைந்து 1932ம் ஆண்டு அரச பாடசாலை ஒன்றை ஆரம்பித்தனர். இதற்கான காணியை திரு கே.வீ.இரத்தினசிங்கம் வழங்கினார். இப்பாடசாலையே அன்றைய காலகட்டத்தில் உயர்தரத்திற்கான பாடசாலையாகவும், SSC சான்றிதழ் வழங்கும் பாடசாலையாகவும் இப்பிரதேசத்தில் விளங்கியது. பின்னைய காலங்களில் இப்பாடசாலை தனது தரங்களைக் குறைத்துக் கொண்டு தரம் 05 உடன் தனது கல்வி நடவடிக்கையை மட்டுப்படுத்திக் கொண்டது. அதன் பின் தங்களின் உயர் கல்வியை உவெஸ்லி உயர்தர பாடசாலை ஊடாகவே இக் கிராம மாணவர்கள் பூர்த்தி செய்தார்கள்.

இன்று நற்பிட்டிமுனையிலிருக்கும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் இப்பாடசாலையின் பழைய மாணவர்களாகவே இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு உவெஸ்லிக்கும் நற்பிட்டிமுனைக் கல்வி அபிவிருத்திக் கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திய காரணிகளில் பிரதானமாக காலத்திற்கு காலம் உவெஸ்லி அதிபர்களாக கடமை புரிந்தவர்களையும் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

அந்த வகையில் திரு.கே.சுப்பிரமணியம் அதிபர் அவர்களை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் . நற்பிட்டிமுனை சிவசக்தி மகாவித்தியாலயம் 5ம் தரத்துடன் தனது கல்வி நடவடிக்கையை நிறுத்திக் கொண்டமையினாலும் , திரு .கே .சுப்பிரமணியம் அவர்கள் நற்பிட்டிமுனையில் திருமணம் செய்து வாழ்ந்தமையினாலும், அவர் உவெஸ்லியின் அதிபராக கடமையாற்றியதாலும் அனேகமான மாணவர்கள் உவெஸ்லியை நோக்கி ஈர்க்கப்பட்டார்கள். அதிலும் திரு.கே.சுப்பிரமணியம் அவர்கள் கிராமத்துடனும், கிராமப் பாடசாலையுடனும், அதன் அதிபருடனும் நெருங்கிய தொடர்பினைப் பேணியதனால் எமது கிராமத் தின் கணிசமான மாணவர்கள் மேல் கல்விக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவெஸ்லி உயர்தர பாடசாலையையே தெரிவு செய்தனர்.

அதன் பிற்பாடு உவெஸ்லியின் அதிபராகக் கடமை புரிந்த திரு.பா.வெங்கடாசலம் அதிபர் அடிப்படையில் கரவாகைப் பிறப்படமாகக் கொண்டவராக இருந்தார் கரவாகுக்கும் நற்பிட்டிமுனைக்கும் பூர்வீக உறவு ஒன்று இருந்தது. நற்பிட்டிமுனையின் ஆதிக் குடியினரும் கரவாகு மக்களும் இரத்த சம்பந்த உறவுகளைக் கொண்டவர்கள் . அதனாலும் பலர் உவெஸ்லியே தங்கள் பிள்ளைகளின் கல்விக்கு உகந்த இடமாக கருதினர். அத்துடன் திரு.பா.வெங்கடாசலம் அதிபரின் காலகட்டத்தில் கொத்தணிப் பாடசாலை நிர்வாக நடைமுறை இருந்தமையினால் கொத்தணி அதிபர் என்ற ரீதியிலும் இவரின் நிர்வாகத்தின் கீழ் சிவசக்தி மகா வித்தியாலயம் அமைந்திருந்தமை இரு பாடசாலைகளுக்குமான தொடர்புக்கு மேலும் வழி கோலியது . உவெஸ்லியின் கழுத்துப்பட்டிச் சின்னம், மாணவர் தலைவர் சின்னம் என்பன உவெஸ்லியின் சின்னங்களாகவே காணப்பட்டன. இதனால் நற்பிட்டிமுனை மக்கள், மாணவர்கள் இப்பாடசாலை தமக்குரிய பாடசாலையாகக் கருதிச் செயற்பட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து இப்பாடசாலையின் தற்போதைய அதிபர் திரு.வ.பிரபாகரன் இப்பாடசாலையின் மிகப் பலமிக்க அதிபராகவும் பல மாற்றங்களையும் நிர்வாக ஒழுங்குகளையும் செய்யும் ஒருவராக உள்ளார். சகலரையும் அரவணைத்து இப்பாடசாலையை நேசிக்கின்ற அன்னியோன்னியத்தை ஏற்படுத்திப் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாக மிகுந்த அக்கறை காட்டினார். அதன் அடிப்படையில் இப் பிரதேச மக்களுடன் நெருங்கிய தொடர்பகளைப் பேணி இப்பாடசாலையின் மாணவர் தொகையை அதிகரிப்பதிலும் கல்வி அபிவிருத்தி, மற்றும் ஏனைய அபிவிருத்தி விடயங்களிலும் முழுமூச்சாக செயற்பட்டார்.

இதற்காக இப் பிரதேசத்தில் உள்ள பாலர் பாடசாலைக்கு சென்று அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களைச் சந்தித்து தரம் 1ல் சேர்வதற்கான படிவங்களை வழங்கி மாணவர்களை உவெஸ்லியில் இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டார்.

அதில் எமது கிராம மாணவர்களும், பெற்றோர்களும் அதிக ஈடுபாட்டைக் காட்டினார்கள். அத்துடன் இக்கிராம மக்களின் கல்வி அபிவிருத்தியிலும் இவர் கூடிய கவனம் செலுத்தினார். இதன் பிரதான காரணமாக நற்பிட்டிமுனைக் கிராமத்தில் உள்ள அனேகமானவர்கள் அவரின் உறவுக்காரர்களாகவே காணப்பட்டமையைக் குறிப்பிடலாம். குறிப்பாக அவரின் மனைவியின் பூர்வீகம் நற்பிட்டிமுனையாக இருந்ததினாலும் இங்கு வாழ்பவர்கள் அவரின் உறவுகளாகக் காணப்பட்டமையினாலும் இக்கிராமத்தின் மீதும் அதன் கல்வி அபிவிருத்தி மீதும் அதிக கவனம் செலுத்தினார்கள் எனக் கூற முடியும் .

அதிபரின் இச்செயற்பாடு மாணவர்களுக்கு உவெஸ்லி உயர்தர பாடசாலையில் இணைவதற்கு ஓர் உந்து சக்தியாக அமைந்தது. அத்துடன் நற்பிட்டிமுனையில் உள்ள பெரும்பாலானவர்கள் உவெஸ்லியின் பழைய மாணவர்களாக இருந்தமையினால் ஆரம்ப காலம் தொடக்கம் நற்பிட்டிமுனையின் கல்வி அபிவிருத்தியில் உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிக பங்கு வகித்துள்ளது எனக் கூறுவதில் பெருமிதமடைகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலப்பதிவுகளில் என் நினைவுகள்



**திருமதி சித்தி ஸரீனா அபூபக்கர்**
சிரேஷ்ட இரசாயனவியல் ஆசிரியை, கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.

என் நினைவுப் பெட்டகத்திற்கு
வயது ஐம்பது
கலர் கலராய்க் காட்சிகள்
என் Flash back திரையில்

எங்கள் நானா ஒரு புரட்சிக்காரன்;
அகத்தில் அரிவையர்
புதுமை படைத்திட
வாப்பாவை இடித்துரைத்தார் !

அதன் விளைவு?
ராத்தா வெஸ்லியில்
ஒரு விடுதி மாணவி.

கிழமை தோறும் தரிசனம்
அழகாய்ச் சிரித்து வரவேற்கும்
ஆங்கிலப் பெண்மணி
அற்கின்ஸ் அம்மா !

சீனச் சுவர் போல்
நீண்டு செல்லும் வளாகம்!

என் சின்னக் கண்கள்
சிறை பிடிக்க முடியாமல்
விழி பிதுங்கி நின்ற
அந்தக் காலம் !

யோகம் Sir க்கும்
என் தந்தைக்குமுள்ள நல்லுறவு;
பெரிய மைத்துனர் அல்லாபிச்சை
இங்கு ஓர் ஆசிரியர் ;
அவர் பிள்ளைகள்
இங்கு மாணவர்கள் ;

நன்றாய் யோசித்துப் பார்த்தால்
இது எங்கள் பாடசாலை
வெஸ்லியில் விளையாட்டுப் போட்டி;
ஊரெங்கும் கொண்டாட்டம் ;
எங்களுக்கோ இரட்டிப்பு மகிழ்ச்சி;
மைத்துனரின் தில்லையம்பல
இல்லம் திருமண கோலத்தில்

ராத்தாவின் மனம் கோணாமல்
அவ்வப்போது பச்சைக்குள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டிப் பார்த்தாலும்,
உதிர நிறத்தின் உத்தர தாண்டவம்
பல மைல்களுக்கு அப்பால்
பார்ப்போரை பரவசப்படுத்த,
நானும் என் மனதை பறிகொடுத்து
நின்றேன்.

அல்லா பிச்சை மாஸ்டரின்
பிள்ளைகள் மைதானத்தில்
வெற்றி முரசு கொட்ட,
என கனாக் காலம்
Climax ஐ தொட்டது !

நாட்கள் நகர்ந்தன
மைத்துனரின் இடமாற்றம்
அவர் பிள்ளைகள் இடமாற்றம் ;
நாங்கள் எல்லோரும்
அல்-மனாரில் சங்கமிக்க,
என் வெஸ்லி கனவு
கலைந்து போனது !

பல்கலைக்கழகம் தெரிவு
பரீட்சை எழுத இங்குதான் வந்தேன்.
மாற்றங்கள் பெரிதாய் இல்லை;
மாறாமல் இருந்த மண்வாசனை;
ஆழமனக் கிடக்கையில்
பீறிட்டெழுந்த
ஞாபக அலைகள் !

மீண்டும் ஒரு 2009
ஆசிரியர்களுக்கெல்லாம் இடமாற்றம்
எனக்கு முன்னால் பல தெரிவுகள் ;
நான் கொண்ட காதல்
வெஸ்லிக்கு வாக்களித்தேன் !
அதிபரோடு
ஒரு தொலைபேசி இணைப்பு
"வாருங்கள் Teacher" என்றார்.
ஒரு வருடம் என்று தான்
நினைத்தேன் ;
பத்து வருடங்கள் ஓடி விட்டன!

சந்தர்ப்பங்கள் பல
பவிசாய் வந்தன
என்னை அழைத்துச் செல்ல;
ஆனால்,
நிருவாகம் தந்த
மரியாதை, முன்னுரிமை
என்னை செஞ்சோற்றுக்
கடனாளியாக்கியது !

'பிரபா' என்ற பிரம்மனின்
பன்ன சாலையில்
பத்தாயிரம் தவங்கள் செய்தேன்
அத்தனையும் அழகாய் மிளிர்ந்தன !

ஒவ்வொரு அசைவுக்கும் பின்னாலும்
அதிபர் பிரபா
ஒவ்வொன்றும் அழகு பெற
அணு அணுவாய் ஆசிர்வதித்தார் !

அவர் நேர் கொண்ட பார்வை,
நிமிர்ந்த செஞ்சம்
அஞ்ஞாமல் பணி செய்ய
அழியா வரங்களாயின !

உயிரியலின் ஞானி;
உறவுகளின் உத்தமர் ;
உவெஸ்லியின்
கால் நூற்றாண்டுக் காதலர் ;
ஒரு தசாப்தத்தின் பேராசான் ;
நீங்கள் என்றென்றும்
நீடுழி வாழ்க!

மாபெரும் கலைக்கூடம்
மாதவர் பெரியோரின் தவச்சாலை;
திக்கற்றவர்களின் கலங்கரை விளக்கு;
திகட்டாத தீஞ்சுவைக் கதம்பம்

வெற்றியின் நிறைகுடம்
வேதனையில் சுமைதாங்கி;
வேறுபாடில்லா தாலாட்டு
உன் மகத்தான சேவை
இறுதி வரை தொடர
நான் மனமுருகி
இறைவனைத் தொழுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A Past Pupil of Repute,

## Deputy Principal Reflects and Salutes...

**S DEVACHANDRA**
(Deputy Principal)




' Education is What remains after one has forgotten everything he learned in schooL '
- Albert Einstein

Kalmunai WESLEY, my mother, her lofty motto ' UTMOST FOR THE HIGHEST ' ' Let there be light ' – the light that will dispel the darkness of ignorance, selfishness and avarice – in terms of discipline, education and unity amongst students, teachers and school society remains at the highest level.

Gaining admission to Kalmunai WESLEY is a delightful dream not easily realizable as the competition is high and rigorous. I thank the almighty for having extended to me this very rarest opportunity to serve this noble college by virtue of being a Past Pupil (1967 - 1969) and later ( 2011 – 2012 ) serve Her as best as a teacher, ( 2012 – 2017 ) Vice Principal and at present a Deputy Principal and it is more a blessing than a pride or a privilege to me to have the 136th Centenary Celebration during my tenure in office. By the way I am so much proud of my mother Mrs Issabella Theivanai Chandrasegaram who was also a student in the Girls Boarding School in 1930's. It is with great emotion and gratitude, I wish to say humbly that I am WHAT I am today, thanks next to my family, it is missionary schools ' WESLEY ' at EAST coast and ' HARTLEY ' at NORTH coast.

This ' ONE-THREE-SIX ' ( 136 ) number is deemed a remarkable record of history of Kalmunai WESLEY that has successfully completed 136 years of dedicated edifying service to our motherland irrespective of ethnicity, religion, caste or creed. We have successfully celebrated the centenary and the 125th anniversary and now when we are celebrating the 136th mega celebration, I may quote that our Learning College is a place of WORSHIP.

School society who too enjoys a wide popularity among the Wesleyites at home and abroad is celebrating the 136th anniversary of the college which our ever resplendent temple of learning richly deserves. At this request I consider it my sacred obligation to forward a message to the souvenir that is being published to commemorate the significant event.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The college is one among many prized possessions we people of the EAST inherited from menfolk with evangelical zest, who labored in difficult terrain to provide English Educated natives to the workforce of the colonial masters. This opened corridors to the world of western knowledge and culture that over a period of time metamorphosed the popular to higher level of intellect activity and prosperity. The function of SDS, SDEC, SMT, PPA, SBPTD, EPSI, STAFF conference, Technical Committees, Circles of Rating, Co-committees and other backup clutches have been also officiating executively operative.

**Kalmunai ' WESLEY ' on 19th to 21st century !**

The Methodist Missionaries who set foot on the beautiful Sri Lankan soil at Weligama on the 29 June 1814 in 19th century to extend sound education in the pearl. The missionary, Rev William Ault stayed at Batticaloa for eight months and established 8 missionary schools in the East.

The Superintendent Minister of Methodist Church, Kalmunai Rev J Trimmer established Girls Boarding School (GBS) at Kalmunai in 1883. Though the education was banned for women then, English education was taught in the school through the mother tongue. It was registered and approved on 30 November 1883 as the first school in this district with 18 pupils on roll in a cadjan shed. Miss Jane Weerakuddy was then the teacher and Mr S Govinthar, a warden. In accordance with the educational policy, the Girls Boarding School reverted to a Tamil School in 1929 and teaching optional English for one period a day.

Tamil was the medium of language in the region for men in the 20th century. The Superintendent Minister of the Methodist Church, Kalmunai Rev Gabriel Leese realized the importance of English education and formed Boys English School in Kalmunai. This Boys School was registered as an English School and was named ' Leese High School.

Although talks of amalgamating these two institutions namely ' Girls Boarding School and Leese High School ' had been going on for a long period of time, it actually came into being in May 1953. These two schools were amalgamated under a new name of ' WESLEY HIGH SCHOOL ' on the same year by the Missionaries with the Motto of ' Utmost for the Highest ' It is still illuminating as a mixed school in the similar name with the roll of 1954 including the academic & nonacademic staff of 99.

' DEAF LINK ' an institution for the inclusive kids powered by the METHODIST MISSION of Srilanka had been included in the school in 2008 during the period of former Principal Late Mr Pon Murugiah with 22 students and still be functioning with 57 students under the Motto of ' Tender Friendly Guidance for Better Life ' in the institution. The children who are reading here suffering from Learning disabilities, Speech& Language impairment, Mental Retardation, Impairment, Hearing Emotional Disturbances, Multiple Disabilities, Orthopedic Impairment, Visual Impairment, Deaf ,Blindness, Autism, Brain Injury and many other psycho disorders. Six teachers guide them on a dedicated manner.

Eleven principals namely Rev GJ Trimmer ( 1883 – 1929 ), Miss B Atkins( 1930 – 1940 ), Miss GK Thiliampalam( 1941 – 1952 ), Mr MG Nallathamby( 1953 – 1954 ), Mrs R Cinniah( 1955 – 1961 ), Mr SJ Wilson( 1962 – 1971 ), Mr Yogam Velluppillei( 1972 – 1979 ), Mr K Subramaniam( 1980 – 1981 ), Mr S Mahalingam( 1982 – 1983 ), Mr B Vengadasalam( 1984 – 1997 ), and Pon Murugiah( 1998 – 2008 ) served as principals in the moral college up to 2008.

Mr Vadivel Prapakaran who joined in teaching as his noble career and promoted gradually as a Vice Principal in 1993, as Deputy Principal in 1999 and an In-charge Principal in 2009. He is SLEAS holder and administrator equivalence superiority with great unit of chastisement and matriarchal makeups towards his responsibility. There is a ring of authenticity and nobility of courage and earnestness in whatever he does. He is constantly pragmatic and practical in his approach to the issue of the college. He has been still on the way towards the mission of the institution with untiring dedication and determination.

The unfailing dedication and commitment of founders, principals, teachers, non-academic staff, and the school society of the past and present, have taken the students to that height that characterizes a truly outstanding school during the past 136 years. The college remains mighty and majestic, thanks to the devotion and dedication of those roles.

Kalmunai WESLEY stands for both disciplined way of life and as well for excellence in education and extracurricular activities. The long and revered tradition is moulding the younger generation into responsible and high standing caliber of men in their society was planned with precision and extra care by the pioneers of WESLEY.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The products of the college are held in high esteem in all the universities in our soil and abroad. The nice blended products in turn pay back their debt by contributing for further development of their Alma Matter was a shining example education at the college is still a privilege and students in both their private and public life proved by their deed that they belong to a hybrid breed of the college. As a result, the sons and daughters of the college do still live all over the world with moral name and fame. Year after year the college has soared high in the curricular and co-curricular fields and quite often clinching top ranks in the district, provincial and even national level in curricular and co-curricular fields.

Since its inception in 1883, the flag of the bygone college has been flying high upholding its ideals and traditions and proclaiming its prominence among the leading colleges of the pearl. In spite the trials and tribulations the college faced intermittently, the incessant scholastic service of Kalmunai ' WESLEY ' for the past 136 years is really a memorable accomplishment.

The college undertakes to create a fresh generation of leaders who will be capable in shaping the future with vision, justice, charity, passion and with concern for over the world. Her journey is admirable. It is in fact a beacon in the locale.

The miscellany yields a fine opportune to hark back to the roles of the past and present who toiled the progress of the college. I fervently hope this number would be an impetus for the future generation to bestow their ardent support.

It is my humble obligation to recollect at this moment the explicit manner in which the former role-models ventured to mould us to live with respect. Myself and I am sure as WESLEYITES, are thankful to have had the exemplary education and discipline we have been nurtured at the institution. I wish that Kalmunai WESLEY continue to render its service to those who seek the light of entitlement in life.

136 years is such a long period in the history of an institution Cambridge, Oxford, Edinburgh etc, stand as great monuments of didactic excellence, Kalmunai WESLEY too is comparable to these institutions in terms of antiquity and service it has rendered over the years. The celebration will undoubtedly strike an edifying chord in the hearts and minds of the countless Weslyites in Sri Lanka and many countries in the world holding top positions in a number of fields and disciplined-Academic.

Viewed against the natural disasters and the military devastations that often assailed her ruthlessly in the past including a couple of years refugee calamity, Wesleyite's stature and achievement should be reckoned as marvelous. Her success bears out the truism that hard-hitting times never last but tough institutions do. Kalmunai WESLEY is at present a resilient tradition and not a mere institution.

Necessity of time provides opportunities for changes, Changes so quite very little trace to recognize what was in the past around. We of the current generation have very little time or need to ponder over the past as things keep moving exceptionally fast, except of course, those inclined towards the study of History, Anthropology or Sociology.

May the School society who are and who will adorn the college continue to be the custodians of the highest values and true builders of the nation and bring forth worthy citizens and keep her name and fame shine brightly even in darkness and continue to retain her identity as a ' KINGDOM OF DISCIPLINE ' for ever and ever.

Let all WESLEYITES join the college PPA existing around the globe and remain ' SILENT PARTNERS ' to make the flag of the chronological college, fly high, and higher. May the college continue to serve cohorts of youth and be a cynosure of all eyes and a lodestar to other colleges. Besides, I call upon all our colleagues together in the service of mother care to continue and even to build an optimized successful future.

' www.kalmunai wesley.com ' keeps world united as a well-knit family linked to each other and to their Alma-Mater. This link, year in and year out, never lets their Alma-Mater go out of their hearts and mind though the relentless march of life had taken them away from her.

I feel delighted to salute the HERON her 136th anniversary with a firm conviction that she will continue to be one of the brightest stars in the Educational firmament in our fertile soil unto eternity. I dedicate this message with all my humbleness and adoration to my most respected leading light and later school society of the college with all of whom I served as a Deputy Principal at Kalmunai WESLEY – the Principals, mentors and role models of the past.


May Kalmunai WESLEY coup more and breed from forte to forte !

' UTMOST FOR THE HIGHEST '


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Grace brings in Serenity via Wesley...

**Sinniah Ravindrakumar**
English Department



It was the time when gender bias was significantly prevalent all over the world. Being a woman gave women folk a sense of nobody then. They were in fact looked down upon and considered second class beings and used as the machinery for procreation and child care. Thus was the preconceived idea of men on women in the patriarchal societies during those days.

Exploitation of small countries by bigger and affluent ones had been a common practice in the form of colonization and slavery all over the world. But on the other hand, the renaissance and the consequent industrial revolution in the West had already wrought vast development in various fields. The northern sphere of the globe had capitalized on available resources and as a result they embarked on probing the world in every direction.

Our little island too fell prey in the hands of colonial regimes. Among them, the English were unique and exemplary in nature as they were committed to transform humanity. However, we can still notice the cold attitude of the locals with a sense of hostility and frequent allegation levelled against them of instilling the subservient spirit and robbing the age old endemic culture and religious beliefs cherished for centuries.

However we cannot deny the fact of positive values and norms instilled upon the masses which have added colour to the spectrum and pave way for the concept of unity in diversity in the little island.

Thus it was the dream of the clergy Rev. G. J. Trimmer with selfless initiative ventured by the name of GBS (GIRLS' BOARDING SCHOOL) in 1883 to uplift the community enslaved and bound in gender discrimination devoid of formal education. He dreamt of revolutionizing the society and introducing the positive manners and values of humanity by educating them under one roof irrespective of caste and creed.

At this juncture, it is noteworthy to ponder the inspiration brought about on Trimmer by the late Rev. Dr. Thomas Coke who pioneered the missionary ventures in America, West Indies and other eastern countries including Sri Lanka. After Coke's graduation at the age of 21 in 1768 he was elected mayor and obtained his doctorate in Civil Law. His passion to reach the Asian coasts to uplift the people was so immense. When he was not granted permission to sail that far due to his old age, he was heartbroken and re appealed for the same by offering the whole wealth he owned to set sail to Asia. Their ship left England in 1813 December for our region and at last on the 5th of May 1814 the feeble missionary breathed his last en route to Sri Lanka and buried in the sea.

It is therefore imperative for us to be grateful for those dedicated men and women for their generosity, dedication and untiring efforts to uplift the lives of our ancestors which in fact turned out to be beneficial for the whole nation. I am bold enough to pen these lines out of my own experience with my mother late Mrs. Roselyn Gnanadeepam Sinniah, a past pupil at GBS. Her typical way of rearing children, discipline, devotion to the spouse and determination, all had their origin from the Alma Mater according to her. The existing PPAs and their activities overseas too are the undeniable proclamation of this age old educational institution.

Such has been the pride of Wesley High School in its mission to cater to the overall development of a person for the last 136 years. The nature's testimony too emanates in the air by two huge banyan trees that sheltered Trimmers, the girls who lodged at GBS and all forerunners of Wesley at the premises along with the bo tree beside the auditorium (Nallathamby Hall) still reverberating the idea of coexistence to modern man who strives hard towards sectarianism.

We the present folks are indeed privileged to feel the cold and the gentle breeze and the tender touch of those memories whenever we happened to pass through these trees. Their silent presence has been teaching the busy world many things for ages.

Let the mission of Wesley High School for humanity towards grandeur with grace, brilliance with brotherhood and serenity with simplicity endure not only in Kalmunai region but also to all five continents forever.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் தீர்க்கும் தெய்வீக தியானம்



தேசபந்து யோகாசனக் கலாநிதி
**K.சந்திரலிங்கம்**


இன்றைய கால கட்டத்தில் மனிதன் பல்வேறுபட்ட நோய்களுக்கும் துன்பங்களுக்கும் ஆட்பட்டு அல்லலுறுவதை நாம் அறிவோம். இவ்வாறு அல்லலுறும் மனிதன் தன்னுடைய நோய்களினின்றும் துன்பங்களிலிருந்தும் விடுபட இத் தியானம் நிச்சயம் உதவும். இனமத வேறுபாடின்றி அனைவரும் இத்தியானத்தைச் செய்யலாம்.

முதலில் தியானம் எல்லோரும் செய்யக்கூடியதும் மிக இலகுவானதும் என்பதை நாம் உறுதியாக நம்ப வேண்டும். மனிதனால் முடியாதது எதுவுமில்லை. எனவே முயற்சியுங்கள் வெற்றியடைவீர்கள். தியானம் செய்யும் ஒருவர் குறித்த ஒரு பொருளின் மீது மனதினை நிறுத்தி வைக்கும் நிலையில் சிறிது நேரமோ நீண்ட நேரமோ நிலைத்திருப்பாரானால் அவர் தியானம் செய்கின்றார் எனக் கொள்ளலாம். அதாவது அசைவற்று நிறுத்தப்படும் மனம் அப்படியே நிலைத்து நிற்கும் போது அது தியானமாக மாறுகின்றது.

தியானம் செய்யும் முன் வெளிச்சம் குறைவான தனியறை ஒன்றினுள் பாயோ, பெட்சீட்டோ தரையில் விரித்து அதன் மேல் வெள்ளைத் துணி ஒன்றினை விரிக்கவும். முதுகு முள்ளெலும்பு நிமிர்ந்து இருக்கும்படி விரிப்பில் அமரவும். ஆசனங்கள் தெரிந்தவர்கள் பத்மாசனம், வஜ்ராசனம், சித்தாசனம் போன்ற ஏதாவது ஓர் ஆசனத்தில் அமரலாம். இது கட்டாயமானதல்ல. விரும்பியவாறு உடல் இறுக்கமற்ற கதிரையில் கூட உட்காரலாம். ஆனால் முதுகு முள்ளெலும்பு நிமிர்ந்து இருக்க வேண்டியது அவசியம். இரு தொடைகளிலும் சின்முத்திரையுடன் உள்ளங்கைகளை மேல் நோக்கி வைக்கவும். சின்முத்திரை என்பது கையிலுள்ள கட்டை விரல் நுனியும் ஆள்காட்டி விரல் நுனியும் ஒட்டி இருத்தல். குருவையும் விரும்பிய இறைவனையும் நினைத்து தியானம் செய்து வேண்டிக் கொள்ளுங்கள்.

நாக்கின் நுனியை மேல் நாசியில் படக்கூடியதாக ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள். பிரபஞ்சத்தில் உள்ள இறை சக்தியும் தலை உச்சியினூடாக உடலுக்குள் வருவதாக ஆழமாகச் சிந்தியுங்கள். "ஓம்" என்பது ஒரு மதத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல. பொதுவான சொல். ஓம், ஓம் என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டிருக்கலாம். அல்லது யேசுவே, யேசுவே அல்லாஹ், அல்லாஹ் என்றும் ஆமென், ஆமென் என்றும் விரும்பிய இறைவனின் நாமத்தை சொல்லிக் கொண்டிருக்கலாம். ஒவ்வொரு சொல்லுக்கும் இடையில் இரண்டு செக்கன் இடைவெளி விட்டுச் சொல்ல வேண்டும். கண்கள் மூடியிருக்க வேண்டும்.

உச்சந் தலையில் சக்தியின் மையங்கள் என அழைக்கப்படும் கண்களுக்குப் புலப்படாத சக்கரம் ஒன்று உள்ளது. இதுவே உடலில் உள்ள சக்கரங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்ததும் அதி சக்தி வாய்ந்ததுமாகும். இதனை சகஸ்ராரச் சக்கரம் என அழைப்பர். மூளை மற்றும் பீனியில் சுரப்பிகளின் செயல்பாட்டுக்கு முக்கிய






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணியாக இயங்கும் இச்சக்கரம் முழு உடலுக்கும் சக்தியைக் கொடுக்கக் கூடியதாகத் திகழ்கின்றது. இச்சக்கரத்தில் மனதினைச் செலுத்தி இறை நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருக்க பிரபஞ்ச சக்தியும் இறை சக்தியும் இச் சக்கரத்தினூடாக எம்முள் நுழைவதனை நாம் உணரலாம். இவ்வாறு உட்புகும் சக்தி ஒளி வடிவமாகத் தலையிலிருந்து உள்ளங்கால் வரைக்கும் மெதுவாக ஊடறுத்து நகர்ந்து செல்வதை உணருங்கள். ஒவ்வொரு உறுப்புக்கள், சுரப்பிகள், மற்றும் எலும்புகள், நரம்புகள், தசைகள், தசைநார்கள், நாடிகள், நாளங்கள் அனைத்தும் புத்துணர்ச்சி பெறுவதாகவும் முழுமையான ஆரோக்கியம் அடைவதாகவும் ஆழமாக மனதில் நினையுங்கள்.

உதாரணமாக உச்சந்தலையிலுள்ள சகஸ்ராரச் சக்கரம் பிரபஞ்ச, தெய்வீக சக்தியினை உள்வாங்கி அனுப்பிக் கொண்டிருப்பதனால் மூளையின் செல்கள் தூண்டப்படுகின்றன. மூளை புத்துணர்ச்சி அடைகின்றது. புதுத் தெம்பைப் பெறுகின்றது. நல்ல எண்ணங்களின் செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. ஞாபக சக்தி விருத்தியடைகின்றது. சிந்தனா சக்தி தூண்டப்படுகின்றது. வலது பக்க மூளையின் செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. மொத்தத்தில் மூளை முழுமையாக ஆரோக்கியமடைகின்றது. இவ்வாறு ஒவ்வொரு உறுப்புகளையும் மனக் கண்ணால் பார்த்து மனதினால் ஆழமாக நினைத்து ஒவ்வொரு உறுப்புக்களுக்கும் வலுவூட்டி ஆரோக்கியடையைச் செய்யும் போது நிச்சயம் பல நோய்களினின்று விடுபட்டு வாழலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# My View on Privatization of PRIMARY EDUCATION !

**S Devachandra**
(Deputy Principal)

Education has been a part and partial of human life ever since antiquity because it implies cultivation of the mind to make life tolerable and the acquisition of skills for making it possible. However, the universalization of education as a concept was introduced only in the 20th century. Today, education has become the basic necessity of human beings. This is why everyone is keen to learn and educate himself as education equips him with the knowledge necessary to face the challenges of life. Education today is the foundation on which the pillars of modern society rest.

Far from being informal and inexpensive, education has become highly specialized today; its scope has also been enlarged. It has travelled a long way from the days of Plato and Aristotle as well as from the time-honoured ' SADDAMPIYAR ' ' VAATHIYAR ' ' GURU ' tradition in Sri Lanka. In most countries, it has been nationalized. A set of accepted principles and procedures have come to be accepted while imparting education with theory and practical knowledge of science and technology providing coherence to the subject-matter. But non-developed countries like Sri Lanka cannot afford to spend much on education owing to financial constraints. As a result, education has suffered a great deal. And the answer to it is the privatization of education.

Today, as a result of the government's consistent attempts to raise the level of literacy in the country, about two-thirds of our population is highly literate. But still Srilanka is having the dubious distinction of having a few illiterate persons in the world in the 21st century. I view that the government finds it difficult to sustain its education programme owing to rapid increases in population. There is also a serious shortage of funds. Hence, there is every need to involve the private sector in education, especially for primary education rather than the higher education. The West took a lead in the privatization of education long, long ago. We are following suit only now.

The current education policy ensures that students attend classes regularly and a must to follow education up to grade 13; it does not attempt to teach


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

or educate students in true sense of the term. Attendance in classes is both the means and the end of the present system. In order to ensure regular attendance, the government has introduced several schemes such as the mid-day meals, free uniforms, free shoes, free milk, scholarships and provision for no failures in schools. This has ensured a low dropout rate. However; the equality of education imparted has suffered. The private sector can step in. This has been evidenced by the quality of education provided by elitist public schools, especially those run by Christian Missionaries and others. Education is a mission and a calling in such institutions which are justly reputed for their dedicated teachers and high caliber students who have made a mark in various walks of life.

Along with a few in appropriate and imbalance education policy of the government, poor infrastructures exist in the government run schools. Private schools offer a stark contrast in infrastructure facilities.

Many of them, especially in the rural areas, have no buildings, no extra-curricular facilities and at time, no teachers, wastage and corruption are rampant in most of the schools. On the other hand, privatization of education can help remove inefficiency, corruption, and under-utilization of human resources like teachers, equipment, laboratories, libraries etc. These have become indispensable parts of our education system. Attention is also so attentive.

But there is also a negative side to the privatization of education. It brings to the force profit and monetary considerations. Selective schools charge exorbitant fees which are beyond the reach of lakhs of Sri Lankans. They create a wedge between the haves and the have-nots. Privatization of education widens the disparities between the rich and the poor to the betterment of the upper classes of society.

Private sector also appears to be interested in providing trade, technical and scientific education. Some of those institutions do not provide even the basic facilities to their students even after charging them lakhs of rupees under various heads. This defeats the very purpose of privatization of education.

Even if the private sector is especially involved in the primary school education rather than the higher education, most such institutions largely depend on government funds and grants. This, too, goes against the basic premise of privatization of education. To make matters worse, these sided private institutions often siphon off the money received as grants to other heads. The teaching staff in such institutions is rarely paid full salaries, though they have to give receipt for full amount as per government grades and there is no security of tenure. Teachers are often hired on contrast basis in private schools with the sole exception of those run by the Christian Missionaries and others. This malady has percolated down to private educational institutions, since the teaching staff is not paid well and looked after properly, the quality of education imparted suffers in the long run.

The privatization of education has its advantages as well as disadvantages. If not controlled, the disadvantages can cripple the entire system of education. However, it is not possible to keep the private sector outside the purview of education with the government funds being totally inadequate for attaining the ideal of universalization of education. Many parts in the island do not have access to even the basic educational facilities. It is also noted that the attention of teachers in the primary grades in the government schools is so poor. Thus, the involvement of the private sector in primary education becomes a necessity.

There is need to minimize the ill-effects arising out of the involvement of the private sector in primary education. Private sector should be encouraged to play a vital role especially in the primary education controlled by the government. The poor and the rich are to be considered equal and the necessary facilities to be provided by the state for their primary foundation.

It should also be ensured by the concerned authorities. For this what we require is a clear and transparent government policy, both at the hearts and in the states, because the education comes under the concurrent list in the constitution of Sri Lanka. His policy much provides a level playing field for all parties involved in the sphere.

The regulatory mechanism must be made fair and independent. Existing regulatory bodies mainly like University Grants Commissions, National Institute of Education, and other educational authorities must be given a more independent and a definite status.

Tough and punitive laws must be enacted to penalize the defaulters. After putting such a healthy


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mechanism in place, the government does not bother of secondary and higher education and should lay emphasis on primary education. This would make available to the government more resources to invest in basic education, thus benefitting the entire system in the long-run. In the field of education, it is time we adopted the policy of mixed economy that has been followed by the government since past. Such a policy will be a happy blend of the public and private enterprises in educational institutions.

According to ' VEDAS ', educational institutions are just like temples where the essence of education is spread. But in the modern world most educational institutions have turned into commercial ' shops ' where education is ' sold '. The government and the private institutions are equally responsible for this commercia lization of education. While, on the one hand, privatization of education has made some favourable changes in the education system, on the other hand, it has given rise to serious problems which if not solved in time can shake the very foundation of the country. It is high time for the politicians and the administrators of educational institutions to realize the sacredness and importance of primary education and not to commercialize it. It is the responsibility of the government to make the legislations to put a check on the problems created by the privatization of primary education so that the very foundation of the country remains secure and sheltered.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 136வது ஆண்டு நிறைவு கல்லூரி மலருக்காக
இவ்வருடம் செப்டம்பர் மாதம் ஓய்வு பெறும் கல்லூரி அதிபர்

# திரு. வடிவேல் பிரபாகரன் அவர்களிடம்

# ஒரு நேர்காணல்

நேர்காணல் : **திரு. உமா வரதராஜன்**
**திரு. சிவ வரதராஜன்**

**நீங்கள் கல்வி கற்ற பாடசாலைகள் பற்றியும் அந்தக் காலத்து அனுபங்கள் பற்றியும் கூறுங்கள்.**


நான் பிறந்து, வளர்ந்தது திருக்கோவிலில். எனது ஆரம்பக் கல்வியை திருக்கோவில் அ.த.க. பாடசாலையில் தொடங்கினேன். இப்பாடசாலையே இப்போது குமர வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எங்கள் வீட்டுக்கு அருகில்தான் அது இருந்தது. அப்போது எனது தாயாரும் அங்குதான் கற்பித்துக் கொண்டிருந்தார். பாடசாலை மாணவர்களுக்கு "Care" நிறுவனத்தின் பால்மா, பனீஸ் இலவசமாக வழங்கப்பட்டு வந்த காலமது. ஒருகட்டத்தில் அவை நிறுத்தப்பட்டு பிஸ்கட்டுக்கள் வழங்கப்பட்டன. அந்தப் பிராயத்தில் கிட்டிய இவை ஒருவித உற்சாகத்தினை எங்களுக்குத் தந்தது. இவற்றை சாப்பிட்ட அனுபவம் இன்றும் மறக்க முடியாதது.

அதன் பின்னர் தம்பிலுவில் மேற்கு அ.த.க. பாடசாலையில் தரம் - 06 இல் மாத்திரம் கல்வி கற்றேன் இப் பாடசாலைதான் தற்போது கலைமகள் வித்தியாலயம் என அழைக்கப்பட்டு வருகின்றது.

அப்போதுதான் கணித, விஞ்ஞான பாடங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. 1969இல் அப்பலோ 11 விண்கலம் சந்திரனுக்குச் சென்ற விடயங்களை பத்திரிகைச் செய்திகளில் படித்து, அதுபற்றி அலசியதாக ஞாபகம். அது கைநிறையத் தோடம்பழ மிட்டாய்களை ஐந்து சதத்திற்கு வாங்கிச் சாப்பிட்ட காலம். அதன் பின்னர் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்வியை தொடர்ந்தேன்.

மெதடிஸ்த கல்லூரியில் படிக்கும் போது விடுதியில் தங்க வேண்டியிருந்தது. அப்போது கல்லூரிக்கு பிரதி அதிபராகவிருந்த திரு.பிரின்ஸ் காசிநாதர் அவர்களே விடுதிக்குப் பொறுப்பாக இருந்தார். அடிக்கடி நின்றுபோகும் அவரது காரைத் தள்ளிகொடுத்து அவரிடம் நல்லபெயர் எடுக்க விரும்பிய ஒரு காலமாக அது இருந்தது..

இறுதியாக சிவானந்தா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரத்திற்காக இணைந்துகொண்டேன். அங்கும் விடுதி வாழ்க்கைதான். வாரந்தோறும் வெள்ளிக் கிழமை மாலை வேளையில் இராமகிருஸ்ண மிஷன் வழிபாடுகளுக்குச் செல்வது வழமை. விடுதியில் இருந்த போதுதான் 1978ஆம் ஆண்டின் சூறாவளியின் தாக்கத்தினை எதிர்கொண்டோம். சூறாவளியின் பின்னரான நாட்களில் வீட்டுக்குச் செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. இதனால் கல்லடி தொடக்கம் திருக்கோவில் வரை நடந்து செல்ல வேண்டி ஏற்பட்டது. அந்த அனுபவம் வித்தியாசமானது. க.பொ.த உயர்தர பரீட்சையில் அதன் பின் சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்கு தேர்வானேன்.



**உங்கள் பல்கலைக் கழக அனுபவங்கள் பற்றி சொல்லுங்கள்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குப் பல் கலைக் கழகத்தின் முதலாவது மாணவர் அணி நாங்களே. 1981 ஆம் ஆண்டு வந்தாறு மூலை மத்திய மகா வித்தியாலயத்தினை சித்தாண்டியில் அதே பெயரில் ஆரம்பித்துவிட்டு அந்த வளாகத்திலேயே எமது பல்கலைக்கழகம் ஆரம்பமானது. அப்போது உபவேந்தர் என்ற பதவி இருக்கவில்லை. பணிப்பாளர் என்ற பதவியே வழங்கப்பட்டிருந்து. மொத்தம் 75 மாணர்களுடனேயே இப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்டது. பௌதீக விஞ்ஞானம் உயிரியில் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் என்ற மூன்று துறைகள் மட்டுமே இருந்தன. இதில் சிங்கள மாணவர்கள் சிலரும் உள்ளடங் கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாக விருந்த காலமது. இங்கேயும் எனக்கு விடுதி வாழ்க்கைதான். இங்குதான் நாங்கள் கணனியை முதல் முதல் கண்டோம். எங்களுக்கு பகிடிவதை இல்லை என்றாலும் இந்தக் கற்கைக்கு தாமதித்து (Waiting list) வந்த எமது அணிக்கான மாணவர்களுக்கு பகிடிவதை செய்ததால் பிரச்சினை ஏற்பட்டு பல்கலைக் கழகம் மூடும் படியானது.

இதுதவிர ஆர்ப்பாட்டங்கள், பகிஸ்கரிப்புகள் என்பவற்றில் பங்கெடுத்த அனுபவமுண்டு. அப்போது பேராசிரியர்கள் மூவர் மட்டுமே நியமிக்கப்பட்டிருந்தனர். ஒருவர் பேராசிரியை.மனோ சபாரத்தினம் மற்றையவர் பேராசிரியர். உமா குமாரசாமி, அதேவேளை பணிப் பாளராகவிருந்தவர் பேராசிரியர் எஸ்.இராசரெத்தினம் அவர்கள். அன்று என்னுடன் அங்கு கல்வி கற்றவர்கள் இன்று பல உயர் பதவிகளில் இருக்கின்றனர். சிலர் வெளி நாடுககளுக்கு புலம்பெயர்ந்து அந் நாடுகளில் மேலும் கற்று நல்ல நிலையில் உள்ளனர். இவர்களை ஒன்றிணைப்பதற்கான முயற்சி ஒன்று கடந்த ஜனவரி மாதமளவில் நடைபெற்றது. அது வெற்றியளித்திருந்து. மட்டக்களப்பில் ஒன்று கூடி எங்கள் நட்பை புதுப்பித்துக் கொண்டதுடன் நினைவுகளையும் மீட்டுக்கொண்டோம். இந்த நிகழ்வில் எமக்கு கற்பித்த விரிவுரையாளர்கள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர். இது ஒரு புதுவிதமான மறக்க முடியாத அனுபமாக இருந்தது.

**பல்கலைக் கழகப் பட்டப் படிப்பு முடிந்ததும் நேரடியா கவே ஆசிரியத் தொழிலுக்கே வந்தீர்களா அல்லது வேறு தொழில்களிலும் ஈடுபட்டு இங்கே வந்தீர்களா?**

நேரடியாகவே ஆசிரியத் தொழிலுக்கு வந்தேன். ஆனால் இந்தப் பாடசாலைக்கல்ல. அட்டாளைச்சேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு.

**திருமணத்திற்கு முன்னும், பின்னுமான உங்கள் குடும்ப பின்னணி பற்றியும் அவை உங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கும், கடமை நிறைவேற்றத்திற்கும் எந்தளவு பங்களிப்புச் செய்துள்ளன எனக் கூறுங்கள்.**

எமது குடும்பம் மெதடிஸ்த பாரம்பரியத்தினையும் ஆசிரிய தொழில் பின்னணியையும் கொண்டது. எனது தந்தையார் பெயர் நாகமுத்து வடிவேல் - பாடசாலை அதிபர். தாயார் வின்னிபிரட் வேதமணி – இவரும் ஆசிரியை. எங்கள் குடும்பத்தில் மொத்தம் நான்கு பிள்ளைகள். நான் மூன்றாவது. மூத்த சகோதரி கல்முனை தமிழ் கோட்டத்தின் கல்விப் பணிப்பாளராகவிருந்து ஓய்வுபெற்ற திருமதி. கலாவதி தயாசீலன் ஆவார். அடுத்தவர் திருமதிபிரபாவதி தவநேசன் திருக்கோவில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் எழுதுவினைஞராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். தங்கை திருமதிபுனிதவதி ஹூல். யாழ்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பொறியியலாளராகக் கடமையாற்றுகின்றார்.

எனது பெற்றோர் ஆசிரியர்களாக இருந்ததால் எனது கல்வி முன்னேற்றத்திற்கு அது மிகவும் பங்களிப்புச் செய்துள்ளது. எங்களை காலத்திற்கு ஏற்ற வகையில் வழிநடத்தியதிலும் நாங்கள் எத்தகைய துறைகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்று வழிகாட்டியதிலும் அவர்களின் பங்கு அளப்பெரியது. இல்லையேல் எங்கள் வாழ்க்கையின் திசை வேறு விதமாக அமைந்திருக்கக்கூடும்.

அதேபோன்றே எனது மனைவியும் ஒரு ஆசிரியர். இவர் உவெஸ்லியின் பழைய மாணவியும் கூட. இவரது குடும்பம் கல்முனை மெதடிஸ்த தேவாலயத் துடனும் இந்தப் பாடசாலையுடனும் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தது. 1992இல் எங்கள் திருமணம் நடந்தது. 1993இல் விஞ்ஞான ஆசிரியராக நான் இந்தப் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தேன். அப்போது எனது மனைவி இப்பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக கற்பித்துக் கொண்டிருந்தார்.

இவ்வாறான எங்கள் குடும்பப் பின்னணியும் இந்தச் புவியல் சூழலும் இந்தப் பாடசாலையில் பொறுப்புக்களை தயக்கமின்றி அடுத்தடுத்து ஏற்றுக் கொள்ள எனக்கு ஒரு பலத்தினைக் கொடுத்தது. அடுத்து எங்கள் மகன். அவனும் தன் கடமைகள், பொறுப்புகள், சுதந்திரத்தின் எல்லை என்பவற்றை விளங்கி தானாகவே செயற்படக்கூடிய ஒருவனாக இருந்ததால் எனக்கு வேறு பிரச்சினைகள் குறைவு. இவரும் தரம் 01 முதல் 13வரை இப்பாடசாலையில் கல்விகற்று 2012ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து மருத்துவத்துறைக்காக தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் எனது கடமையை முடிந்தவரை சரியாகச் செய்வதற்கும் இலங்கை கல்வி நிருவாக சேவை பரீட்சையில் சித்தி பெறுவதற்கும் மிகவும் வசதியாயிருந்தது என்றே குறிப்பிடவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீங்கள் பணியாற்றிய பாடசாலைகள் பற்றி சொல்லுங்கள்.**

அட்டாளைச்சேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராக நியமிக்கப்பட்டபோது அது எனக்கு ஒரு புதிய சூழலாக இருந்தது. ஏனெனில் 100 வீத முஸ்லிம் மாணவர்களையும் 95 வீத முஸ்லிம் ஆசிரியர்களையும் கொண்ட பாடசாலை அது. முற்றிலும் வித்தியாசமான கலாசாரப் பின்னணி கொண்ட இத்தகைய சூழல் எனக்கு வேறுபட்ட அனுபவங்களைக் கற்றுத்தந்தது.

அடுத்த பாடசாலையான தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம் ஏற்கனவே எனக்கு பரிச்சயமான பிரதேசம். எனினும் எனது சொந்த ஊராக இருந்த போதிலும் குறைவான காலமே அங்கு பணியாற்ற முடிந்தது. அந்த குறுகிய காலத்தில் பாடசாலையின் நிர்வாக, பாடவிதான, இணைப்பாடவிதானச் செயற்பாடு களில் என்னால் இயன்ற பங்களிப்புகளை வழங்க முடிந்தது. அதன் பின்னரே இப் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தேன்.

**இவற்றில் நீண்ட காலம் எங்கு சேவையாற்றி ருக்கின்றீர்கள்?**

உவெஸ்லியில்தான், 26 வருடங்கள்.

**உங்கள் முதல் சம்பளம் எவ்வளவென்று நினைவிருக்கின்றதா?**

1985இல் நான் பெற்றுக் கொண்ட முதல் சம்பளம் 1220/=

**நீங்கள் சேவையாற்றிய 34 ஆண்டு காலத்தில் ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்துள்ளீர்கள் இவற்றில் எந்தப் பதவி உங்களுக்கு அதிகம் மன நிறைவைத் தந்ததாக உணர்கிறீர்கள் ? ஏன் ?**

இப்படிக் கேட்டால் முதலில் ஆசிரியர். அடுத்தது உதவி அதிபர். ஏனென்றால் ஆசிரியராக இருந்தபோது மாணவர்களுக்கான கற்பித்தல் பணி மட்டுமே இருந்தது. வேறு பொறுப்புகள் இல்லை. அல்லது மிகக் குறைவு. உதவி அதிபராக இருந்தபோதும் ஏறக்குறைய அவ்வாறே. ஆனால் அதிபராகிய பின்னர் ஆயிரம் பொறுப்புக்கள், பிரச்சினைகள். ஒட்டு மொத்த பாடசாலையின் செயற்பாட்டுக்கும், பின்னடைவுக்கும் அதிபரே பொறுப்புக் கூறவேண்டும்.

**வெஸ்லி உயர்தர பாடசலைக்கு எப்போது இடமாற்றம் பெற்று வந்தீர்கள் ?**

1993 ஜனவரி 06ஆந் திகதி

**இந்தப் பாடசாலையினுள் காலடி எடுத்து வைத்த ஆரம்பநாளில் உங்கள் மனதின் முதற்பதிவு எத்தகையதாக இருந்தது ?**

கிறிஸ்த இல்லத்தின் பின்புறமாக வீட்டிலிருந்து புறப்பட்டு பாடசாலையை அடைந்தபோது – நகரின் மத்தியில் எவ்வளவு பெரிய காணியை இந்தப் பாடசாலை கொண்டுள்ளது என்ற வியப்பும் "அதில் நிறைந்துள்ள பெரிய நிழல் விருட்சங்களின் விம்பங்களுமாக எனது முதற் மனப் பதிவிருந்தது. அப்போது பழைய கட்டிட அறையொன்றில் வைத்து அப்போது அதிபராக இருந்த திரு. வெங்கடாசலம் சேரிடம் என்னை அறிமுகம் செய்து கொண்டது. கிருபைராஜா சேர் மூலமாக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டது. இப்படி இன்னும் பல.....

**அப்போதிருந்த பாடசாலையை உங்கள் பார்வையில் விபரிக்க முடியுமா?**

அப்போது இரண்டு பெரிய நுழைவாயில் மட்டுமே இருந்தன. ஒன்று பிரதான வீதியின் சுற்றுவட்டச் சந்தியில் இருந்தது. அதுவே தற்போது புதிய வடிவில் பெரிதாக அமைக்கப்பட்டுள்ளது. மற்றையது கிறிஸ்த இல்லத்துக்குச் செல்லும் வீதியில் இருந்தது. இன்று அந்த வாயில் மறைக்கப்பட்டு விட்டது. அதன் வழியே நுழைந்தால் எதிரே வடக்குத் தெற்காக ஒரு 50' X 20' அளவான கட்டடம். அதுவே பழைய அதிபர் அலுவலகம். அதன் பெரும்பகுதி தற்போது இடிக்கப் பட்டு விட்டது. ஆலமரத்தின் கீழே பெற்றோர் ஆசிரியர் சங்கக் கட்டடம். காசிப்பிள்ளை, மன்மதராஜா போன்ற சிரேஸ்ட ஆசிரியர்களோடு அதிபர் தரத்தில் நான் 12வது நபராக இருந்தேன்.

**எப்போது இந்தப் பாடசாலையின் அதிபரானீர்கள்?**


திரு.பொ.முருகையா அவர்கள் அதிபராக விருந்து ஓய்வு பெற்றபோது பிரதி அதிபராகவிருந்த நான் 2009.02.17ஆந் திகதி அதிபராகப் பதவியேற்றேன்.

**அதிபராக நீங்கள் பதவியேற்ற போது உங்கள் முன்னே தென்பட்ட சவால்கள் எவை ?**

நண்பர்களாக பழகிய பல ஆசிரியர்களும் என்னைவிட அனுபவம் மிக்க சிரேஸ்ட ஆசிரியர்களும் என்னைச் சுற்றிவர இருந்த நிலையில் அதிபர் தரத்தில் இருந்து நான் இயங்குவது எனக்குள் தயக்கத்தை ஏற்படுத்தியது. அது மட்டுமன்றி பெற்றோர், பழைய மாணவர்கள் போன்றோரின் பக்கபலமும் அவ்வளவாக இல்லாத நிலையில் இத்தகைய தயக்கம் ஏற்படுவது இயல்பான ஒன்றே. இதனால் உள்ளக வெளியகச் சூழலில் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டாயத்தில் இருந்தேன். காலப் போக்கில் இவை யெல்லாம் சீர்செய்யப்பட்டன என்றே நம்புகிறேன்.

**நீங்கள் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் உங்கள் நிர்வாகத்தின் கீழ் இந்தக் கல்லூரி தனித்துவத்துடன் பிரகாசித்ததாகக் கருதலாமா?**

தனித்துவத்துடன் கொண்டுசெல்ல முயற்சித் ததாகவே நம்புகின்றேன். இது ஒரு தனிநபர் சாதனை யல்ல. இதன் பின்னால் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணர்கள் என பலரையும் இணைத்துக் கொண்டதால் இது சாத்தியமாயிற்று.

135வது ஆண்டு நிறைவை ஒட்டி உவெஸ்லி நடை பவனி (Wesley Walk) ஐ வரலாற்றில் முதல் தடவையாக செய்தோம். இதன் நோக்கம் உவெஸ்லி சமூகத்தின் மத்தியில் ஒரு மீளிணைவையும் புத்துணர்ச்சி யையும் உத்வேகத்தையும் உண்டாக்குவதாகும். இது வெற்றியளித்ததென்றே நம்புகின்றேன்.

**ஆம் எனில் முன்னைய அதிபர்களின் செயற்பாடு களிலிருந்து எந்த இடங்களில் வேறுபட்டீர்கள் உங்கள் வித்தியாசமான அணுகுமுறைகள் எவையென விளக்க முடியுமா?**

பத்து வருடங்கள் தொடர்ச்சியாக பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களில் 1000 பெற்றோருக்கும் குறையாத பங்கேற்புடன் இடம்பெற்றிருக்கின்றன. முக்கியமாக பாடசாலை செயற்பாடுகளில் ஒரு வெளிப் படையான தன்மையைப் பேணினேன். அதேவேளை சூழலுக்கு ஏற்ப நெகிழ்ச்சியானதும் இறுக்கமானதும், இணக்கமானதுமான நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்தேன்.

**நிர்வாகம் சம்பந்தமான எந்தவொரு கட்டமைப்பிலும் ஒருமித்த போக்கும், ஒன்றித்த குரல்களும் இருப்ப தில்லை. தலைமை நிர்வாகிக்கு எந்தளவு ஆதரவும் பக்கபலமும் கிட்டுகிறதோ அதன் மறுபக்கமாக சிலருடைய எதிர்க் குரல்களையும், முணுமுணுப்பு களையும், அதிருப்தியையும் கூட சந்திக்க வேண்டியி ருக்கும்... இது சம்பந்தமான உங்கள் அனுபவம் என்ன? இந்த நிலைமைகளை எவ்வாறு கையாண்டீர்கள்?**

மாணவர்களுடனும் பெரும்பாலான பெற்றோர் களுடனும் நேரடித் தொடர்பை நான் பேணியதன் காரணமாக அவர்கள் நேரடியான விமர்சனங்களை வைக்கக்கூடிய சூழலை உருவாக்கியிருந்தேன். ஆலோசனைப் பெட்டி முறைமையை பேணியதன் மூலமாக மாணவர்களின் மனக்குறைகள், தகவல்கள் என்பவற்றை உடனுக்குடன் பெறக்கூடியதாக இருந்தது. இதன் நிமித்தம் அவற்றுக்கான தீர்வுகளையும் பல்வேறுபட்ட ஆசிரியர்களின் ஆலோசனைகளையும் பெற்று தீர்வுகளை வழங்கக் கூடியதாகவிருந்தது.

இதனால் முதுகுக்குப் பின் விமர்சனங்கள் எழுந்தது மிகவும் குறைவு. அவர்கள் நேரடியாகவே விமர்சனங்களை என்னிடம் முன்வைத்தனர், குறை களைச் சுட்டிக் காட்டிக்காட்டினர். மாணவர்கள் தயக்க மில்லாமல் முன்வந்து தமது தேவைகளை கூறினர். இவ்வாறு நேரடியாக கருத்துக்களை முன்வைக்க தயங்குபவர்களுக்கு ஆலோசனைப் பெட்டி உதவியாக இருந்திருக்கும் என்று நினைக்கின்றேன். நியாயமான விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு அவற்றைத் உடனுக் குடன் தீர்த்து வைத்துள்ளேன். அத்துடன் பல்வேறுபட்ட ஆசிரியர்களின் ஆலோசனைகளுக்கும் மதிப்பளித்துச் செயற்பட்டதனால் எந்த பிரச்சினையும் பாரதூரமான நிலைக்குச் செல்லாமல் பார்த்துக் கொண்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு காலத்தில் – குறிப்பாக யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் அதிகளவான மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப் பட்டனர். மாணவர் தொகையும் அதிகமாக இருந்தது. ஆனால் அவர் மறைவுக்குப் பின்னர் அந்த நிலைமை தொடராமல் வீழ்ச்சி நிலைக்குச் சென்று விட்டது என்பது பரவலான ஒரு கருத்து. இந்த நிலைமைக்கு காரணங்கள் எவை எனக் கருதுகின்றீர்கள். ?**

அதிபர் யோகம் வேலுப்பிள்ளை அவர்களின் காலத்தில் பாடசாலையின் அடைவு மட்டங்கள் திருப்தியாக இருந்தன. இந்த பிரதேசத்திலேயே பல்கலைக் கழகத்திற்குப் மாணவர்கள் அதிகமாக தேர்வாகும் ஒரு பாடசாலையாக இது திகழ்ந்தது. இந்த தகைமைதான் அந்த காலத்தில் களுவாஞ்சிக்குடி தொடக்கம் நிந்தவூர் வரையான பகுதியிலிருந்து மாணவர்களை இந்தப் பாடசாலைக்கு ஈர்த்தது.

ஆனால் இந்த நிலைமை 1983இன் பின் நாட்டிலேற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக படிப்படியாக குறையத் தொடங்கிவிட்டது. அது தவிர அந்தந்த கிராமங்களில் உள்ள பாடசாலைகளும் படிப் படியாக வளர்ச்சி பெறத்தொடங்கிவிட்டன. இதனால் நகர்ப்புற பாடசாலைகளை நோக்கி தூர இடங்களிலிருந்து மாணவர்கள் வருவது குறையத் தொடங்கிவிட்டது.

மாணவர்களின் எண்ணிக்கை குறையும் அதேவேளை சிறந்த கல்வி ஆர்வம் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் அதே வீதத்தில் குறையும். இதனால் பல்கலைக் கழக அனுமதியிலும் சரிவு ஏற்பட வாய்ப்புண்டு. இங்கு மாணவர்களின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் தேர்ச்சி அல்லது எத்தனை வீதம் பல்கலைக் கழக அனுமதி என்பதை சமூகம் ஆராய்வதில்லை.

இந்தப் பின்னணியில் நோக்கும் போது கல்முனையின் பெரிய பாடசாலைகளான கார்மேல் பற்றிமா கல்லூரி, உவெஸ்லி உயர்தர பாடசாலை என்பன உள்ளூர் மாணவர்களின் அனுமதியில் மாத்திரமே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் அருட்சகோதரர் S.A.I மத்தியூ அவர்களின் வருகையும் அவரின் தனிப்பட்ட ஆளுமையும் அவர் கையாண்ட முகாமைத்துவமும் படிப்படியாக அப் பாடசாலையின் சராசரி அடைவு மட்டத்தினை உயர்த்தி காட்டியது.

இதனால் பெற்றோரை அத்தகைய பாடசாலை அதிகம் ஈர்க்கத் தொடங்கியதில் வியப்பில்லை. இதுதவிர முன்பள்ளியோடு அமைந்த ஒரு பாடசாலை யாக அது திகழ்ந்ததும் ஒரு காரணம்.

கல்வியின் முக்கியத்துவத்தினை எங்கள் பாடசாலையின் பெற்றோர்கள் மேலும் விழிப்புணர்வுடன் அணுகுவார்களாயிருந்தால் இன்னும் சிறந்த பெறுபேறு களை இந்தப் பாடசாலை பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

**தற்போது தங்கள் பாடசாலையின் அடைவு மட்டம் திருப்தியாக உள்ளதா?**

பூரண திருப்தி என்று சொல்வதற்கில்லை. படிப்படியாக முன்னேற்றங்கள் அடைந்துவந்த போதிலும் இடையிடையே சறுக்கல்களும் வந்தன. தரம் 4, 5, 10, 11வகுப்புக்களுக்கு மேலதிக வகுப்புக்கள், செயலட்டைகள் மூலமாக தொடர்ச்சியான செயற்பாடுகள் நடைபெற்று வருகிறது. க.பொ.த (உ/த) பரீட்சையைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு தடவையும் வைத்தியத்துறை, பொறியியல் துறைக்கு மாணவர்கள் தெரிவாவது ஓரளவுக்கு திருப்தியாக உள்ளது. குறிப்பாக சிறந்த ஆசிரியர் வளமும் அவர்களது முயற்சிகளும் இவ்வாறு மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. எனினும் வர்த்தகப் பிரிவில் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இவ்வருடம் அப்பிரிவிலும் மாணவர்கள் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

அலகு ரீதியான பரீட்சைகளை நடாத்தி அதன் பெறுபேறுகளை பெற்றோருக்கு தெரியப்படுத்துவதன் மூலமும் பரிகாரக் கற்பித்தல் போன்ற செயற்பாடுகள் மூலமாக மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்க ஆரம்பம் முதலே முயற்சித்தோம். இந்தகைய முயற்சிகள் ஓரளவுக்கு வெற்றியைத் தந்திருக்கின்றன.

**நீங்கள் முதல்வராகக் கடமையாற்றிய காலங்களில் மாணவர்களின் பெறுபேறுகள் உட்பட பாடசாலையை அபிவிருத்தி செய்வதில் நீங்கள் எதிர்கொண்ட முக்கிய சவால்கள் எவை?**

எங்கள் பாடசாலையில் கல்வி பயிலும் பெரும்பாலான மாணவர்கள் மேல்தட்டு வர்க்கத்தினைச் சார்ந்தவர்கள் அல்ல என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இங்கு பயிலும் கணிசமான மாணவர்களின் தனிப்பட்ட குடும்பரீதியான பின்னணிகளும் கல்வி சார்ந்த பின்னடைவும் இணைத்துப் பார்க்கப்பட வேண்டிய ஒன்று.

பெற்றோர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தின் வாயிலாக இப் பாடசாலைக்குக் கிடைக்கும் உதவிகள் குறைவு. அத்துடன் வழக்கம்போல் இப் பிரதேசத்து தமிழ் பாடசாலைகள் எதிர்கொள்ளும் அரசியல் பக்கபலமின்மையும் இப் பாடசாலையின் அபிவிருத்தி யின்மைக்கான காரணங்களில் ஒன்று.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**பாடசாலையின் பௌதீக வளங்கள் போதுமான அளவு உள்ளன எனச் சொல்ல முடியுமா?**

நகரத்தின் மத்தியில் இப் பாடசாலை இருப்பதால் அலுவலக ரீதியாக பலவேறு தேவைகளுக்கும் இது பயன்படுத்தப்டுகின்றது. எனினும் பயன்படுத்துவோர் இதன் அபிவிருத்தி, முன்னேற்றம் குறித்து கிஞ்சித்தும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மிக நீண்டகால பாரம்பரியம் கொண்ட இந்தப் பாடசாலை இதர பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் மந்தகரமான ஒரு முன்னேற்றத்தினையே பௌதீக வளரீதியாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

**இப்போது பாடசாலையின் மிக முக்கியமான தேவைகள் என எவற்றைப் பட்டியலிடுவீர்கள்?**

தற்போது உள்ளவற்றில் பல கட்டடங்கள் பழைமையான நிலையில் உள்ளன. ஏற்கனவே உள்ள வசதிகளுக்க அமைவாகவே எம்மை ஒடுக்கிக் கொண்டு சிரமத்துடன் செயலாற்ற வேண்டியுள்ளது. எனவே நவீன வசதிகள் கொண்ட கட்டடங்கள் வகுப்பறைகள், மண்டபங்கள் என்பற்றுக்கான தேவைகள் உள்ளன. முக்கியமாக Smart வகுப்றை ஒன்றுக்கான தேவையும் உள்ளது.

**பௌதிக வளங்களின் முன்னேற்றத்துக்காக பழைய மாணவர்களின் பங்களிப்புக்களும் கிட்டுகின்றனவா?**

ஓரளவு உதவிகள் கிடைக்கின்றன. ஏனைய நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு உள்ளூர் மட்டத்திலும், புலம்பெயர் நாடுகளின் வழியாகவும், அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் வாயிலாகவும் கிட்டுகின்ற உதவிகளை ஒப்பிடுகையில் எமக்குக் கிடைக்கின்ற உதவிகள் பெரிதானவை அல்ல. பாடசாலையின் பிரதான நுழைவாயில் 78 - 82 ஆண்டுகளில் கல்வி கற்ற மாணவர் அணியினராலும், சாரணர் அறையானது 60 - 65 காலப்பகுதியில் கல்வி பயின்ற மாணவர்களாலும், துவிச்சக்கரவண்டி தரிப்பிடமானது 90 ஆம் ஆண்டு கல்வி கற்ற பழைய மாணவர்களாலும், பழைய மாணவரான பிரான்ஸில் வசிக்கும் திருமகேஸ் சின்னப்பு என்பவரால் கிரிக்கட் கடினப் பந்து விளையாட்டு வீரர் களுக்கான பயிற்சித் தரையையும் செய்து தந்துள்ளனர். இன்னும் சில குறிப்பிடத்தக்க உதவிகளை சில குறிப்பிட்ட பழைய மாணவர்களும் பெற்றோர்களும் உதவி செய்துள்ளனர்.

**புவி வெப்பமடைந்து வருகின்றது. இலங்கையில் இவ்வருடம் வெப்பம் மேலும் அதிகரித்திருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் காற்றோட்டம் இல்லாத வகுப்பறைகளுக்கு மின்விசிறிகள் இல்லை எனில் மாணவர்கள் அசௌகரியம் அடைவார்களல்லவா? (கழுத்துப் பட்டி வேறு) எப்படி கற்பதில் மாணவர்கள் ஆர்வமாயிருப்பார்கள்? இது தொடர்பாக அரசு ஏதேனும் அக்கறை கொள்ளுகின்றதா ?**

புவி வெப்பமடைந்து வருகின்றது என்பது உண்மைதான். எனினும் எங்கள் பாடசாலையில் சில வகுப்புகளுக்கு மின் விசிறிகள் உண்டு. இருந்த போதிலும் எல்லா வகுப்பறைகளுக்கும் மின்விசிகளை பொருத்துவதற்கு பல நடைமுறைச் சாத்தியமின்மைகள் உள்ளன. திணைக்களத்தினால் எங்கள் பாடசாலைக்கு மாதமொன்றுக்கு 1500/= மட்டுமே மின்கட்டணக் கொடுப்பனவாகக் கிடைக்கின்றது. எனினும் மாதாந்த மின்கட்டணம் சுமார் 15000/= தொடக்கம் 20000/= வரை வருகின்றது. இதனை பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியிலிருந்தே செலுத்தவேண்டியுள்ளது. கழுத்துப்பட்டி, பாதணி போன்ற விடயங்களில் அதிபர் என்ற வகையில் என்னால் சுயாதீனமான முடிவுகளை எடுப்பது சாத்தியமற்றது. கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப அந்த அந்த நாடுகளின் அரசாங்கங்கள் இவை சம்மந்தமான தீர்மானங்களை எடுப்பதே பொருத்தமானதெனக் கருதுகின்றேன்.

**இலங்கை அதிபர், ஆசிரியர் சங்கங்கள் இதுபற்றி எப்போதாவது அரசை கோரியிருக்கின்றனா?**

இதுபற்றி அரசின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கும் என்றே நம்புகின்றேன்.

**சிறுவர் உரிமைகள் தொடர்பான சட்ட இறுக்கங்கள் எமது சூழலுக்கு எந்தளவுக்கு பொருத்தமானது என நீங்கள் கருதுகின்றீர்கள்.**

சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டியவைதான், பெரியளவிலான தண்டனைகள் வழங்குவதை கூடுமானவரை தவிர்ப்பது நல்லது. இது பிஞ்சு மனதில் எதிர்மறையான பதிவுகளை ஏற்படுத்தக் கூடும். எனினும் தண்டனைகள் எதுவுமின்றி மிகவும் நெகிழ்ச்சியான போக்கை கடைப்பிடிப்பது ஒரு ஒழுங்கற்ற போக்குக்கு மாணவர்களை நகர்த்திவிடக் கூடியது. எனவே இவ்விடயத்தில் ஒரு ஆசிரியர் மிகவும் நுட்பத்துடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சமநிலைப் போக்கை கையாள்வதே பொருத்தமானது.

**தனியார் கல்வி நிலையங்களின் வளர்ச்சி இலவசக் கல்வி முறைமையை சிக்கலாக்கியுள்ளது என கருத முடியுமா?**

இன்றைய நிலையில் இது ஒரு கல்வி கலாசாரமாக நாடளாவிய ரீதியில் விளங்குகின்றது. இதில் சாதகமான அம்சங்களும் உண்டு பாதகமான அம்சங்களும் உண்டு. முன்கூட்டியே சில பாடங்களைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுதேர்ந்து பாடசாலைக்கு மாணவர்கள் வரும்போது அது கற்றலை மேலும் இலகுவாக்குகின்றது. இது சாதகமான அம்சம். அதேவேளை பாடசாலை வகுப்பு களுக்கு முன்னுரிமை கொடுக்காமல் அவற்றுக்குச் சமுகமளிக்காமல் தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்றுவிடுகின்ற மாணவர்களும் இதனை ஆதரிக்கின்ற பெற்றோரும் எம்மிடையே உண்டு. உண்மையில் இதபோன்ற காரியங்களால் இலவசக் கல்வி முறையைத் தாழ்வாகப் பார்க்கின்ற ஒரு சிக்கலான நிலை தோன்றி யுள்ளது. இத்தகைய நிலையொன்றுக்கான காரணத்தினை யும் இதற்கான தீர்வினையும் பாடசாலை மாணவர்களும் பாடசாலை ஆசிரியர்களும், பெற்றோர்களும் கூடி கலந்தாலோசிக்கும்போது தெளிவுபெறலாம்.

**போட்டிமிக்க சூழலில் மாணவர்கள் பரீட்சை மையக் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு பாடசாலைகளின் பங்களிப்பு போதுமானதல்ல என்ற கருத்தும் உண்டல்லவா?**

இதனை முழுமையாக ஏற்க முடியாது விட்டாலும், பாடசாலையில் ஒவ்வொரு வகுப்பு மாணவர் களையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் சமமாகக் கவனிப்பது அசாத்தியமான காரியம். மாணவர்களில் மீடிறன் கூடிய மாணவர்களும் அதேவேளை சற்று குறைந்த மாணவர்களும் இருப்பார்கள். இதனால் கிரகிக்கும் திறன் குறைவான மாணவர்களுக்கு பாடசாலைகளின் பங்களிப்பு மட்டும் போதுமானதாக இருக்காதுதான். எனவே, அவர்களுக்கு மேலதிகமான ஊட்டல்கள் தேவைப்படும் வாய்ப்புள்ளது.

**நீங்களும் ஒருகாலத்தில் தனியார் கல்வி நிலையங் களில் இணைந்து உயர்தர மாணவர்களுக்காக தாவரவியல், மற்றும் உயிரியல் பாடங்களை சிறப்பாக கற்பித்திருக்கின்றீர்கள்.**

குறிப்பாக உயர்தர விஞ்ஞான கணித வகுப்பு களுக்கு பாடத்திட்டங்களை பூரணமாக பாடசாலையில் கற்பித்து முடிப்பது என்பதும் கடந்த கால வினாத்தாள் களையும், மாதிரி வினாத்தாள்களையும் பயிற்சி செய்வித்து மாணவர்களை பரீட்சைக்குத் தயார்படுத்து வதுவதென்பதும் பாடசாலைக்குள் சாத்தியம் குறைந்த தாகவே உள்ளது. என்னிடம் பிரத்தியேக வகுப்புக்களில் மேற்படி பாடங்களை வெவ்வேறு பாடசாலைகளிலிருந்து வந்த மாணவர்களும் கற்றனர். இதனால் எனது மதிப்பீட்டுப் பணி அனுபவங்களை எனது பாடசால மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய பாடசாலை மாணவர்களும் பெற்று சித்தியடைந்தனர். இது என்னைப் பொறுத்த மட்டில் மகிழ்ச்சியான விடயமாக இருந்து.

**ஏனைய அரச சேவைகளுடன் ஒப்பிடும்போது பெண்களே ஆசிரிய சேவையில் அதிக சதவீதத்தில் உள்ளனர். தங்கள் பாடசாலையிலும் அப்படித்தான் என நினைக்கின்றோம். ஒரு பெரிய பாடசாலையின் நிர்வாகி என்ற வகையில் இதன் அனுகூலம் –பிரதிகூலம் பற்றிச் சொல்லுங்கள் ..**

எனது தாய், எனது மனைவி, சகோதரி ஆகியோர் ஆசிரியர்களாக இருந்ததனால் வீட்டுப் பொறுப்பின் பெரும்பகுதி பெண்களைச் சார்ந்தே இருக்கின்றது என்பதை நேரடியாக அறிந்தவன். குறிப்பாக ஆசிரியைகளின் மகப்பேற்று விடுமுறைகளும் பிள்ளைகளின் சுகயீனம் காரணமான அவர்களின் தனிப்பட்ட விடுமுறைகளும் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை பாதிப்பை ஏற்படுத்தக்கூடியன. இத்தகைய சந்தர்ப்பங்களில் மாற்று ஏற்பாடுகளை செய்வதில் நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். குறிப்பிட்ட பாடங்களுக்காக மாற்று ஆசிரியர்களை பேசிச் சம்மதிக்க வைப்பது தனித்து வமான ஒரு கலைதான். ஒரு இல்லம் என்பது பெண் களாலேயே பொலிவு பெறுவது. ஒரு பாடசாலையில் ஆசிரியைகளின் வகிபாகமும் அதேபோன்றதுதான்.

**நீங்கள் 07 வருடங்கள் ஆசிரியராகவும் 16 வருடங்கள் பிரதி அதிபராகவும் 10 வருடங்கள் அதிபராகவும் கடமையாற்றியுள்ளீர்கள் . இலங்கை அதிபர் சேவை, கல்வி நிருவாக சேவை போன்ற பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளீர்கள். இந்த அனுபவங்களோடு இன்றைய கல்வி முறைமையில் செய்ய வேண்டிய மாற்றங்கள் எவை என்று சிபாரிசு செய்வீர்கள் ?**

தரம் எட்டு ஒன்பது வகுப்புகளில் இன்றைய தேவைக்கேற்ப தொழிற்கல்வியை பிரயோகச் செயற்பாட்டுடன் அறிமுகம் செய்தல், கலை இலக்கியச் செயற்பாடுகளை மாணவர்களுக்கு மேலும் அறிமுகப்படுத்தல், செய்முறை ஆய்வுகளுக்கு இடமளித்து அதனூடாக கற்றலை மேலும் வலுவூட்டல், பாடசாலையின் தேவைக்கேற்ப பௌதீக ஆசிரிய வளங்கள் முறையாக வழங்கப்படல் போன்றவை இடம்பெறவேண்டும் என சிபார்சு செய்கின்றேன்.

**உங்கள் காலத்தில் பாடசாலையில் பாட விதானத் துக்கு அப்பால் இதர துறைகளின் – கலை, இலக்கியம், விளையாட்டு போன்றவற்றின் வீச்செல்லை எவ்வாறு இருந்தன ? இந்தக் கேள்விக் கான காரணம் இப்பாடசாலை மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களையும் –குறிப்பாக கால் பந்தாட்டக் காரர்களையும் –கலைஞர்களையும் உருவாக்கிய நிறுவனம் . அந்த நிலை இன்றும் தொடர்கிறதா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இந்தப் பாடசாலைக்கு மட்டும் உரிய பிரச்சினை அல்ல. பொதுவாகவே உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் தமிழ் பிரதேசம் எங்கும் இத்துறைகள் சார்ந்து ஒரு தளர்வும் மந்தமுமான நிலையே நிலவி வருகின்றது. இது எதிர்வரும் காலங்களில் சீரடையும் என்றே நம்புகின்றேன். எனது பாடசாலையை சார்ந்த அனுபவங்களை மையமாகக் கொண்டு இக்கேள்விக்குப் பதிலளிப்பதானால் பின்வருமாறு கூறமுடியும். பாடசாலை நேரத்துக்குள்ளேயே மேற்குறித்த அனைத்து செயற்பாடுகளையும் வரையறுத்து செயற்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். பாடசாலை நேரத்திற்குப் புறம்பாக தனியார் வகுப்புகளை நோக்கி மாணவர்கள் செல்வதுதான் இதற்கான முக்கிய காரணம். இதன் மத்தியில் குறுகிய நேரத்தில் இத்துறைகள் சார்ந்து பயிற்சி வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன.

கடந்த பத்து வருடங்களாக இல்ல விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வீர வீராங்கனைகளை இனங்கண்டு அடுத்த அடுத்த மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவும் வெற்றி பெறவும் எம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம். குறிப்பாக பெண்களின் கால்பந்து குழு கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் பல வெற்றிகளை ஈட்டிய வரலாறும் உண்டு. அதேவேளை நீங்கள் குறிப்பிட்டபடி ஆண்கள் கால்பந்தாட்டக் குழு வலய மட்டத்தினையே தாண்ட முடியாத நிலையில் உள்ளது. இதன் முக்கிய காரணம் சரியான பயிற்சியின்மையும் பயிற்சி பெறுவதில் வீரர்கள் அவ்வளவாக ஆர்வம் காட்டாமையுமே. கிரிக்கட்டைப் பொறுத்தளவில் ஓரளவு முன்னேற்றமான நிலையுள்ளது. எமது நீண்டகாலக் கனவான Big Match காரைதீவு விபுலானந்தாவுடன் 2019 முதல் வருடாந்தம் நடாத்தக் கூடிய வகையில் அதற்கான அனுசரணையை SLT நிறுவனம் பெறுப்பேற்றுள்ளது. இப் போட்டி மார்ச் மாதம் நடைபெற்றது. இது ஒரு சந்தோசமான நிகழ்வு என்றே சொல்லவேண்டியுள்ளது.

அவ்வப்போது சந்தர்ப்பங்கள் வாய்க்கும் போதெல்லாம் உள்ளூர், வெளியூர் கலை, இலக்கிய வாதிகளை பாடசாலைக்கு அழைத்து மாணவர்களுக்கு அறிமுகம் செய்து அவர்களுடைய அனுபவங்களைப் பகிர வைத்துள்ளோம். கையெழுத்துச் சஞ்சிகைகளையும் வெளியிட வைத்துள்ளோம் இவர்களிலிருந்தும் பல கலை, இலக்கியவாதிகள் எதிர்காலத்தில் தோன்றலாம்.

**இந்தப் பாடசாலையின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் மெதடிஸ்த திருச்சபையின் பங்கும் பணியும் வரலாற்று முக்கியத்துவம் மிக்கது. உங்கள் காலத்தில் அதன் பக்கபலத்தை அனுபவத்தின் வாயிலாக விபரிக்க முடியுமா ?**

1962இல் பாடசாலைகளை அரசிடம் ஒப்படைத்ததன் பின்னர் மெதடிஸ்த திருச்சபையுடனான நேரடித் தொடர்புகள் எமது பாடசாலையுடன் இல்லா விட்டாலும் அருகில் உள்ள கல்முனை மெடிஸ்த ஆலயத்துடன் சில தொடர்புகளை பேணிவருகின்றோம். பாடசாலைக்கு அருகில் உள்ள கிறிஸ்த இல்லம், சிறுமியர் இல்லம் ஆகியவற்றிலுள்ள மாணவிகள் இப் பாடசாலையிலேயே கல்வி பயில்கிறார்கள். பாடசாலையின் தேவைகளிலும் அவர்களின் தேவையிலும் பரஸ்பரம் பங்களிப்புகளை தொடர்ச்சியாகப் பரிமாறிக் கொள்கின்றோம். குறிப்பாக பாடசாலைக்கு வெளியே இயங்கிய மெதடிஸ்த திருச்சபையின் மாற்றுத் திறனாளிகளுக்கான DEAF LINK நிறுவனம் அதன் ஸ்தாபகர் அருட்திரு. எஸ்.எஸ்.ஞானராஜா அவர்களின் வழிகாட்டலின் கீழ் அம் மாணவர்களை உட்படுத்தல் கல்வி(Inclusive Education) என்ற அடிப்படையில் 2008 இல் முன்னாள் அதிபர் பொன்.முருகையா அவர்களின் காலத்தில் பாடசாலைக்குள் உள்வாங்கியதைக் குறிப்பிடலாம். இது பாடசாலையுடனான மெதடிஸ்த திருச்சபையின் பிணைப்பை வெளிப்படுத்தியுள்ளது.

**மெதடிஸ்த திருச்சபையுடன் தாங்கள் மிகவும் நெருக்கமாகப் பயணித்த ஒருவர். அந்த நினைவுகள் பற்றியும் அதிலடைந்த மனநிறைவுகள் பற்றியும் விளக்க முடியுமா?**

மெதடிஸ்த திருச்சபையின் அங்கத்தவராக மாத்திரமல்லாமல் எனது தகப்பனார், தாய் மற்றும் உறவினர்கள் பலரும் - நானுட்பட - திருச்சபையில் பிரசங்கிமாராக இருந்தவர்கள். அத்துடன் குடும்பத்தில் சிலர் போதகர்கள். இது தவிர நான் திருச்சபையின் உள்ளூர் மட்டத்திலும், வடக்கு கிழக்கு திருமாவட்ட மட்டத்திலும், அகில இலங்கை மட்டத்திலும் பிரதிநிதியாக செயற்பட்டவன். 2014இல் அகில இலங்கை மட்ட மெதடிஸ்த திருச்சபையின் உப தலைவர் பதவி எனக்குக் கிடைத்தது. இது வாக்களிப்பொன்றின் மூலம் ஒரு அங்கத்தவர் பெறக்கூடிய ஓர் உயர் பதவி நிலையாகும். (இப்பதவிக்கு இப்பாடசாலையில் ஏற்கனவே கற்பித்த திருமதி. ரஞ்சி பாலசிங்கமும் திருகோணமலையில் இருந்து தெரிவானதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுதல் பொருத்தமானது) இப் பதவிக் காலத்தில் இலங்கையின் தென், மத்திய திருமாவட்ட திருச்சபைகளின் விசேட ஆராதனைகளில் கலந்து கொள்கின்ற வாய்ப்பும் கிட்டியது. இக்காலத்தில் இப் பாடசாலை அதிபராகவும் நான் இருந்த காரணத்தினால் இப்பாடசாலையின் பெயரும் எனது இந்த உயர்வுக்கு வழி சமைத்தது என்பதை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீங்கள் கடமை நேரங்களின் வழமையாக வெள்ளை நிற "சேட்" அணியும் வழக்கத்தினைக் கொண்டுள்ளீர்கள். அத்துடன் மிக நீண்ட காலம் குறுந்தாடியை மாறா அடையாளமாக கொண்டிருந் தீர்கள். இந்த இரண்டுக்கும் ஏதேனும் காரணங்கள் இருக்கின்றனவா?**

தேசிய கல்வி நிறுவகத்தில் PGDEM முழு நேரக் கற்கையை மேற்கொண்டபோது சிங்களச் சகோதரர்கள் கற்கை விடுமுறை காலத்திலும் கூட தொடர்ச்சியாக வெள்ளை நிற ஆடையை அணிவதுண்டு. இது என்னை மிகவும் கவர்ந்தது. இந்த பாதிப்பினால் 2000ஆம் ஆண்டிலிருந்து வெள்ளை – நீல ஆடையை நானும் அணியத் தொடங்கினேன். என்னைப் பின்பற்றி சில பாடசாலை அதிபர்களும் கூட இதே போன்று வெள்ளை ஆடையை அணியத் தொடங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக் கழக காலங்களில் சில தடவைகள் நீண்டதாகவும் சில தடவைகள் குறுகியதாகவும் தாடிகளை வைத்திருந்தேன். அட்டாளைச்சேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றியபோது எனது குறுந்தாடிக்கு மிகுந்த வரவேற்புக் கிடைத்தது. இது இன்னொருவகையில் பின்னர் நாடியில் ஏற்பட்ட காயத்தழும்பை மறைப்பதற்கும் நீண்டகாலம் உதவியது.

**உவெஸ்லியை தேசிய பாடசாலையாக மாற்றுவதற் கான முயற்சிகளை தங்கள் தலைமையிலான நிருவாகம் அண்மையில் மேற்கொண்டிருந்தது. இவ்வாறு தேசிய பாடசாலையாக மாற்றுவதன் மூலம் அடையக் கூடிய நன்மைகள் எவை எனக் கருதுகின்றீர்கள்?**

இன்றைய நிலையில் தேசிய பாடசாலை என்பது ஒரு கௌரவமாகக் கருதப்படுகின்றது. மாகாணத்துக்கான அதிகாரப் பரவலாக்கல் தேவை என ஒரு புறத்தில் வலியுறுத்தும் என்னைப் போன்றவர்களே தேசிய பாடசாலையாக மாற்ற வேண்டும் எனக் கோருவது ஒரு நகை முரணே. தேசிய பாடசாலை தரும் வரப் பிரசாதங்கள் மாகாண மட்டத்திலான பாடசாலைகளை விட பௌதீக, ஆளணி வளங்களின் அடிப்படையில் அளப்பரியன. எனவே, இதனை தேசிய பாடசாலையாக மாற்றுவதற்கான பிரயத்தனங்கள் இன்றைய நிலையில் தவிர்க்கப்பட முடியாதது. மாகாண பாடசாலைகளும் இதற்குச் சமனான வளங்களை பெறுமானால் தேசிய பாடசாலை ஒன்றிற்கான கேள்வி எழ வாய்ப்பில்லை. இந்த பின்னணியிலேயேதான் இப் பாடசாலையையும் தேசிய பாடசாலையான மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

**இந்த முயற்சி எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளது?**

ஏறக்குறைய இது வெற்றியை அடையும் நிலைக்கு வந்துவிட்டது.

**"ஆயிரம் பாடசாலை திட்டத்தினைத் தங்கள் பாடசாலை நிர்வாகம் நிராகரித்ததற்கான காரணங்கள் எவை எனச் செல்ல முடியுமா?**

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் 01 – 05 வரையிலான வகுப்புக்கள் இடம்பெற முடியாது. ஆனால் 65 மில்லியன் ரூபா பெறுமதியான கட்டிட, உபகரண வசதிகள் கிடைக்கும். எமது பாடசாலையில் சுமார் அறுநூறு மாணவர்கள் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கின்றனர். எமது அயல் பாடசாலைகளில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை தரம் 1 – 9 மற்றும் 1 – 13 வரையான வகுப்புகளைக் கொண்டவை. எனவே, ஆரம்பப் பிரிவை இழக்கும் போது எமது பாடசாலை பெறவேண்டிய 1 – 5 வரையான மாணவர்கள் தரம் ஆறுக்காக குறித்த அப் பாடசாலைகளிலிருந்து எமது பாடசாலைக்கு அனுமதிகேட்டு வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இதனால் இப்பாடசாலை இத்திட்டத்தினை ஏற்றிருந்தோமானால் இன்று இப்பாடசாலையின் மாணவர் தொகையில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கும்.

**இலங்கையில் இந்தப் பாடசாலை திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் நோக்கும் போது தாங்கள் எடுத்த முடிவு சரியானதெனக் கருதுகிறீர்களா?**

ஆம், ஒரு பிரதேசத்தில் ஒன்று அல்லது இரண்டு பெரிய பாடசாலைகள் இருப்பின் இது பொருத்தமானது. 65 மில்லியன் பெறுமதியான கட்டிடங்கள், தகவல் தொழில் நுட்ப ஆய்வுகூடம் என்பவற்றின் இழப்பை விட பாடசாலையை தொடர்ச்சியாக தக்க வைத்திருப்பதே சரியானதென கருதுகின்றேன். தற்போது எமது பாடசாலைக்கும் தொழில்நுட்பத் துறையை தொடங்குவதற்கான அனுமதி கிடைத்து 2019ஆம் ஆண்டு க.பொ.த ( உ/த) பரீட்சையில் மாணவர்கள் தோற்றியுள்ளனர். இவர்களுக் கான ஆய்வு கூட வசதிகளை ஏனைய பாடசாலைகளி லிருந்தும் தொழில்நுட்ப நிறுவனத்தில் இருந்தும் பெற்றுள்ளோம்.

**அறுபது வயது பூர்த்தியுடன் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறப் போகும் உங்கள் அடுத்தகட்டப் பயணம் எதை நோக்கியது? முன்னர் அதிபராகவிருந்து மறைந்த திரு .யோகம் வேலுப்பிள்ளை அவர்களுக்கு அரசியல் ஆர்வம் இருந்தது. அவருடைய திடீர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மறைவினால் அவர் அரசியல் உச்ச நிலையை நோக்கி நகர்வது சாத்தியமாகவில்லை. இதே போன்றே பாடசாலையின் முன்னாள் அதிபரான திரு.பா.வெங்கடாசலம் அதிபர் அவர்களும் அரசியலில் ஈடுபட்டவர் இப் பிரதேசத்தில் கல்விப் பின்னணி கொண்ட, பல்லினங்களுடனும் சுமுக உறவினைப் பேணுகின்ற, கள நிலவரம் நன்கறிந்த அரசியல் தலைமைக்கான வெற்றிடம் ஒன்றுள்ளது என்பதுதான் இன்றைய யதார்த்தம். இத்தகையதொரு சூழலில் அரச சேவையின் பின் அரசியலில் இறங்கினால் என்ன என நீங்கள் யோசிக்க வில்லை?**

பத்திரிகை, இணையத்தளங்களில் வருகின்ற அரசியல் செய்திகளில் மிகவும் கரிசனையுடன் அவதானித்து வருபவன் நான். அத்துடன் எனது சில குடும்ப உறவினர்கள் நேரடி அரசியலிலும் உள்ளனர். இன உணர்வுகளும் முரண்பாடுகளும் இப்பிரதேசத்தில் கூர்மையடைந்துள்ள இந் நிலையில் அரசியல் பிரவேசம் என்பது கத்தியில் நடப்பதைப் போன்ற ஒன்று. இந்நிலையில் நடுநிலைத் தன்மையுடனும் நியாயத்தின் பக்கமும் நிற்கக்கூடிய அளவுக்கு யதார்த்த சூழல் இடம் கொடுக்குமா என்பது கேள்விக்குறி. அப்படி ஒரு காலம் கனியுமானால் அது பற்றி யோசிக்கலாம்.

**இத்தொடரோட்டத்தில் உங்களைத் தொடர்ந்து அடுத்த அதிபராக பதிவியேற்கவிருக்கும் திரு.செ. கலையரசன் அவர்களுக்கு நீங்கள் கூற விரும்பு வதென்ன அவரிடமிருந்து எதிர்பார்ப்பதென்ன?.**

இப்பாடசாலை அவருக்குப் புதியதொன்றல்ல மாணவராக , ஆசிரியராக, பிரதி அதிபராக பல்வேறு பதவி நிலைகளில் அனுபவங்களைப் பெற்றவர். அவர் முன்னே இருப்பது பல அதிபர்களாலும் செப்பனிடப் பட்ட நல்லதொரு பாதை. நன்கு பயிற்றப்பட்ட ஏற்கனவே நல்ல அனுபவங்களைக் கொண்ட கலையரசன் அதன் வழியே இந்தப் பாடசாலையின் பயணத்தினை மேலும் சிறப்புடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். முக்கியமாக பாடசாலையின் நான்கு சுவர்களுக்குள்ளும் இதன் செயற்பாடுகளை முடக்கிவிடாமல் சமூகத்துடனான நெருக்கத்தினையும் நல்லுறவையும் பேணவேண்டும். அவருக்கு என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லியின்
## விளையாட்டுக்கள் தொடர்பாக



**திருமதி J.R.ஜீவகடாட்சம்**
விளையாட்டுப் பொறுப்பாசிரியர்

136 வருட பாரம்பரியம் மிக்க இப்பாடசாலையின் விளையாட்டுக்ள தொடர்பாக எழுதும் போது 2004ஆம் ஆண்டு சுனாமியின் பின்னர் 3 வருட காலமாக பாடசாலையின் பரந்த விசாலமான மைதானம் இடம் பெயர்ந்த மக்கள் வசிக்கும் தற்காலிக கொட்டகைகளால் நிறைந்திருந்த நிலை பற்றி அவசியம் குறிப்பிட வேண்டும். எனினும் இன்று புதுப்பொலிவுடன் இது விளங்குகிறது.

1883ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பெண்கள் விடுதிப் பாடசாலையில் வழமையான தேகாப்பியாசம், அணிநடை, வலைப்பந்து போன்ற விளையாட்டுக்கள் நடைபெற்றன. 1901ம் ஆண்டு உருவாக்கப்பட்ட வீஸ் உயர்தர பாடசாலையில் உடற்பயிற்சியுடன் உதைப்பந்து, கரப்பந்து போன்ற விளையாட்டுக்களும் விளையாடப் பட்டு வந்தன.

திரு யோகம் வேலுப்பிள்ளை அதிபராக கடமையாற்றிய போது முன்னாள் அதிபர்களின் பெயரில் இல்லங்கள் அமைக்கப்பட்டன.

1. அற்கின்ஸ் - மஞ்சள்
2. வில்சன் - பச்சை
3. நல்லதம்பி - நீலம்
4. கிறேஸ் தில்லையம்பலம் - சிவப்பு

திரு யோகம் வேலுப்பிள்ளை காலமான போது அற்கின்ஸ் இல்லத்திற்குப் பதிலாக யோகம் இல்லம் அமைக்கப்பட்டு இன்று வரை இதே பெயருடன் இயங்கி வருகிறது.

1. காலம் சென்ற டி.கே.பாக்கியம் இப்பாடசாலையில் பணியாற்றிய காலப்பகுதியில் ஆண்கள் உதைப்பந்தாட்டம் அகில இலங்கை மட்டம் வரை மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. இந்த அடிப்படையில் நகீம், மகேசரெட்ணம், ஞானகடாட்சம், நசார் மிகச் சிறந்து விளங்கியவர்களில் சிலர்.
2. 1970 தொடக்கம் 1980 முற்பகுதி வரை விளையாட்டு துறையில் மிகவும் முக்கியமானவர்களாக திரு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரை, திரு.இ.சிவானந்தநாயகம், ஜனாப் நியாள், திரு.ல.நாகராஜா, ஜனாப் ஹமீட் ஆகியோர் விளங்கினர்.

3. பெண்கள் விளையாட்டுக்களில் சாரணர் சென்ஜோன்ஸ் என்ற அடிப்படையில் திருமதி. கே. லோகிதராஜா, திருமதி.ஸ்யாமி செபஸ், திருமதி. கிருபா கிருபைராஜா, திருமதி. ரதனீ செபஸ்ரியன் ஆகியோர் விளங்கினர். இக்காலத்தில் விளையாட்டு நிகழ்வுகளின் போது சிறந்த அறிப்பாளராக திரு இ.சிவானந்தநாயகம் ஆசிரியர் விளங்கினார்.

4. அதன் பின் விளையாட்டு ஆசிரியர் இல்லாத நிலையில் விவசாயப் பாடத்திற்கு பொறுப்பான ஆசிரியர் ஜனாப் நியால் ஆசிரியர் விளையாட்டுப் பொறுப்பாசிரியராக கடமையேற்றுக் கொண்டார் பின் 1999ஆம் ஆண்டு உடற்கல்வி ஆசிரியராக திருமதி.கே.சனாதனன் நியமிக்கப்பட்டார்.

காலம் சென்ற ஜனாப் முஸ்தபா ஆசிரியர் இடையிடையே இல்ல விளையாட்டுப் போட்டி, சாரணர் இயக்கம் சம்பந்தமாக உதவிகளை நல்கியுள்ளார்.

கடந்த 10 வருடங்களாக மாசி, பங்குனி நடுப்பகுதிகளில் இல்லவிளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். இத் துறை வளர்ச்சிக்காக அதிபர் வி. பிரபாகரன் மிகவும் கரிசனை கொண்டவராக இருக்கிறார். அவருடைய உயர் நோக்கத்துக்கு உறுதுணையாக, உடற்கல்வி ஆசிரியர்களாக திருமதி. ஜே. ஆர்.ஜீவகடாட்சம், ஜனாப். எம்.எம்.றிஸ்மி, திருமதி. கே.ஜெயரூபன், திருமதி.கே.சனாதனன் ஆகியோர் இருந்து வருகின்றனர்.

இதன் பயனாக மாணவர்கள் அகில இலங்கை வரை பெருவிளையாட்டுக்கள், மெய்விளையாட்டுக்கள் எனக் கலந்து வெற்றியீட்டி வருகின்றனர். அகில இலங்கை ரீதியில் தெரிவாகிய பெருவிளையாட்டுக்கள்.

» கரப்பந்து ஆண்கள், பெண்கள்
» உடற்பயிற்சி ஆண்கள், பெண்கள்
» கடற்கரை கரப்பந்து ஆண்கள், பெண்கள்
» கபடி பெண்கள்
» பெட்மின்டன் பெண்கள்
» உதை பந்து பெண்கள்
» மெய்வல்லுனர் நிகழ்ச்சிகள்.

மாகாண மட்டம் வரை

» எல்லே ஆண்கள், பெண்கள்
» வலைப்பந்து பெண்கள்
» செஸ் ஆண்கள்
» கரம் ஆண்கள், பெண்கள்

கடந்த 2 வருடங்களாக கோட்ட மட்டத்தில் நடைபெற்ற 116 நிகழ்ச்சிகளில் எமது பாடசாலை மாணவர்கள் 103 நிகழ்ச்சிகளில் 1ம் 2ம் 3ம் இடங்களைப் பெற்றுக் கொண்டனர். 9 சம்பியன் என 91 மாணவர்கள் வலயத்திற்கு தெரிவாகியுள்ளனர். 57 மாணவர்கள் மாகாண மட்டததிற்கு தெரிவாகி கல்முனை வலயத்திற்கு பெருமையைத் தேடிக்கொடுத்துள்ளனர்.

மாகாண மற்றும் அகில இலங்கை மட்டத்திற்கு மாணவர்களும் , ஆசிரியர்களும் செல்வதற்கு சகல விதமான உதவிகளையும் வழங்கி ஊக்குவித்து வருபவர் இப்பாடசாலை அதிபர் திரு.வி.பிரபாகரன் அவர்கள்.

Hard Ball அணியும் பிரபல்யம் வாய்ந்த பல போட்டிகளில் பங்கு பற்றி வருகிறது. இவ்வருடம் காரைதீவு மைதானத்தில் காரைதீவு மத்திய கல்லூரியுடன் மிக விமர்சையான சினேக பூர்வ போட்டிகளில் எமது பாடசாலை பங்கு பற்றியது

விசேட திறமை உடைய மாணவர்களும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி அகில இலங்கை மட்டம் வரை சென்று வெற்றி பெற்று வந்துள்ளனர்.

இவ்வருட இல்ல விளையாட்டுப் போட்டியில் Cadet அறிமுகமாகியது.

இப்பாடசாலையில் இருக்கும் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் விளையாட்டுகளில் பங்கு பற்றுதல் என்ற ரீதியில் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று வரும் பெருமையைப் பெற்றவர்கள்.

இனி வரும் காலங்களிலும் வெகு சிறப்பாக விளையாட்டில் உவெஸ்லி உயர்தர பாடசாலை சிறந்து விளங்க வேண்டும் என்று ஆசி கூறுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் செய்தி

உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 136வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு ஆக்கங்களைத் தாங்கியதாக பிரசவிக்கின்ற ஆண்டு மலரை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். கிழக்குப் பிரதேசத்தில் பன்னெடுங்காலமாக கல்விப்புலத்தினின்று சேவையாற்றும் இப்பாடசாலை தனக்கென்றொரு கல்விப் பாரம்பரியத்தையும் விழுமியங்களையும், வழக்காறுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளதை குறிப்பிட முடியும். அந்த வகையில் கல்வி கற்ற, கற்பித்த மற்றும் நெருக்கமான தொடர்பினைப் பேணிய யாவரிடமும் சமூக வலைத் தளங்கள் வாயிலாகவும், அழைப்பிதழ் மூலமாகவும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க பல்வேறுபட்ட ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்தி, கட்டுரைகள், கவிதைகள் போன்ற பயனுறுதி வாய்ந்த ஆக்கங்களைத் தந்துதவியமைக்காக எமது மலராக்கக் குழு சார்பில் எமது நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறோம். இது பாடசாலையின் கடந்த பாதையினை வெளிக்கொணரும் ஆவணமாகும் என்பதுடன் எமது எதிர்காலச் சந்ததியினருக்கான ஒரு கலைக்களஞ்சியமாகவும் இது கொள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

கடந்த ஒரு தசாப்த காலமாக அதிபராவிருந்து பாடசாலைக்குத் தலைமை வகித்துக்கொண்டிருக்கும் திரு.வ.பிரபாகரன் அவர்களுடைய சிந்தனையில் உதித்த விடயம் இப் பாடசாலையின் வரலாற்றை ஒரு ஆவணமாகப் பதிவு செய்ய வேண்டும் என்பதாகும். அந்த எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதாக இம்மலர் அமைகின்றது என்றால் அது மிகையாகாது.

இவ் வரலாற்றினை பதிவு செய்வதற்கு பல்வேறு வழிகளிலும் உதவிய அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிதனைத் தெரிவித்துக் கொள்வதுடன், இதனை நெறியாள்கை செய்த சிரேஷ்ட எழுத்தாளரும் கவிஞருமான திரு. உமாவரதராஜன் மற்றும் திரு. சிவ.வரதராஜன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கும் மலர்க்குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- மலராக்கக்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SCHOOL HYMN

Our Father by whose servants
Our School was built of old
Whose hands hath crowned her children
with  blessing manifold
For thine unfailing mercies
For strewn along our way
With all who passed before us
We praise thy name today

The changeful years unresting
Their silent course have sped
New comrades ever bringing
In comrades steps to tread
And some are long forgotten
Long spent their hopes and fears
Safe rest they in thy keeping
The changest not with years

They reap not where they laboured
We reap what they have sown
Our harvest may be guarded
By ages yet unknown
The days of old have taught us

Wanasinghe Printers, Batticaloa. 065 222 7170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org